உ
சிவமயம்

தக்ஷிணகைலாச புராணம்

பகுதி I

ஆக்கியோன்

யாழ்ப்பாணத்து நல்லூர்

மகா வித்துவான் சிங்கைச் செகராசசேகரன்

பொருளாக்கம்

பண்டிதர் கா. செ. நடராசா

பதிப்பாசிரியர்

பேராசிரியர் சி. பத்மநாதன்

வெளியீடு:

இந்து சமய கலாச்சார அலுவல்கள் திணைக்களம்,
கொழும்பு-2,
இலங்கை.

தக்ஷிணகைலாச புராணம்

பகுதி 1

ஆக்கியோன்

யாழ்ப்பாணத்து நல்லூர்
மகா வித்துவான் சிங்கைச் செகராசசேகரன்

பொருளாக்கம்

பண்டிதர் கா. செ. நடராசா
சிறப்புக் கலைமாணி (தமிழ்)

பதிப்பாசிரியர்

கலாநிதி சி. பத்மநாதன்
வரலாற்றுத் துறைப் பேராசிரியர்
பேராதனைப் பல்கலைக்கழகம்
பிரதித் தலைவர் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.

வெளியீடு:

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்
கொழும்பு-2.

நூலைப்பற்றி

நூலின் பெயர்	—	தக்ஷிண கைலாச புராணம் பகுதி 1
பதிப்பாசிரியர்	—	பேராசிரியர் சி. பத்மநாதன்
பொருளாக்கம்	—	பண்டிதர் இணுவையூர் கா. செ. நடராசா சிறப்புக்கலைமாணி (தமிழ்)
வெளியிட்டோர்	—	இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு.
நூல் பதிப்பு	—	மார்ச் 1995
நூல் வடிவம்	—	1/8 டிமை
அச்சுத்தாள்	—	70கிராம் வெள்ளைக் கடதாசி
அட்டை	—	ஆர்ட் போட்
எழுத்துக்கள்	—	அச்சுக் கோர்வை
மொத்தப் பக்கங்கள்	—	260
பிரதிகள்	—	1000
பைண்டிங்	—	செக்ஷன்
விலை	—	ரூபா 100/-
அச்சிட்டோர்	—	குமரன் அச்சகம், டாம் வீதி. கொழும்பு-12.

வெளியீடு:

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்,
காப்புறுதிக் கூட்டுத்தாபனக் கட்டிடம்,
9ஆவது மாடி,
இல: 21, வொக்ஷோல் வீதி,
கொழும்பு-02,
இலங்கை.
1995.

உள்ளே

அ. அணிந்துரை: திரு. க. சண்முகலிங்கம்
பணிப்பாளர், இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்

ஆ. என் கருத்து: உரையாசிரியர்

இ. பொருள் வேட்டல்

ஈ. நூன்முகம்: கலாநிதி சி. பத்மநாதன்

உ. வெளியீட்டுரை

1. சிறப்புக்கவி

2. ஈழமண்டலச் சருக்கம்

3. புவனோற்பத்திச் சருக்கம்

4. அருச்சனா விருத்திச் சருக்கம்

5. மச்சவதாரச் சருக்கம்

அணிந்துரை

இலங்கைத் தமிழ் இலக்கியப் பாரம்பரியம் பன்னூற்றாண்டுத் தொடர்ச்சியுடையதென வரலாற்றாசிரியர் கூறுகின்றனரேனும், இந்நாட்டில் தோன்றிய தமிழ் இலக்கிய நூல்களில் காலத்தால் முந்தியதும் முழுமையான நூல் என்று கூறத்தக்கதும் ''சரசோதி மாலை'' என்னும் சோதிட நூலேயாகும். இந்நூல் கி. பி. 1310ஆம் ஆண்டிலே தம்பதெனியாவைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்த 4ஆம் பராக்கிரமபாகுவின் ஆட்சியில் தோன்றியது. இதே காலப்பகுதியில் வடக்கே நிலைப்பெற்றிருந்த யாழ்ப்பாண அரசர் ஆட்சியில் தமிழ் இலக்கியமும், பண்பாடும் செழிப்புற்று வளர்ந்தன. யாழ்ப்பாண அரசர் ஆட்சியின் ஆதரவில் வைத்திய சோதிட நூல்களும், புராணம், காவியம், மாலை, உலா பள்ளு முதலிய சமயச் சார்புடைய இலக்கியங்களும், வரலாற்றுச் சார்பான நூல்களும் உதயமாயின.

யாழ்ப்பாண அரசின் காலத்தில் எழுந்த சமய இலக்கிய நூல்களிலே திருக்கோணேஸ்வரத் தலவரலாற்றினையும், அப்பகுதியின் சமூக பண்பாட்டு வரலாற்றுத் தகவல்களையும் எடுத்துக் கூறும் இரு நூல்கள் பற்றி அறிஞர்கள் சிறப்பித்துப் பேசுவதுண்டு. குளக்கோட்ட மன்னனின் திருப்பணிகளையும், திருக்கோணேஸ்வரம் கோவிலின் நிருவாக ஒழுங்கு முறைகளையும், மக்கள் வழமைகளையும் எடுத்துரைக்கும் கோணேசர் கல்வெட்டு இவற்றுள் ஒன்றாகும். மற்றது, தக்ஷிணகைலாச புராணம் என்னும் தலபுராணமாகும். இவ்விரு நூல்களையும் ஆய்வுரை விளக்கவுரைகளுடன் அச்சில் பதிப்பித்து வெளியிடும் திட்டம் ஒன்று இந்து சமய கலாசாரத் திணைக்களத்தால் முன்மொழியப்பட்டது. கோணேசர் கல்வெட்டு 1993ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது. தக்ஷிண கைலாச புராணத்தின் முதல் ஐந்து சருக்கங்களினையும் உள்ளடக்கியதான நூலின் முதலாம் பாகம் இப்போது வெளியாகின்றது. கிடைத்தற்கரியதாகவிருந்த இந்நூலினை யாவரும் விளங்கிக் கொள்ளக்கூடிய வகையில் சந்தி பிரித்தும் நிறுத்தற் குறிகளிட்டும் பொருள் எழுதி வழங்கிய பண்டிதர் க. செ. நடராசா அவர்களின் பணி பாராட்டுக்குரியது. பேராசிரியர் சி. பத்மநாதன் எழுதி வழங்கிய ஆய்வு முன்னுரை இந்நூலினை அணி செய்கிறது. இந்நூலினை கற்பதற்கு

ஏற்ற தூண்டுதலையும் ஆர்வத்தையும் வழங்குவதாய் அது விளங்கு கிறது.

இலங்கையில் தோன்றிய பழைய இலக்கிய நூல்கள் பல இன்று கிடைத்தற்கரியனவாய் போயினமைக்கும் அவை பற்றிய கல்வி அருகியதற்கும் பல காரணங்கள் உள்ளன. இலக்கியக் கல்வியில் இரசனை நோக்கு மேலோங்கியுள்ள சூழலில் தரம் மிக்கவற்றையே கற்க வேண்டும். ஏனையவற்றால் பயன் இல்லை என்னும் கருத்து வலுப்பெற்றது. இதனால் நவீன காலத்திற்கு முற்பட்ட கால இலக்கியங்கள் யாவும் வரட்டுத்தனமானவை என ஒதுக்கப்பட்டன. இடைக்கால சமூக அமைப்பின் பின்னணியில் அக்கால உலக நோக்கினைப் புரிந்து கொள்வதற்கான கருவிகளாக வாய்மொழியிலும் எழுத்திலும் அமையும் இலக்கியங்களை நோக்கும் வரலாற்றியல், சமூகவியல், மானிடவியல் நோக்கு முறைகள் தமிழில் வளராத காரணத்தினால் புராணங்களையும் சமயச் சார்புடைய சோதிட தத்துவ, வைத்திய நூல்களையும் வரட்டுத்தனமானவையாகவும் ஆதாரமற்ற புழுகுகளாகவும் புறத்தொதுக்கும் போலிப் பகுத்தறிவு நோக்கும் மேலோங்கியது.

'இலக்கியத் தரம்', 'பகுத்தறிவு வாதம்' என்ற இரு கருத்துப் பாங்குகளும் இத்துறைக் கல்வியின் விருத்திக்குத் தடையாக இன்று வரை செயற்பட்டுள்ளன.

மக்களிடையே வாய்மொழியாகவும் பின்னர் நூல் வடிவில் இலக்கியங்களாக எழுதப் பெற்றும் வழங்கிய கதைகளை மூன்று வகையினவாக இனங்காணலாம். புராணக் கதை, பழமரபுக் கதை (Legend). நாட்டார் கதை என்பனவே அம் மூன்றும். புராணக் கதைகளின் இயல்புகளில் முக்கியமானது அதன் புனிதத் தன்மையாகும். புராணங்களின் உண்மைத்தன்மை பற்றி மக்கள் கேள்வி கேட்பதில்லை. மனித இனம் சாராத தேவர்களையும், அசுரர்களையும் கதாபாத்திரங்களாகக் கொள்ளுதல், நினைவுக்கு எட்டா நெடுங்காலச் சம்பவங்களை கூறுதல் பூமி, நரகம், பாதாளம் என்ற பல்வேறு உலகங்களைக் களமாகக் கொண்டு சம்பவங்கள் இடம்பெறுதல் ஆகியன புராணங்களின் இயல்பாகும். மாருதப்புரவீக வல்லி, நகுலமுனி, குளக்கோட்டன் போன்றவர்களோடு தொடர்புபட்ட கதைகளை பழமரபுக் கதைகள் எனலாம். பழமரபுக் கதைகள் அண்மைப் பழங் காலத்தவையாகவும் உண்மையென நம்பப்படுபவையாகவும் இவ்வுலகம் தொடர்பானவையாகவும் புனிதம், சாதாரணம் என்ற இரு இயல்புகளையும் கொண்டும் அமைந்திருக்கும். புராணங்களின் சில இயல்புகளும் பழமரபுக் கதைகளில் காணப்படும். நல்லதங்காள், முத்துப்பட்டன் போன்ற தமிழகக் கதைகளும் வேலப்பணிக்கன் —

அரியாத்தை போன்ற இலங்கை நாட்டார் கதைகளும் தனிமனித உணர்வுகளிற்கு முதன்மையளிக்கும் இவ்வுலக வாழ்வு பற்றிய கதைகளாகும். இலங்கைத்தமிழரிடையே இம் மூவகைக் கதைகளில் முதலிரு வகையினவான புராணங்களும் பழமரபுக் கதைகளும் உயர் வழக்கில் பேணப்பட்ட இலக்கியங்களிலும் இடம்பெற்றன; இவ்விலக்கியங்களினை நவீன சமூக விஞ்ஞானச் சிந்தனைகளின் துணையுடன் ஆராய்தல் பயன் தருவது. தமிழில் அண்மைக் காலத்தில் தே. லூர்து, கே. பி. எஸ். ஹமீது, ப. ரா. சுப்பிரமணியன், கோ. கேசவன் ஆகியோரின் எழுத்துக்கள் தமிழில் எழுந்த புராணங்கள் பற்றிய ஆய்வு அக்கறையைத் தூண்டுவனவாக அமைந்தன. குறிப்பாக தே. லூர்து அவர்கள் எழுதிய புராணங்கள் பற்றிய விரிவான கட்டுரை (நாட்டார் வழக்காறுகள் (1988) என்னும் நூலில் இடம்பெறுவது) குறிப்பிட்டுச் சொல்லப்பட வேண்டியது. தக்ஷிண கைலாச புராணம் என்னும் இந்நூலிற்கு எழுதிய ஆய்வுரையில் பேராசிரியர் சி. பத்மநாதன் அவர்கள் பின்வருமாறு எழுதியுள்ளார்.

''தலபுராணங்களை ஆராய்ந்து அரியதொரு நூலினை டேவிட் சூல்மன் எழுதி வெளியிட்டுள்ளனர். ஏறக்குறைய 2000 தலபுராணங்கள் ஏட்டுப் பிரதிகள் வடிவில் உள்ளன என்று அவர் கருதுவர்; அவற்றுட் சில மட்டுமே அச்சில் வெளிவந்துள்ளன.''

பேராசிரியரின் கூற்று கருத்திற் கொள்ளப்பட வேண்டியதொன்று. கிடைத்தற்கரியதாயிருந்த இந்நூலை அச்சிற் பதிப்பித்தமை பயன்மிகு பணியே என்ற மனத் திருப்தியை எமக்குத்தருகின்றது.

தக்ஷிண கைலாச புராணத்தின் இப்பதிப்பு நன்முறையில் வெளிவருவதற்கு உதவிய அனைவரையும் நன்றியுடன் நினைவு கூருகின்றேன். உரையெழுதும் பொறுப்புமிகு பணியினை உவந்தேற்று நிறைவேற்றிய பண்டிதர் க. செ. நடராசா, இந்நூலிற்கு ஆய்வுரை எழுதி நல்கிய பேராசிரியர் சி. பத்மநாதன், நூலின் அச்சுப்படிகளைத் திருத்தி நூலாக்கத்தில் கண்ணும் கருத்துமாக உழைத்தவரான உதவிப் பணிப்பாளர் திரு. எஸ். தெய்வநாயகம் ஆகியோரும் சிறப்பாகக் குறிப்பிடப்பட வேண்டியோர் ஆவர்.

க. சண்முகலிங்கம்,
பணிப்பாளர்,
இந்துசமய கலாசார
அலுவல்கள் திணைக்களம்.

காப்புறுதி இல்லம்,
கொழும்பு- 2.
05-04-95

என் கருத்து

படிப்பவர்க்கு:

புராணங்கள் இதிகாசங்கள் அனைத்தும் வெறும் கற்பனைகள்–புரட்டுக்கள் எனக் கூறுவோரும் அல்ல அது எங்கள் பண்டைய முன்னவர்களின் வாழ்வியற் கோலங்களின் வெளிப்பாடுகள் என் போரும், அவற்றிலும் மேலாய் அவை உலகியல் தத்துவங்களை வெளியிடும் வாழ்வியல் களஞ்சியங்கள் எனப்-பகர்வோரும் அன்று தொடக்கம் இன்று வரை வாழ்ந்துள்ளனர். இனியும் அத்தகையோர் வாழவே செய்வர்.

கற்பனைகள், தத்துவக் கருத்துக்கள் எதுவும் இல்லாத ஒன்றில் இருந்து தோன்றுதல் இயலாது. இருக்கும் ஒன்றே பல்வகைக் கற் பனைகட்கும் – தத்துவங்கட்கும் மூலமாய் அமைவு பெறுகின்றது. அந்த ஒன்றினைச் சுற்றியே; புராண இதிகாச விளக்கங்களும் ஆன்ம தத்துவக் கோட்பாடுகளும், அறிவியல் - விஞ்ஞானமும், இவை அனைத்திற்கும் ஆய்வுக்களமாக விளங்கும் பிற வரலாறுகளும் அமை வுற்று விளக்கம் பெறுகின்றன.

பிரபஞ்ச இயலை உணர்பவர்களின் அறிவு நிலைக்கேற்ப, விளக் கங்கள் இடம்பெறுகின்றன- இவ்விளக்கங்கள்: பல்வகைக் கோட் பாடுகள் உருவாக்கம் பெறுவதற்குத் துணை புரிந்துள்ளன. இவை அனைத்தும் நம்பிக்கையின் அடிப்படையிலேயே தோன்றின என்பதனை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டியவர்களாகவே இருக் கின்றோம். இந்த நம்பிக்கையின் அடிப்படையே உலகியல் வாழ்வின் அடிவேர். வேரைக் கல்லின், அடி பாறிவிடும். அஃதே போல் நம்பிக்கை இழந்தால், வாழ்வு சீர்கெட்டு விடும். சீர்கேட்டிலிருந்து மீள்வதற்கு நம்பிக்கையே ஒளி தருகின்றது.

இன்றைய சமூக வாழ்வில்; நெடுங் கதை, குறுங் கதை - சிறு கதை – நெடும்பா – குறும்பா, உரை நடையிட்டபாட்டுப் போன்ற வற்றை வெளியிடுவோர் ஏதோ ஒரு நம்பிக்கையின் அடிப்படையில், தாம் கண்ட வாழ்வியற் கோலங்களை நயப்பட உரைக்க முயல் கின்றனர். கற்பனைச் சுவை கலந்து, படிப்பவர் மனங் கவர்கின்றனர். இஃதே போன்று தான், அன்றைய சமூக வாழ்விலும் அதன்

தேவைக்கேற்ப, அன்று வாழ்ந்த படைப்பாளிகள் தம் கருத்துக் களைப் படைத்துள்ளனர். இப் படைப்பாளிகள்; தாழ்ந்த அணு முதல் பேரறிவு பெற்ற மனிதர் வரை-சடப் பொருள்கள் என எண்ணுவதிலிருந்து ஆற்றல் கொண்ட இயக்க நெறிப்பாடுகள் வரை புராணங்களில் எடுத்துரைத்துள்ளனர். அவற்றை விளங்கிப் புரிய வைக்க முனைந்துள்ளனர். அனைத்திலும் ஓர் ஆற்றலே ஊடுருவிச் செயல்புரிகின்றதென நம்பினர். அந்த நம்பிக்கையே; சமய வாழ் வாக, சமயம் சார்ந்த இலக்கியப் படைப்புக்களாக வெளிவந்தன. வெளிவருகின்றன.

நாம் எத்தனை முறை வாழ்வின் உச்ச நிலையினை அடைந் திருப்போம். அதே போல் தாழ்ந்து துன்பத்தில் ஆழ்ந்து சித்திர வதைப்பட்டிருப்போம். இதனை உணர்ந்து முயன்ற முயல்வே, நிரந்தரமான இன்பத்தினைத் தேடிப் பெற முயலும் நம்பிக்கை. இந்த நம்பிக்கையின் தேடலே, புராண–இதிகாச தத்துவப் படைப் புக்கள். இப்பிரபஞ்சம் எப்பொழுதும் ஒரே அளவுடையதாகவே இருந்து வருகின்றது. அதில் இருந்து ஒன்றினை விலக்கவோ, அன்றிப் புதிய ஒன்றினைப் புகுத்தவோ யாராலும் இயலாது. இதனை மூட நம்பிக்கை எனப் பகர்ந்தால், உலகனைத்தும் மூட நம்பிக்கையின் பாற்பட்டதென்ற கோட்பாட்டினை நாம் அனை வரும் ஏற்றுக் கொண்டேயாக வேண்டும். இந்த மூட நம்பிக்கையின் பால் ஏற்பட்ட கற்பனைகளே; வரலாறு தொடங்கி அறிவியல் விஞ்ஞானம் ஈறாகவுள்ள ஆய்வுகளும், தத்துவ விஞ்ஞானக் கோட் பாடுகளும். இதனை நாம் விரும்பியோ விரும்பாமலோ ஏற்றுக் கொள்கின்றோம்.

புராணங்கள்; மக்களை சமயச் சிந்தனைக்கு இட்டுச் செல்லும் தன்மை வாய்ந்தவை. இது ஒன்றே போதும் அதன் தகுதி நிலைக்கு தேவர்கள், அசுரர்கள் பற்றியும், செந்தண்மை - கொடுங்கோன்மை பற்றியும், ஆக்கம்–அழிவு பற்றியும், தோற்றம்–ஒடுக்கம் பற்றியும் புராணங்கள் விளக்க முயன்றுள்ளன. நமக்குப் புரியாத அனைத்தும் பொய்யெனக் கூறும் மயக்க நிலையில் இருந்து தெளிவு பெறாத வரை புராணக் கருத்துக்களைப் புரிந்து கொள்ளுதல் இயலாது தேடலும் நிகழாது. தக்ஷிணகைலாச புராணத்தைப் படைத்தவர்; ஒன்றில் இருந்து விரிவுபட்ட பலவற்றையும், பலவாய் நின்ற அனைத்தும் ஒன்றாந்தன்மையாய் இயங்கும் இயல்பினையும் விளக்க முனைந்துள்ளனர். இதனிடையே ஊடுருவி நிற்கும் வர லாற்றுச் செய்திகளும்–சமயக் கருத்துக்களும், ஈழத்தமிழரின் வாழ் வியலை விளக்குவன. எனவே இத்தகைய புராதனப் படைப்புகளை நாம் பேணிப் பாதுகாப்பதன் மூலம் எம்மையே நாம் பேணுபவர் களாகின்றோம்.

படித்தவர்க்கு;

இப் புராணக் கதை பற்றிச் சில குறிப்புக்கள் கூற வேண்டியுள்ளது. இப் புராணத்தின் முன்னுரையில்; ''சிங்கையாரியச் சக்கரவர்த்திக்குப் பன்னிரண்டாம் வழித் தோன்றலாகிய சிங்கைச் செகராசசேகரன் என்னும் அரசனாலே ராசபண்டிதன் என்னும் குருவின் ஆஞ்ஞைப்படி வடமொழியில் உள்ள மச்சேந்திய புராணத்தினை மொழி பெயர்த்து ஏழு சருக்கங்களை உடையதாகச் செய்யுள் நடையாக இயற்றப்பட்டது எனத் திரு. மு. கார்த்திகேய ஐயரவர்களால் பரிசோதிக்கப்பட்டு அவர் மகன் சிதம்பர ஐயரால் கி. பி. 1889ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது'' எனக் குறிக்கப்பட்டுள்ளது. அதற்குச் சான்றாக; யாழ்ப்பாணம் நல்லூர் மகாவித்துவான் அளித்த சிறப்புப்பாயிரம் விளங்குகின்றது.

கி. பி. 1916ஆம் ஆண்டு பு. பொ. வைத்திலிங்க தேசிகர் யாழ்ப்பாணத்தில் வெளியிட்ட பதிப்பில் ''சிங்கைச் செகராசசேகரனாஞ்ஞைப்படி சைவராச பண்டிதர் கட்டளையிட பிரமஸ்ரீ பண்டிதராசர் அருளிச் செய்தனர்'' எனக் கூறப்பட்டுள்ளது. முன்னவர் பதிப்பில், தனக்கு உடன்பாடில்லாதவற்றை மறுத்துரைத்த தேசிகர்; ஐயர் பதிப்பில் சிங்கைச் செகராசசேகரன் ஆஞ்ஞைப்படி இயற்றியது என்று குறிப்பிடப்பட்டதனை மறுத்துரைக்கவில்லை.

இரண்டாவதாகச் சிறப்புப்பாயிரம்

மகாவித்துவான் அரச கேசரியால் பாடப்பட்ட சிறப்புப்பாயிரத்தைக் கவி வீரராகவர் இயற்றியதெனக் கூறிச் சில வரிகளை இடம் மாற்றியும், சில வரிகளைப் புதிதாகச் சேர்த்தும், இறுதியில் அமைந்த பாடலை நீக்கியும் புதிதாக மூன்று பாடல்களைச் சேர்த்தும் பதித்துள்ளார்.

மூன்றாவதாகச் சிறப்புக்கவி

கொக்குவில் சச்சிதானந்த நமசிவாய அவர்கள் இயற்றிய சிறப்புக் கவியினைப் பதிப்பில் இருந்து நீக்கியுள்ளார்;

நான்காவதாக இடைச் செருகல்

எழுத்துக்கள் - சொற்கள் – அடிகள் - பாடல்கள் என்பவற்றை மாற்றியும் புதிதாகப் புகுத்தியும் அமைந்துள்ளதால் ஏற்பட்ட முரண்பாடுகள்.

ஐந்தாவதாகக் குமார சூரியர் பற்றிய கருத்து

எமது காலத்தில் இந்த இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்த கோப்பாய்க் குமார சூரியர் பற்றிப்பாடி இடைச் செருகல் செய்தமை. அதனை 2ஆம் பாகத்தில் பின் இணைப்பில் குறித்துள் ளேன், யாழ்ப்பாண வரலாற்றில் குமாரசூரியர் என ஒருவர் செகராச சேகரனுக்கு ஆசிரியராக இருந்த செய்தி எதிலும் காணப்படவில்லை. குமார சூரியர்; வரலாற்றில் இடம் பெறாத செய்திக்குரியவராக எம் மூதாதையரால் கருதப்படும் குடிமரபினர், இத்தகைய சான்றா தாரங்களினால், நல்லூர் நகரில் வாழ்ந்த சிங்கைச் செகராசசேகரனே புராணத்தின் ஆசிரியன் என்பது பெறப்படும்.

பாட வேறுபாடுகள்

1ஆம் பகுதி

சிறப்புப் பாயிரம்	09
பாயிரம்	28
ஈழமண்டலச் சருக்கம்	36
திருமலைச் சருக்கம்	102
புவனோற்பத்திச் சருக்கம்	25
அர்ச்சனாவிதிச் சருக்கம்	43
மச்சாவதாரச் சருக்கம்	44

2ஆம் பகுதி

தருசனாமுத்திச் சருக்கம்	132
திருநகரச் சருக்கம்	171
மொத்தமாகப்-பாடவேறுபாடுகள்	590

இப்பாட வேறுபாடுகள் அனைத்தும் எண்குறியீடுகள் கொண்டு ஆங்காங்கே குறிக்கப்பட்டுள்ளன. அவற்றின் பொருள் அமைதி நடை என்பவற்றை நோக்கிப் புரிந்துகொள்ளலாம். பதிப்பாசிரி யர்கள்; பொருள் விளங்காச் சொற்கள் அடிகள் எனக் கருதிய அனைத்திற்கும் பொருள் அமைதி கண்டுள்ளேன். பொருள் விளங்கா இடங்களில் எழுத்து-சொல்-அடி என்பவற்றை மாறித் திரு. பு. பொ. வைத்தியலிங்க தேசிகர் பதித்துள்ளதனைப் பாடவேறுபாட்டில் கண்டுகொள்ளலாம். பாடல்களைப் பொருள் அமைதிக்கேற்பவே பிரித்துள்ளேன். யாப்பு முறையினைப் பின்பற்றவில்லை.

என் நிலை

என்னைப் பொறுத்த வரை இதில் வேண்டியவர் வேண்டாதவர் என்ற எண்ணத்திற்கு இடம் கொடுக்கவில்லை. என்னால் இயன்ற வரை கடமையைச் செய்ய முயன்றுள்ளேன். எச்செயலிலும் இது தான் முடிந்த முடிவு என ஒன்றில்லை. கருத்து–செயல் நிலை என்பவை; காலம்–இடம்–நியதி என்பவற்றிற்கு உட்பட்டவை. காலம்–இடம்–நியதி–நிகழ்வு என்பவற்றைக் கடந்தவர்களே மனிதம் நிறைந்தவர். நாம் அனைவரும் அதனை நோக்கிச் செல்பவர். புராணம்–இதிகாசம் திருப்பாடல் போன்றவற்றிற்கு நிறைவான பொருள் கூறுதல் இயலாது. அவை நவில் தொறும் நயம் பயப்பன.

படைப்பாளி தான் வாழ்ந்த காலச் சூழ்நிலையில் அன்றைய மொழிமரபில் தன் கருத்தினைப் படைக்க, நாம் இன்றைய சூழ் நிலையில் மொழி மரபில் நின்று பொருள் காண முயல்கின்றோம். அதனால் நாம்காணும் பொருளுரை படைப்பாளியின் கருத்தாகுமா எனச் சிந்திக்க வேண்டியுள்ளது. ஆயினும் காலத்தின் தேவையினை உணர்ந்து; படைப்பாளியுடன் இணைவு பெற முயன்றுள்ளேன். படிப்பவர்-ஆய்வாளர்–படித்தவர் அனைவரும் இதனை உணர்வரென எண்ணுகின்றேன். நூலின் பின் இணைப்பில் தான் ஆய்வுக்குப் பயன்பட்ட நூல்களின் பட்டியல் கொடுப்பர். ஆயின் அதனை முன்னதாகவே தர விரும்புகின்றேன்.

தேடலுக்குப் பயன்பட்ட நூல்கள்

1. திருக்குறள்
2. திருமந்திரம்
3. நிகண்டு நூல்கள்
4. தொல்காப்பியம்
5. நன்னூல்
6. மதுரைத் தமிழ்ப் பேரகராதி
7. அபிதான சிந்தாமணி
8. இந்திய தத்துவ ஞானம், முனைவர் பி. எம். பி. மகாதேவன்
9. பிரபஞ்சமும் வள்ளுவரும் பண்டிதர் கா. செ. நடராசா பீ. ஏ. (சிறப்பு)

நன்றி

பொருள் தேடும் பணியினை சமய நன்நம்பிக்கையோடு என்னிடம் ஒப்படைத்த இந்து கலாசார திணைக்களத்தின் பணிப்பாளர் திரு. க. சண்முகலிங்கம் அவர்கட்கும், ஆய்வகப் பொறுப்பாண்மை

கொண்ட உதவிப் பணிப்பாளர் திரு. சீ. தெய்வநாயகம் அவர்கட்கும் என் நன்றி உரியது.

நண்பர்–தம்பி–ஆய்வாளர்–உதவிப் பணிப்பாளர் எனப் பல்வகை உறவு கொண்ட திரு. சீ. தெய்வநாயகம் அவர்கள்; சோதிடக் கருத்துக்கள் பற்றிய விளக்கங்களைத் தந்து உதவினார். தமிழ்ச் சங்க நிர்வாகிகள் என் ஆய்வுக்குக் களம் அமைத்து உதவினர். இவர்கட்கு எவ்வண்ணம் நன்றி கூறுவது என எனக்குப் புரியவில்லை.

அது போலவே என் வாழ்க்கைத் துணைவி திருமதி பரமேசுவரி நடராசா அவர்கள்; மூலப்படியினையும் என் கையெழுத்துப் படியினையும் ஒப்புநோக்கித் தவறுகளை நீக்கி உதவினார். அத்தோடு நில்லாது, என் பொருளுரைக்கு முதல் நலனாய்வாளராக இருந்து சிறப்புப்பணி ஆற்றியுள்ளார். இது அவரின் குடும்பக் கடமைகளில் ஒன்றாக வளர்ச்சி பெற்று வந்துள்ளதால் அதைப்பற்றி யான் கூறுதற்கொன்றுமில்லை. இந்நூலுக்கு வெளியீட்டுரையினைத் தந்து அதன் மூலம் ஆய்வுக் கருத்துக்களை முன்வைத்த பேராசிரியர் கலாநிதி சி. பத்மநாதன் அவர்கட்கும், உரை வளத்திற்கு ஊட்டம் அளித்து என் மனநலஞ் சிறக்க நல்லுரை தந்த திணைக்களப் பணிப்பாளர் திரு. க. சண்முகலிங்கம் அவர்கட்கும் என் உளம் கனிந்த நன்றி என்றும் உரியது.

கா. செ. நடராசா,
''கார்த்திகேயம்''
யாழ்ப்பாணம்,
இலங்கை,

05–04–1995

பொருள் வேட்டல்

முந்துநூல் துணை கொண்டேன்
முழுதுணர்ந்தோர் வழிநின்று
என்கருத்தை இன்றுரைத்தேன்;
சிந்தை தெளிந்தவரே,
புந்திநிறைந்தவரே* புலமைசிறந்தவரே!
எந்தையடி பரவிநின்றேன்,
விந்தையொன்றுஞ் செய்தறியேன்
கற்றதெல்லாஞ் சிறுதுளியே.

பொருளுரைத்தேன் என்பதெல்லாம்
புலமை கொண்டன்று,
அருள்பொலிந்த கார்த்திகேயன்
வழிகாட்ட நின்றதனால்
பொருள் விளக்குந் தன்மையெலாம்
அவனடிக்கே யுரியதென்று
மருள்நீக்கி யுணர்ந்ததனால்
அவனடிக்கே வேட்கின்றேன்.

வேட்கின்ற என்பொருளை
வேண்டாமை கொண்டவனாய்
நீக்கமற நின்றிலங்கும்
கார்நிகர்த்த திருவடியான்
கார்த்திகைத் திருமகனாய்ப்
பேர்கொண்ட என்னுயிராம்
கார்த்திகேயன் தண்ணடிக்கே
வேட்கின்றேன் இப்பொருளை.

இணுவையூர் கா. செ. ந.,
கார்த்திகேயம்,
யாழ்ப்பாணம்
இலங்கை.

நூன்முகம்

சிங்கைச் செகராசசேகரனாற் பாடப்பெற்ற தக்ஷிண கைலாச புராணம் திருக்கோணேஸ்வரம் பற்றிய தலபுராணமாகும். சைவ ராச பண்டிதர் என்னும் குருவின் வேண்டுகோளுக்கு அமையச் சமஸ்கிருத மொழியில் இருந்த மச்சேந்திய புராணத்தைத் தமிழிற் செகராசசேகர மகாராசன் பாடினார். சமஸ்கிருத நூலில் இடம் பெறாத கோயிலின் வரலாறு பற்றிய ஐதீகங்களும் இதிலே சேர்க்கப் பட்டன. குளக்கோட்டன், கஜபாகு ஆகியோரின் திருப்பணிகள் பற்றிக் கூறும் பாடற் பகுதிகள் வரலாற்று முக்கியத்துவம் பொருந்தியவை.

தல புராணங்களில் இந்நூல் பழமையானவற்றுள் ஒன்று. திருக் கோணேஸ்வரம் பற்றிக் கிடைக்கின்ற இலங்கையில் எழுந்த நூல் களில் இதுவே புராதனமானது. ஆலயம் சிறப்புற்றிருந்த காலத்தில் இந்நூல் பாடப் பெற்றமை குறிப்பிடற்குரியது.

மகா புராணங்களிலே கூறப்படுகின்ற இந்துசமய தத்துவங்களை யும், சைவசமயக் கருத்துக்களையும் தலச் சிறப்புப் பற்றிய செய்தி களையும் ஒருங்கிணைத்துக் கூறும் நூல் என்பதனாற் சமய அறிவுக் களஞ்சியமாக இது விளங்குகின்றது. கோணேசர் கல்வெட்டு, திருக் கோணாசல புராணம் முதலிய நூல்களிலும் இதிலே காணப்படும் செய்திகள் பல விரித்துரைக்கப்படுகின்றன. இந்நூல் முன்பு திரு. ஆ. சிவசிதம்பர ஐயராலும், திரு. பு. பொ. வைத்திலிங்க தேசிக ராலும் வெளியிடப்பெற்றது. இது நூலின் மூன்றாவது பதிப்பாகும். நூல் உரையுடன் வெளியிடப்படுவது இப்பதிப்பின் சிறப்பம்சமாகும். தமிழ் மொழியிலும் சைவ சமயத்திலும் புலமை மிக்கவரான பண்டிதர் கா. செ. நடராசா அவர்கள் இலகுவான மொழி நடையில் தெளிவான உரையொன்றினை எழுதி வழங்கியுள்ளார்.

ஈழநாட்டிலே தோன்றி வளர்ச்சி பெற்ற தமிழ் இலக்கிய மர பினைப் பற்றித் தெளிவான விளக்கத்தைப் பெற்றுக் கொள்வதற்கு இப்பதிப்புத் துணைபுரியும் என்று நம்புகின்றோம். இந்நூல் சைவர்கள் எல்லோராலும் படித்தற்குரியது. ஆலயங்களிலும் இல்லங்களிலும் பாராயணம் பண்ணுவதற்கு ஏற்றது. வெளியீட்டு உரை மூலம் தக்ஷிண கைலாச புராணம் பற்றிய பல விடயங்கள் தெளிவாக்கம் பெறுகின்றன.

கலாநிதி சி. பத்மநாதன்,
வரலாற்றுத்துறை பேராசிரியர்,
பேராதனைப் பல்கலைக் கழகம்.

05–04–1995.

வெளியீட்டுரை

சிறப்புப்பாயிரம்

பாடபேதங்களும் ஆசிரியரும்

கைலாச புராணத்துச் சிறப்புப்பாயிரம் பற்றிச் சில சுவாரஸ்ய மான வினோதங்கள் உள்ளன. இதுவரை வெளிவந்துள்ள இரு பதிப்புகளிலும் இதன் ஆசிரியரின் பெயரைப் பதிப்பாசிரியர் இருவரும் மாறுபடக் கூறியுள்ளனர். அதனை யாழ்ப்பாணத்து நல்லூர் இராசதானியைச் சேர்ந்த மகாவித்துவான் அரசகேசரி பாடினார் எனச் சிவசிதம்பர ஐயர் குறித்துள்ளனர்.[1] ஆயினும் சிறப்புப் பாயிரம் பாடியவர் கவிவீரராகவர் என்பர் பு. பொ. வைத்திய லிங்க தேசிகர்.[2] இரு பதிப்புகளிலுமுள்ள வாசகங்களிலுஞ் சில வேறுபாடுகள் உள்ளன. முந்திய பதிப்பில் 34 வரிகளும் மற்றைய தில் 37 வரிகளும் உள்ளன. அவற்றின் அமைப்பிலுஞ் சில மாறு பாடுகள் காணப்படுகின்றன. மற்றைய அம்சங்களைப் பொறுத்த வரையில் அவற்றிடையில் எதுவித வேறுபாடும் இல்லை.

அரசகேசரி இயற்றியது எனப்படும் சிறப்புப்பாயிரம் இரு வசனங்களைக்கொண்டது. அது மூன்று பிரதான விடயங்களை விளக்குகின்றது. முதலாவது வசனம் ''......புராண நூற்கதையை ஆசறு தமிழில் அறைகுதி என்றனன்... செப்பருஞ் சைவராச பண்டிதன்'' என்னும் பொருளை அடிப்படையாகக் கொண்டது.[3] அது 19 வரிகளை உள்ளடக்கியது. அதிலே இரு அம்சங்கள் இடம் பெற்றுள்ளன. அவற்றுளொன்று புராணநூற்கதையின் பிரதான விடயங்களை 12 வரிகளிலே வர்ணிக்கின்றது. மற்றைய அம்சம் சைவராச பண்டிதர் என்னும் குருவினை 7 வரிகளில் வர்ணிக்கின்றது.

இரண்டாவது வசனம் ''அந்தாதித் தொடை அடிகொடு தொடுத்து நந்தா விருத்தம் நவையறக் கூறினன்'' என்னுந்

தொடர்களுடன் தொடங்கிச் ''செப்பருஞ் செகராசசேகரனே என்னும் மொழிகளுடன் முடிகின்றது.[4] சுருக்கக்கூறின் அரசகேசரி பாடியது எனப்படும் சிறப்புப்பாயிரம் கைலாசபுராணத்தின் பொருள்மரபினைப் பற்றியும் அதனைத் தமிழிற் பாடிய செகராச சேகரனைப் பற்றியும் அவனுடைய குருவாகிய சைவராச பண்டி தரைப் பற்றியுஞ் சிறப்பித்துக் கூறுகின்றது.

கவிவீரராகவர் இயற்றியதாகக் கொள்ளப்படும் சிறப்புப்பாயிர மும் இரு வசனங்களால் அமைந்தது. அதிலுள்ள முதற் பன்னிரு வரிகளும் மற்றைய வாசகத்திற் போலவே எதுவித வேறுபாடு மின்றிக் காணப்படுகின்றன. ''மணிநிறக்கண்டன்'' என்னும் மொழி களுடன் ஆரம்பமாகித் ''தெய்வமாமுடிச் செகராசசேகரன்'' என்னுந் தொடருடன் நிறைவுபெறும் முதலாம் வசனம் நூலினைப் பற்றியும் நூலாசிரியரைப் பற்றியும் வர்ணிக்கின்றது.

''அவனது காலத்துத் திரிகோணைச் சிவனது கோயிற் சிவ மறை முதலோன்... ..'' செப்பரும் பண்டிதராச சிகாமணி என்னு நாமத்தெங்குரு பெருமான் மன்னு நாற்கவியும் வல்ல நாவலனே என்னும் வசனம் பண்டிதராசர் என்பவரைப் பற்றியதாய் அமைகின்றது.[5] பண்டிதராசர் கைலாச புராணத்தைப் பாடினார் என்று பொருள் கொள்ளத்தக்க வகையில் இதன் வாசகம் அமைய வில்லை என்பதுங் குறிப்பிடத்தக்கது. செகராசசேகரனது காலத் திலே பண்டிதராசர் கோணேஸ்வரத்தில் முதன்மை நாயகராக விளங்கினார் என்பதையே அது குறிக்கின்றது.

சிறப்புப் பாயிரத்தின் பிரதியொன்று சைவராசபண்டிதர், செகராசசேகரன் ஆகிய இருவரைப் பற்றிக் கூற அதன் மற்றைய பிரதி தேசிகன், செகராசசேகரன் பண்டிதராசர் என்னும் மூவரைப் பற்றிச் சொல்கின்றது. இம்மாறுபாடுகள் எவ்வாறு ஏற்பட்டுள்ளன என்பது சிந்தனைக்குரியதே! இவ்விரண்டினுள் எதன் வாசகம் ஆதார பூர்வமானது, எக்காரணங்களால் மூலப்பிரதியில் மாற் றங்கள் ஏற்பட்டுள்ளன என்பனவும் ஆராய்ந்து தெளிவுறுத்துதற்கு உரியவை.

அரசகேசரி பாடிய சிறப்புப் பாயிரத்திற் சைவராச பண்டிதர் பற்றிக் கூறப்படும் செய்திகள் கவிவீரராகவர் பாடியதாகச் சொல்லப்படும் வாசகத்திலே பண்டிதராசருக்கு உரியனவாகக் கூறப்படுகின்றமை குறிப்பிடத் தக்கது. அரச கேசரியின் பாடல் சைவராச பண்டிதரை மேல்வருமாறு வர்ணிக்கின்றது.

''அருமறை உபநிடம் ஆகமச் சோதிடம்
விரிகலை பலவும் விளங்கிய குரவன்
சேயினுந் திறலான் சிவநெறித் தவனுளான்
தாயினும் இனியான் தயாநிதி அனையான்
முப்புரி நூற்பயன் மூரியதாமன்
செப்பருஞ் சைவராச பண்டிதன்.''

இத்தகைய சைவராச பண்டிதரின் வேண்டுகோளினாற் செகராசசேகரன் புராணநூற் கதையைத் தமிழிற் பாடினான் எனப்படுகின்றது. கவிவீரராகவர் பாடியதாகச் சொல்லப்படும் பாடலிற் பண்டிதராசரைப் பற்றிய பகுதி சைவராச பண்டிதரைப்பற்றிய விபரங்கள் அனைத்தையும் அடக்கியதாக மேல்வருமாறு அமைந்துள்ளது.

''அவனது காலத்துத் திரிகோணச்
சிவனது கோயிற் சிவமறை முதலோன்
அருமறை ஆகமஞ் சோதிடம்
விரிதமிழ் வரையற விளங்கிய குரவோன்
சேயினுந் திறலான் சிவநெறி தவறான்
தாயினும் நல்லான் தயாநிதியனையான்
முப்புரிநூற் பயன் முளரியந்தாமன்
செப்பரும் பண்டிதராச சிகாமணி
என்னு நாமத் தெங்குரு பெருமான்
மன்னுநாற் கவியும் வல்ல நாவலனே''.[6]

சைவராச பண்டிதற்குரிய அடைமொழிகளைப் பண்டிதராசருக்கு உரியனவாக மாற்றியவர்கள் சைவராசபண்டிதர், பண்டிதரா்சர் என்னுமிரு பெயர்களும் ஒருவருக்கு உரியனவாயிருந்தன என்று கருதினார்கள் என்று கொள்வதற்கும் இடமில்லை. தேசிகன் என்னும் ஒருவரைப் பற்றியும் வைத்தியலிங்க தேசிகரின் பதிப்பிலுள்ள வாசகம் குறிப்பிடுகின்றது. அக்குறிப்பு மேல்வருமாறு உள்ளது:

''பூசையொடு இறைஞ்சிய புராணநூற் கதையைத்
தேசிகன் சொற்படி தென்கலைப்படுத்தி
அந்தாதித் தொடை யடைவொடு தொடுத்து
நந்தா விருத்தம் நவையறக் கூறினன்
....
தெய்வமாமுடிச் செகராசசேகரன்''.

சைவராசபண்டிதரையே தேசிகன் என்று இப்பகுதியிற் குறிப்பிட்டுள்ளனர் என்று கருத முடிகின்றது. இதனையுற்று வைத்திய லிங்க தேசிகர் மேல்வருமாறு கூறுகின்றமையுங் குறிப்பிடத்தக்கது. ''இந்த மகாஷேத்திரத்தின் அதியற்புதங்களைத் தமிழிலெடுத்துக் கூறுவது ஸ்ரீ தக்ஷிண கைலாசபுராணம். இதனைச் சிங்கைச்செகராஜ சேகரனாஞ்ஞைப்படி சைவராச பண்டிதர் கட்டளையிட பிரம்மஸ்ரீ பண்டிதராசர் அருளிச் செய்தனர்''.

இதுவரை கவனித்தவற்றின் மூலம் கிடைக்கின்ற முடிபுகளை மேல்வருமாறு அமைத்துக்கொள்ளலாம். (1) ஒரே சிறப்புப் பாயிரமே வேறிருவராற் பாடப்பெற்றதென்று சொல்லப்படுகின்றது. (2) அரச கேசரி பாடியதாகச் சொல்லப்படும் வாசகம் புராணநூற் கதையின் அம்சங்களையும், சைவராச பண்டிதர், செகராசசேகரன் என்போரையும் சிறப்பித்துக் கூறுகின்றது. அதன் அமைப்பு இயல்பானதாயும் பிறழ்வின்றியும் காணப்படுகின்றது. வைத்தியலிங்க தேசிகரின் பதிப்பிலுள்ள வாசகத்திற் சில திரிபுகள் ஏற்பட்டுள்ளன. மற்றைய வாசகத்திலே இருவர் வர்ணிக்கப்பட்டிருக்கையில் இதிலே தேசிகர், செகராசசேகரன், பண்டிதராசர் ஆகிய மூவரைப் பற்றிக் கூறப் பெற்றுள்ளது. சைவராசபண்டிதரை நீக்கிவிட்டு அவரின் இடத்திலே தேசிகர் என்றொருவரைப் புகுத்தியுள்ளனர். ஆயினும் தேசிகன் சொற்படியே புராணநூற் கதையைச் செகராசசேகரன் தமிழிற் பாடியதாகச் சொல்லப்படுகின்றது. மற்றைய பதிப்பிலுள்ள சிறப்புப் பாயிரத்திலே குறிக்கப்பெறாத ஒருவரை - பண்டிதராசரை - கவிவீரராகவர் பாடியதென்று சொல்லப்படும் சிறப்புப்பாயிரம் புகழ்ந்துரைக்கின்றது. முன்கண்டவாறு சைவராசபண்டிதருக்குரிய அடைமொழிகள் யாவும் பண்டிதராசருக்கு உரியனவாய் அமைக்கப்பட்டுள்ளன. பண்டிதராசரைப் பற்றிக் கூறும் சிறப்புப் பாயிரமானது சைவராசபண்டிதரைத் தேசிகரென்று சொல்வதாலும் அவரைப்பற்றிய பாடற்பகுதியைப் பண்டிதராசருக்கு உரியதாக அமைத்துக் கொள்வதாலும் பண்டிதராசரைப் பற்றி இயல்பாக ஐயம் எழுகின்றது. மேலும் அவரைப் பற்றிய பாடற்பகுதி சிறப்புப் பாயிரத்திற்குப் பொருளாக அமைந்த பகுதியோடு பொருந்துவதாக அமையவில்லை. நூலைப்பற்றியும் நூலாசிரியரைப்பற்றியும் கூறுவதற்கென அமைந்த பாடலிற் கோணேஸ்வரத்து முதன்னை நாயகரைப் பற்றிச் சொல்லவேண்டிய தேவையைப் புரிந்து கொள்ளுமாறில்லை. சிறப்புப் பாயிரத்தின் மூலப்பிரதியை ஒரு காலத்தில் யாரோ மாற்றி அமைத்தனர் என்றும் பண்டிதராசர் என்னும் பெயரை எக்காரணம் பற்றியோ சேர்த்துக் கொண்டனர் என்றும் எண்ணத் தோன்றும்.

கைலாசபுராணத்துப் பாயிரச் செய்யுள்களிற் பண்டிதராசர் என்பவரைப் பற்றி எதுவுமே காணப்படவில்லை. அந்நூலின் இரு பதிப்புக்களிலும் பாயிரச் செய்யுள்களைப் பொறுத்தவரை எதுவித மாறுபாடுங் காணப்படவில்லை. நூலாசிரியர் தன்குருவான சைவ ராச பண்டிதரைப் பற்றி மேல் வருமாறு நயம்படக் கூறுவார்:

வைப்பான வடகயிலை தென்கயிலை யென்றிரண்டு
வரைக்கு முன்னாட்
செப்பாதி வடமொழியின் புராணநடை தென்மொழியாற்
செப்புகென்றா
ளிப்பாரி லயனான்குமுகமு மொருமுகமாகி
யியைந்ததென்ன
மெய்ப்பான குருச் சைவராச பண்டிதனென்னும்
நால்வேத நூலோன்
வேதமுதலுபநிடமுஞ் சிவாகமும் புராணமுதல்
விரிநூல்யாவுஞ்
சோதிடமு மந்திரமு முணர்ந்துணராதவர்
தெளியச் சொல்லவல்லோ
னாதலினாலக் குருவின்மொழி கேட்ப
வேண்டுமெனுமன்பினாலே
யோதினனிவ் வடமொழியின் புராணநடை
தென்மொழியுலகமீதே. 9

இச்செய்யுள்களில் நூலாசிரியன் தன்குருவான சைவராச பண்டிதரைப் பெரிதும் புகழ்ந்து கூறுகின்றான். அக்குருவின் வேண்டுகோளிற்கிணங்கி வடமொழியிலுள்ள புராணநூற்கதையைத்தான் தமிழிலே பாடுவதாகவுங் குறிப்பிடுகின்றான். அரசகேசரி பாடிய சிறப்புப் பாயிரம் சைவராச பண்டிதரைப் பொறுத்தவரையிற் கைலாசபுராணத்துப் பாயிரச் செய்யுள்களை ஒட்டிச் செல்கின்றது. கவி வீரராகவர் இயற்றியது எனப்படும் சிறப்புப்பாயிரத்து வாசகம் பாயிரச் செய்யுள்களிலிருந்து மாறுபட்டு பிறழ்ந்து நிற்கின்றது. எனவே முன்னையதே ஆதாரபூர்வமானது என்றும் பிறழாத மரபு தழுவியது என்றும் மூலப்பிரதியின் சரியான வாசகம் என்றுங் கொள்ளத்தக்கது. வைத்தியலிங்க தேசிகரின் பதிப்பிலுள்ள வாசகம் காலத்தாற் பிந்தியது என்றும் நூலைப் பற்றியும் அதன் ஆசிரியரைப் பற்றியும் நூல் எழுந்த கால வரையறை குறித்தும் மயக்கம் ஏற்பட்ட காலத்திலே மாற்றி அமைக்கப்பட்டது என்றும் கருதலாம்.

சிறப்புப் பாயிரம் பற்றிக் கவனிக்க வேண்டிய இன்னுமோர் அம்சம் அதன் இரு வேறான வாசகங்களுடன் பின்னடையாகவரும் செய்யுள்கள் பற்றியதாகும். சிவசிதம்பர ஐயரின் பதிப்பில் ஒரு செய்யுளும் வைத்தியலிங்க தேசிகரின் பதிப்பில் மூன்று செய்யுள் களும் சிறப்புப் பாயிரத்தின் வாசகத்தோடு இணைக்கப்பட்டுள் ளன. இவை சிறப்புப் பாயிரத்தின் பகுதிகளாகவன்றி வேறு ஆசிரியர்களாற் பாடப்பெற்ற தனிச் செய்யுள்களாகவே கொள்ளத் தக்கவை. தேவராலும் புகழப்படும் செகராசசேகர மன்னன் தென்கயிலாய மான்மியத்தைத் தமிழ் செய்தானென்று முன்னவர் பதிப்பிலுள்ள தனிச் செய்யுள் கூறுகின்றது.[10] வைத்தியலிங்க தேசிகரின் பதிப்பிற் காணப்படும் மூன்று பாடல்களிலொன்று கவி வீரராகவர் சிறப்புப்பாயிரம் பாடியமை பற்றிக் குறிப்பிடுகின்றது. இரண்டாவது செய்யுள் இருக்கு மொழிச் சைவசிகாமணி என்னும் பண்டிதராசன் மச்சகேச்சுர புராணந்தன்னைத் தமிழ்படுத்தி 7 சருக்கங்களாகவும் 635 செய்யுள்களாகவும் வகுத்தனன் என்கின்றது[11] இச்செய்யுள் ஒன்று மட்டுமே பண்டிதராசர் கைலாசபுராணத் தைப் பாடினார் என்று கொள்வதற்கு ஆதாரமாகும். இப்பாட லைப் பிறசேர்க்கையாகக் கொண்டுள்ள சிறப்புப் பாயிரம் புராண நூலைச் செகராசசேகரன் பாடினான் என்று கூறுவதால் இச்செய்யுள் சிறப்புப் பாயிரத்தினின்றும் வேறுபட்டதென்பதும் அது ஆசிரி யர் வேறொருவராற் புனையப் பெற்றது என்பதும் தெளிவாகின் றது. இச்செய்யுளானது யாரால் எப்போ பாடப்பெற்றது என் பதை இப்போ அறியுமாறில்லை. கைலாசபுராணத்தைப் பாடிய வர் பண்டிதராசர் என்ற கருத்து நவீன காலத்திலே மேலோங்கி நிலை பெறுவதற்கு இப்பாடல் ஆதாரமாய் அமைந்து விட்டது.

'கவிராஜர் சொன்ன கவி' என்று வைத்தியலிங்க தேசிகரால் வர்ணிக்கப்படும் மூன்றாம் செய்யுள் மேல்வருமாறுள்ளது:

நடிக்கும் பரதமியலிசை நாடக நாற்கவிதை
நொடிக்குமுன் பாடப் ப்ரபந்தங் கணித நன்நூல் சிவநூல்
படிக்க நிகழ்த்தப் புராணமேஞ் சொல்பரம்பரையாய்[12]
வடிக்கும் தமிழ் வல்ல பண்டிதராசன் வரவித்தையே,

பரதம், முத்தமிழ், நாற்கவிதை, கணிதம், நன்னூல், புராணம், ஆகமம் ஆகிய துறைகளிலே பண்டிதராசர் பாண்டித் தியம் பெற்ற வித்தகராய் விளங்கினார் என்பதையே இது நயம் படக் கூறுகின்றது. வைத்தியலிங்க தேசிகர் கூறியவாறு கோணேசர்

கல்வெட்டின் ஆசிரியரான கவிராசர் இப்பாடலைப் புனைந்திருப் பின் அதற்கும் சிறப்புப் பாயிரத்திற்கும் எதுவிதத் தொடர்பு மில்லை என்பதும் இச்செய்யுள் பிற்பட்ட காலத்திலே அதனுடன் இணைக்கப்பெற்றது என்பதும் உணரப்படும்.

2. அரசகேசரியும் கவிவீரராகவரும்

சிறப்புப்பாயிரத்தின் வாசகங்களைப் பொறுத்த வரையில் அவற்றிலே காணப்படும் மொழித்தொடர்களுஞ் சீர்களும் பெரும் பான்மையும் ஒத்திருப்பதால் அவற்றை இருவர் வெவ்வேறாகப் பாடினார் எனக் கொள்வது எவ்வகையிலும் பொருந்தாது. அவ் வாறாயின் சிறப்புப் பாயிரத்தை அரசகேசரி பாடினாரா? கவிவீர ராகவர் பாடினாரா? என்பது ஆராய்ந்து அறிதற்குரியது. இவர் களுள் அரசகேசரி யாழ்ப்பாணத்து நல்லூர் இராசதானியைச் சேர்ந்தவர். அவரைப்பற்றி யாழ்ப்பாண வைபவமாலை மேல் வருமாறு கூறும்:

பரநிருபசிங்கத்தின் மைத்துனனும் பரராசசேகரன் மருமகனு மாகிய அரசகேசரி யென்பவன் இரகுவமிச மென்னும் நூலை வட மொழியிலிருந்து மொழி பெயர்த்துப் புராண நடையாகப் பாடித் திருவாரூரிலே கொண்டுபோய் அரங்கேற்றிப் பெருங் கீர்த்திய டைந்தான். இப்படியே யாழ்ப்பாணம் கல்வியறிவிலே தலைப் பட்டுப் பல வித்துவான்கள் அங்குமிங்கும் எழும்பினார்கள்.''[13]

அரசகேசரி ஆழ்வார் திருநகரி அட்டாவதானி இராமானுஜ கவிராயரிடம் கல்வி பயின்றவர் என்பது ஐதிகம்.[14] தமிழ் இலக்கண இலக்கிய நூல்களிற் புலமை பெற்றவரான அரசகேசரி சமஸ்கிருத மொழிக் கல்வியிலும் பெரும் வித்தகராக விளங்கினார். அவருடைய கவிநடை கடினமானது. பாட்டியல் இலக்கணங்களைப் பயின்று இலக்கியங்களிற் புலமை பெற்றவர்களினால் மட்டுமே புரிந்து கொள்ளக்கூடிய செய்யுள் நடையில் இரகுவம்சத்தை அவர் பாடி யுள்ளார்.

அரசகேசரி 16 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் 17 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் வாழ்ந்தவர். அவருடைய காலத் திலே யாழ்ப்பாண மன்னரின் ஆதிக்கம் போர்த்துக்கேயரின் நெருக் குதல்களினால் வலிகுன்றி வந்தது. எதிர்மன்னசிங்கம் என்ற இயற் பெயரும் பரராசசேகரன் என்னும் பட்டமும் பெற்றிருந்த அரசன் இறந்தபின், 1615 ஆம் ஆண்டிலே அரச காவலராக அரசகேசரி நியமனம் பெற்றிருந்தார். யாழ்ப்பாண தேசத்து இறுதி மன்ன

னாகிய சங்கிலிகுமாரன் அரசகேசரியைக் கொன்று அதிகாரத்தைக் கைப்பற்றினான் என்று சொல்லப்படுகின்றது. அரசகேசரி முதலாஞ் சங்கிலியின் ஆட்சிக் காலத்துக்கும் (1519-60) சங்கிலி குமாரனின் காலத்துக்கும் இடைப்பட்டவர் என்பது தெளிவாகின்றது.

கவிவீரராகவர் என்பவர் யாழ்ப்பாண மன்னர்களோடு தொடர்பு தொண்டவர் என்பது பல தனிப்பாடல்களினால் அறியப் படுகின்றது. பிறவிக் குருடர் என்பதால் அந்தகக் கவிவீரராகவர் என இவரைக் குறிப்பிடுவர். வடுகநாத முதலியார் என்பவரின் மகனாகிய இவர் காஞ்சியிற் பிறந்து அங்கு கல்வி பயின்றவர்.[16] இயல்பாகவே கவிதாசக்தி கைவரப் பெற்றவர். கவிவீரராகவரின் பாடல்கள் சொன்னயமும் பொருணயமும் மிக்கவை; சிலேடை மடக்கு என்னும் அணியலங்காரங்கள பொருந்தியவை.

கவிவீரராகவர் தமிழகத்துத் தலங்கள் பலவற்றுக்குச் சென்றவர், அரசராயும் பிரதானிகளாயும விளங்கிய பலரின பாராட்டுக்களைப பெற்றவா. திருவாரூர் உலா, சேயூர் முருகன பிள்ளைத்தமிழ், திருககழுக்குன்றப் புராணம், சேயூர்க்கலம்பம், சந்திரவாணன் கோவை, கயததாற்றரசன் உலா என்னும் நூல்களை இவர் பாடினார் என்பர். மேலும் பல சீட்டுக் கவிகளும் இவரின் பெய ரால் வழங்குகின்றன.[17]

தமிழ் வித்தகரான யாழ்ப்பாண மன்னர்கள் கவிஞரைப் போற்றிப் பாராட்டி ஆதரிக்கும் பண்புடையோராய் விளங்கினர். தமிழகத்திலுள்ள கலவி நிறுவனங்களோடுங் கலாநிலையங்க ளோடும் நெருங்கிய தொடர்புகளை ஏற்படுத்தியிருந்தனர். தமிழ கத்துப் புலவருட் சிலர் அவர்களின் பாராட்டுக்களையும் ஆதர வினையும் பெற்றனர். அத்தகையோரில் அந்தகக் கவிவீரராகவரும் ஒருவர். பரராசசேகரனின் அரண்மனைக்குச் சென்றபோது அவர் மேல்வரும் கவிதையைப் பாடினார் என்பர்.

'நரைகோட் டிளங்கன்று நல்வள நாடு
நயந்தளிப்பான்
விரையூட்டு தார்புய வெற்பீழ மன்னவனென்றே
விரும்பிக்
கரையோட்ட மீதின் மரக்கலம் போட்டுன்னைக்
காணவந்தால்
திரைபோட்டு நீயிருந்தாய் சிங்க பூப சிரோமணியே' 19

பரராச்சேகரன் கவிவீரராகவரின் புலமையைக் கண்டு வியந்து பாராட்டிப் பரிசிலாகப் பொற்கிழி வழங்கிய போது கவிவீரராகவர் மேல்வரும் பாடலைப் பாடினார் என்றும் சொல்லப்படுகின்றது:

'பொங்குமிழ யின்பந்தம் போயதே என் கவிதைக்
கெங்கும் விருதுபந்தம் ஏற்றதே - குங்குமந்தோய்
வெற்பந்தமான புயவீர பரராசசிங்கம்
பொற்பந்தம் இன்றளித்த போது.' 19

கவிவீரராகவர் யாழ்ப்பாணஞ் சென்று அங்குள்ள பரராசசேகரன் ஒருவனைப் பாடினார் என்பது ஐதிகமாயினும், பரராசசேகரன் என்னும் பட்டப்பெயர் மன்னர் பலருக்குரியதால் அவருடன் தொடர்புகொண்ட அரசன் அவர்களுள் எவர்என்பதுபுலனாகவில்லை கவிவீரராகவரின் காலம் 16 ஆம் நூற்றாண்டென்று பொதுவாகக் கொள்ளப்படுகின்ற போதும் அதனை உறுதிப்படுத்துவதற்கும் தக்க சான்றுகளில்லை.

அரசகேசரி, கவிவீரராகவர் ஆகிய இருவருள் எவராற் சிறப்புப்பாயிரம் பாடப்பெற்றது என்பதனைத் தெளிவுபடுத்துவதற்கான போதிய ஆதாரங்கள் காணப்படவில்லை. வைத்தியலிங்க தேசிகரின் பதிப்பிலுள்ள சிறப்புப் பாயிரத்திற் பிறழ்வு ஏற்பட்டுள்ளமையால் அதிற் காணப்படுங் குறிப்புக்களை ஆதாரமானவை என்று கொள்ள முடியாதுள்ளது. பண்டிதராசரைச் சிறப்புப் பாயிரத்திலே புகுத்தியவர்கள் அரசகேசரியின் பெயரை நீக்கி கவிவீரராகவரின் பெயரைப் புகுத்தியுள்ளனர் என்று எண்ணத் தோன்றும்.

சிறப்புப் பாயிரத்திலே செகராசசேகரனைப் பற்றி வரும் பாடற் பகுதியானது அவனைப்பற்றியும் அவன் முன்னோர்களைப் பற்றிய கதைமரபுகளையும் தெளிவாக விளங்கியிருந்த ஒருவரால் பாடப்பெற்றது எனக்கருத முடிகின்றது. அத்தகுதியினை அரசகேசரியே பெற்றிருந்தார் என்பதில் எதுவித ஐயமுமில்லை.

2. நூலாசிரியன்

மாறுபாடான மரபுகள்

ஈழத் தமிழ்க் கவிஞரின் சிகாமணியாக விளங்கும் கைலாசபுராண ஆசிரியரைப் பற்றி மாறுபாடான கருத்துக்கள் நிலவிவருகின்றமை விசனத்துக்குரிய விடயமாகும். இருபதாம் நூற்றாண்டைச் சேர்ந்த ஈழத்து மகாவித்துவான்களாகிய பலர் இத்தடு

மாற்றத்தின் காரணமாய் அமைந்தமையும் கவலைக்குரிய வொன்றாகும். கைலாச புராணம் முதன் முதலாகக் காரைநகர்க் கார்த்திகேய ஐயர் குமாரர் சிவசிதம்பர ஐயராலே பதிப்பிக்கப் பெற்றுச் சென்னையிலுள்ள கலாரத்நாகரம் அச்சுக்கூடத்தினரால் 1887 ஆம் ஆண்டிலே வெளியிடப் பெற்றது. தக்ஷிண கைலாச புராணம் என்ற பெயருடன் நூலை வெளியிட்டனர். நூலின் முதற் பக்கத்திலே 'இஃது யாழ்ப்பாணத்து நல்லூரர் சிங்கைச் செகராச சேகரன் இயற்றியது' என்று கூறப்பெற்றுள்ளது. கொக்குவிற் பண்டிதரான சச்சிதானந்த நமச்சிவாய(ர்) இதற்குச் சிறப்புக்கவி வழங்கியுள்ளனர். இவர் நூலாசிரியரைப்பற்றி மேல்வருமாறு சிறப்பித்துள்ளனர்.

இந்த மேன்மை பெற்றுயர்மலைச் சரிதங் கூரினிய
முந்து செந்தமிழ்ப்பாவினான் மொழியெனப் பணித்தான்
கந்தநாண் மலர்க் கமலமீதுறைந்த வத்கடுப்ப
வந்து தோன்றினோன் வரதராயண முனிவன்...
மேலை ஞான்றினின் வகுத்த மூவாறெனும் புராண
நாலுவேத மார்மிருதிகள் யாவது நம்பன்
காலவாதியருள் புரியாகமங் கற்றுச்
சீலமேவு சைவராசப் பெயர்கொள் பண்டிதனே.
அருளும் வாசகமது துணையாகவே கொண்டு
பரவு திப்பிய நவரசத்துலங்கவே பாரில்

விரவு நாவலர் விருந்தென வேண்டியுட்கொள்ள
வுரவு தக்கிண கயிலை மான்மியமென வுரைத்தான்.
எண்ணெழுத் தென்னுநூற் கரைகண்டோனிருநிலன்
புரந்திடுசீர்த்தி
நண்ணியவரசர் முடியுழுது நள்ளொளிகாலு
செந்தாளன்
கண்ணகன் சேது வுயர்கரைக் காவல் பூண்டவன்
கறைகெழுவேலான்
திண்ணிய சிங்கையாரியன் சீர்த்திசெறி
செகராசசேகரனே.

சச்சிதானந்த நமச்சிவாயரின் பாடல்கள் இனிய சத்தங்களிலமைந்த அருமையான பாடல்கள். அவை இனிய செந்தமிழில் எளிமையான நடையில் அமைந்தவை. இப்பாடல்கள் கைலாச புராணத்துச் செய்யுள்களை ஆராய்ந்தறிந்து அவற்றிலுள்ளவற்றை நன்கு தெளிந்து அவற்றிலுள்ள கருத்துக்களுக்கு முரண்படாத

வகையிலே பாடப்பெற்றவை என்பது கவனித்தற்குரியது. நூல்களுக்கு முன்னுரைகளை வழங்குவோருக்கும் சாற்றுகவி பாடுவோருக்கும் அன்னாரின் பாடல்கள் முன்னுதாரணமாய் அமையத்தக்கவை.

கைலாசபுராணத்தின் இரண்டாம் பதிப்பு யாழ்ப்பாணத்துப் புலோலியூரிற் பிறந்தவரும் மட்டக்களப்புக் காரைத்தீவு வாசியுமாகிய பு. பொ. வைத்தியலிங்க தேசிகரின் நவமான சாதனையாகும். இது பருத்தித்துறைத் தும்பைநகர் கலாநிதி யந்திரசாலையிற் பதிப்பிக்கப்பெற்று 1916 ஆம் ஆண்டிலே வெளியாகியது. ''பல ஏட்டுப் பிரதிகளைக் கொண்டு பரிசோதித்து(த்) திருத்தியும் விளக்கியும் புதுக்கி''ப் பதிப்பிக்கப் பெற்றதென்று நூற்பிரதியின் முதற் பக்கத்திலே கூறப்பெற்றுள்ளமை அவதானமாக எல்லோராலுங் கவனித்தற்குரியது. இப்பதிப்பு பிரம்மஸ்ரீ பண்டிதராசரருளிச் செய்த ஸ்ரீ தக்ஷிண கைலாச புராணம் என்னும் தலைப்புடன் வெளிவந்துள்ளது.

கைலாச புராணம் 19 ஆம் நூற்றாண்டிலே வெளியிடப்பெற்ற பொழுதிலும் தேசிகர் அதன் முதலாம் பதிப்பினைப் பற்றிக் கூறாதொழிந்தமை புரிந்துகொள்ள முடியாத மர்மமாகவே உள்ளது. சிவசிதம்பர ஐயரைப் பின்பற்றியே தேசிகர் நூலினை ஸ்ரீ தக்ஷிண கைலாச புராணம் என்று பெயரிட்டுள்ளமையும் குறிப்பிடற்குரியது. பண்டிதராசரை பிரம்மஸ்ரீ என முதன்முதலாக வர்ணித்த சிறப்பினையும் தேசிகர் தேடிக்கொண்டனர். ஏட்டுப்பிரதிகளைப் பரிசோதித்து திருத்திப் புதுக்கிய பொழுது நூலின் எவ்வெப் பகுதிகளிலே மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டன என்பதையும் அவர் கூறத் தவறிவிட்டனர். ஏட்டுப்பிரதிகளின் வாசகத்திலுள்ள பகுதிகளை எக்காரணங்களினாலே திருத்திப் புதுக்கினார் என்றும் அவர் குறிப்பிடவில்லை. இதனால் மூலப்பிரதிகளைச் சரியாகப் பிரதிபலிக்கும் நூலாக அவரின் பதிப்பினை ஒப்புக்கொள்ள முடியவில்லை. இச்சமயத்திலே சிவசிதம்பர ஐயர் தனது பதிப்பினைப் பற்றிக் கூறியுள்ளமையினையும் கருத்திற் கொள்வது அவசியமாகின்றது. அவர் மேல்வருமாறு கூறுவர்:-

> ''இப்புராணத்தைப் பலர்க்கும் உபயோகமாகும்
> பொருட்டு அடியேன் பிதாவாகிய, ஸ்ரீலஸ்ரீ
> மு. கார்த்திகேயையரவர்களைக் கொண்டு
> பொரும்பான்மையும் கண்ட பிரதிகளின் வண்ணமே
> பரிசோதிப்பித்து அச்சிடுவித்தேன். ஆனால்,

அர்த்தம் புலப்படாத விடங்களிற் பிரதிகளிற்
கண்டவண்ணமே பிரசுரிக்கப்பட்டது.
என்னை? ஆசிரியர் கருத்தை யறியாது
ஒன்றை விலக்கலும், நூதனமானவொன்றைச்
சேர்த்தலும், ஒன்றையொன்றாக
மாற்றுதலும் அறிவுடையோர்க் கழகன்று
ஆதலின்''

முன்னே கவனித்தவற்றிலிருந்து இதுவரை வெளிவந்துள்ள கைலாசபுராணத்துப் பதிப்புக்களில் எது மூலப்பிரதிகளை ஆதார மாகக் கொண்டதென்பது வெள்ளிடைமலை. பதிப்பாசிரியர்களின் கூற்றுக்களினாலே இது தெளிவாகின்றமையும் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும்.

தேசிகரின் பதிப்புக்கு இந்நூற்றாண்டிலே இலங்கையில் மகா வித்துவான்களாகப் போற்றப்பட்ட பலர் சாற்றுகவிகள் வழங்கியுள் ளனர். புலோலியம்பதி ம. முத்துக்குமாரசாமிக் குருக்கள், தும்பை நகர் பிரம்மஸ்ரீ ச. சுப்பிரமணிய சாஸ்திரிகள், புன்னாலைக்கட்டு வன் மகாவித்துவான் சி. கணேசையர், தும்பைநகர் தம்பையாக் குருக்கள், மந்திகை வை. சபாபதிக் குருக்கள், புலோலி வ. குமார சாமிப் புலவர், மட்டக்களப்புக் காரேறுமூதூர் சாமிதாஸ மயில் வாகனனார், வயாவிளான் க. வேற்பிள்ளை, வயாவிளான் சுதேச நாட்டிய அச்சியந்திர சாலையார் என்போரே சாற்றுகவிகளைப் பாடியோர். இவர்களுள் சி. கணேசையர், மு. தம்பையாக்குருக்கள், வ. குமாரசாமிப்புலவர், சாமிநாத மயில்வாகனனார், க. வேற் பிள்ளை வயாவிளான் சுதேசநாட்டிய அச்சியந்திரசாலையார் ஆகி யோரே கைலாச புராணத்து ஆசிரியரின் பெயரைக் குறிப்பிட்டுள் ளனர். பண்டிதராசர் என்னும் பெயர் கொண்டவரே கைலாச புரா ணத்தின் ஆசிரியர் என்பது இவர்கள் அனைவரதும் துணிபாகும். நூலையும் அதன் சிறப்புப்பாயிரத்தையும் படித்துத் தெளிந்தபின் இவர்கள் சாற்று கவிகளை பாடியதாகத் தெரியவில்லை. இவர்களின் சாற்றுகவிகள் ஆராய்வு நோக்கின்றிப் பாடப்பெற்ற புனைந்துரை களாகும்.

கலாரத்நாகரம் இயந்திரசாலையார் வெளியிட்ட நூலின் பிர திகள் கிடைத்தற்கு அரிதாகி மறைந்து விட்டன. இந்நூற்றாண் டின் முற்பகுதியில் யாழ்ப்பாணத்தில் வெளிவந்த தக்ஷிண கைலாச புராணப் பிரதிகளே கல்வி நிலையங்களைச் சேர்ந்த நூலகங்கள் சிலவற்றிலும் இலக்கிய சைவசமய அபிமானிகள் சிலரின் வீடுகளிலும்

பேணப்பட்டு வந்தன. ஆதலினால் நூலினைப் பற்றியும் நூல் ஆக்கியோனைப் பற்றியும் வைத்தியலிங்க தேசிகரின் பதிப்பிலுள்ள கருத்துக்கள் இலங்கையில் நிலைபெறலாயின. தமிழ்ப் பண்டிதர் களிடையிலும் பல்கலைக்கழக மட்டத்திலும் இக்கருத்துக்கள் மேலோங்கி வந்துள்ளமைக்கு ஈழத்து தமிழ்க் கவிதைக் களஞ்சியம் என்னும் தொகுதியான நூலிற் பண்டிதராசரைப் பற்றிக் காணப் படும் மேல்வருங் குறிப்பு தக்கதோர் உதாரணமாகும்:

> ''இவரது ஊர் திருக்கோணமலை. தென்மொழி,
> வடமொழி ஆகிய இரண்டையும் அறிந்த
> இவர் கோணேசராலயத்து அருச்சகராயிருந்தார்.
> சிங்கைச் செகராசசேகர மன்னனின்
> வேண்டுகோட் கிணங்கித் தக்ஷிண கைலாச
> புராணம் எனப்படும் கோணாசல புராணத்தை
> இயற்றினார். எனவே இவரது காலம்
> சிங்கைச் சேகரனது காலமாகும்'' [20]

கைலாசபுராணத்து ஆசிரியரைப் பற்றிய செய்திகள் முற்றி லும் விபரீதமாகி விட்டமைக்கு இக்கூற்று நல்லதோர் எடுத்துக் காட்டாகும். இக்கூற்று மிக உன்னதமானதொரு தானத்திலிருந்து வெளிவந்துள்ளமை வியப்பிற்குரியது. இதன் ஆசிரியர் பல்கலைக் கழகப் பேராசியர், அதுவும் தமிழ்த்துறைப் பேராசிரியர். நூலை வெளியிட்டோர் இலங்கை அரசாங்கத்தினால் அமைக்கப் பெற்ற தும் வித்தியாதர்சிகளை உறுப்பினர்களாகக் கொண்டதுமான சாகித்திய மண்டலம் என்னும் பேரவை. முன்னே மேற்கோளா கக் காட்டிய குறிப்பின் விபரீதம் யாதெனின் அது 'சிங்கைச் செகராசசேகர மன்னனின் வேண்டுகோட்கிணங்கித் தக்ஷிண கைலாசபுராணம் எனப்படும் கோணாசல புராணத்தை இயற்றி னார்' என்று அன்னார் கூறியமையாகும்.

சிங்கைச் செகராசசேகரனின் வேண்டுகோட்கிணங்கிப் பண்டித ராசர் புராணம் பாடினார் என்பதற்கு ஆதாரம் யாது? கைலாச புராணத்துப் பாயிரச் செய்யுள்களும் சிறப்புப் பாயிரமும் சைவ ராச பண்டிதர் என்போரின் வேண்டுகோட்கிணங்கி நூலாசிரியர் புராணத்தை பாடியதாகச் சொல்கின்றனவே. செய்திகளை முற்றி லும் மாறுபடத் திருத்திக் கூறுவது கற்கை நெறிகளுக்கு முரண் பாடான பொறுப்பற்ற செயலே. 'தக்ஷிண கைலாச புராணம் எனப்படும் கோணாசல புராணம்'' என்று கூறுவது இலக்கிய வர லாற்று ஆராய்ச்சிகள் சில சமயங்களிற் பெரு விபத்துக்குள்ளாகி

விட்டமையினைக் குறிக்கும் ஒரு பெரும் விபரீதக் கூற்றாகும். கைலாச புராணம், கோணாசல புராணம் என்று எங்கு வர்ணிக்கப் பெற்றுள்ளது? திரிகோணாசல புராணம் என்னும் பெயரிற் கோணேஸ்வரம் பற்றிய வேறுமொரு புராணம் வெளியிடப் பெற்றுள்ளதன்றோ. ''தக்ஷிண கைலாச புராணம் எனப்படும் கோணாசல புராணம் என்னுமிடத்து வெவ்வேறு பெயர்களால் வழங்கும் இரு வேறு நூல்களும் ஒன்றே எனப் பொருள்படுமே.

2. பண்டிதராசர்

பண்டிதராசர் கைலாச புராணத்தைப் பாடினார் என்பதற்கு அடிப்படையான காரணங்கள் யாவை என்பதை இங்கு சற்றுக் கவனிப்போம். அக்கருத்தினை முன்வைத்தவரான வைத்தியலிங்க தேசிகர் தனது உபோற்காதத்திலே இதனைப்பற்றி மேல்வருமாறு கூறுவர் :

''இதனைச் சிங்கைச் செகராசசேகரனா
ஞ்ஞைப்படி சைவராச பண்டிதர் கட்டளையிட
பிரம்மஸ்ரீ பண்டிதராசரருளிச் செய்தனர்.''

இக்கூற்று எத்துணைப் பொருத்தமானது என்பதை நூலின் பாயிரச் செய்யுள், சிறப்புப் பாயிரம் என்பன கூறுஞ் செய்திகளின் அடிப்படையிலே நோக்குதல் அவசியமானது. முன்கண்டவாறு வைத்தியலிங்க தேசிகரின் பதிப்பிலுள்ள பாயிரச் செய்யுள் செகராசசேகரனின் ஆணைப்படி நூலாசிரியர் கைலாச புராணத்தைப் பாடினார் என்று கூறவில்லை. சைவராச பண்டிதர் என்னும் குருவின் வேண்டுகோளின்படியேதான் புராணநூற் கதையைத் தமிழ்ப்படுத்தியதாக அவர் பாடியுள்ளார். மேலும் அவரின் பதிப்பிலுள்ள பாயிரச் செய்யுள்களிற் செகராசசேகரன், பண்டிதராசர் ஆகியோரைப் பற்றி எதுவுமே காணப்படவில்லை.

அவருடைய பதிப்பிலுள்ள சிறப்புப் பாயிரமே தேசிகரின் சொற்படி புராண நூற் கதையைச் செகராசசேகரன் தமிழிற் பாடினான் என்று கொள்ளத்தக்க வகையில் மேல்வருமாறு அமைந்துள்ளது:

''திருமலை தழுவிய தெசமுக நிருதனும்
பொருமலை மதகரிப் புரவலர் பலரும்
பூசையோடிறைஞ்சிய புராணநூற் கதையை
தேசிகன் சொற்படி தென்கலைப் படுத்தி
நந்தா விருத்த நவையறக் கூறினன்

அந்நாட்டரசன் ஆசிரியர் கோமான்
பொன்னாட் டைந்தரு பொருவரு கரதலன்
மறுநில நிருபரை வானிலத்திருத்தி
யுறுநில முழுவது மொருதனி புரப்போன்
றென்னிலங்காபுரித் திசைதொறு மருவும்
மின்னிலங்கிய வேல் மேலவர் புயத்துப்
படவரா முடித்தலைப் பார்முழுதாண்ட
இடபவான் கொடி யெழுதிய பெருமான்
சிங்கையாதிபன் சேதுகாவலன்
கங்கைநாயகன் கருங்கடற் சேர்ப்பன்
பௌவமேற்றுயில் பராபரன் சூட்டிய
தெய்வமாமுடிச் செகராசசேகரன்.''21

எனவே செகராசசேகரன் புராணநூற் கதையை தமிழ் செய்யுமாறு சைவராச பண்டிதருக்கு ஆணையிட்டான் என்றும் அப்பணியை நிறைவேற்றுமாறு சைவராச பண்டிதர் பண்டிதராசருக்குக் கட்டளையிட்டார் என்றும் அதன்படியே பண்டிதராசர் செய்தார் என்றும் தேசிகர் சொல்லுகின்றமை ஆதாரமற்ற பொருந்தாக் கூற்றுக்களாம். அவரின் கருத்துக்கள் புராணமும் அதன் சிறப்புப் பாயிரமும் குறிப்பிடுஞ் செய்திகளோடு முரண்பட்டவையாகும். தேசிகர் இம் முரண்பாடுகளை அவதானித்ததாகவோ பொருட்படுத்தியதாகவோ தெரியவில்லை. சிறப்புப்பாயிரப் பகுதிகளையே அவர் செம்மையாகப் புரிந்து கொண்டதாகத் தெரியவில்லை. பண்டிதராசரைப் பொறுத்தவரையிற் புராணநூலைப் பாடிய செகராசசேகரன் காலத்திலே அவர் கோணேஸ்வரத்திலே பிரதம குருவாக விளங்கினார் என்பதை மட்டுமே தேசிகரின் பதிப்பிலுள்ள சிறப்புப் பாயிரம் குறிப்பிடுகின்றது. இக்கருத்து மேல்வரும் சிறப்புப் பாயிரப் பகுதியினாலே தெளிவாகின்றது.

''அவனது காலத்துத் திரிகோணைச்
சிவனது கோயிற் சிவமறை முதலோன்
அருமறை யுபநிட மாகமஞ் சோதிடம்
விரிதமிழ் வரையற விளங்கிய குரவோன்
சேயினுந் திறலான் சிவநெறி தவறான்
தாயினு நல்லான் தயாநிதி யனையான்
முப்புரிநூற்பயன் முளரியந்தாமன்
செப்பரும் பண்டிதராச சிகாமணி
என்னுநாமத் தெங்குரு பெருமான்
மன்னுநாற் கவியும் வல்ல நாவலனே.''22

கைலாச புராணத்துப் பாயிரமும் சிவசிதம்பர ஐயரின் பதிப்பிலுள்ள சிறப்புப் பாயிரமும் சைவராச பண்டிதருக்கு உரியனவாகக் கூறும் செய்திகளையும் அடைமொழிகளையுந் தேசிகரின் பதிப்பிலுள்ள சிறப்புப் பாயிரம் பண்டிதராசர் என்பவருக்கு உரியனவாக மாற்றியமைத்துள்ளமையினை முன்னர் அவதானிக்க முடிந்தது. தேசிகர் வெளியிட்டுள்ள சிறப்புப் பாயிரத்திலே பிறழ்வு ஏற்பட்டுள்ளது என்றுங் கொள்ள முடிகின்றது.

சிறப்புப் பாயிரத்திலே பிறழ்வு ஏற்படுத்துவதற்குத் தேசிகரின் பதிப்பிலே, அதன் பின்னடையாக வரும் தனிச் செய்யுளொன்றே காரணமாயிருந்தது என்று கருத முடிகின்றது. அச்செய்யுள் மேல் வருமாறுள்ளது:

''திருக்கிளரு மச்சகோச்சுர புராணஞ்
செந்தமிழா லெல்லோருந் தெளியத்தானே
பெருக்கமுடன் கைலாசபுராண மென்னப்
பேருமிட்டுச் சீருமிட்டுப் பெருமை தன்னாற்
சருக்கமெழு வகையாக்கி விருத்தப்பாக்கள் தானு
மறுநூற்று முப்பத்தைந்தாச் செய்தா
னிருக்கு மொழிச் சைவசிகாமணியே யென்ன
வெண்டிசையெண் பண்டிதவிராசன் நானே.''[23]

இச்செய்யுள் ஒன்றுமட்டுமே பண்டிதராசர் கைலாச புராணத்தைப் பாடினார் என்று கொள்வதற்கு ஆதாரமாயுள்ளது. ஆயினும் இதிற் காணப்படுஞ் செய்திகள் எத்துணை ஆதார பூர்வமானவை என்பது ஆராய்தற்குரியது. இரண்டு பதிப்புகளுள் ஒன்றில் மட்டுமே இது காணப்படுவதால் மூலப்பிரதிகள் சிலவற்றில் மட்டுமே இப்பாடல் இடம்பெற்றதென்றும் பிற்சேர்க்கையாய் அமைந்ததென்றும் அனுமானிக்க முடிகின்றது. இதனைச் சிறப்புப் பாயிரச் செய்யுள் என்று கொள்வோர் உண்மையில் அதன் அமைப்பை நன்கு அவதானிக்காமலே அவ்வாறு கருதுவர். புராணத்தளவு நூலாசிரியர் ஆகியவிரு விடயங்களைப் பற்றியுமே இச்செய்யுள் குறிப்பிடுகின்றது. நூலின் பதினாலாவது பாயிரச் செய்யுள் கூறும் விடயங்களையே இச்செய்யுளும் கூறுகின்றமை குறிப்பிடத்தக்கது. சிவசிதம்பர ஐயரின் பதிப்பிலுள்ள அப்பாயிரச் செய்யுள் மேல்வருமாறுள்ளது:

பாரிலங்கு கைலாச புராணத்திற் கேழ்சருக்கம் பயில்வித்தோங்கு
மாரமுதவிருத்தகவி யறுநூற்று முப்பத்தீ ரளவேயாக்கிச்
சீரெழுத்துச் சொற்பொருள் யாப்பலங்கார முதலிய
நூறெறிக்குஞ் சீர்த்திப்
பேரிலங்கு சிங்கை யந்தார்ச் செகராசசேகரனாம்
பெருமான் மாதோ.[24]

வைத்தியலிங்க தேசிகரின் பதிப்பிலே இச்செய்யுளின் நான்காவது அடியை நீக்கிவிட்டனர். தேசிகர் அதைச் செய்தாரா அல்லது ஏட்டுப் பிரதிகளை முன்னெழுதிய சிலர் இவ்வாறு செய்தனரா என்பதனை இப்போ அறிந்துகொள்ள முடியவில்லை. பிரதிகளைத் திருத்தியும் புதுக்கியும் நூலினை அவர் பதிப்பித்துள்ளதாலும் அவ்வாறு செய்தவிடங்களையுங் காரணங்களையும் அவர் விளக்காமையாலும் தேசிகரே இவ்விடயத்திற் பிழை செய்தனர் என்று எண்ணுவதைத் தவிர்க்க முடியவில்லை. அவரின் பதிப்பிலே இப்பாடலிலுள்ள ''பேரிலங்கு சிங்கையந்தார்ச் செகராசசேகரனாம் பெருமன் மாதோ'' என்னும் அடியை நீக்கிவிட்டு அதனிடத்திலே ''பேரிகழா வகை பகர்ந்தேன் தென்கயிலைமலை நிலைமை பெரிதுந் தோன்ற'' என்னுந் தொடர்களைச் சேர்த்துள்ளனர். இதனாற் பாயிரச் செய்யுளில் நூலாக்கியோனின் பெயர் நீங்கிவிட்டது.

தேசிகரின் சிறப்புப் பாயிரத்துடன் பிற்சேர்க்கையாக இணைந்துள்ளதும் புராணத்தைப் பண்டிதராசர் பாடினார் என்று பகர்வதுமான தனிப்பாடலை ஆதாரமாகக் கொண்டே, நூலாசிரியரின் பெயரைக்கூறும் பாயிரச் செய்யுளின் அடியினை மாற்றினர் என்று கருத முடிகின்றது. அத்தனிப்பாடலிற் காணப்படும் கருத்திற்கேற்பச் சிறப்புப் பாயிரத்தையும் மாற்றியமைத்துள்ளனர். ஆயினும் சிங்கையாரியனாகிய செகராசசேகரனே புராண நூற் கதையைத் தமிழ் செய்தான் என்ற அதன் அடிப்படைக் கருத்தினை அவர்களால் மாற்றிக்கொள்ள முடியவில்லை.

தேசிகரின் பதிப்பிலுள்ள சிறப்புப் பாயிரத்தோடு கூடிவருஞ் செய்யுளானது கைலாசபுராணம், அதன் சிறப்புப் பாயிரம் என்பவற்றுக்குக் காலத்தால் மிகவும் பிற்பட்டது என்று கொள்ளக் கூடியது என்பதாலும், நூலாசிரியரைப் பற்றிய செய்திகள் நன்கு புரிந்துகொள்ளப்படாத ஒரு காலப்பகுதியிலே புனையப்பெற்றது என்று கொள்ளக் கூடியதாலும் நூலாசிரியரைப் பற்றி அதிலே கூறப்படும் விபரங்கள் ஆதார பூர்வமானவையன்றிப் புனைந்துரைகளாகவே கொள்ளத்தக்கவை. எனவே பண்டிதராசர் செகராசசேகரனின்றும் வேறுபட்டவர். அவராலே கைலாசபுராணம் பாடப்பெற்றது என்ற கருத்துக்களைச் சரியான மரபு தழுவியனவாகக் கொள்ளமுடியவில்லை.

மேல்வரும் காரணங்களினாலே பண்டிதராசர் என்ற பெயருடைய ஒருவர் உண்மையில் வாழ்ந்தாரா என்பது பற்றி ஐயங்கள்

எழுகின்றன: (1) கைலாச புராணத்துப் பிரதிகளிலே பண்டித ராசரைப் பற்றி யாதுங் குறிப்பிடவில்லை; (2) முதன்முதலாக வெளிவந்த நூலின் பதிப்பிலுள்ள சிறப்புப் பாயிரத்திலும் அவரைப் பற்றி எதுவுமில்லை; (3) வைத்தியலிங்க தேசிகரின் பதிப்பிலுள்ள சிறப்புப் பாயிரம் பிறழ்வுடையது-அதிலே சைவராச பண்டிதருக் குரிய செய்திகளும் அடைமொழிகளும் பண்டிதராசருக்கு உரியன வாகச் சொல்லபடுவதால் அதனை ஒரு ஆதாரமாகக்கொள்ள முடிவ தில்லை; (4) அச்சிறப்புப் பாயிரத்திலே வரும் பண்டிதராசரைப் பற்றிய பாடல் பிற்பட்ட காலத்தில், நூலாசிரியரைப் பற்றிய செய்திகள் குறித்துத் தடுமாற்றம் ஏற்பட்டவொரு காலத்திலே புனையப்பட்டது போலத் தோன்றுகின்றது.

பண்டிதராசர் என்பதை ஒரு இயற்பெயராகவன்றி அதனைச் சிறப்புப் பெயராகக் கொள்வோமாயின் கைலாசபுராணத்து ஆசிரி ரைப் பற்றி ஏற்பட்டுள்ள கருத்து வேறுபாடுகளை மேலும் தெளிவு படுத்திக்கொள்ள முடியும். அது அரசனாகிய செகராசசேகரனுக் குரிய சிறப்புப் பெயர் என்று வித்துவான் எவ். எக்ஸ். சி. நடராசா ஒரு சமயத்திற் கூறியுள்ளனர். ''கற்றவர் திலகன்'' என்று போற் றப்படும் செகராசசேகரனுக்குப் பண்டிதராசன் என்னும் சிறப்புப் பெயர் மிகப் பொருத்தமானது. பாண்டித்தியம் மிக்க மன்னர் சிலருக்கு அவர்களின் வித்துவப் புலமையினைக் குறிக்குஞ் சிறப்புப் பெயர்கள் உரியனவாயிருந்தன. பண்டித சோழன் என்பது முதலாம் இராசேந்திர சோழனுக்குரிய விருதுப் பெயர்களுள் ஒன்றென்பது குறிப்பிடத்தக்கது. இலங்கை மன்னனாகிய இரண்டாம் பராக்கிரமபாகு (1236-71) கலிகால சர்வக்ஞபண்டிதன் என்னும் சிறப்புப் பெயரைக் கொண்டிருந்தான் என்பர். எனவே ''கற்றவர் திலகன்'' எனவும் ''முத்தமிழ் சேர் செகராசசேகரமன்'' எனவும் பாவலராற் புகழப்படுஞ் சிங்கைச் செகராசனொருவன் **பண்டிதராசன்** என்னுஞ் சிறப்புப் பெயருக்கு உரியவனாயிருந்தான் என்று கொள்ள முடிகின்றது. இதனைப் புரிந்து கொள்ளாதவர்கள் பண்டிதராசர் செகராசசேகரனின்றும் வேறுபட்டவர் என்றும் அவரே நூலைப் பாடினார் என்றும் கருதலாயினர் போலும். அவ்வாறாயின் ''அவனது காலத்துத் திரிகோணைச் சிவனது கோயிற் சிவமறை முதலோன்'' என்ற பண்டித ராசரைப் பற்றிய வர்ணனை ஆதார மற்றவோர் புனைந்துரையாகும்,

3. செகராசசேகரன்

கைலாச புராணத்தைப் பாடியவன் செகராசசேகரன் என்பது நீண்டகாலமர பாகும். கைலாசபுராணத்துப் பாயிரச் செய்யுளும்

சிறப்புப் பாயிரமும் இக்கருத்தினை வலியுறுத்துகின்றன. முன்னே மேற்கோள்களாகக் கையாண்ட பாடற்பகுதிகளைத் திரும்பக் கூறுவது குற்றமாயினும் இங்கே எடுத்துக் கொள்ளப்படும் விடயம் ஈழத்தமிழ் இலக்கிய வரலாற்றிலே முக்கியமானவோர் அம்சமென்பதால் அப்பாடற் பகுதிகளுட் சிலவற்றை இங்கு மீண்டும் பயன் படுத்துவது அவசியமாகின்றது.

''சீரெழுத்துச் சொற்பொருள் யாப்பலங்கார முதலிய
நூறெறிக்குஞ்சீர்த்திப்
பேரிலங்கு சிங்கையந்தார்ச் செகராசசேகரனாம்
பெருமன் மாதோ.''

(ஸ்ரீதக்ஷிண கைலாசபுராணம் பாயிரம் செய்யுள் 14)

எழுத்து, சொல், பொருள், யாப்பு, அலங்காரம் என்னும் ஐவகை இலக்கணங்களையுங் கற்றுத் தேர்ந்த புகழ் மிக்க வித்தகனாகிய செகராசசேகரன் புராணநூற்கதையை கைலாச புராணமாகத் தமிழ் செய்தான் என்பது இப்பாடற் பகுதியிலோ சொல்லப் படுகின்றது.

நூலாசிரியரைப் பொறுத்தவரை கைலாச புராணத்துப் பாயிரச் செய்யுள் கூறுவதனையே நூலின் சிறப்புப் பாயிரமும் அழுத்திக் கூறுகிறது.

அதன் பகுதி மேல்வருமாறுள்ளது:

''அந்தாதித் தொடை யடிகொடுதொடுத்து
நந்தா விருத்த நவையறக் கூறினன்
னன்னாடடைந்த வாரியார் கோமான்
பொன்னாடீடைந்தரு பொருவரு கரதலன்
மருவலர் தங்களை வானிலத்திருத்திப்
பொருவரு புவியை யொருகுடை புரப்போன்
'' '' '' ''
ஒப்பிலா முத்தமி ழோர்ந்த
செப்பருஞ் செகராச சேகரனே''.

பாயிரச் செய்யுளிலே ஐவகை இலக்கணங்களையும் கற்றுத் தேர்ந்து பெருங் கீர்த்தி பொருந்தியவன் என்று வர்ணிக்கப்படும் அரசனை ''ஒப்பிலா முத்தமிழோர்ந்த செப்பருஞ் செகராச சேகரனே'' என்று சிறப்புப்பாயிரம் புகழ்ந்துரைக்கின்றது. சிறப்புப் பாயிரத்தின் பிற்சேர்க்கையாக அமைந்துள்ள தனிப்பாடல் ஒன்றும்

தென்கயிலாய மான்மியத்தைச் செகராசசேகரனே தமிழிற் பாடினான் என்று குறிப்பிடுவதுங் கவனித்தற்குரியதாகும். அப்பாடல் மேல்வருமாறுள்ளது:

''தேவரும் புகழ் செகராச சேகரக்
காவலன் கருணையிற் கடவுண் மாநிதி
மாவுறை தென்கயிலாய மான்மியம்
பாவிய றமிழினாற் பகர்த்திட்டனரோ.'' 25

கைலாச புராணத்தைச் செகராசசேகரன் பாடினான் என்பதைக் குறிப்பதாய் அமையக்கூடிய மொழித் தொடரொன்று கோணேசர் கல்வெட்டிலே புலவர் வரவு என்னும் பகுதியிலே காணப்படுகின்றது. ''செகராசரடி பரவு திருக்குளக் கோட்டு மகராசன்'' என்பதே அம்மொழித்தொடர். சிவனடியார்களின் சிறப்புக்களைப் பெரியபுராணத்திலே பாடியதாற் சேக்கிழாரைத் ''தொண்டர் சீர் பரவுவார்'' என்பர். பெரிய புராணத்தைப் படிக்கும் வழக்கமுடையோரான கோணேசர் கல்வெட்டின் தொகுப்பாசிரியர் செகராசசேகரனாற் புகழ்ந்து பாடப்பெற்ற குளக்கோட்டனைச்''செகராசரடிபரவுதிருக்குளக்கோட்டு மகாராசன்'' என்று வர்ணித்தார் என்று கருதலாம். குளக்கோட்டனைப் புகழ்ந்து பாடும் நூல்களிலே கைலாச புராணமே காலத்தால் மிக முற்பட்டதாகும். அதன் பாயிரத்திலே ஆசிரியர் குளக்கோட்டன் சீரினைப் பரவிப் பாடியுள்ளார். நூலின் இறுதிச் சுருக்கமான திருநகரச் சுருக்கத்திலே குளக்கோட்டன் திருப்பணிகள் விரித்துரைக்கப்பட்டுள்ளன.

செகராசசேகரன் என்பது யாழ்ப்பாணத்து அரசர்களாகிய ஆரியச் சக்கரவர்த்திகளின் மாறிவருஞ் சிங்காதனப் பெயர்களுள் ஒன்றாகும். அப்பட்டப்பெயர் அவர்களுட் பலருக்கு உரியதாக விருந்தது. அத்தகையோருட் கைலாசபுராணத்தைப் பாடியவன் எவனென்பது ஆராய்ந்து துணிதற்குரியது. பெரும்பான்மையும் இலக்கியக் குறிப்புகளை ஆதாரமாகக் கொண்டே இதனைத் தெளிவுபடுத்த வேண்டிய கடினமான நிலையிலுள்ளது. செகராசசேகரனைப் பற்றிய செய்திகளைக் கொண்டுள்ள அத்தகைய குறிப்புகளும் அரிதானவை.

கைலாச புராணத்துப் பாயிரச் செய்யுளானது நூலாசிரியனைச் சிங்கைச் செகராசசேகரன் என்றும் ஐவகை இலக்கணங்களிலும் பெரு வித்தகனாய் விளங்கியவன் என்றுங் குறிப்பிடுகின்றது. மேல்வரும் சிறப்புப் பாயிரப்பகுதி இவனைப்பற்றி வேறு சில பிரதான மான செய்திகளையுங் குறிப்பிடுகின்றது:

"நன்னாடடைந்த வாரியார் கோமான்
பொன்னாட்டைத்தரு பொருவரு காதலன்
மருவலர் தங்களை வானிலத்திருத்திப்
பொருவரு புவியை யொருகுடை புரப்போன்
தென்னிலங்காபுரி திசைதொறு மருவும்
மின்னிலங்கிய வேல்மேலாம் புயத்து
படவரா முடித்த பார்முழு தாண்ட
விடலாண் வயமா விளங்கிய கொடியான்
சிங்கை யாரியன் சேது காவலன்
கங்கை நாடன் கற்றவர் லகன்
ஆயுள் மறையுட னரிய சோதிடம்
பாய்திரை கடலுட் பலவு முணர்ந்தோன்
ஒப்பிலா முத்தமிழோர்ந்த
செப்பருஞ் செகராசசேகரனே. 27

இதிலே செகராசசேகரனுடைய விருதுப் பெயர்கள், வித்துவச் சிறப்பு, கொடைத்திறன், பராக்கிரமம் என்பன புகழ்ந்துரைக்கப் படுகின்றன. செகராசசேகரன் கற்றவர் திலகனாகவும் முத்தமிழ் விரகனாகவும் விளங்கியவன். அவன் ஆயுள்வேதம், சோதிடம் ஆகிய கலைகளை நன்குணர்ந்தவன். கொடையிலே அவன் விண்ணகத்து ஐந்தருக்களுக்கு நிகரானவன். அவன் போரிலே பகைவர்களை வென்றிடக்கித் தென்னிலங்கைத் திசைகளில் எல்லாம் ஆதிபத்தியஞ் செலுத்தியவன். இத்தகைமைகள் யாவும் பொருந்திய ஒருவனையே செகராசசேகரமாலை புகழ்ந்துரைக்கின்றது.

செகராசசேகரமாலையிற் புகழ்ந்து போற்றப்படும் செகராச சேகரனின் ஆட்சியிலே கல்வி, இலக்கியம் ஆகிய துறைகளிலே பெரு விருத்திகள் ஏற்பட்டன. இலக்கணம், ஆயுள்வேதம், ஆகமம், சோதிடம், புராணம், காவியம் முதலான துறைகளைச் சேர்ந்தனவும் தமிழ், சமஸ்கிருதம் ஆகிய மொழிகளிலுமுள்ளனவுமான ஏட்டுவடிவிலுள்ள நூல்கள் பெருந்தொகையானவற்றைத் தேடிச் சேர்த்து அரண்மனையின் ஆதரவிலே அறிஞருங்கவிவாணருங் கூடி ஆராய்ந்தனர். அம்முயற்சிகளின் பயனாகவே செகராச சேகரமாலை என்னுஞ் சோதிட நூலும் செகராசசேகரம் என்னும் மருத்துவ நூலும் உருவாக்கம் பெற்றன. செகராசசேகரனின் ஆதரவிலும் அவனது ஆணைப்படியும் அவை எழுதப்பெற்றதால் அவை அவன் பெயரால் வழங்குகின்றன. 'ஆயுள்மறையுடன் அரிய சோதிடம்பாய் திரைக்கடலுட் பலவுமுணர்ந்தோன்' என்று சிறப்புப் பாயிரம் போற்றுகின்ற செகராசசேகரன் இவனேயாதல் வேண்டும்.

செகராசசேகரனின் வித்துவத்திறமையினைப் பற்றிய செய்திகள் எல்லாப் பாடல்களிலும் ஒத்தனவாகக் காணப்படுகின்றமையும் கருத்திற் கொள்ளப்பட வேண்டியதொன்றாகும். கைலாச புராணத்துப் பாயிரச் செய்யுள் 'சீரெழுத்துச் சொல் பொருள் யாப் பலங்காரம் முதலிய நூல் தெரிக்குஞ் சீர்த்திப் பேரிலங்கு சிங்கை யந்தார்ச் செகராசசேகரன்' என்று நூலாசிரியனைக் குறிப்பிடுகின்றது. 'கற்றவர் திலகன்' என்றும் 'ஒப்பிலா முத்தமிழோர்ந்த செப்பருஞ் செகராசசேகரன் என்றும் அவனை அரசகேசரி சிறப்பித்துள்ளனர். செகராசசேகரமாலையும் 'முத்தமிழ் சேர் செகராச சேகரமன்' என அவனைச் சிறப்பிக்கின்றது.

செகராசசேகரனின் கொடைத்திறனைச் செகராசசேகரமாலையும் கைலாசபுராணத்துச் சிறப்புப்பாயிரம் ஒரே வண்ணமாகப் புகழ்ந்துரைக்கின்றன. சிறப்புப் பாயிரமானது அவனைப் பொன்னாட்டைந்தரு பொருவரு காதலன் எனப் போற்றுகின்றது. செகராச சேகரமாலையினைப் பாடுவதற்கு ஏதுவாயிருந்த செகராசசேகரனைச் சோமசர்மன் மேல்வருமாறு புகழ்ந்து பாடியுள்ளனர்.

'ஐந்தரு நவநிதியுங் குலமணியும் பொன்முகிலு
மாவுமொன்றாய்
வந்தனைய கொடைக்குரிசில் வரியளிக
ளிசைகுலவு வனசத் தாமன்
சந்ததமுந் தருமநெறி கோடாத தவப்பெருமான்
றழைத்த கீர்த்திக்
கந்தமலை யாரியர்கோன் செகராசசேகரமன்
கங்கை நாடன்.' 27

யாழ்ப்பாண இராச்சியத்தின் ஆதிக்கம் உன்னத நிலையிலிருந்த காலத்துச் செகராசசேகரன் ஒருவனைப் பற்றியே கைலாச புராணத்துச் சிறப்புப் பாயிரம் குறிப்பிடுகின்றது. அவன் பராக்கிரமம் மிகுந்தவனென்றும் பகையரசர்களை வென்று தென்னிலங்கையிலே ஆதிக்கஞ் செலுத்தியவனென்றும் கூறப்படுகின்றது. செகராசசேகர மாலை, செகராசசேகரம் என்பனவும் அத்தகைய மன்னனொருவனைப் பற்றியே புகழ்ந்துரைக்கின்றன,

''சேது காவலன் விஞ்சை விஞ்சு செகராசசேகரன்''
''சீத மலர் நறுந்தெரியற் செகராசசேகரமன்
சிறந்த கீர்த்தி
மேதினிமேல் வளர்ந்துலவுந் தகைமையெனத்
தானியங்கள் மிகுக்கு மன்னே''

''பீடும் பெருக வென்றிசே
ரரிய வாரியர் குலாதிபன்''

''திணைம டந்தையும் புயத்தொடைப் புயத்திடைத்
திகழ்செக ராசசேகரமன்
மணவை தந்தமா லிருபதாம் புயமென
மருவினர்க் காத்துயிரளிக்கும்''

''தென்டிரைசூழ் மணவையர்கோன் செகராச
சேகரமன் செவ்வேல் வென்றி
கண்டுதிறை புரிந்தவர்போ லுரம்பகரா
தஞ்சலிப்பர் கருதலாரே.''

''பண்ணொன்று சததணத்தார்ச் செகராச
சேகரமன் பகைஞர் தம்மிற்
றுண்ணென்று வெருவுதல்போல் விழியிணைக்
டுயிலாவாந் துன்னலர்க்கே.''[28]

இவை செகராசசேகரமாலையில் மன்னனைப் பற்றி வரும் புகழுரைகள். மருத்துவ நூலான செகராசசேகரத்திலே, அங்காதி பாதம் என்னும் பகுதியிலே, இறந்துபட்டவர்களின் உடலங்களை அறுத்து எலும்பு, நாடி, நரம்பு முதலியவற்றைப் பற்றிய விடயங் களைச் செகராசசேகரன் ஆராய்ந்து அறிந்து கொண்டமை பற்றிக் கூறப்படுகின்றது. இதனைப் பற்றிய பாடல் மேல்வருமாறு அமைந் துள்ளது:

இயம்பிய குடலு மூனு மென்புநா டிகளு மற்றுஞ்
செயம்பெறு சிங்டிக நாடன் செகராச சேகரன்றா
னுயர்ந்த வாள் வடக்க ராக முருட்டிய களத்தின் மீதே
அயஞ்சிறி தளது தீர அளந்துகண்டறிந்த தாமே.[29]

ஆயுள்வேத வித்தகனாகிய செகராசசேகரனின் காலத்திலே ஆரியச்சக்கரவர்த்திகளின் ஆதிக்கம் தென்னிலங்கையில் ஏற்பட்டி ருந்தமையினை மேல்வரும் பாடல் உணர்த்துகின்றது.

''பாரிலுள்ள சூத்திரனாம் பாம்பு புற்றிற்
பர்ந்திருக்கு மிரையெடுக்கிற் பலவுந் தின்னு
மேருடனே தானாடிற் பத்மராக
மிலங்குமணி முடிபுனையு மிலங்கை வேந்தர்

சீரியபொன் றிறையளக்கச் செங்கோ லோச்சுஞ்
செகராச சேகரமன் சிங்கை மேவு
மாரியர்கோன் வெண்குடையி னழலே செய்யு
மவனிதளைப் பார்த்து நின்றே யமர்ந்தாடும்மே.''

கைலாச புராணத்து ஆசிரியரான செகராசசேகரன் ''கற்றவர் திலகன்''; ''ஆயுள்மறையுடன் அரிய சோதிடம் பாய்திரைக் கடலுட் பலவும் உணர்தோன்''; சீர் எழுத்துச் சொல் பொருள் யாப்பலங்கார முதலிய நூல்றெரிக்கவல்ல சீர்த்திப் பேரிலங்கு சிங்கையந்தார்ச் செகராசசேரன்''; அவன் தென்னிலங்கையிலும் ஆதிக்கம் பெற்றவன்; கொடைத்திறனாற் பெரும்புகழ் பெற்றவன். இத்தகைய சிறப்புக்கள் அனைத்துங் கொண்ட செகராசசேகரன் ஒருவனையே செகராசசேகரமாலை செகராசசேகரம் ஆகியன சிறப் பித்துப் பாடியுள்ளன. எனவே, இப்போ கிடைக்கின்ற குறிப்புக் களின் அடிப்படையிலே நோக்குமிடத்து செகராசசேகரமாலை, செகராசசேகரம் ஆகியவற்றிலே புகழ்ந்துரைக்கப்படும் மன்னனே கைலாசபுராணத்தைப் பாடினான் என்று கொள்ள முடிகின்றது. அவனுடைய காலம் பதினாலாம் நூற்றாண்டின் நடுப்பகுதியாகும். நான்காம் பராக்கிரமபாகுவின் ஆட்சியிலே (1302-26) சேதுநுவரைப் பொருமாள் சரசோதிமாலை என்னுஞ் சோதிட நூலைப் பாடியுள் ளதால் அதற்குச் சிறிது பிந்திய காலத்தில் ஆரியச்சக்கரவர்த்திகள் ஏற்படுத்திய வித்தியாவிருத்தியின் விளைவாகச் செகராசசேகரம் என்னும் மருத்துவ நூலும் சோதிடநூலான செகராசசேகரமாலையும் சைவசமய இலக்கியமான கைலாசபுராணமும் எழுந்தமை வியற் பிற்குரிய விடயமன்று.

4. சைவராச பண்டிதர்

கைலாச புராணத்துப் பாயிரச் செய்யுள்கள் இரண்டு சைவராச பண்டிதரைப் பற்றியவை. குருவணக்கமாக அமையும் வண்ணமாய் அப்பாடல்கள் அமைந்துள்ளன. குளக்கோட்டனைப் பற்றிய பாட லுக்குப் பின்பாக அவை அமைந்துள்ளமை குறிப்பிடத் தகுந்தது. அவரைப் பற்றிய பாடல் மிகுந்த அபிமானத்தோடும் அடக்க உணர்வோடும் பாடப்பெற்றவை. சைவராச பண்டிதர் நூலாசிரி யரின் பெருமதிப்பிற்குரியவராக விளங்கினார் என்பதிற் சிறிதும் ஐயமில்லை.

நால்வேத நூலோன் எனப்படுவதினாலே சைவராச பண்டிதர் குலத்தாற் பிராமணர். பிரமதேவனின் பூலோக அவதாரமென்று

அவரைப் புகழ்ந்து பாடியுள்ளனர். அவர் பல்கலை விற்பன்னராக் விளங்கியவர். ''வேதமுதல் உபநிடமுஞ் சிவாகமும் புராணம் முதல் விரிநூல் யாவுஞ் சோதிடமும் மந்திரமும் உணர்ந்து உணராதவர் தெளியச் சொல்லவல்லோன்'' என்ற பாடற்பகுதி அவரைப் பற்றிய வர்ணனைகள் பொருந்தியது. சைவராச பண்டிதரின் வேண்டு கோளினாலே வடமொழியிலுள்ள புராணநடை தமிழிலே கைலாச புராணம் என்னும் பெயரிற் பாடப்பெற்றது.

கைலாச புராணத்து ஆசிரியரான செகராசசேகரன் அவரை ''அக்குரு'' என்று குறிப்பிடுவதினாலே அவர் இராசதானியிலே புரோகிதராயும் இராசகுருவாயும் விளங்கினார் என்று சிந்திக் கலாம். யாழ்ப்பாண மன்னர்களின் தலைநகரான சிங்கைநகரிலே வேதம், உபநிடம், ஆகமம், புராணம், சோதிடம், இலக்கணம், காப்பியம், பாடியம் என்பவற்றை பயின்று ஆராய்ந்த வித்தியா தர்சிகளின் மத்தியிலே வித்துவசிரோமணியாக விளங்கியவராகவே சைவராச பண்டிதர் காணப்படுகின்றனர்.

3. கைலாச புராணமும் அதன் பொருண்மரபும்

(1) தலபுராணங்கள்

தமிழ்மொழியிலுள்ள சிறப்புமிக்க இலக்கிய வகைகளுட் புராணங் களும் அடங்கும். சமஸ்கிருதமொழி, அதன் இலக்கிய மரபு என்பவற் றின் செல்வாக்கின் பயனாகவேதமிழிலக்கியப்பரப்பிற்புராணம்என்ற இலக்கியவடிவம் தோன்றியது. புராண(ம்)என்றசொல்லானதுபழமை, பழைய கதை, பழைய வரலாறு எனப் பலவாறு பொருள் கொள்ளும். சமஸ்கிருத மொழியிலுள்ள மிகப் பழைய புராணங்களை மகா புராணங்கள் என்பர். அவை பதினெட்டு என்பதும் மரபு. வாயு புராணம், அக்கினிபுராணம், விஷ்ணுபுராணம், மத்ஸ்ய புராணம் முதலிய மகா புராணங்கள் கி. பி. 5 ஆம் நூற்றாண்டளவில், வட இந்தியாவிலே, குப்தப் பேரரசு நிலைபெற்ற காலத்தில், முழுமை யான வளர்ச்சியடைந்திருந்தன. பக்திநெறி, முழுமுதற் கடவுட் கோட்பாடு என்பவற்றை ஆதாரமாகக் கொண்ட சைவம், வைணவம் ஆகிய சமயங்களின் பேரிலக்கியங்களாக அவை அமைந்துள்ளன. இந்து சமய நெறிகளுக்கு அடிப்படையாகவுள்ள புராணக் கதைகளும் தத்துவங்களும் வழிபாட்டு முறைகளும் அவற்றிலே தொகுத்துக் கூறப்பெற்றுள்ளன. பொதுவாக மகாபுராணங்களின் பொருள் மரபு பிரளயம், புவனோற்பத்தி, மனுக்களின் காலம், மனுக்குலங் களின் வரலாறு, அரச வமிசங்களின் வரலாறு என்று ஐந்து விட யங்களைப் பற்றியனவாகும்.

தமிழ்ப் புராணங்கள் பலவற்றின் பொருள் மரபு மகாபுராணங்களின் பொருள் மரபினைப் பின்பற்றியதாக அமையவில்லை. தமிழ் மொழிக்குச் சிறப்பாகவுள்ள புராணங்கள் பெயரளவில் மட்டுமே புராணங்களாகும். அவை காவியங்களுக்குரிய அமிசங்களைப் பெரிதுங் கொண்டுள்ளன. தமிழகத்துச் சைவ சமய வளர்ச்சியின் தன்மைகளை நன்கறிந்து கொள்வதற்குத் தமிழ்ப் புராணங்களைப் பற்றிய அறிவு அவசியமானது.

இப்பொழுது கிடைக்கின்ற தமிழ்மொழியிலுள்ள புராணங்கள் எல்லாம் பதினொராம் நூற்றாண்டுக்குப் பிற்பட்டவை. அவற்றைச் (1) சமஸ்கிருத மொழிப் புராணங்களின் தழுவல் நூல்கள், (2) மெய்யடியார் வாழ்க்கை பற்றிய புராணங்கள், (3) தல புராணங்கள் என மூன்று பிரிவுகளாக வகைப்படுத்தலாம். செவ்வைச்சூடுவார் 15 ஆம் நூற்றாண்டில் எழுதிய பாகவதம், அதிவீரராம பாண்டியன் 16 ஆம் நூற்றாண்டில் எழுதிய இலிங்க புராணம், காசிகாண்டம், வரதுங்கராமன் எழுதிய பிரமோத்தரகாண்டம் இரசை வட மலையப்ப பிள்ளையான் 18 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் எழுதிய மச்ச புராணம் ஆகியன முதலாவது பிரிவைச் சேர்ந்தனவாகும். அவை தழுவல் நூல்களாக அமைந்துள்ள போதும் சமஸ்கிருத மூலங்களிலிருந்தும் பெருமளவிற்கு வேறுபடுகின்றன. மூலநூல்களிலுள்ள கதைகள் அவற்றிலே சுருக்கமாகவும் தெளிவாகவும அமைக்கப்பட்டுள்ளதோடு அவை பொதுவாக இலக்கிய ரசனை மிக்க காவியப் பாணியிலே உருவாக்கப்பட்டுள்ளன. சமஸ்கிருத மொழிப் பயிற்சியற்ற தமிழறிஞர்களுக்கு மகாபுராணங்களின் பொருள்மரபினை விரிவான முறையிலே அறிமுகஞ் செய்யும் நூல்களாகவே அவை அமைகின்றன.

சேக்கிழார் பன்னிரண்டாம் நூற்றாண்டில் எழுதிய பெரிய புராணம், கடவுள் மாமுனிவர் எழுதிய திருவாதவூரடிகள் புராணம் ஆகியவிரண்டும் மெய்யடியார்களைப் பற்றிய புராணங்களாகும். அவை பொருண்மரபிலும் அமைப்பிலும் ஏனைய புராணங்களிலிருந்தும் வேறுபடுகின்றன. பெயரளவில் மட்டுமே அவை புராணங்களாகும். சைவசமய குரவர்களதும் வாழ்க்கைவரலாறுகளையே இவை பொருளாகக் கொண்டுள்ளன. சைவசமய வளர்ச்சியில் ஒரு பிரதானமான காலகட்டத்தினை நாயன்மார் வழிபாடு சிறப்புற்றிருந்த நிலையினைப்பிரதிபலிக்கும் பேரிலக்கியங்களாக அவை விளங்குகின்றன. இலக்கிய நயமும் பக்திச்சுவையும் விரவிய பேரிலக்கியங்களாக விளங்கும் பெரியபுராணமும் திருவாதவூரடிகள் புராணமும் தமிழிலக்

கியமரபிலும் தமிழ்ச் சைவர்களின் சமய வாழ்க்கையிலும் பெருஞ் செல்வாக்கினை ஏற்படுத்தியுள்ளன. இலங்கையிலே பல நூற்றாண்டு களாக அவை மிகுந்த ஆராமையுடன் போற்றிப் படிக்கப்பட்டு வரு கின்றமை குறிப்பிடத்தகுந்தது. இவற்றை ஆதாரமாகக் கொண்ட பல வெளியீடுகள் காலாகாலமாக யாழ்ப்பாணத்திலும் வெளிவந் துள்ளன.

திருத்தலங்களைப் பற்றியனவே தலபுராணங்கள். தேவாரப் பதிகங்கள் தமிழகத்துப் பழமை வாய்ந்தனவும் பிரதானமானவை யும் ஆகிய நூற்றுக்கணக்கான சைவசமயத் தலங்களை வர்ணிக் கின்றன. தேவாரப் பதிகங்கள் விவரிக்கின்ற சைவ சமயம் ஆலய வழிபாட்டை ஆதாரமாகக் கொண்டது. நாயன்மார் காலத்தி லேயே தலங்களைப் பற்றிய புராணக் கதைகள் உருவாகிவிட்டன. மகாபுராணங்களிலுள்ள கதைகளும் அக்காலத்திலேயே தமிழரி டையே அறிமுகமாகி விட்டன என்பதை இவற்றின் மூலமாக அறிய முடிகின்றது. தலபுராணங்கள் தோன்றுவதற்குத் தேவாரத் திருமுறை களும் மூலகாரணமாய் விளங்கின என்று கருத முடிகின்றது. தலச் சிறப்பிற்கு அடிப்படையாக விளங்குவது கோயில. கோயிலமைப் பானது சோழப்பேரரசரின் காலத்திலே பேரமைப்பாகியது. இந்து சமுதாயம் உருவாக்கிய நிறுவனங்களிலே திருக்கோயில்களே மிகப் பிரதானமானவை. அவை சமய வாழ்க்கையிலும் சமுதாய அமைப் பிலும் மரபுவழிக் கலாசாரத்தைப் பாதுகாப்பதிலும் மிக முக்கியத் துவம் பெறுகின்றன. சமய நெறிகளின் தொடர்ச்சிக்கும் கலாசார விருத்திக்கும் சமூக உறவுகளை நிலைப்படுத்துவதற்கும் கல்வி வளர்ச்சிக்கும் கோயில்கள் ஆதாரமாய் அமைந்தன. மக்கள் நட மாட்டமும் தூரத்திலுள்ள பிரதேசங்களுக்கிடையிற் போக்குவரத் துக்களும் அதிகரிப்பதற்குத் தல யாத்திரைகள் காரணமாகின. பெரு நாட்களிலும் திருவிழாக்காலங்களிலும் மக்கள் பல்லாயிரக் கணக்கிலே கோயில்களுக்குப் போகும் வழக்கம் ஏற்பட்டது. பெருந் தொகையான பக்தர்கள் கூடிநின்று வழிபடுவதற்கும் தங்குவதற் கும் ஏற்ற வகையிற் கோயிலமைப்பினைப் பெருப்பிக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. அதனாற் புதிய பெரு மண்டபங்களும் பல பிரகாரங்களும் அமைக்கப்பட்டன.

பெருங் கோயில்களின் சுற்றுப்புறங்களிலே விற்பனை நிலை யங்களும் பொருட் பரிவர்த்தனைத் தலங்களுந் தோன்றின. நானாதேசி, மணிக்கிராமம் போன்ற வணிக கணங்ளிகன் அதிகா ரத்தின் கீழமைந்த வணிக நகரங்கள் வளர்ச்சி பெற்றன. உள்

நாட்டு உற்பத்திப் பொருட்களும் வெளிநாட்டு வணிகப் பொருட்களும் இவற்றிலே விற்பனையாகின. கோயில்களில் வழிபாட்டிற்கும் நிவேதனத்திற்கும் தேவையான பொருட்களை வணிக கணங்கள் விநியோகிப்பது வழமையாகியது. யாத்திரீகர்களும் கோயில்களின் சுற்றாடல்களில் வாழ்ந்தவர்களுந் தமக்குத் தேவையான துணிவகைகள், உலோகப் பொருட்கள், உபகரணங்கள், உணவுப் பொருட்கள், ஆபரணங்கள், அழகு சாதனப் பொருட்கள் முதலியவற்றை அவற்றிலே கொள்வனவு செய்ய முடிந்தது. விற்பனை நிலையங்களும் வாணிபமும் பெருவளர்ச்சி அடைந்தமையாலே திருவொற்றியூர் திருவிடைமருதூர், திருவண்ணாமலை, திருவரங்கம் முதலான மாநகரங்கள் கோயில்களை ஆதாரமாகக் கொண்டு வளர்ச்சி பெற்றன.

அரசர்களும் பிரமதேயங்களும்; ஆலயங்களோடு நெருங்கிய தொடர்புகளைக் கொண்டிருந்தனர். திருவாரூர், திருவொற்றியூர், காஞ்சிபுரம் போன்ற தலங்களிலே சக்கரவர்த்திகள் மகா மண்டபங்களிலே இராச சபையோடு கூடி வீராபிஷேகம், விஜயாபிஷேகம் போன்ற சடங்குகளைப் புரிந்தனர். பிரமதேயம், ஊர் என்பவற்றின் பொதுக்கூட்டங்களும் அவற்றின் வாரியங்களின் கூட்டங்களும் அங்கு நடைபெறுவதும் வழமையாகியது. சமய வாதிகள் ஆலயங்களுக்கு அண்மையிலே மடாலயங்களை நிறுவினார்கள்.

மற்றுமொரு வகையிலே கோயில்கள் விருத்தியடைந்தன. மன்னராலும் பிறராலும் அவற்றுக்கு மானியங்கள் வழங்கப் பெற்றன. நிலமானியங்களையும் மக்களது சேவைகளையும் ஆதாரமாகக் கொண்டே ஆலய கருமங்கள் நடைபெற்றன. பிறப்பின் வழியே தொழில்களைப் புரிந்து வேறுபட்ட நெறிகளையும் ஆசாரங்களையும் பின்பற்றிய சமுதாயப் பிரிவுகளிடையே கோயில்கள் மூலமாகத் தொடர்புகள் ஏற்பட்டன. சமுதாயப் பிரிவுகளின் சிறப்புரிமைகள், கடமைகள், பரஸ்பர உறவுகள் என்பவற்றைச் சம்பிரதாய பூர்வமாகவும் அதிகார பூர்வமாகவும் வரையறை செய்வதற்கு ஏதுவான களமாகவும் கோயில் அமைந்தது. சனசங்கமத்தின் காரணமாகவுஞ் சமய வாதங்கள், பிரசாரங்கள் என்பவற்றின் விளைவாகவும் கோயில்கள் மூலமாகச் சிந்தனைகள் பலவிடங்களுக்கும் பரவின. கோயில்களைச் சார்ந்த மடங்கள் மூலம் மிகுந்த தூரங்களிலுமுள்ள நிறுவனங்களிடையே தொடர்புகளை ஏற்படுத்த முடிந்தது. கோயில்களிலுள்ள மண்டபங்களிலே புதிகாக இயற்றப்படும் நூல்களைப் படித்து அரங்கேற்றும் வழமை ஏற்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

தென்னிந்திய சமுதாய அமைப்புடன் மிக நெருங்கிய தொடர்புடைய நிறுவனமாகவும் கவர்ச்சி பொருந்திய ஓங்கியெழுந்த விமானங்களும் அலங்கார வேலைப்பாடுகளும் பொருந்திய பரந்த கட்டிட அமைப்பாகவும் கோயில் வளர்ச்சி பெற்றவொரு காலப் பகுதியிலே தமிழ் மொழியிலே தலபுராணங்கள் தோன்றியமை குறிப்பிடத்தகுந்தது.[31] மேலும் பரத கண்டத்தில் ஏற்பட்ட மாற்றங்களும் தென்னிந்தியக் கோயில்கள்மீது அபிமான உணர்வு ஏற்படுவதற்கு ஏதுவாயிருந்தன என்றுஞ் சிந்திக்கலாம். தென்திசையிலே இந்து ஆலயங்கள் உன்னத வளர்ச்சி பெற்ற அதே காலகட்டத்தில் வடதிசையிலே பிரசித்தி பெற்றனவும் மிக நெடுங்கால வரலாற்றைக் கொண்டனவுமான கோயில்கள் சாய்ந்தன. பதினோராம் நூற்றாண்டு தொடக்கமாக பாரதம் மீது படையெடுத்து வந்த துருக்கியர் சோமநாதர் கோயிலையும் வடமதுரையிலுள்ள நூற்றுக் கணக்கான ஆலயங்களையும், கன்னோசி, காசி போன்ற நகரங்களிலுள்ள பெருங்கோயில்களையுஞ் சூறையாடியும் இடித்துந் தகர்த்தனர். காஷ்மீரம், குர்ஜரம், காசி முதலான பகுதிகளிலிருந்து பாண்டித்தியம் பொருந்திய பிராமணரும் பிற சமயக் கணக்கரும் தங்கள் ஏட்டுச் சுவடிகள் சிலவற்றோடு தெற்கிலுள்ள தலங்களுக்குச் சென்றனர். துருக்கியரின் அதிகாரம் வட இந்தியாவில் ஏற்பட்ட பொழுது காசி, பதரி, கன்னோசி முதலிய தலங்களுக்கான யாத்திரைகளும் பெரிதுந் தடைப்பட்டன. அக்காலகட்டத்திலே தென்னாடு 'பூலோகச் சிவலோகம்' போலக் காட்சியளித்தது.

கமலாலய பட்டர் என்பவராலே கன்னிவன புராணம் பன்னிரண்டாம் நூற்றாண்டிலே பாடப்பெற்றது. அதற்காக அவர் இறையிலி நிலங்களைப் பரிசாகப் பெற்றார் என்பதைத் தென்னாற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த கடலூரிலுள்ள கல்வெட்டின் வாயிலாக அறிய முடிகின்றது. இதுவே தமிழிலெழுந்த மிகப் பழமையான தலபுராணமாகலாம். அது மறைந்தொழிந்து விட்டது.

விசயநகர - நாயக்கர் காலத்திற் தென்னாட்டில் மட்டுமே இந்து கலாசாரமும் இந்து நிறுவனங்களும் சிறந்த நிலையிலே காணப்பட்டன. வட இந்தியாவிலும் தக்கிணத்திலும் அவை அழிந்தும் வீழ்ச்சியுற்ற நிலையிலுங் காணப்பட்டன. தமிழகத்திலுள்ள பெருங்கோயில்கள் பேணிப்பாதுகாக்கப்பட்டதோடு அவை வானளாவிய கோபுரங்களையும் பல பிரகாரங்களையும் பெற்றுப் பேரமைப்புக்களாகின. கலை வனப்பிலும் அமைப்பிலுஞ் செல்வ வளத்திலும் தமிழகத்திலுள்ள பெருங்கோயில்களுக்கு நிகரான அமைப்புக்கள் இந்தியாவின் வேறெப்பகுதியிலுங் காணப்படவில்லை. பாரத தேசத்

தின் பிறபல பகுதிகளிலுமிருந்து சைவர்களும் வைணவர்களுந் தெற்கிலுள்ள தலங்களுக்குப் பெருமளவிலே யாத்திரை செல்லும் வழக்கம் ஏற்பட்டது. இக்காலகட்டத்திலே பெருந்தொகையான தலபுராணங்கள் எழுந்தன. மகாபுராணங்களிலுள்ள புராணக்கதைகள் பலவும்; தமிழகத்துத் தலங்களுக்குரியனவாகத் தலபுராணங்கள் மாற்றியமைத்துள்ளன.

தலபுராணங்களை ஆராய்ந்து அரியதொரு நூலினை டேவிட் சூல்மன் எழுதி வெளியிட்டுள்ளனர்.[32] ஏறக்குறைய 2,000 தலபுராணங்கள் ஏட்டுப் பிரதிகள் வடிவிலுள்ளன என்று அவர் கருதுவர். அவற்றுட் சில மட்டுமே அச்சில் வெளிவந்துள்ளன. அவற்றுட் பிரதானமானவற்றை மேல்வருமாறு வரிசைப்படுத்திக் கொள்ளலாம்:

	நூலின் பெயர்	நூலாசிரியர்	காலம்
1.	திருவாலவுடையார் திருவிளையாடற் புராணம்	பெரும்பற்றப் புலியூர் நம்பி	12ம் நூற்றாண்டு
2.	கோயிற் புராணம்	உமாபதி சிவாச்சாரியார்.	14ம் நூற்றாண்டு
3.	சிதம்பர புராணம்	திருமலைநாடன்	1508
4.	அருணகிரிபுராணம்	சிதம்பர மறைஞானதேசிகர்	1555
5.	அருணாசல புராணம்	எல்லப்ப நயினார்	16ம் நூற்றாண்டு
6.	திருவிஞ்சைப் புராணம்	,,	,,
7.	திரு மழுவாடிப் புராணம்	கமலை ஞானப் பிரகாசர்	,,
8.	திருவொற்றியூர்ப் புராணம்	திருவொற்றியூர் ஞானப்பிரகாசர்	1580
9.	சேது புராணம்	நிரம்பவழகிய தேசிகர்	16ம் நூற்றாண்டு
10.	திருவாரூர்ப் புராணம்	சம்பந்த முனிவர்	1597
11.	திருவையாற்றுப் புராணம்	ஞானக்கூத்தர்	16ம் நூற்றாண்டு
12.	விருத்தாசல புராணம்	,,	16ம் நூற்றாண்டு
13.	திருவிளையாடற் புராணம்	பரஞ்சோதி முனிவர்	14ம் நூற்றாண்டு

14.	திருவாஞ்சியத் தல புராணம்	களந்தைக் குமரன்	17ம் நூற்றாண்டு
15.	திருவாப்பனூர் புராணம்	கந்தசாமிப் புலவர்	,,
16.	திருப்பூவண புராணம்	,,	,,
17.	பழனித்தல புராணம்	பாலசுப்பிரமணிய கவிராயர்	,,
18.	திருக்கழுக்குன்ற புராணம்	அந்தகக் கவிவீரராகவ முதலியார்	16ம் நூற்றாண்டு
19.	வேதாரணிய புராணம்	அகோரதேவன்	17ம் நூற்றாண்டு
20.	திருக்கானப்பேர்ப் புராணம்	,,	,,
21.	கும்பகோணப் புராணம்	,,	,,
22.	திருச்செந்தூர்ப் புராணம்	வென்றிமாலைக் கவிராயர்	,,
23.	திருக்கூவப் புராணம்	திருமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள்	,,
24.	செவ்வந்திப் புராணம்	சைவ எல்லப்ப நாவலர்	,,
25.	திருவெண்காட்டுப் புராணம்	,,	,,
26.	தீர்த்த கிரிப் புராணம்	,,	,,
27.	திருச்செங்காட்டுக் குடிப்புராணம்	,,	,,
28.	கும்பகோண புராணம்[2]	சொக்கப்புலவர்	,,
29.	திருக்குற்றாலத்தல புராணம்	திரிகூடராசப்பன்	18ம் நூற்றாண்டு
30.	காஞ்சிப் புராணம்	சிவஞானயோகி	,,
31.	காஞ்சிப் புராணம்	கச்சியப்ப முனிவர்	,,
32.	தணிகைப் புராணம்	கச்சியப்ப முனிவர்	,,
33.	திருவானைக்காப் புராணம்	,,	,,
34.	திருப்பேரூர்ப் புராணம்	,,	,,
35.	பூவாளூர்ப் புராணம்	,,	,,
36.	விநாயக புராணம்	,,	,,
37.	திருப்பாதிரிப் புலியூர்ப் புராணம்	இலக்கணம் ,, சிதம்பரநாத முனிவர்	,,
38.	சீகாளத்தி புராணம்	அருணாசல கவிராயர்	,,
39.	திருநாகை காரோணப் புராணம்	திரிசிரபுரம் மீனாட்சிசுந்தரம் பிள்ளை	,,

தலபுராணங்கள் யாவும் சில பொதுப் பண்புகளைக் கொண்டுள்ளன. மூர்த்தி, தலம், தீர்த்தம் என்னும் முப்பொருள்களையும் விரிவாக வர்ணிக்கின்றன. நாட்டுச் சிறப்பு, நகரச் சிறப்பு ஆகிய காவிய நலப் பண்புகள் அவற்றிடையே காணப்படும். தலச் சிறப்பினை வலியுறுத்தும் வகையிலே இவற்றிலே புராணக் கதைகள் மறுசீராக்கம் பெறுவது குறிப்பிடற்குரியது. கோயிலிற் சாந்நித்தியம் பெற்றுள்ள மூர்த்தியின் திருவிளையாடல்களுக் கெல்லாம் தலமே களமாகக் கொள்ளப்படும். தலம் பற்றிய நாட்டார் வழக்கிலுள்ள கதைகளை எல்லாம் வகுத்து இலக்கிய நயத்துடன் அமைத்துக் கொள்வதும் தலபுராணங்களின் மற்றுமொரு அம்சமாகும். தலபுராணங்கள் எல்லாம் சைவசமய சம்பந்தமானவை. தலங்களிலே தேவர், நாகர், முனிவர் ஆகியோர் தவமிருந்து பூசனை புரிந்து இறையருளினாலே முத்திப் பேற்றினை அடைந்தமையினையும், நாயன்மார் முதலான அடியார்கள் அவற்றுடன் கொண்டிருந்த தொடர்பினையும் திருக்கல்யாணம் முதலிய தெய்வீகக் கோலங்களையும் இப்புராணங்கள் பெரும்பான்மையும் வர்ணிப்பதுண்டு. தலபுராணங்களைப் பாடியவர்கள் இலக்கியப் புலமையும் அணியலங்கார இலக்கணப் பயிற்சியும், சைவசித்தாந்தத் தெளிவும், ஆதீனங்களின் ஆதரவும் பெற்று வித்தகராகவே பெரும்பான்மையும் காணப்படுகின்றனர். எனவே சைவசித்தாந்தக் கோட்பாடுகளும் பௌராணிக சிந்தனைகளுந் தலபுராணங்களிலே மிகுந்து காணப்படுகின்றன. பூலோகமே சிவலோகம் என்பதும் திருத்தலமே பூலோகமாகிய சிவலோகத்தின் நடுநாடி என்பதுவுந் தலபுராணங்களின் அடிப்படையான தத்துவமாகும். இந்த வகையிலே சைவசமய வளர்ச்சியிலே ஒரு புதிய சிந்தனை மரபினைத் தல புராணங்கள் பிரதிபலிக்கின்றன. அவற்றின் பாயிரச் செய்யுள்கள் கடவுள் வாழ்த்து, சிவனடியார் பற்றிய துதிப்பாடல்கள், நூலின் பெயர், நூலாசிரியரின் பெயர் முதலிய பொதுவான அம்சங்களைக் கொண்டுள்ளன.

(2) நூலின் பெயர்

தக்ஷிண கைலாச புராணம் என்னும் பெயர் ஏற்படுவதற்கு இந்நூலினை முதன் முதலாகப் பதிப்பித்து வெளியிட்ட சிவசிதம்பர ஐயரே காரணராவர். இந்த வகையில் மட்டும் வைத்தியலிங்க தேசிகர் அவரைப் பின்பற்றியுள்ளனர். ஆயினும் **கைலாசபுராணம்** என்பதே நூலுக்கு அதன் ஆசிரியரால் வழங்கப்பெற்ற பெயர் என்பது மேல்வரும் பாயிரச் செய்யுள் மூலமாகத் தெளிவாகின்றது:

மீதுயர்ந்த வுருத்திரரும் விரிபதுமப் பெருமலரின்
விரிஞ்சர் தாமும்
போதுதிரு மாதவரும் மாதவர்க்கு வொருபெரிய
புனித மீனும்
மாதரவி னிறைஞ்சுகதை கைலாச புராணமென
வறையலுற்றேன்
மாதுரிய மச்சேந்திய வடபுராணத் தியல்பு
மருவத்தானே.

கைலாசபுராணம் என்னும் பெயரால் இத்தலபுராணம் நெடுங் காலமாக வழங்கிவந்தமையும் குறிப்பிடத் தகுந்தது. வைத்திய லிங்க தேசிகரின் பதிப்பிலுள்ள சிறப்புப் பாயிரத்திலே பிற்சேர்க் கையாகவுள்ள தனிப்பாடலொன்றும் கைலாசபுராணம் என்னும் பெயர் அதன் ஆசிரியரால் நூலுக்கு வழங்கப் பெற்றது என்று குறிப்பிடுகின்றது.[34] பிற்பட்ட காலத்தில் எழுந்த திருகோண மலைப் புராணமும் அதற்கு மூலமாக அமைந்த நூல்களுட் கைலாச புராணம் என்பதையுங் குறிப்பிடுகின்றது. அதனைப் பற்றிய செய்யுள் மேல்வருவது:

மச்ச புராணக் கதையுங் கயிலாய புராணத்தின்
வாய்மை தானு
முச்சமம் போற்றிடு மறிஞர் முன்னுரைத்த
மரபுகளின் முறையுந் தூக்கி
மெச்சிய சீர்தென் கயிலைப் பெரியோர்கள் கூறென
முன்விதியி னாராய்ந்
திச்சகத்திற் கோணவரைப் புராணமெனத்
தமிழ்ப் பாவி னியம்பலுற்றேன்.[35]

கயிலாய புராணம், மச்ச புராணம் ஆகிய நூல்களும் நெடுங் காலமாக நிலைபெற்று வரும் நாட்டார் வழக்கிலுள்ள கதைகளும் திருகோணமலைப் புராணத்திற்கு ஆதாரமாய் அமைந்தன என்பது இதனாலே தெளிவாகின்றது. தக்ஷிண என்னும் சமஸ்கிருதச் சொல்லைச் சேர்த்துக் கைலாச புராணத்தின் பெயரைத் தக்ஷிண கைலாசபுராணம் என்று புனராக்கஞ் செய்தமை அந்நூலினை வெளியீடு செய்த முதலிரு பதிப்பாசிரியர்கள் ஏற்படுத்தியுள்ள திரிபாகும். கைலாச புராணமானது இப்போது அதன் நவநாமத் தோடு விளங்குவதாலும் அத்தகைய நூல்களைப் படிப்போர் வித்துவான்களிடையிலும் மிகச் சிலராகி விட்டதாலும் இவ்விட யத்திலே உண்மையை உணர்த்துவது சிரமமாகிவிட்டது.

(3) கைலாச புராணத்தின் மூல நூல்

முன்னே கவனித்தவாறு கைலாச புராணத்தின் ஆசிரியர் மூல நூலை மாதுரிய மச்சேந்திய வடபுராணம் என வர்ணிக்கின்றனர். வடபுராணம் எனப்படுவதால் அது சமஸ்கிருத மொழியில் அமைந்த வொன்றாகும். அந்நூலினைப் பூசையோடு இறைஞ்சிய புராண நூற்கதை எனச் சிறப்புப் பாயிரஞ் சுட்டுகின்றது. ஒரு பதிப்பிலுள்ள சிறப்புப்பாயிரத்தோடு பின்னடையாக வருந் தனிச் செய்யுள் அப் புராண நூற் கதையைத் தென்கயிலாய மான்மியம் எனச் செப்புகின்றது.[36] மற்றைய பதிப்பிலுள்ள சிறப்புப் பாயிரத்தோடு கூடிய தனிப்பாடலொன்று மூலமாகிய நூலைத் திருக்கிளரும் மச்சகேச்சுர புராணம் எனக் குறிப்பிடுகின்றது.[37] திருகோணமலைப் புராணத்திலே அது மச்சபுராணம் என்று கூறப்பெற்றுள்ளது.

கைலாச புராணத்துக்கு ஆதாரமாய் விளங்கிய நூலை மச்சேந்திய புராணம், புராண நூற் கதை, தென்கயிலாய மான்மியம், மச்சகேச்சுரப் புராணம், மச்ச புராணம் எனப் பலவாறு ஆசிரியர் பலரும் வேறுபடக் கூறியுள்ளமையால் அதனைப் பற்றித் தெளிவற்றவோர் நிலை தோன்றியுள்ளது. திருகோணமலைப் புராணம் குறிப்பிடும் மச்ச புராணம் பிரசித்தமான வேறிரு நூல்களை நினைவுபடுத்துகின்றது. அவற்றுளொன்று மகா புராணங்களுள் ஒன்றாகிய மத்ஸ்ய புராணம் என்பதாகும். மற்றையது அதனை அடிப்படையாகக் கொண்டு 18 ஆம் நூற்றாண்டிலே இரசை வடமலையப்ப பிள்ளையன் தமிழிற் பாடிய மச்ச புராணமாகும். இவற்றுக்கும் மச்ச புராணம் எனத் திருகோணமலைப் புராணம் வர்ணிக்கும் நூலுக்குமிடையிலே நெருங்கிய ஒற்றுமைகள் இருந்ததாகக் கொள்ள முடியவில்லை. பொருளமைப்பிலே கைலாச புராணத்தின் மூலநூல் அவற்றிலிருந்து வேறுபட்டதாகும்.

மூல நூலானது தென்கயிலாய மான்மியம் என்று ஒரு பாடலில் வர்ணிக்கப்படுவதால் அது ஒரு ஸ்தல மகாத்மியமாய் அமைக்கப் பட்டதென்று கொள்ள முடிகின்றது. அதனை மச்சகேச்சுரப் புராணம் என வேறொரு பாடல் குறிப்பிடுவதால் இக்கருத்து மேலும் வலுப் பெறுகின்றது. எனவே கைலாச புராணத்தின் மூலநூல் மச்சகேஸ்வரமாகிய கோணேஸ்வரத்தைப் பற்றிச் சமஸ்கிருத மொழியில் எழுதப் பெற்ற தலபுராணம் எனக்கொள்வது சாலவும் பொருந்தும்.

மச்சேந்தியம் எனப்படும் மச்சகேச்சுர புராணம் எத்தகையது, அது எப்போ எழுதப்பட்டது என்பவற்றை அறிந்து கொள்வதற்குக் கைலாச புராணத்துப் பாடல்கள் சில மட்டுமே ஏதுவாக

வுள்ளன. கைலாச புராணத்திலே திருநரகச்சருக்கத்து இருபத்தோராம் பாடல் வரையுள்ள பகுதி மூல நூலைத் தழுவி எழுதப்பட்டது என்பது மேல்வரும் பாடலினால் அறியப்படுகின்றது:

மேதினியில் மச்சேந்தியத்துள் மாருதமுனி
விதித்த இந்த
ஆதிபுராணக் கதையும் அன்றியும் பின்நடந்த
க்தை அநேகம் உண்டால்
நீதியின் அக்கதை கருதித் தென்கைலைத்
திருப்பதியின் நிலைமை எல்லாம்
ஓதுவன் இச்செந்தமிழ்நூல்
தொடையால் நடைசேர் உலகமீதே.[38]

எனவே கைலாச புராணத்துப் பாயிரச் செய்யுள்களும் திருநகரச் சருக்கத்திலே குளக்கோட்டன், கயவாகு என்போரைப் பற்றியுள்ள செய்திகளுந் தவிர்ந்த பிற விடயங்கள் பெரும்பான்மையும் மூல நூலாகிய மச்சகேஸ்வர புராணத்தை ஆதாரமாகக் கொண்டவை. அது குளக்கோட்டனுக்குக் காலத்தால் முற்பட்டதால் அவனைப் பற்றிய செய்திகளைக் கூறாதிருந்தது என்றுங் கொள்ளலாம். மூல நூலாகிய மச்சேந்தியம் என்னும் மச்சகேச்சுர புராணம் குளக்கோட்டனுக்கு முற்பட்ட காலத்துக்குரியது என்ற ஐதிகம் கைலாச புராணச் செய்யுள்கள் சிலவற்றிலே காணப்படுகின்றது. குளக்கோட்டனின் தந்தையாகிய வரராமதேவன் என்னும் 'பெரும் போர்வேந்தன்' மச்சேந்திய புராணம் படிப்பதைக் கேட்டான் என்று சொல்லப்படுகின்றது. மேல்வரும் பாடல்கள் இதனை விவரிக்கின்றன:

சோணாடு முதலிய தென்மதுரை வடமதுரையெனச்
சொல்லும் நாட்டில்
சாண்நாடும் பிறர்க்கமையா நிலமடந்தைதனை
வரைந்த தகுதியாலும்
மாணாகுந் திறத்தாலும் அபையனெனும் பெயராலும்
ஐயனென்றும்
கோணாத கருணையினால் அன்னையென்றும்
பல்லுயிர்க்குங் கூறலாமே.
கூறுநவ கண்டத்துச் சிவதானம் அனேகம்
பொற்கோயிலாக்கிப்
பேறுதர முடிதரித்த வரராமதேவன் எனும்
பெரும்போர் வேந்தன்
மாறில் புராணம் ஒருநாளிற் புரோகிதன் மெய்வருத்தமாகி
வீறு அபையன் அவைக்குத் தான் வராது மகனை
வரவிடுத்தோன் மேலோன்.

மெல் அமைத்த மச்சகேச்சுரக் கதையை
மேலேட்டில்
நூலமைத்து அங்கு அடையாளம் நுவற்சி செய்து
படியாமல்
ஞாலம் முற்றும் சிவதானக் கதை படியாமல் தாதை
நவின்றதற்குள்
கோலமுற்ற குறையென்று குமரன் அது படித்தானே.
படித்த பொழுது இருசெவியும் பாட்டு உதவுஞ்
சுவை அமுதும்
குடிக்கும் இருநாவாகிக் குடிகொண்டது எனக்கேட்டு
முடித்தலை நேர்கம்பித்து முகம் மலர்ந்து மயிர்ப்புறங்கள்
பொடுத்து உளமுங் கனிந்து உருகிப் புளகம் எறிந்து
உரை செய்வான்.[39]

இப்பாடல்களிலே வர்ணிக்கப்பெறும் அரசனைப் பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளை கூறியுள்ளவாறு சோழச்சக்கரவர்த்தியென்று கொள்வோமாயின் மச்சகேச்சுர புராணம் பற்றிய விசாரம் ஒரு புதிய பரிமாணத்தைப் பெறும்.[40] கோணேஸ்வரம் பற்றிய தென் கயிலாய மான்மியம் என்னும் சமஸ்கிருத நூல் மிகப் பழையது என்றும் பதினொராம் நூற்றாண்டுக்கு முற்பட்டது என்றுங் கொள்ளத்தக்கதாக அமையும்.

(4) நூலமைப்பு இடைச்செருகல்கள்

கைலாய புராணம்; பாயிரமும் ஏழு சருக்கங்களுங் கொண்டு அமைக்கப் பெற்றுள்ளது. இதுவரை வெளிவந்த பதிப்புகளில் இவற்றின் விபரங்கள் மேல்வருமாறுள்ளன:

	தலைப்பு	செய்யுள் எண்கள் 1887	1916
1.	பாயிரம்	15	15
2.	இலங்கை மண்டலச் சருக்கம்	39	39
3.	திருமலைச் சருக்கம்	94	94
4.	புவனோற்பத்திச் சருக்கம்	39	39
5.	அர்ச்சனாவிதிச் சருக்கம்	86	86
6.	மச்சாவதாரச் சருக்கம்	48	48
7.	தெரிசனாமூர்த்திச் சருக்கம்	195	195
8.	திருநகர்ச் சருக்கம்	116	119
		632	635

பாயிரத்திலே முதலாறு செய்யுள்களும் கடவுள் வாழ்த்தாக அமைந்துள்ளன. முதல் மூன்று செய்யுள்களும் கோணேசப் பெருமானைப் பற்றியவை. நான்காவது அம்மனைப் பற்றியது. ஏனையவற்றுள் ஒவ்வொன்றும் முறையே பிள்ளையார், முருகன் ஆகியோரைப் பற்றியவை. ஏழாவது பாடல் சமயகுரவர் நால்வரைப் பற்றியது. அடுத்த பாடல் குளக்கோட்டனைச் சோழகங்கன் என்றும் இப்பாடல் கூறும். ஏனைய பாடல்கள் சைவராசபண்டிதர், நூலாசிரியனாகிய செகராசசேகரன் ஆகியோரைப் பற்றியும் நூலின் அமைப்பினைப் பற்றியுங் கூறுகின்றன.

இத்தல புராணத்தின் முதலாவது சருக்கமாகிய ஈழமண்டலச் சருக்கம் நாட்டுச் சிறப்பினை இலக்கிய ரசனையோடு சுவை நயம்படக் கூறுகின்றது. ஈழம், இலங்கை என்னும் நாட்டுப் பெயர்களை ஆசிரியர் விளக்கும் வண்ணமானது புதுமையானது. ''அமைத்த பொன்மலை ஆதலின் அப்பெயர் சமைத்த ஈழமிதென்று தழீயதால்'' என வரும் அடிகள் ஈழம் என்னும் பெயர் ஏற்படுவதற்கான காரணத்தை விளக்குகின்றன. பொன்மலையான மேருவின் சிகரங்களுள் ஒன்றான திரிகூடம் என்னும் தென்கைலாசம் அமைவுற்றதால் இலங்கை ஈழம் என்றாகியது.

''இமைத்த மாமணி எங்கும் இலங்கலால்
உமைத்த நீர் வயலூரும் இலங்கையே''.

எங்கும் பரந்து சிதறிக் காணப்படும் மணிகளின் ஒளியானது வயல்களிலெல்லாம் பரந்து பாய்கின்ற நீரிலே பிரகாசிக்கும் பான்மையால் இலங்கை என்னும் திருநாமம் நாட்டிற்கு உரியதாகியது என்பர். ஈழம், இலங்குதல் என்னும் சொற்களின் பொருளை அடிப்படையாகக் கொண்டு நாட்டுப் பெயர்களை முதன்முதலாக விளக்கிய சிறப்பு செகராசசேகரனுக்கே உரியது என்பதும் இங்கு குறிப்பிடற்குரியது.

இரண்டாம் மூன்றாஞ் சருக்கங்களிலே மகாபுராணங்களின் மரபினைப் பின்பற்றியும் சைவசமயக் கோட்பாடுகளின் அடிப்படையிலும் ஊழியான பிரளயம், ஊழிக்காலத்தில் உயிர்கள் அனைத்தும் ஈசனுடன் ஒடுங்குதல், திருமலையின் தோற்றம், புவனங்களின் படைப்பு ஆகிய விடயங்கள் நயம்பட வர்ணிக்கப்படுகின்றன. பிரம்ம விஷ்ணுக்களும் உருத்திரர்களும் இந்திராதி தேவர்களும், முனிவர், கின்னரர், நாகர் கணத்தோரும் தென்கைலாசத்திலே பரமேஸ்வரனைப் பூசித்தமை விரித்துரைக்கப்படுகின்றது. மச்சாவதாரம் பற்றிய கதைகள் திரிகூடத்தினை அடிப்படை

யாகக் கொண்டு மறுசீராக்கம் பெற்று மச்சாவதாரச் சருக்கத்திலே கூறப்படுகின்றன. அதில்வரும் கதைகள் மச்சகேஸ்வரம் என்னும் தலப் பெயரின் விளக்கமாகவுங் கொள்ளத்தக்கவை. இதிற் காணப் படும் கதைகளை ஆதாரமாகக் கொண்டு மச்சகேஸ்வர புராணம் என்னும் தென்கயிலாய மான்மியம் மத்ஸ்யபுராணக் கதைகளைக் குறிப்பிடத்தக்க அளவிலே பயன்படுத்தியுள்ளதென்று கருத முடி கின்றது.

அகத்தியர் முதலான முனிவர்களும் வானவர்களும் சித்தர் கணத்தோரும் இலங்கேஸ்வரனாகிய இராவணனும் தென்கயிலா யத்திலே தரிசனம் கண்டு வரம்பெற்ற சிறப்புக்களை விவரிப்பது ஆறாம் சருக்கம். முதலாறு சருக்கங்களிலுஞ் சொல்லப்படுவன ஆதியுகங்களுக்கும் கிருத, திரேத யுகங்களுக்கும் உரியவை. அவை வரலாற்றிற்கு அப்பாற்பட்டவை. திருநகரச் சருக்கத்திலுள்ளவை பெரும்பான்மையும் கோணேசர் கோயில் வரலாற்று அம்சங்களைப் பற்றியவை; வரலாற்று ரீதியாக விமர்சிக்கத்தக்கவை. அவை கோணேசர் கோயிலின் வரலாற்றோடு நெருங்கிய தொடர்பு கொண்ட குளக்கோட்டன், கயவாகு என்னும் மன்னர்களின் திருப் பணிகளைப் பற்றியவை.

கைலாசபுராணத்திலே இடைச்செருகல்கள் போல அமைந்திருக் கக் கூடிய பாடல்களைப் பற்றிச் சிறிது கவனிப்பது இங்கு அவசிய மாகின்றது. இரு பதிப்புக்களிலும் முதலாறு சருக்கங்களில் வரும் செய்யுள்களின் கூட்டுத்தொகையில் வேறுபாடு காணப்படவில்லை. இந்த வகையிலே திரு நகரச் சருக்கத்தில் மட்டுமே வேறுபாடு காணப்படுகின்றது. முதலாவது பதிப்பில் 116 பாடல்களும் தேசிக ரின் பதிப்பில் 119 பாடல்களும் உள்ளன. இவற்றுள் 112 பாடல் கள் பொதுவானவை. முதலாவது பதிப்பிலுள்ள நான்கு பாடல்கள் தேசிகரின் பதிப்பிலே இடம்பெறவில்லை. தேசிகரின் பதிப்பிலுள்ள ஏழு பாடல்கள் மற்றைய பதிப்பிலே காணப்படவில்லை. நூலின் ஏட்டுப் பிரதிகள் யாவும் மறைந்தொழிந்து விட்டமையால் இவற் றுள் எவை இடைச்செருகலானவை, எப்போ யாராற் சேர்க்கப் பெற்றவை என்பவற்றை நிச்சயிப்பது இப்போ சிரமமாகவுள்ளது. இப்பாடல்கள் பிரதானமான செய்யுள்களைக் கொண்டுள்ளதால் அவற்றை ஒதுக்கித்தள்ளவும் முடியவில்லை.

முதலாவது பதிப்பிலுள்ள இத்தகைய நான்கு பாடல்களும் யாழ்ப்பாணம் என்னும் பெயரின் உற்பத்தியை விளங்கும் தன்மை யுடையவை. இவை யாழ்பாடி கதையின் மறு வடிவமானவை. இராவணன் திரிகூடத்திலே மீட்டிய யாழோசையினாலே கவரப்

பெற்ற சுசங்கீதன் என்னுங் கந்தருவன் அவனுடைய யாழினைக் கவர்ந்து கொள்வதற்குத் தருணம் பார்த்திருந்தான். இராவண சங்காரத்திலே அதைக் கைப்பற்றிவிட்ட கந்தருவன் கீரிமலைச் சிவாலயத்திற்குப் போய் அங்கிருந்து யாழ் வாசித்து மகேஸ்வர னைத் துதி செய்தனன். வடக்கிலுள்ள மணற்றிடரை வரமாகப் பெற்று அங்கு காடு கொன்று, குடிகளையிருத்தி நாடாக்கி, நகர முண்டுபண்ணிச் சிவதானங்கள் அநேகம் உருவாக்கினான். யாழ் வாசினை புரியுங் கந்தருவனால்' உருவாக்கப்பெற்ற நகரம் வீணா பணம் என்னும் பெயரைப் பெற்றது. இதுவே இப்பாடல்கள் கூறுங் கதை. வீணாகானபுரம், வீணாபணம் என்பன யாழ்ப்பாணம் என் பதன் சமஸ்கிருத வடிவங்களாகும். திரிகூடமான தென்கயிலாயத் திற்கும் யாழ்ப்பாணத்திற்கும் எதுவித தொடர்புமின்மையாற் சுசங்கீதனைப் பற்றிய நான்கு செய்யுள்களும் இடைச் செருகலாக வந்துள்ளன எனக் கொள்வாருமுளர். ஆயினும் கைலாச புராணத் தைப் பாடிய யாழ்ப்பாணத்து ஆசிரியச் சக்கரவர்த்தியான செக ராச சேகரன் யாழ்ப்பாணம் என்னும் பெயரின் உற்பத்தியை விளக்குவதான கதையைப் பாடல்களாகப் புனைந்து நூலிற் சேர்த் திருப்பது வியப்பிற்குரியதன்று.

தேசிகரின் பதிப்பிலே மேலதிகமாக வரும் ஏழு செய்யுள்களுள் ஒன்று கயவாகுராசனைப் பற்றியது. அது இடைச்செருகல் என் பது அதன் வாசகத்தினாலேயே புலனாகின்றது. ஏனையவற்றுள் நான்கு செய்யுள்கள் செகராசசேகரனைப் பற்றியவை. அவை மேல்வருமாறுள்ளன:

அம்புயத்து உதரத்து அண்ணல் அமைத்த
ஆரியர் தம் கோமான்
உம்பர் வந்து இறைஞ்சும் சேது உயிர்கரைச்
காவல் வேந்தன்
செம்பொன்மாமவுலிச் செகராசசேகரன்
றும்பையஞ் சடையான் சைவத் தோன்றிடத்
தோன்றினனால்.
தோன்றிய காலை வேதம் தொனித்தன
சிவனூற் சைவம்
ஆன்று அமர் வெண்ணீறள்ளி அணிந்தனர்
அலங்கல் வாளை
வான் தனிச் சிங்கை காவல் மன்னனோர்
சிங்கம் தோன்ற
வென்றபல் சமயமெல்லாம் கரியென விரிந்து போன.

போனது வணங்கார் செல்வம் புகுந்தது புகுந்தோர்க்கு
இன்பம்
ஆனது சிவனூல் ஓசை அழிந்தது பிறநூல் அந்த
மானதன் நடத்தும் பூசை வயங்கு தென்கயிலைச்
சென்னி
ஞானமா மூர்த்தி கொள்ளச் சிறந்தது நன்னாடு
எங்கும்.

நாடுறும் இலங்கை நாடு நாற்றிசை நாடும் அன்னா
நீடுறு கவிதைத் திங்கள் நிழலிடைப் படிந்தது எங்கும்
வாடுறு கலியுகமில்லை மனத்துறு துயருமில்லை
ஆடுறு பதாகைச் சேவும் அனுதினம் விளங்கு
மாமேதா.

இப்பாடல்கள் செகராசசேகரனைப் போற்றிப் பாடிய, மெய்க் கீர்த்தியின் பாங்கிலமைந்த பாடல்கள் போலவே அமைந்துள்ளன. கோணேஸ்வரத்துக்கு அவன் ஆற்றிய திருப்பணிகள் விபரமின்றிப் பொதுவாகக் குறிக்கப்பட்டுள்ளன. அரசனைப் பற்றிப் புகழ்ந்து யாரோ பாடிய பாடல்கள் பிற்காலத்திலே நூற்பிரதிகள் சிலவற்றிலே இடைச் செருகலாகி விட்டன என்று சிந்திக்கலாம்.

தேர்கோன் செகராசசேகரன் வழிவந்த குமாரசூரியன் என்போன் ஒருவனைக் குறிப்பிடும் பாடலொன்றும் தேசிகரின் பதிப்பிலுள்ளது. தனக்கு உயிரினும் மேலான கல்வியைப் போதித்தமையால் அதற்கு நன்றிக் கடனாகத் தான் புனைந்த காப்பியத்தைச் சமர்ப்பணஞ் செய்வதை ஆசிரியர் கூறுமாப்போல் இப்பாடல் அமைந்துள்ளது. அரசகுமாரனாகிய குமாரசூரியனைப் பற்றி வேறு செய்திகள் யாண்டுங் கிடைக்கவில்லை.

4. தொகுப்புரை

மிகப்புராதனமான தல புராணங்களுள் ஒன்றாகிய கைலாச புராணம் திருக்கோணேஸ்வரம் சிறப்புற்றிருந்தவொரு காலத்திலே எழுதப்பெற்றது. தென்கயிலாய மான்மியமான மச்சகேச்சுர புராணம் என்னும் சமஸ்கிருத நூல் அதற்கு மூலமாய் அமைந்தது. தென்கயிலாய மான்மியம் குளக்கோட்டன் காலத்துக்கு முற்பட்டது. இராசகுருவாக விளங்கியவர் என்று கொள்ளத்தக்கவரும் வித்துவசிரோமணியாக விளங்கியவருமான சைவராச பண்டிதரின் வேண்டுகோளினாலே சிங்கைச் செகராசசேகரன் கைலாசபுராணத்தைப் பாடினான். ஐவகை இலக்கணங்களிலும் ஆயுள்வேதம், சோதிடம் போன்ற துறைகளிலும் வித்தகனாக விளங்கிய இவனே ஈழத்தமிழ்க் கவிஞரிற் சிகாமணியானவன்.

இலக்கியப் பண்பிலே கைலாசபுராணம் அரசகேசரியின் இரகு வம்சத்தினின்றும் பெரிதும் வேறுபட்டது. இனிய சந்தங்கள் பொருந்திய விருத்தப்பாக்களில் அமைந்த கைலாசபுராணம் படிப்பதற்கும் கேட்பதற்கும் இனிமையானது; இலகுவிலே புரிந்துகொள்ளக் கூடியது. சிலேடை, மடக்கு முதலிய இலக்கியப் பண்புகள் விரவிய வண்ணமாகவும் பாட்டியல் இலக்கணங்களுக்கு அமையவும் அது பாடப்பெற்றுள்ள போதும் கவர்ச்சியான இலக்கியமாகவே காணப்படுகின்றது. இலக்கியப் பண்புகளைப் பொறுத்த வரையில் இதற்கு நிகரான நூலெதுவும் இலங்கையிலே தோன்றியதாகத் தெரியவில்லை. இலங்கையிலே தமிழரின் ஆதிக்கமும் வித்துவத் திறனும் சைவசமயமும் உன்னத நிலையிலிருந்த காலமொன்றினைக் கைலாசபுராணம் பிரதிபலிக்கின்றது.

தென் கயிலாயத்தின் தலபுராணம் என்ற வகையிலும் அது ஈழநாட்டுச் சைவர்களின் பாரம்பரியத்திலே தனிச்சிறப்பானவோர் இடத்தைப் பெறுகின்றது. இலங்கையிலே எழுந்த சைவசமய நூல்களிலே இதுவே பழமையானது; பாடல்பெற்ற தலமான திருக்கோணேஸ்வரத்தைப் பற்றிய பேரிலக்கியம். திருகோணமலை பற்றிய தனியானவோர் இலக்கிய மரபு உருவாகி மலர்வதற்கும் இதுவே ஆதாரம். அத்தல வரலாற்றை ஆராய்வதற்கான மூலங்களிலும் கைலாசபுராணமே முதன்மையானது. திருக்கோணேஸ்வரத்திலே குளக்கோட்டனும் கயவாகுராசனும் ஆற்றிய திருப்பணிகளைக் கூறும் நூல்களிலும் இதுவே மிகப் பழமையானது. மறைந்தும் மறைக்கப்பட்டும் போய் விட்ட சில சிறப்பான வரலாற்றுச் செய்திகளை வெளிக்கொணர்ந்து ஆராய்ச்சிக் களத்திலே நிலைப்படுவதற்கும் இது மூலமாய் அமைகின்ற அரியதொரு நூலாகும்.

5. இந்தப் பதிப்பு

வித்தியாவிருத்தியிலும் அறிவியல் வளர்ச்சியிலும் ஈடுபாடு கொண்டவரும் இந்துசமய கலாசார திணைக்களப் பணிப்பாளருமாகிய திரு. க. சண்முகலிங்கம், கோணேசர் கோயிற் கும்பாபிஷேகத்திற்குப் போய்வந்த நாட்களில், ஈழத்தமிழரின் பண்பாட்டினையும் இந்து கலாசாரத்தினையும் பிரதிபலிக்கின்ற அரிய பழைய நூல்களைப் புதிய பதிப்புக்களாக வெளியிடுவதற்கு ஒரு திட்டத்தினை உருவாக்கினார். திருக்கோணேஸ்வரம் தொடர்பான நூல்களுக்கு இத்திட்டத்திலே முதன்மை வழங்குவதென்றும் தீர்மானமாகியது. அதற்கேற்பக் கோணேசர் கல்வெட்டின் புதிய பதிப்பொன்று உரையோடும் விரிவான ஆராய்ச்சிக் குறிப்புக்களோடும்

வெளியிடப்பட்டது. இப்போ திருக்கோணேஸ்வரம் பற்றிய தல புராணமாகிய கைலாச புராணத்தின் புதிய பதிப்பு வெளிவருகின்றது.

பேராதனைப் பல்கலைக்கழகத்து நூலகத்திலிருந்து பெறப் பெற்றதும் பு. பொ. வைத்தியலிங்க தேசிகரின் பதிப்பானதுமாகிய ஸ்ரீதக்ஷிண கைலாச புராணப் பிரதியினையும் திருகோணமலையிலிருந்து திரு. சீ. தெய்வநாயகம் தேடியெடுத்து வந்த கா. சிவசிதம்பரஐயரின் பதிப்பின் பிரதியினையும் ஆதாரமாகக் கொண்டு இப்புதிய பதிப்புத் தயாரிக்கப்பட்டுள்ளது.

இப்பதிப்பில் முதன்முதலாகக் கைலாச புராணம் உரையோடும் விரிவான ஆராய்ச்சிக் குறிப்புக்களோடும் வெளிவருகின்றது. பண்டிதர் கா. செ. நடராஜர் மிகக் குறுகிய காலத்திலும் பல சிரமங்களுக்கு மத்தியிலும் அருமையானதோர் உரையினை எழுதியுள்ளனர். எளிமையும் இனிமையும் தெளிவும் செறிந்த இவரது உரைநடை யாழ்ப்பாணத்திலே முற்காலங்களிற் போல இன்னும் செந்தமிழ் வழக்கு நிலை பெறுகின்றது என்பதற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

இந்நாட்டிலே காலகாலந் தோன்றிய தமிழ் நூல்களின் ஏட்டுப் பிரதிகள் பெரும்பான்மையும் மறைந்தொழிந்து விட்டன. அச்சில் வெளிவந்த பிரதானமான நூல்களிற் பலவும் கிடைத்தற்கு அரிதாகி விட்டன. உள்ளவையும் இப்போ அழிகின்றன. எமது சமுதாயத்தின் பாரம்பரியங்களுக்கெல்லாம் அடிப்படையாக விளங்கும் மூலங்களைத் தேடிப் பாதுகாத்து அவற்றை எல்லோருக்கும் கிடைக்குமாறு செய்தல் அரசாங்க அதிகாரிகளினதும் கல்விமான்களினதும் பொறுப்பாகும். இப்பணியை நிறைவேற்றுவோரை வருங்காலச் சந்ததியினரும் போற்றுவர்.

அடிக்குறிப்புக்கள்

1. தக்ஷிண கைலாச புராணம், சிவசிதம்பர ஐயரால் கலாரத்நாகரம் அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பட்டது. சென்னை, 1887.
2. பிரம்மஸ்ரீ பண்டிதராசரருளிச் செய்த ஸ்ரீ தக்ஷிண கைலாச புராணம், பருத்தித்துறை. தும்பைநகர் கலாநிதி யந்திரசாலை, 1916.
3. மேலது, ப.1.
4. மேலது, ப.2.

5. ஸ்ரீ தக்ஷிண கைலாச புராணம், 1916, சிறப்புப்பாயிரம்.
6. மேலது
7. மேலது
8. மேலது, ப.5.
9. மேலது, பாயிரம், செ. 9 - 10.
ஸ்ரீதக்ஷிண கைலாச புராணம், 1887, பாயிரம், செ.9 - 10.
10. ஸ்ரீதக்ஷிண கைலாச புராணம், 1887, ப.2.
11. ஸ்ரீ தக்ஷிண கைலாச புராணம், 1916, ப.8.
12. மேலது.
13. யாழ்ப்பாண வைபவ மாலை, பதிப்பு - குல. சபாநாதன், தனலக்குமி புத்தகசாலை, சுன்னாகம், 1949, ப. 49 - 50
14. தமிழ்ப்புலவர் வரிசை, சு.அ. இராமசாமிப் புலவர், ஆறாம் புத்தகம், திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற் பதிப்புக் கழகம், சென்னை, 1955, ப.26.
15. Chandra Richard de Silva. Portugese Power in Ceylon.
16. கலைக்களஞ்சியம்
17. மேலது.
18. தமிழ்ப்புலவர் வரிசை, சு.அ. இராமசாமிப் புலவர், முதலாம் புத்தகம், சென்னை, 1955, ப.31.
19. மேலது, ப.33.
20. ஈழத்துத் தமிழ்க் கவிதைக் களஞ்சியம்,
தொகுப்பாசிரியர் - ஆ. சதாசிவம்,
சாகித்திய மண்டல வெளியீடு, கொழும்பு, 1966, ப.27.
21. ஸ்ரீ தக்ஷிண கைலாசபுராணம், 1916, ப.7.
22. மேலது, ப. 7 - 8.
23. மேலது, ப. 8.
24. ஸ்ரீ தக்ஷிண கைலாச புராணம். 1887, ப. 3, பாயிரம், செ.14.
25. மேலது, சிறப்புப் பாயிரம், ப. 2.
26. மேலது.
27. செகராசசேகரமாலை, பதிப்பு - இ.சி.
28. செகராச சேகர மாலை
ஈழத்துத் தமிழ்க் கவிதைக் களஞ்சியம்,
ப. 24 - 26.
29. மேலது, ப. 19.

30. மேலது. ப. 20.

31. சி. பத்மநாதன், 'தமிழ்ப் புராணங்கள்', இளங்கதிர், பேராதனை, 1982 - 83, ப. 1 - 10.

32. David Schulman Tamil Temple myths

33. ஸ்ரீ தக்ஷிண கைலாச புராணம், 1916, பாயிரம் செ. 11.

34. மேலது, ப. 8.

35. திரிகோணாசல புராணம்

36. தேவரும் புகழ் செகராச சேகரக் காவலன் கருணையிற் கடவுண் மாநதி மாவுறை தென் கயிலாய மான்மியம் பாவியறமிழினாற் பகர்ந்திட்டனரோ. தக்ஷிண கைலாச புராணம், 1887, ப. 2.

37. ஸ்ரீ தக்ஷிண கைலாச புராணம், 1916, ப. 8.

38. மேலது, திருநகரச்சருக்கம், செ. 22.

39. மேலது, செய்யுள் திருநகரச் சருக்கம், செ. 24 - 27.

40. A. Velupillai

ஓம்

[1] சிறப்புக்கவி

யாழ்ப்பாணத்து நல்லூரைச்சார்ந்த கொக்குவில்

[2] சரவணபவதாசர்

உயர்திரு க: சச்சிதானந்த நமசிவாய அவர்கள் இயற்றியது:

1. திருவை நேர்ந்திடு வேட்டுவர் சிறுமியர், சேண்மீ
திருகை நீட்டியே, யிளம்புலிக்கன்றினை யழைக்கும்,
பொருவில் பல்கிரியுடுத் துயர்பொழில் பலநிறைந்த,
பெருமை கொண்டொளிரீழத்திற், பிறங்குவ மன்னோ.

2. நதிமுடித்த செஞ்சடையனை, நான்மறைப் பொருளைத்,
துதிகொள் செந்தமி ழுமுதினாற், றொவ்வை நாண்மூவர்
பதிகமோதியே போற்று சீர்த்தலம் பலவுள்ளு,
மதிகமேன்மை பெற்றுயர்ந்தது கோணமாவசலம்.

3. பன்னரும்பரை யங்கமாய்ப் பகலினை யேய்க்கு
நன்னரிக்குழூச்சி கரியாய் நண்ணிய கயிலை,
தன்னிலோர்முடி மருத்துவன் சமரிடை முரித்துக்,
கொன்னி யீழத்தினிறுத்திய கோணமாவசலம்

4. பங்கயச் செழும்பள்ளிகொள் பாரதி கொழுநன்,
செங்கண்மான்முத லமரர்க *டினந் தினங்குழுமித்,
கங்கைவேணி யங்கண்ணுதற் கடவுளைக் குறித்துக்,
கொங்கரும்பிய மலர்கொடே பணிவது கோணமாவசலம்.

5. ஐந்தருப் பெருநிழலிடை யிருந்தரசியற்று
மித்திரன்முத லமரர்களிட ரடைந்தயரக்,
கந்தரப்புய ராவணனெடுத்துழிக், கலங்கா
முந்துகின்றது, முன்னுசீர்க் கோணமாவசலம்

---

1 இதனை இயற்றியவர் கார்த்திகேயையர் காலத்தவர்
2 இநவரது காலமும் கி.பி. 1887 ஆகும்
பாடல்கள் பொருள் விளங்கப் பிரித்து எழுதப்பட்டுள்ளன.
*தினம் தினம்

6. இந்தமேன்மை பெற்றுயர் மலைச்சரிதங் கூறினிய
முந்துசெந்தமிழ்ப் பாவினான் மொழியெனப் பணித்தான்,
சுந்தநாண்மலர்க் கமலமீ துறைந்தவற் *கடுப்ப,
வந்து தோன்றினோன் வரதராயண னெனுமுனிவன்

7. மேலைஞான்றினின் வகுத்த மூவாறெனும்புராண
நாலுவேதமார் மிருதிகள் யாவது, நம்பன்
காலவாதியி லருள்புரி யாகமங்கற்றுச்,
சீலமேவு சைவராசப் பெயர்கொள் பண்டிதனே.

8. அருளும்வாசகமது துணையாகவே கொண்டு,
பரவுதிப்பிய நவரசந்துலங்கவே, பாரில்
விரவுநாவலர் விருந்தெனவேண்டி யுட்கொள்ள,
வுரவுதக்கிண கயிலைமான்மியமென வுரைத்தான்.

வேறு

9. எண்ணெழுத்தென்னு நூற்கரைகண்டோ னிருநிலன் புரந்திடுசீர்த்தி
நண்ணியவரசர் மணிமுடியுழுது நள்ளொளிகாலு செந்தாளான்,
கண்ணகன் சேதுவுயர் கரைக்காவல்பூண்டவன், கறைகெழுவேலான்,
றிண்ணிய சிங்கையாரியன், கீர்த்திசெறிசெகராசசேகரனே.

10. பொன்னிணைருழ்க்கும், பொலஞ்சினைத் தருக்கணிறைந்திடு, பொருவில் யாழ்ப்பாண
மென்னுநன்மங்கை, கண்ணெனவிளங்கி யெறிதிரைப் பரவைசூழ்காரை
நன்னகர்வாச, னான்மறையாளனாற் கவிபொழிந்திடுமேக
மன்னவன், கார்த்திகேயனாமறிஞ னரிறபவாய்ந்து பன்முறையே.

11. ஈந்திடவெழுதா வெழுத்திடையிட்டானன்முன மியற்றிய தவத்தாற்
போந்தவனென்ற னுயிர்த்துணைநண்பன், புலவர்க யெரெலா நீங்க
வேந்திடுவேற்கை, யிறையவன்பாத மிறைஞ்சிடு மருநெறித் தவத்தான்
றீந்தமிழறிஞன், சிவசிதம்பரப்பேர் திசைநிறீ யுறுமுரவோனே

முற்றும்

---

*கடுப்ப-அடுப்ப

சிறப்புப்பாயிரம்

யாழ்ப்பாணத்து நல்லூர் மகாவித்துவான்
[1]அரசகேசரி
இயற்றியது

ஆசிரியப்பா

மணிநிறக்கண்டன் மாண்புறுகயிலையி
னணிநிறக்கொடுமுடி யாயிரத்தோர்முடி
படவரவொதுங்கப் [2]பறித்தருமிலங்கை
வடகடனடுவண் [3]மாதிரமதிப்ப
வருமுக்கோண மலைதென்கயிலை

மணிநிறக் கண்டன், மாண்புறு கயிலையின்
அணிநிறக் கொடுமுடி ஆயிரத்தோர்முடி
படவரவு ஒதுங்கப் பறித்தரும் இலங்கை
வடகடல் நடுவண் மாதிரம் மதிப்ப
வருமுக்கோண மலை தென் கயிலை.

பொருள்: ஒளிமிக்க அழகிய நீலநிறக் கழுத்தினையுடைய திருநீலகண்டனாகிய சிவன் எழுந்தருளியிருக்கும் பெருமைக்குரிய கயிலையின் பனிபடர்ந்த மலைமுகடுகளைப் பெருந்தவத்தோனான ஆதிசேடன், தன் ஆயிரம் படங்களாலும் மறைத்துத் தன்நீண்ட உடலால் சுற்றி வளைத்துப் பாதுகாத்தான். ஆயினும் அம்முகடு களில் ஒன்றினைக் காற்றின் கடவுளான வாயுதேவன் பறித்து இலங்கையின் வடபுலத்தமைந்த கடல்நடுவில் வீசி எறிந்தனன். அம்மலைமுகடு முக்கோண வடிவில் அமைந்து உலகெலாம் போற்றுந் தென்கயிலையாயிற்று.

தத்துவப் பொருள்

மூலாதாரத்தில் முக்கோண வடிவில் அமைந்திருப்பது குண்டலினி. இங்கே ஆதிசேடன் குண்டலினியாகவும், மூலாதாரம் ஆழ் கடலாகவும் கொள்ளப்படுகின்றது. வாயுபகவான் பிராணனாகின்றான். குண்டலினி; பிராணனாகிய உயிர்ப்பின் தாக்கத்தால் எழுப்பப்பட்டு முள்ளந்தண்டாகிய மேருதண்டத்தினூடாகக் கயிலையென்ற புருவமத்தியைத்தாக்கித்துரியநிலை கடந்து (கயிலை - இமயம் - புருவமத்தி) வடகடலான துரியாதீதநிலை பெற்றிலங்கும் ஆத்மன்; இன்பநிலை பெற்றிருத்தல்.

பாடவேறுபாடு. [1]கவிவீரராகவர் இயற்றியது. [2]பறித்தினிதிலங்கை. [3]மாருதம் பதிப்ப = காற்றின்தலைவனான வாயுதேவன்இட...

[4]பரனருளுருத்திரர் பதினொருபேரு
மொருபதுமுகுந்தரு மொன்பதுவிரிஞ்சரும்
[5]வருகடற்கடகம் வழங்கியமீனமுந்
திருமலைதழுவிய தெசமுகநிருதனும்
[6]பெருமதமலைகரிப் புரவலர்பலரும்
[7]பூசையோடிறைஞ்சிய புராணநூற்கதையை
ஆசறுதமிழி லறைகுதியென்றனன்.

பரன் அருள் உருத்திரர் பதினொருபேரும்,
ஒருபது முகுந்தரும், ஒன்பது விரிஞ்சரும்,
வருகடற் கடகம் வழங்கிய மீனமும்,
திருமழை தழுவிய தெசமுக நிருதனும்,
பெருமத மலைகரிப் புரவலர் பலரும்,
பூசையோடு இறைஞ்சிய புராணநூற் கதையை
ஆசறு தமிழில் அறைகுதி என்றனன்.

பொருள்: சிவன் அருளால் தோற்றுவிக்கப்பட்ட சங்கரன், கிரீசன், சம்பு, மாருடன், பகவன், சூலி, கங்கையன், விரூபன், மூர்த்தி, கலாதரன், வாமன் ஆகிய பதினொரு உருத்திரரும்*; விஷ்ணு, அச்சுதன், சாரோருகாசன், பத்மநாபன், கேசவன், நாராயணன், சக்கரபாணி, வாசுதேவன், தாமோதரன், கிருட்டினன் ஆகிய பத்து முகுந்தர்களான காத்தற் கடவுளரும், வேதா, விருஞ்சி, சிருட்டா, பத்மபூ, பிதாமகன், கமலவாசி, சதுர்முகன், விசுவ சிருட்டா, சுயம்பு ஆகிய ஒன்பது படைப்புக் கடவுளரும், நிருதிக் குக்குரிய (தென்மேற்கு) நிருதிதேவனும் திருமலையென்ற தென் கயிலைவந்து, கற்கடக இலக்கினத்தில் மீனராசி கூடும் நல்லோரை யில் பூசனைசெய்து வழிபட்டனர். அவ்வேளையில் மதம்பெருகும் மலைபோன்ற யானைகளையுடைய வள்ளல்களான மன்னாதி மன்னரும் வந்து சிவபெருமானைப் பூசனை செய்து வழிபட்டனர். இத்தகைய பெருமை சான்ற பழைமைமிகு தென்கயிலையின் புரா தன கதையினைச் சீர் கொண்ட நற்றமிழிற் பாடுக என்று கூறி னன்.

---

[4]பா. வேக. பரமர்க்குருத்திரர்.
[5]வருகடற்கமடம்.
[6]பொருமலைமதகரி.
[7]தேசிகன் சொற்படி தென்கலைப்படுத்தி.
* உரை வேறுபாடு மகாதேவன், அரன், உருத்திரன், சங்கரன், நீல லோகிதன், ஈசானன், விசையன், வாமதேவன், பவோற்பவன், கபாலி, சௌமியன்.

*னருமறையுபநிட மாகச்சோதிடம்
விரிகலைபலவும் விளங்கியகுரவன்
சேயினுந்திறலான் சிவநெறித்தவனுளான்
றாயினுமினியான் றயாநிதியனையான்
முப்புரிநூற்பயன் மூரியதாமன்
செப்பருஞ்சைவ ராசபண்டிதன்
அந்தாதித்தொடை யடிகொடுதொடுத்து
நந்தாவிருத்த நவையறக்கூறின
னன்னாடடைந்த நாரியர்கோமான்
பொன்னாடடைந்த பொருவருகாதலன்

அருமறை உபநிடமாகச், சோதிடம்
விரிகலை பலவும் விளங்கிய குரவன்,
சேயினும் திறலான், சிவநெறித் தவம் உளான்,
தாயினும் இனியான், தயாநிதி அனையான்,
முப்புரி நூற்பயன் மூரிய தாமன்,
செப்பரும் சைவ ராச பண்டிதன்,
அந்தாதித் தொடை அடிகொடு தொடுத்து
நந்தா விருத்தம் நவையறக் கூறினன்,
நன்னாடு அடைந்த நாரியர் கோமான்,
பொன்னாடு அடைந்த பொருவரு காதலன்.

பொருள் : பெருமைமிகு மறையினையும் (வேதம்) அதன் அந்த மாகத்திகழும் அனுபவ மொழிகளையும் (உபநிடதம்) வானியல் கோளியல் பற்றிய அறிவினையும், பல்வகையாகப் பரந்துபட்ட வாழ்வியல், அரசியல், இன்கலை போர்க்கலை என்பனவற்றில் புலமையையும் கொண்ட தலைவன். நன்மக்களில் உயர்ந்தோன். சிவநெறியினைத் தன்வாழ்வாகக் கொண்ட பெருந்தவத்தோன். அனைத்துயிர்களிடத்திலும் தாயினும் மிக்க அன்புடையன். அன்புக்கு வைப்பானவன்-பெருநிதியம் போன்றவன். தயாநிதியான சிவனுக்கு ஒப்பானவன். மூன்று கூறுகளாகக் கொண்ட திருநூலை மார்பில் அணிந்தவன். அதன்மூலம் ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலங்களின் கட்டறுத்து, இடைகலை, பிங்கலை சுழுமுனை என்ற மூன்றினையும் ஒன்றிணைத்துக் குண்டலினி சக்தி மூலம் துரியாதீத நிலைகண்ட தலைவன், கூறுதற்கரிய பெருமை மிகு சைவநெறிக்கு வழிகாட்டியாய் விளங்குந் தலைவன்.

---

*பாடவேறுபாடு மறுபக்கத்தில்

பண்டிதரில் அரசன்-சைவராச பண்டிதன். முடிவும் முதலுமாய் நிற்கும் முடிவிலா உள்பொருள் இயல்பினை வாழ்வியலிற் கண்டவன். அழிவற்ற புகழ் எது என்பதனைக் குற்றமறக் கண்டுணர்ந்தவன். இத்தகைய சான்றோன் அந்தாதித்தொடை என்ற யாப்பு முறையில் அடிகளைத் தொடுத்து பாடுக எனப் பணிக்க. குற்றமற்ற முறையில், விருத்தப் பாவில் உயர்வுநலன் தோன்றத் திருமலையின் புராதன கதையினைக் கூறினான் மன்னன் செகராச சேகரன். இவன் நன்நாட்டுத் தலைவனாக விருந்து தேவருலகு சென்றவன். பகைவரால் வெல்லப்படாப் பேராண்மைக்குரியவன். பெண்களால் விரும்பப்படும் இன்பியல் தலைவன்.

மருவலர்தங்களை வானிலத்திருத்திப்
பொருவருபுவியை யொருகுடைபுரப்போன்,
றென்னிலங்காபுரி திசைதொறுமருவு
மின்னிலங்கியவேல் மேலாம்புயத்து
பரவாமுடித்த பார்முழுதாண்ட
விடலாண்வயமா விளங்கியகொடியான்,
[8]சிங்காசாரியன் சேதுகாவலன்
கங்கைநாடன் கற்றவர்திலகன்
ஆயுண்மறையுட னரியசோதிடம்
பாய்திரைக்கடலுட் பலவுமுணர்ந்தோன்,
ஒப்பிலாமுத்தமி ழோர்ந்த
செப்பருஞ்செக ராசசேகரனே.

மருவலர் தங்களை வானிலத்திருத்தி
பொருவரு புவியை ஒருகுடை புரப்போன்,
தென் இலங்காபுரித் திசைதொறும் மருவும்
மின் இலங்கியவேல் மேலாம்புயத்து
பரவா முடித்த பார்முழுது ஆண்ட
விடலாண் வயமா விளங்கிய கொடியான்,

பா.வே. [8]அந்தாதித்தொடையடை வோடுதொடுத்து
நந்தாவிருத்தநவையறக் கூறினன்
அந்நாட்டரசன் ஆரியர்கோமான்
பொன்னாடடைந்த பொருவருகாதலன்
மறுநிலநிருபரை வானிலத்திருத்தி
யுறுநிலமுழுவது மொருதனிபுரப்போன்
தென்னிலங்காபுரித் திசைதொறுமருவும்
மின்னிலங்கியவேல் மேவலர்புயத்துப்
படவராமுடித்தலைப் பார்முழுதாண்ட
இடபவான்கொடி யெழுதியபெருமான்.
பாடவேறுபாடு 8 மறுபக்கம்.

[8]சிங்காசாரியன் சேதுகாவலன்
கங்கைநாடன் கற்றவர்திலகன்,
ஆயுண்மறையுடன் அரியசோதிடம்
பாய்திரைக் கடலுள் பலவும் உணர்ந்தோன்
ஒப்பிலா முத்தமிழ் ஓர்ந்த
செப்பரும் செகராசசேகரனே.

பொருள்: தன்னுடன் நட்புப்பூண்டு ஒழுகாதவரை-பகைவரை மேல்உலகுக்கு வாழ அனுப்பியவன். களம்பல கண்டு போர் புரிந்தவன். வெல்லற்கரிய நிலத்தினை வென்று தன்வெற்றிக் குடைக்கீழ் ஆள்பவன். தென்னிலங்கை யெங்கும்-திசையனைத்துஞ் சென்று தன் ஒளிபொருந்திய வேலினால் தன்திறல் நிறுவியவன். வலி கொண்ட அழகிய புயத்தினையுடையவன். அப்புயத்தில் புகழினைச் சுமந்து இந்நிலம் முழுதும் ஆண்டவன். ஆண்மை மிக்க சிங்க ஏற்றினைக் கொடியில் கொண்டவன். சிங்கை நகர்க்கு உரியவன். சேதுகாவலன் (சேதுஅணை) நீர்வளம் நிறைந்த நாட்டுக்குரியவன். கற்றறிந்த புலவருள் உயர்ந்தோன். ஆன்மாவின் உள்பொருள் இயல்பினை விளக்கும் மறையுடன் (வேதம்) வானியல்-கோளியல் என்பவற்றைத் தெளிவுபட உணர்ந்தவன். ஒப்பிட்டுக் கூறுதற்கியலாத, இயல்-இசை-நாடகம் என்ற முத்தமிழின் சிறப்பினைத் தெளிவுறக்கற்ற சொற்கடங்காப் புகழ்கொண்ட செகராசசேகரன்.

பா.வே. [8]சிங்கையாதிபன் சேதுகாவலன்
கங்கைநாயகன் கருங்கடற்சேர்ப்பன்
பவ்வமேற்றுயில் பராபரன்சூடிய
தெய்வமாமுடிச் செகராசசேகரன்
அவனதுகாலத் தத்திரிகோணைச்
சிவனதுகோயிற் சிவமறைமுதலோன்
அருமறைஉபநீடமாக மஞ்சோதிடம்
விரிதமிழ்வரையறை விளங்கியகுரவோன்
சேயினுந்திறலான் சிவநெறிதவறான்
தாயினுநல்லான் றயாநிதியனையான்
முப்புரிநூற்பயன் முளரியதாமன்
செப்பரும்பண்டித ராசசிகாமணி
என்னுநாமத்தெங் குருபெருமான்
மன்னுநாற்கவியும் வல்லநாவலனே;

⁹தேவரும்புகழ் செகராசசேகரக்
காவலன் கருணையிற் கடவுண்மாநதி
மாவுறைதென்கயிலாய மான்மியம்
பாவியறமிழினாற் பகர்ந்திட்டானரோ

தேவரும் புகழ் செகராசசேகரக்
காவலன், கருணையில் கடவுள் மாநதி,
மாவுறை தென்கயிலாய மான்மியம்
பாவிய தமிழினால் பகர்ந்திட்டானரோ.

பொருள்: தேவர்களாலும் புகழ்ந்து பேசப்படும் பெருமைக்குரிய செகராசசேகரனின் அன்பின் மிகுதி-அதன் பெருக்கு, சிவனின் சடா முடியில் உள்ள தெய்வநதியான கங்கையின் பெருக்கைப் போன்றது. இம்மன்னன்; பெருமைமிகு சிவன் எழுந்தருளியிருக்கும் தென் கயிலையின் சிறப்பினை; நிலைபேற்றினைத் தரும் இயல்பு வாய்ந்த தமிழினால் கூறினன். 'அரோ' என்பது செய்யுளிடத்து வந்த ஈற்றசை.

முற்றும்

பா.வே. ⁹நேரிசை வெண்பா

காஞ்சித்தலத்துக் கவிவீர ராகவனூல்
ஆஞ்சித் தனையென் றளவிட்டோன்—வாஞ்சித்துச்
சேயுயர் முக்கோணச் சிவகதைசெய் தான்விளங்கப்
பாயிரமிங் கோதினனிப் பால்

நூலாக்கியோனாக்குவயம்

திருக்கிளருமச்ச கேச்சுரபுராணஞ் செந்தமிழா லெல்லோருந்
தெளியத்தானே
பெருக்கமுடன் கயிலாசபுராணமெனப் பேருமிட்டுச்சீருமிட்ட
பெருமைதன்னாற்
சருக்கமெழுவையாக்கி விருத்தப்பாக்கள் தானுமறுநூற்று
முப்பத்தைந்தாச்செய்தா
னிருக்குமொழிச் சைவசிகாமணியெயென்ன வெண்டிசை
யெண்பண்டிதவிராசன்றானே

கவிராசர் சொன்னகவி

"நடிக்கும் பரதமியலிசை நாடகநாற் கவிதை
நொடிக்கு முன்பாடப்ரபந்தங் கணிதநன்நூல் சிவநூல்
படிக்க நிகழ்த்தப் புராணாகமஞ் சொல்பரம்பரையாய்
வடிக்குந்தமிழ் வல்லபண்டித ராசன் வரவித்தையே" இப்பாடல் ஒன்றையும் கோணேசர் கல்வெட்டாக்கியோன் எனக் குறித்தனர்- பு. பொ. வை. தேசிகர். மேல்குறித்த மூன்று செய்யுள்களும் 1887ல் பதித்த பதிப்பில் இடம்பெறவில்லை. இப்பதிப்பில் ஆக்கியோன் பெயர் என்ற செய்யுளில் அறுநூற்று முப்பத்தீரளவேயாக்கி"— "பேரிலங்குசிங்கை யந்தார்ச் செகராசசேகரனாம் பெருமன் மாதோ" எனக் குறிக்கப்பட்டுள்ளது. பு. வை. தேசிகர் தம்பதிப்பில் அறுநூற்று முப்பத்தைந்து எனக் கூறியுள்ளார். அதற்குமுன் வெளி வந்த மு. கா. ஐயர் பதிப்பில்—அறுநூற்று முப்பத்திரண்டெனக் கூறப்பட்டுள்ளது. எனவே பண்டிதராசர் என்பவர் சில மாற்றல் களைச்செய்து இடைச் செருகலையும்செய்து தன்பெயரில் இதனைச் செய்ததாக எண்ணவேண்டியுள்ளது.

ஓம்

தட்சணகயிலாச புராணம்

பாயிரம்

காப்பு

உதயமால்வரையொண்கதிரென்னவென்
னிதயதாமரைமீதிலிலங்குவ
மதகடாமழைவாரணமாமுக
முதல்வனைங்கர மூர்த்திபதாம்புயம்

உதய மால்வரை ஒண்கதிர் என்ன, என்
இதய தாமரை மீதில் இலங்குவ,
மத கடாம்மழை வாரண மாமுக
முதல்வன், ஐங்கர மூர்த்தி பதாம்புயம்.

பொருள்: கன்னமதம்-கபோல மதம்-பீசமதம் ஆகிய மும்மதங்களையும் பொழிந்து நிற்கும் யானை வடிவுடைய-ஒளிமிக்க முகத்தினையும் ஐந்துதிருக்கைகளையும் கொண்டு ஆன்மாக்களின் விடுதலைக்காக அருள் வடிவாக நிற்பவன் விநாயகன். அவனது தாமரைமலர் போன்ற திருவடிகள் பேரொளிமிக்கன. ஒளிபொருந்திய ஞாயிறு கீழ்த்திசையில் தோன்றும் பொழுது, அத்திசையில் அமைந்துள்ளமலையிடத்து ஒளிபரந்து உலகிருளைநீக்கும். அதுபோல் என் உள்ளமாகிய தாமரையிடத்து, விநாயகன் திருவடிகள் என்றும் நீங்காது ஒளிபரப்பி நிற்கும்.

தத்துவப் பொருள்: ஓங்காரம்; ஒலியாகி-ஒளியாகி-வித்தாகி எங்கும் நிறைந்திருப்பது. அது ஆணவம் கன்மம் மாயை என்ற மும்மலங்களையும் நீக்கி, அறம்-பொருள் இன்பம்பெற என் உள்ளத்தில ஒளி வடிவாகி நீங்காது நிறைந்து நிற்கும்

கோணீசர் - 10

சீர்கொண்ட கருமுகிலுஞ் சதுர்வேதச் செம்முகிலுஞ் சிறந்துபேண
நீர்கொண்ட செஞ்சடையினிமிரரவுங் கூனிலவு நிரந்து சூழத்
தார்கொண்ட திருமார்பில் வெண்ணூலும் பசுங்கொடியுந்தயங்கத் தோற்று
மேர்கொண்ட கயிலைமலை யொருமுதல்வனிருசரண மிறைஞ்சி வாழ்வாம்

சீர்கொண்ட கருமுகிலுஞ், சதுர் வேதச்
செம்முகிலும், சிறந்து பேண
நீர்கொண்ட செஞ்சடையின், நிமிர் அரவும்
கூன் நிலவும் நிரந்து சூழத்.

பா. வே. [1]இதயவம்புயத் தென்றும் விளங்குவ.

தார்கொண்ட திரு மார்பில் வெண்ணூலும்
பசுங்கொடியும் துயங்கத் தோற்றும்,
ஏர்கொண்ட கயிலைமலை ஒருமுதல்வன்,
இருசரணம் இறைஞ்சி வாழ்வாம்.

பொருள்: கருமுகில் வண்ணனான திருமாலும், நால் வேதப் பொருளுணர்ந்த செம்மைசான்ற நான்முகனும் போற்றிப் பரவ, செம்மை கொண்ட திருச் சடையில் தண்ணளியின் சின்னமான கங்கையினையும், மண்டலமிட்டு ஓங்கார ஓசையினை மிளிற்றும் குண்டலினி சக்தியாகிய பாம்பினையும்ஞான ஒளிவடிவாகத்தோன்றும் பிறைச் சந்திரனையும் தன்னகத்தே கொண்டிருப்பவன் சிவன். இவன் பிரபஞ்சமாகிய மாலையினையும் விருப்பாற்றல் செயலாற்றல் அறிவாற்றல் (இச்சை-கிரியை-ஞானம்) என்ற முப்புரி நூலையும் மார்பில் அணிந்து பசுமை நிறங் கொண்ட இயற்கையாகிய அன்னை உமையைத் தன்னில் இணைவுபெற ஏகமாய்-புகழ்மிக்க கயிலைமலையில் எழுந்தருளியிருப்பவன். இப்பேரருளாளன் திருவடிகளைப் போற்றி வாழ்வோம் + வெண்நூல்=குண்டலினி. இடைகலை பிங்கலை சுழிமுனை எனவும் பகர்வர்

இதுவுமது

2. வாய்ந்த நிலை மலரடியும மலரடி மேலேறிட்டு வைத்ததாளுங்
காந்து மணிச்சிலம் பொலியு மொருபாகம் புகவிடுத்தகையு
மார்பும்
பாந்தளெலாம் விரிந்தாடவிரித்த சடைப் பரப்பு
மொருபாக மாது
மேந்தியொருகயிலை மலை நிற்குமிறைதன்னை மனத்
திருத்தல் செய்வாம்

வாய்ந்த நிலை மலரடியும் மலரடிமேல்
ஏறிட்டு வைத்த தாளும்
காந்து மணிச் சிலம்பு ஒலியும். ஒரு பாகம்
புகவிடுத்த கையும் மார்பும்,
பாந்தளெலாம் விரிந்தாட விரித்த
சடைப்பரப்பும், ஒருபாக மாதும்
ஏந்தி ஒருகயிலை நிற்கும் இறைதன்னை,
மனத்து இருத்தல் செய்வாம்.

பொருள்: ஊன்றிய நிலைத்த திருவடிமேல்-ஏறிட்டு வைத்த திருவடியும், அத்திருவடிகளில் ஒளிவிட்டு ஒலி எழுப்பும் அழகிய வீரக்கழலும்-மார்பை மறித்து நிற்கும் கையும், விரிந்த மார்பும் தலையில உள்ள நாகம் படமெடுத்தாடத் திக்கெல்லாம் விரித்த சடையும் கொண்ட சிவன்; உமையைத் தன்பாகமாகக் கொண்டு ஆன்மாக்களுக்கு அருள் சுரக்கும் திருவுள்ளத்தோடு கயிலையில் எழுந்தருளியுள்ளான். அவன்திருக்கோலத்தினை-அருட்சிறப்பினை மனத்தில் இருத்தல் செய்வோம்.

தத்துவப் பொருள்: இப்பாடலில் இறைவனின் குஞ்சித பாத நடத்தினையும் அதன்மூலம் ஆன்மாக்களுக்கு அருளலையும் விளக்கி இப்பிரபஞ்சம் அனைத்தும், ஆண்மையும்-பெண்மையும் ஒன்றியைந்து இயல்வதே முறைமை என்பதனால், சிவன் தன் பாகத்தில் உமையைக் கொண்டிருப்பதும் கூறப்பட்டுள்ளது.

இதுவுமது

3. [2] செய்யமணித்தாளழகுந்தாண் மீதிற் சிலம்பழகுஞ் சிறுமா
னேந்துங்
கையழகுமழு வழகுந் திருமார்பி னூலழகுங் கருணைப் பார்வைத்
துய்யமுகமலரழகும் புன்முறுவனகை யழகுந் துலங்கித்
தோன்று
மையனுயர் கயிலைமலை முதல்வனை யெம்மிதய மலர
முத்துகிற்பாம்

செய்ய மணித்தாள் அழகும் தாள்மீதில்
சிலம்பழகும், *சிறுமான் ஏந்தும்
கையழகும், ⁰மழுவழகும், திருமார்பில்
+நூல் அழகும், கருணைப் பார்வைத்
துய்யமுக மலர் அழகும், புன்முறுவல்
நகை அழகும், துலங்கித் தோன்றும்
ஐயன், உயர் கயிலைமலை முதல்வனை,
எம் இதயமலர் அழுதுகிற்பாம்

பொருள்: அழகிய சிவந்த திருவடியின் அழகும், அத்திருவடிமேல் அணிந்திருக்கும் சிலம்பின் அழகும், படுவினை நோக்கில் தாருகாவனத்து முனிவர்களால் ஏவப்பட்ட மானையும் மழுவையும் ஏந்தி நிற்கும் கையழகும், விருப்பாற்றல் செயலாற்றல் அறிவாற்றல் என்பவற்றை விளக்கி நிற்கும் முப்புரிநூல் அணிந்த மார்பின் அழகும், அன்புகனிந்த அருட் பார்வையினைக் கொண்ட கண்களின் அழகும், அக்கண்கள் அமைந்த முகமலரின் அழகும், புன்முறுவல் கொண்ட கொவ்வைச் செவ்வாயின் அழகும் விளங்கத், திருநடமாடும் தலைவனை-மாண்புமிகு கயிலையில் எழுந்தருளியிருக்கும் இறைவனை-முழு முதலை, எம் இதயமாகிய மலரணையில் நீங்காதிருத்திப் போற்றுவோம்.

---

* ஆன்மா எனப் பொருள் கொள்வதுமுண்டு. அசுத்த மாயை எனவும் பொருள் உண்டு

⁰ மழு-பரை-பாசம் அறுப்பது

\+ குண்டலினி எனவும் பொருள் உண்டு: இடைகலை, பிங்கலை, சுழிமுனயு மென்பர்

பா. வே [2]செய்யமலர்த்தாளழகும்.

4. பார்புரந்த திருவடியுமடி யவர்க[3] ளீடேறும்படிக்கும் பைம்பொற்
றார்புரந்த வடிவழகு மழகெழு மங்கலநாணுந்[4] தயங்குஞ்
சோதிக்
கார்புரந்த கருங்குழலும் வெண்ணகையுஞ் செவ்விதழுங்
கருணைக் கண்ணுஞ்
சீர்புரந்த பிடியன்ன மென்னடையம்பிகைபாதஞ் சிந்தை
செய்வாம்.

பார்புரந்த திருவடியும், அடியவர்கள்
ஈடேறும்படிக்குப் பைம்பொன்
தார்புரந்த வடிவழகும், அழகெழு
°மங்கல நாணும், தயங்கும் சோதி
கார்புரந்த கருங்குழலும், வெண்ணகையும்
செவ்விதழும், கருணைக் கண்ணும்,
சீர்புரந்த பிடியன்ன மென்னடை,
அம்பிகை பாதம் சிந்தை செய்வாம்.

பொருள்: அழிவற்ற நிலைபேற்றினை உயிர்கள் பெறும்பொருட்டு அனைத்துலகையும் காக்கும் திருவடியும், அடியவர்கள் விடுதலையடையும் பொருட்டுப் பசும்பொன்னாலான மாலையினை அணிந்து எழுந்தருளியிருக்கும் பேரழகும் அருளொளி வீசும் மங்கல நாணும் கருமுகில்கள் உயிர்கட்கு அளிசெய்வதுபோல், தன் கருமை கொண்ட கூந்தலால் அருள்மணம் வீசும் இன்ப அழகும், ஒளிபொருந்திய இனிய சிரிப்பின் அழகும், சிவந்த செவ்விதழ் அழகும், அன்பும் அருளும் நிறைந்த கண்ணழகும், சிறப்புமிக்க பெண் யானையின் அழகு நடையும் கொண்ட அம்பிகையின் திருவடிகளை உள்ளத்திருத்துவோம். °மங்கலநாண் = தாலி

விநாயகர் [5]

5. செம்முளரியுங் கதையுஞ் சக்கரமும் வெண்கொடுஞ்
சிலையும்-பாம்பும்[6]
விம்முமணிப் பொற்குடமுங் கழுநீரு[7]முத்தலையும் விளங்குஞ்
செந்நி
றம்முகமு மாதுள முந்தரித் தொருபால் வல்லவையுந்தரித்த
சோதிக்
கைமுகனை மறவாதென்னிதயமு மென்புந்திய மென்
கருத்துந்தானே

பா. வே. 3 ஈடேறும்படியே 4 தயங்குசோதி, 5 வீரசக்தி விநாயகர், 6 வாமம், 7 நென்முடியும் விளங்கும் செஞ்நெல்

செம்முளரியும் கதையும் சக்கரமும்
வெண்கோடும் சிலையும் பாம்பும்
விம்முமணிப் பொற்குடமும் கழுநீரும்
°முத்தலையும் விளங்கும் செந்நிற
முகமும் மாதுளமும் தரித்து, ஒருபால்
*வல்லவையுந் தரித்த சோதிக்
கைமுகனை மறவாது, என் இதயமும்
என் புத்தியும் என் கருத்துந்தானே.

பொருள்: சிவந்த தாமரை மலரையும் கதாயுதத்தையும், சக்கரத்தினையும் வெண்ணிறம் பொருந்திய கொம்பினையும், வில்லினையும்-பாம்பினையும் நிறை தன்மை கொண்ட அழகிய குடத்தினையும் கழுநீர் மாலையையும் மும்மதம் பொழியும் கபாலத்தினையும் முத்தின் ஒளி அலை வீசும் திருமுடியுடைய அழகிய செம்மை சான்ற முகமும் கொண்டு விளங்குபவன் விநாயகன். இவன் ஒரு கையில் மாதுளம் பழத்தினைக் கொண்டு மறுபுறத்தில் வல்லவை யென்ற ஞான சக்தியையுங் கொண்டு, அருள் மிக்க ஓங்காரப் பொருளாய்ப் பரந்திருப்பவன். அத்தகைய பெருமானை என் உள்ளத்திலும் என் புத்தியிலும் என்றும் மறவாது போற்றி வாழ்வதே என் கருத்தாகும். ° முத்து அலையும் விளங்கும் சென்னி எனக் கொண்டும் பொருள் காணப்பட்டது. முத்தலை பாசுபதத்தினையும் குறிக்கும். இப் பாடல் பல்வகை ஆற்றல் கொண்ட பிரமன்-திருமால்-உருத்திரன்-சக்தி ஆகிய கடவுளரின் பேராற்றல்கள் அனைத்தும் ஒருங்கமையப்பட்டவன் விநாயகன் என்பதை விளக்குகின்றது * வல்லவை விநாயகர் சக்தி.

9 சுப்பிரமணியர்

6. தானவர்களுரங்கெடுத்து வானவர்கள் புரங் கொடுத்ததலை வன்வேத
ஞானவரம் பெதுகொலென வரன் கேட்ப வுரைத்த பரஞான போதன்
[10]கானவரம்புனத்தி லொருகுறமகள் பின்னுற நடந்த கமல பாதன்
றேனமருந்தொடை முருகனொரு வேலனிருதாளென் சிந்தை சேர்ப்பாம்.

பா. வே. 9 சுப்பிரமணியர் துதி 10 கானவர்தம்புனத்தில்

தானவர்கள் உரம் கெடுத்து வானவர்கள்
புரம்கொடுத்த தலைவன், வேத
ஞான வரம்பு எதுகொல் என அரன்
கேட்ப உரைத்த பரஞான போதன்
கானவர் அம்புனத்தில் ஒரு குறமகள்
பின்னுற நடந்த கமல பாதன்,
தேன் அமருந் தொடை முருகன், ஒரு வேலன்,
இருதாள் என் சிந்தை சேர்ப்பாம்.

பொருள்: அசுரர் வலிகெடுத்துத் தேவர் நாட்டை மீட்டுக் கொடுத்த தேவர் சேனாதிபதியாகிய தலைவன். வேதப் பொருள் எது-அறிவின் நிலையெது என்று இறைவன் கேட்க, அதன் உட் பொருளை விளக்கிய அறிவு வடிவினன். வேடுவர்களின் செழுமை மிகு தினைப்புனத்தில் வேடுவ குலப் பெண்ணான வள்ளியின் பின்னே அவள் அன்பு வேண்டி நடந்தவன். தாமரை மலர் போன்ற அழகிய திருவடிகளையுடையவன். தேன் பிளிற்றும் அன்றலர்ந்த மலர்களால் புனையப்பட்ட மாலையில் வண்டினம் மொய்த்து இசையெழுப்ப அதனை அணிந்தவன், வெற்றி வேலினைத் தாங்கியவன். என்றும் இளமை மாறாத் திருவினன். இவ்வேலன் இணையடிகளை என் சிந்தையில் வைப்பேன்.

[11] சிவனடியார்

7. சிந்தனையுமருச் சனையுந் தமிழ்ப் பாடலாமெனமுன்
செய்தநால்வ
ரந்தண் மலர்க் கழல் போற்றி தண்டீசரடி போற்றியமலன்
கோயி
னிந்தனை யற்றிடவணங்கு மடியவர் சேவடி போற்றி நிமலன்
பொற்றாள்
வந்தனை செய் [12] யெவரேனு மவர் சரணஞ் சிரத்தினு மென்
மனத்து முய்ப்பாம்.

சிந்தனையும் அருச்சனையும் தமிழ்ப் பாடலாம்
என முன்செய்த நால்வர்.
அந்தண் மலர்க்கழல் போற்றி, தண்டீசர்
அடி போற்றி, அமலன் கோயில்
நிந்தனையற்றிட வணங்கும் அடியவர்
சேவடி போற்றி, நிமலன் பொற்றாள்
வந்தனைசெய் எவரேனும் அவர் சரணம்,
சிரத்தினும் என் மனத்தும் உய்ப்பாம்

பா. வே. 11 சிவனடியார்கள் துதி-12 செய்பவரெவரோவவர்.

பொருள்: இறைவனைப் பற்றிய சிந்தனை-தோத்திரம் என்பன தமிழ்ப் பாடல்களாய் அமைந்துள்ளன. இதனை முன்பு, திருஞான சம்பந்தர்-திருநாவுக்கரசர்-சுந்தரர்-மாணிக்கர் ஆகிய நான்கு சைவ சமய குரவர்களும் செய்து வழிகாட்டினர். அவர்கள் திருவடிகளுக்கு வணக்கம். தண்டியடிகள் திருவடிகட்கு வணக்கம். இறைவன் திருக்கோயில்கட்குச் சென்று குற்றமற வணங்கும் அடியவர் திருவடிகட்கு வணக்கம். எத்தகையராயினும் இறைவன் திருவடிகளை வணங்குவராயின் அவர்கட்கும் வணக்கம். இவர்கள் அனைவரையும் தலையால் வணங்கி மனத்தில் இருத்தி உய்தியடைவோம்.

[13]குளக் கோட்டான்

8. பார்தாங்கு [14]கோவிலும் பொன் மண்டபமுங் கோபுரமும் [15]பரர்க்குணாட்டி
யேர் தாங்குமாயனுக்கு மலங்காரவாலயமொன்றியற்றி முற்றுங்
கார் தாங்கு திருக்குளமும் பாவனாசனச் சுனையுங் கண்ட கண்டன்
சீர்தாங்கு குளக் கோட்டனென்னுஞ் சோழகங்கனை நஞ் சிந்தை வைப்பாம்.

பார்தாங்கு கோவிலும் பொன் மண்டபமும்
கோபுரமும் பரர்க்கு நாட்டி,
ஏர்தாங்கும் மாயனுக்கும் அலங்கார
ஆலயம் ஒன்றியற்றி, முற்றும்
கார்தாங்கு திருக்குளமும் பாவநாசனச்
சுனையும் கண்ட கண்டன்,
சீர்தாங்கு குளக்கோட்டன் என்னும்
சோழ கங்கனை நம் சிந்தை வைப்பாம்.

பொருள்: மண்ணகம் சிறப்புறத் திருப்பொலிந்த திருமலையில் கோயிலும் அழகிய மண்டபமும் கோபுரமும், பரமேஸ்வரனுக்கு அமைத்தனன் குளக்கோட்டன். இவற்றோடு கோவர்த்தன மலையைக் குடையாகப் பிடித்து ஆயர்களைக் காத்த திருமாலுக்கும் அழகுமிக்க திருக்கோயில் ஒன்றும் அமைத்தான். வளம் சிறக்கும் வண்ணம் திருக்குளம் ஒன்றும் அமைத்தான். பாவ வினை தீர்க்கும் புனித நீர்த்தடமும் (பாவநாசக்குளம்) உருவாக்கினன். இம் மன்னன்

---

13 குளக்கோட்டன் துதி 14 கோயிலும் 15 பரற்குநாட்டி

அனைத்துச் சிறப்புகளும் உடையவன். இத்தகைய செம்மைசால் குளக் கோட்டன் என்ற சோழகங்கனை எங்கள் மனதில், நினைவு கூருவோம்.

9. வைப்பான வடகயிலை [16]தென்கயிலை யென்றிரண்டு
வரைக்கு [17]முன்னாட்
செப்பாதி வடமொழியின் புராண நடை தென்மொழியாற்
செப்புகென்றா
னிப்பாரிலயனான்கு முகமுமொரு முகமாகி [18]யிசைத்ததென்ன
மெய்ப்பான குருச்சைவராச பண்டிதனெனுநால் வேத நூலோன்

வைப்பான வடகயிலை தென்கயிலை
என்று இரண்டு வகைக்கு, முன்நாள்
செப்பாதி வடமொழியின் புராண நடை
தென் மொழியால் செப்பு என்றான்,
இப்பாரில் அவன் நான்கு முகமும்
ஒரு முகமாகி இசைந்த தென்ன,
மெய்ப்பான குரு சைவ ராச பண்டிதன்
என்னும் நால்வேத நூலோன்

பொருள்; புவியின் வடபுலத்தில் நிலையாக அமைந்த கயிலையின் புகழையும், தென்புலத்தில் அமைந்த தென்கயிலையாகிய திரிகோணமலையின் புகழையும், முந்நாளில் செம்மைசான்ற வடமொழியில், புராணமாகக் கூறினர். அதில் தென்கயிலையாகிய திருமலையின் புராதன் பெருமையினைத் தென்மொழியாகிய தமிழிற் கூறுக என்றான் சைவராசபண்டிதன். இவன் இந்த உலகத்தில் பிரமனே தன் நான்கு முகத்தினையும் ஒரு முகமாகக் கொண்டு தோன்றினன் எனக் கூறத்தகும் உள்பொருள் உணர்ந்தோன். வேத நூற் புலவன். சிறந்த சைவ நெறியாளன்-பண்டிதராசன்.

10. வேதமுதலுபநிடமுஞ் சிவாகமமும் புராண முதல் விரிநூல்
யாவுஞ்
சோதிடமு மந்திரமு முணர்ந்துணராதவர் தெளியச் சொல்ல
வல்லோ
னாதலினாலக் குருவின் மொழி கேட்க வேண்டுமெனு
மன்பினாலே
யோதினனிவ் வடமொழியின் புராண நடை [19]தென்
மொழியினுலகமீதே

பா. வே. 16 ஆக்குவித்தவர் பெயரும் நூல் செய்த காரணமும், 17 ஈசன், 18 இசைத்தன்ன, 19 தென்மொழியாலுலகமீதே

வேதம் முதல் உபநிடமும் சிவாகமமும்
புராண முதல் விரிநூல் யாவும்
சோதிடமும் மந்திரமும் உணர்ந்து,
உணராதவர் தெளியச் சொல்லவல்லோன்,
ஆதலினால் அக்குருன் மொழிகேட்ப
வேண்டும் எனும் அன்பினாலே,
ஓதினனன் இவ்வட மொழியின் புராணநடை
தென் மொழியின் உலகமீதே.

பொருள்; வேத உபநிடதக் கருத்துக்களையும், சிவாகமம்-புராணம் ஆகியவற்றின் கருத்துக்களையும், சோதிடத்தினையும்-மந்திரத்தினையும் நன்குணர்ந்து, அவற்றினை உணராதவரும் நன்கு உணரும்படி தெளிவுபடச் சொல்லும் திறன்பெற்ற அக் குருவின் சொல்லினைக் கேட்டல் வேண்டும் என்ற அன்பின் மேலீட்டால். வடமொழியிற் கூறப்பட்ட இப்புராணச் செய்தியினை இவ்வுலகிலே தென் மொழியாகிய தமிழிற் கூறினன்.

11. மீதுயர்ந்த வுருத்திரரும் விரிபதுமப்[20] பெருமலரின் விரிஞ்சர் தாமும்
போது திருமாதவருமாதவர்க்கு ளொரு பெரிய புனிதமீனு
மாதரவினிறைஞ்சுகதைகயிலாசபுராணமெனவறையலுற்றேன்
மாதுரியமச்சேந்தியமாம்வட[21] புராணத்தின் வண்ணமாதோ

மீதுயர்ந்த உருத்திரரும், விரிபதுமப்
பெருமலரின் விரிஞ்சர் தாமும்,
போதுதிரு மாதவரும், மாதவர்க்குள்
ஒரு பெரிய புனிதம் ஈனும்
ஆதரவின் இறைஞ்சு கதை
கயிலாச புராணமென அறையலுற்றேன்,
மாதுரிய மச்சேந்தியமாம் வட
புராணத்தின் வண்ணமாதோ

பொருள்: மிக்க பெருமைக்குரிய உருத்திரர்கள் தாமரை மலர்களில் வாழ்பிரமாக்கள்-அவரொத்த பெருந்தவத்தோர் அனைவருள்ளும், எனது ஆசிரியன் மிக்க புனிதமுடையோன். அத்தகைய சான்றோனின் ஆதரவுடன் மிக்க இனிமை பொருந்திய மச்சேந்தியமாம் வட மொழிப் புராணத்தின் இயல்பு பொருந்த ஆக்குகின்றேன். (சிறப்புப்பாயிரத்தில் 6ம், 7ம் வரிகட்கு உரை கூறிய இடத்தில் உருத்திரர் பற்றியும் பிரமாக்கள் பற்றியும் கூறப்பட்டுள்ளது)

பாவே 20 இந் நூற் பெயரும் முந்நூற் பெயரும் இது தலைப்பு
21 புராணத்தியல்பு மருவத்தானே.

12. அத்திறத்திற்கயிலாசபுராணமெனத்தமியேனோர்ந்தறைந்த
நூலி
னெத்திறத்தும் [22]வழுவேழு மீரைந்து குற்றமும் வந்தி
யன்றதேனு
முத்தமிழ் வல்லோர்சிறிதுமிகழ்வரோசிறியோர் தம் முழந்தா
ளூன்றித்
தித்தியென நடித்தாலும் வெறுப்பரோ [23]நாடகியர் [24]தீதி
தென்ன

அத்திறத்திற் கயிலாச புராணமெனத்
தமியேன் ஓர்ந்து அறைந்தநூலின்
எத்திறத்தும் °வழுவேழும் *ஈரைந்து
குற்றமும் வந்து இயன்றதேனும்,
முத்தமிழ் வல்லோர் சிறிதும் இகழ்வரோ!
சிறியோர்தம் முழந்தாள் ஊன்றித்
தித்தியென நடித்தாலும் வெறுப்பரோ!!
நாடகியர் தீது இது என்ன.

பொருள் : அடியேன் படித்து அறிந்த மச்சேந்திய புராணக் கதையினை-அதில் கூறப்பட்ட தென்கயிலைப் பெருமையினைக் கயிலாச புராணமெனப்பெயரிட்டுப் பாடியுள்ளேன். இந்நூலில் எவ்விடத்திலேனும் புராணங்கட்குரிய மரபில் இருந்து வழுவி, எழுவகை வழுக்களில் ஒன்றோ-பலவோ இடம் பெற்றாலும், புராணத்திற்கு அமைந்த இலக்கணத்தில் வழுவிப் பத்துவகைக் குற்றங்களில் ஒன்றோ பலவோ இடம் பெற்றாலும், இயல் இசை நாடகத் தமிழில் புலமை மிக்க புலவர்கள் சிறிதும் இகழமாட்டார். சிறுவர்கள் முழந்தாள் ஊன்றி தித்தி என நடித்தாலும் நாடகத்தில் வல்ல கலைஞர்கள் இது ஏற்றதன்று எனக் கூறார்.

° வழு ஏழு: திணை - பால்- இடம்- பொழுது-வினா-முறை-மரபு
* குற்றம்பத்து: குன்றக்கூறல்- மிகுபடக்கூறல்- கூறியது கூறல்- மாறுகொளக்கூறல்-வழூச் சொற்புணர்தல்-மயங்க வைத்தல்-வெற்றெனத் தொடுத்தல்- மற்றொன்று விரித்தல்-சென்று தேய்ந்திறுதல்-நின்று பயனின்மை.

பாட வே- 22 வழுவேனும் 23 நாடகியார். 24 தீதெதன்ன.

13. என்னவடியென்ன தொடையென்னகவியென்னபொருளிது
கொலென்றார்க்
கன்னபுராணத்தினுண்மையாராய்வினாற்பெரிதுமறியலாமா
லுன்னருமக்கதைப்பொருட்டென் புன்கவியும்பெரியோருட்
கொள்வதல்லாற்
கன்னலையச் சுவைக்கலதுகோதிற்கோவாய்சிவப்பக்கறித்
துண்பாரே

என்ன அடி என்ன தொடை என்ன கவி
என்ன பொருள் இது கொல் என்றார்க்கு
அன்ன புராணத்தின் உண்மை ஆராய்வினால்
பெரிதும் அறியலாமால்
உன்னரும் அக்கதைப் பொருட்டு என்
புன்கவியும் பெரியோர் உட்கொள்வதல்லால்
கன்னலை அச்சுவைக்கல்லது கோதில்
கோவாய் சிவப்பக் கறித்து உண்பாரே.

பொருள்: இக் கவிதை நூல் கவிதை இலக்கணத்தில் கூறிய எந்த வகையினைச் சேர்ந்தது. இதற்குரிய அடி தொடையாது-இதன் துணி பொருள் யாது என வினவுவார், இதுபோன்ற புராணங்களை ஆராயின் அறியலாம். எனவே யான் உன்னிச் சொல்ல முயன்ற அரிய இக் கதையின் பெருமை நோக்கி எனது புலமையற்ற கவிதையினையும் சான்றோர்கள் ஏற்றுக்கொள்வதல்லால் நீக்குதல் செய்யார். கரும்பின் சாற்றால் உருவான கட்டியினை அதன் சுவைக்காகவே சுவைப்பர் அதில் குற்றம் கண்டு அழகிய சிவந்த வாய் சிவப்ப அதனைக் கடித்து உண்ணமாட்டார். இதுவே அறிவுடையோர் செயல். அல்லாதோர் தம் சிவந்த வாயினைக் கடிப்பவரே.

ஆக்கியோன் பெயர்[25]

14. பாரிலங்குகயிலாசபுராணத்திற் கேழ்சருக்கம்பயில்வித்தோங்கு
மாரமுதவிருத்தகவி[26]யறுநூற்றுமுப்பத்தீரளவேயாக்கிச்
சீரெழுத்துச்சொற்பொருள்யாப்பலங்காரமுதலியநூ[27]றெரிக்
குஞ்சீர்த்திப்
[28]பேரிலங்குசிங்கையந்தார்ச்சிசெகராசசேகரனாம்
பெருமன்மாதோ

பாரிலங்கு கயிலாச புராணத்திற்கு,
ஏழ்சருக்கம் பயில்வித்து, ஓங்கும்
ஆரமுத விருத்தகவி அறுநூற்று
முப்பத்து ஈரளவேயாகி,
சீர்எழுத்துச் சொற்பொருள் யாப்பு
அலங்காரம் முதலிய நூல் தெரிக்கும், சீர்த்திப்
பேர்இலங்கு சிங்கையந்தார்ச் செகராச
சேகரனாம் பெருமான் மாதோ.

பா.வே. 25புராணத்தளவு 26முப்பானைந்தளவேயாகச்-முப்பத்தொன்றளவெனச் 27 நூறெரிக்கவல்ல
28 பேரிகழா வகைபகர்ந்தேன்றென்கயிலைமலை நிலைமை பெரிதுந்தோன்ற.

பொருள்: உலகிடத்து விளக்கமுற்று விளங்கும் கயிலாசபுராணத்திற்கு ஏழுசருக்கங்களை அமைத்து இனிய அமுதச்சுவைதரும் விருத்தப்பா அறுநூற்றுமுப்பத்திரண்டினை அளவாகக் கொண்டு எழுத்து சீர்-சொல்-பொருள்-யாப்பு அலங்காரம் முதலியவற்றினை இலக்கண நூல் வழிநின்று செம்மைபெற, பெருமை மிகு புகழுக்குறிய சிங்கை நாரில் இருந்து ஆளும் செகராச சேகரனாம் தலைவன் செய்தனன். மாதோ! இதற்கு முன்நிற்குஞ் சொல்லைக் கூட்டி செய்தனன் பெண்ணே எனவும் பொருள் கொள்ளலாம், அன்றி ஈற்று அசையாகவும் கொள்ளலாம்

15. தோன்றுமுயிரனைத்துமாய்த்தோன்றரியமெய்ஞ்ஞானச் சுடருமாகிக்
கான்றகதிர்நிலவொழுகுமதியரவுந்திருமுடிமேற்காட்டிநிற்கு
மூன்றுலகுக்கப்பாலுமுதல்வனிது நமக்கிடமா முறைமைத் தென்ன
வேன்றமலைக்கொழுந்துவளரிலங்கைவளமது சிறிதிங்கியம்பு கிற்பாம்

தோன்றும் உயிர் அனைத்துமாய்த் தோன்றரிய
மெய்ஞ்ஞானச் சுடருமாகிக்
கான்றகதிர் நிலவு ஒழுகும் மதி யரவும்
திருமுடிமேற் காட்டி நிற்கும்
மூன்றுலகுக்கு அப்பாலும் முதல்வனிது
நமக்கிடமாம் முறைமைத்தென்ன
வேன்ற மலைக்கொழுந்து வளர் இலங்கை
வளம் அதுசிறிது இங்கு இயம்புகிற்பாம்.

பொருள்: இயற்கையிடத்துத் தோன்றும் அனைத்து உயிர்கட்கும் உயிராகிப் பேரறிவாகிய ஒளிவடிவுகொண்டு, ஒளிபரப்பும் கதிரவனாகிய ஞாயிற்றினையும், தண்மை ஒளிபரப்பும் திங்களினையும், படம் விரித்தாடும் பாம்பினையும், தன் அழகிய திருமுடியின்மேல் பொருந்தக்காட்டி நிற்பவன் சிவன். இவன் மூன்றுலகங்கட்கு அப்பாலும் மூலமுதற் பொருளாக நிற்பவன். இத்தகைய இறைவனின் திருவருளுக்கு உட்பட்டு அம்முறைமையில் நின்று, வெற்றித் திருவணைந்து பொலியும் தென்கயிலை மலை வளத்தை அதனால் செழுமை கொண்ட இலங்கையின் நல்வளத்தைச் சிறிது இங்கு சொல்ல முயல்கின்றேன்.

பாயிரம் முற்றிற்று
திருவிருத்தம் 15

ஓம்

தட்சணகயிலாச புராணம்

முதலாவது

[1]ஈழமண்டலச் சருக்கம்

1. பாருநாகமும் பைங்கிரியுந்திரை
நீருநேர்புடை சூழநிமிர்ந்தெழு
மேருமீதில் விளங்கிய சென்னியொன்
றாரமாருதங் கொண்டிங்கமைந்ததே

பாரு நாகமும் பைங்கிரியும், திரை
நீரும் நேர்புடைசூழ, நிமிர்ந்து எழு
மேருமீதில் விளங்கிய சென்னி ஒன்று,
ஆர மாருதம் கொண்டிங்கு அமைந்ததே.

பொருள்: புவியினைக் காத்து நிற்கும் எண்திசைகளில் உள்ள யானைகளும், எட்டுத்திக்குகளில் அமைந்த பசுமை நிறைந்த மலைகளும், அலைகள் எழுந்து வீசும் கங்கையும் ஒழுங்குடன் சூழ்ந்து அழகுசெய்ய, வானளாவி நிமிர்ந்து எழுந்த மேருமலைமீதில் அமைவுற்றிருந்த மலைமுகடொன்று; காற்றானது (வாயுதேவன்) மிக்க வேகத்துடன்வீச இடப்பெயர்வு கொண்டு இவ்விடத்தில் அமைவு பெற்றது.

2. அமைத்த பொன்மலை யாதலினப்பெயர்
சமைத்தவீழமி தென்றுதழீஇயதா
லிமைத்தமாமணி யெங்குமிலங்கலா
லுமைத்தநீர்வயலூரு மிலங்கையே.

அமைத்த பொன்மலை ஆதலின், அப்பெயர்
சமைத்த ஈழம் இதென்று தழீஇயதால்,
இமைத்த மாமணி எங்கும் இலங்கலால்,
உமைத்த நீர் வயல் ஊரும் இலங்கையே

பொருள்: அழகும் செம்மையுங் கொண்டதால் பொன்மலையெனப் பெயர் கொண்டது மேரு. அம்மேருவின் முடிகளில் ஒன்றே ஈழநாடாக அமைவுபெற்றது. இவ்வீழநாட்டில் ஒளிமிக்க பல்வகைப்பட்ட இரத்தினக் கற்கள் எங்கும் பரவிக்கிடப்பதால், அனைத்து வளங்களையுந் தரும் நீர் வயல்களில் அமைதியாகப் பாய்வதால் இலங்கும் இயல்புகொண்ட ஈழம்; இலங்கையெனப் பெயர் கொண்டது.

பா. வே. 1இலங்கை மண்டலச் சருக்கம்.

3. [2]இலங்குமாமணி யாதலினாவலாற்
றுலங்குமாதவர் சூழவருதலாற்
[3]பலங்கொடா பரமெங்கும் பரித்தலாற்
பொலங்கொளீழமும் பொன்மலை போலுமே.

இலங்கும் மாமணி ஆதலின், ஆவலால்
துலங்கும் மாதவர் சூழவருதலால்,
பலங்கொள் தாபரம் எங்கும் பரித்தலால்,
பொலங்கொள் ஈழமும் பொன்மலை போலுமே.

பொருள்: ஈழம் புகழ்கொண்டு விளங்கும் ஒளிமிக்க இரத்தினம் போன்றது. அதனால் உயிரறக் கோட்பாட்டில் உயர்வுபெற்று விளங்கும் பெருந்தவத் தோராகிய சான்றோர், சிவபூமியாகிய இந் நாட்டைச் சூழ்ந்து வாழ்வர். இங்கு பயன்தரும் நன்மரங்கள் கொண்ட சோலைகள் நிறைந்துள்ளன. தாங்கா விளையுளும், தக்காரும், தாழ்வில்லாச் செல்வரும் நிறைந்துள்ளனர். அதனால் இந்நாடு வலிமை கொண்டதாக விளங்குகின்றது, இவ்வகைச் சிறப் புகள்பல ஈழநாட்டகத் திருப்பதால் இதுவும் மேருமலை போன்ற பெருமைக் குரியதாகும்.

4. மேருவுந் தென்னிலங்கையும் வேறலென்
றாருஞ்சொல்வர தற்குமிதற்குள
சீருமுத்தமிழ்ச் செல்வமுமெம்பிரா
னூருநன்கயிலாயமு முள்ளதே.

மேருவும் தென்இலங்கையும் வேறல என்று
ஆரும் சொல்வர், அதற்கும் இதற்குள
சீரும், முத்தமிழ்ச் செல்வமும், எம்பிரான்
ஊரும், நன் கயிலாயமும் உள்ளதே.

பொருள்: மேருமலையும் அதன் தெற்கில் அமைந்த இலங்கையும் (தென் இலங்கையெனவும் கொள்ளலாம்) வேறு வேறு அன்று— ஒன்றே. இதனை அனைவரும் சொல்வர். ஏனெனில்; இரு இடங் களிலும் உள்ள உயர்ந்த பொருள் வளமும்-சீர்கொண்ட வாழ்வியலும் இயல்-இசை-நாடகம் என்பவற்றால் இயன்ற தமிழ்வளமும்— இறைவன் திருவருளும்-அவன் திருவோலக்கங்கொண்டு எழுந்தருளி யிருந்து திருவருள் பாலிக்கும் தென்கயிலாயமும், இங்கு உண்டு என்பதனாலாம்.

பா.வே. 2 இலங்குமாமணி யெய்தலினாவலார்
3 பலன்கொடாவரம்

5. உள்ளமும்புறமுமுயிர்க்கொள்கையின்
வெள்ளமும்புனல்வெள்ளமும்மிக்கெழீஇ
பள்ளல்வாரியடங்கலுமுண்டுகார்
துள்ளுதாரை பனித்தல் சொரிந்ததே.

உள்ளமும் புறமும், உயிர்க் கொள்கையின்
வெள்ளமும், புனல் வெள்ளமும் மிக்கு எழீஇ
பள்ளல் வாரி அடங்கலும் உண்டு, கார்
துள்ளு தாரை பனித்தல் சொரிந்ததே.

பொருள்: அகவாழ்விலும் புறவாழ்விலும் உயிரறக் கோட்பாட்டின் மீதூர்ந்த அன்புவெள்ளமும், கார்முகில் வாரிவளங்கும் நீர்ப்பெருக்கின் வெள்ளமும், மலைகளில் சுரந்து ஓடும் ஆற்றின் வெள்ளமும், ஈழத்தில் அமைந்து வளம் நல்குகின்றன. இவற்றில்; முகில் பொழியும் வெள்ளமும்-மலையிடத்துச் சுரந்தோடும் ஆற்று வெள்ளமும் கடலிடத்துச் சென்று கலந்துவிடும். அவை அள்ளக் குறைதலுமுண்டு. அன்றியும் கார்முகில் துமித்துத் தாரையாக ஒழுகும்பொழுதே வெள்ளப்பெருக்கு மிகுதிப்படும். ஆயின், அகப்புற வாழ்வின்-உயிரறக் கோட்பாட்டின் மீதூர்ந்த அன்பு வெள்ளம் ஈழநாட்டில் வற்றுவதில்லை. அது மக்கள் வாழ்வை-உயிரினங்களின் வாழ்வைச் செழுமை யூட்டிக்கொண்டேயிருக்கின்றது.

6. [4]தேனிரைத்துயரம்பரைச்செங்கதிர்
வானிரைத்துவருவதுபோலநன்
கானிரைத்துநிவந்தெழுகன்[5]மலை
மேனிரைத்துவிரைந்ததுநீத்தமே

தேன் நிரைத்த உயர் அம்பரைச் செங்கதிர்
வான் நிரைத்து வருவதுபோல, நன்
கான் நிரைத்து நிவந்தெழு கன்மலை
மேல் நிரைத்து விரைந்தது நீத்தமே.

பொருள்: உயர்ந்தோங்கி வளர்ந்த சோலையிடத்தேயுள்ள தேன்; செங்கதிர் ஒளிகொண்ட வானிடத்திருந்து ஒழுகுவதுபோல், சோலைகள் நிறைந்து வானளாவி நிற்கும் உறுதிவாய்ந்த மலையின்மேலிருந்து ஒழுகும் நீரானது, புவியிடைப் பாய்ந்து கான்கரைகளை நிரப்பி வழிந்தோடுகின்றது.

பா.வே. 4. தேனிரைத் துயரம் பலர் செங்கதிர் என்றும் தேனிரைத் துரர் வம்பரைச் செங்கதிர் என்றும் பாடம், 5-மழை.

7. மேவுகாரகிலும்விரைச்சாந்தமும்
பூவுநாவியும்பொன்னுந்தரளமு
நீவிநன்கடைதோறுநிரைத்தலா
லோவிலாப்புனல்வாணிகரொக்குமால்

மேவுகார் அகிலும் விரைச் சாந்தமும்
பூவு நாவியும் பொன்னும் தரளமும்
நீவி நன்கடை தோறும் நிரைத்தலால்,
ஓவிலாப்புனல் வாணிகர் ஒக்குமால்.

பொருள்: மலைமேலிருந்துவரும் இடைவிடாத நீரின் பெருக்கத்தில், கருமை கொண்ட உயர்ந்த அகில மரமும் - சந்தன மரமும், மலைச் சோலைகளில் உள்ள பூக்களும், புனுகும்-பொன்னும்-முத்தும் நிறைந்துள்ளன. அந்நீர் இடைவிடாது வழிந்தோடும் போது தன்னிடத்தேயுள்ள மலைபடு திரவியங்களை நிறைத்துச் செல்கின்றது. அதனால் அந்நீர்ப்பெருக்கானது பெருவணிகனை ஒத்திருந்தது.

8. மால்வரைக்களிறுந்திரைவாசியு
மேல்வளைத்தநுரைக்குடைவீக்கமுஞ்
சேலினத்திரள்வாளுஞ்சிறத்தலா
லேலுமப்புனன்மன்னவரென்னலாம்.

மால்வரைக் களிறும் திரை வாசியும்
மேல்வளைந்த நுரைக்குடை வீக்கமும்
சேல் இனத்திரள் வாளும் சிறத்தலால்,
மேலும் அப்புனல் மன்னவர் என்னலாம்

பொருள்: பெருமை பொருந்திய மலையாகிய யானையும், திரையாகிய அலங்கார வளைவும், அதன்மேல் அமைந்த நுரையாகிய வெண்கொற்றக்குடையின் அசைவும், மீனினத்தின் கொம்பாகிய வாளும், பாய்ந்தோடும் நீருக்கு அணிசெய்வதால், அதனை மன்னர்க்கு ஒப்பிடலாம்.

9. *ஆங்கரும்புமலருங்கதலியு
மாங்கனிக்குலமுஞ்செவ்வருக்கையுந்
தேங்குதேனுந்திரைத்தபுனல்சிவ
னோங்குபூசனைக்குய்ப்பவரொக்குமே

ஆங்கு கரும்பும் மலரும் கதலியும்
மாங்கனிக் குலமும் செவ்வருக்கையும்
தேங்கு தேனும் திரைத்த புனல், சிவன்
ஓங்கு பூசனைக்கு உய்ப்பவர் ஒக்குமே.

---

* ஆங்கரும்மபுலரும் என்பதனை; ஆங்கு அரும்பு மலரும் எனவும் பிரிக்கலாம்.

பொருள்: நீரானது அலைவீசி நுரைபரப்பிப் பாய்கின்றது. அவ்வண்ணம் பாயும்பொழுது; கரும்பினையும்—மலரினையும், வாழைக்கனியினையும், மாங்கனியினையும், பழுத்துச் சிவந்த வருக்கைப் பலாப்பழத்தினையும், அப்பழத்தில் வெடித்துப் பிரிந்த இடங்களில் தேங்கிநிற்குந் தேனினையும் சுமந்து செல்கின்றது. இது சிவபூசைக்குச் செல்லும் அடியவர் போலிருந்தது.

10. ஒக்கவெங்குமுலாயபெரும்புனல்
புக்குநானிலமும்புடைத்தார்த்தெழீஇ
மிக்கசெய்தொறுந்[6]தேக்கிவிரைந்துபோய்த்
தக்கவாரிதழீஇயப்பரந்ததே.

ஒக்க எங்கும் உலாய பெரும்புனல்,
புக்கு நானிலமும் புடைத்து ஆர்த் எழீஇ,
மிக்க செய்தொறுந் தேக்கி விரைந்து போய்த்,
தக்கவாரி தழீஇயப் பரந்ததே.

பொருள்: பெருநீர்ப் பெருக்கானது; குறிஞ்சி முல்லை, மருதம், நெய்தல் ஆயநான்கு நிலங்களிலும் புகுந்து, செல்லும் வழிதோறும் மோதுண்டு ஒலி எழுப்பி—அந்நிலங்கள்; செழுமை பெற்றுச் சிறக்க, எங்கும் உலவுகின்ற நீர்மையினால் பயிர்செய்யும் நிலங்களிலெல்லாந்தேங்கி நின்று செழுமையூட்டி சிறப்பு மிக்க கடலில் கலந்தது.

11. பரந்தவாய்க்கிணைதண்ணுமைபற்பல
நிரந்தமள்ளர்[7]நெருக்கமுழங்கலா
லரந்தைபோயதின்றாமெனவார்த்தவர்ப்
புரந்தமங்கையரங்கெதிர்போயினார்

ᵀபரந்தவாய் ⁺இணை °தண்ணுமை பற்பல
நிரந்த மள்ளர் நெருக்க முழங்கலால்,
○அரந்தைபோய் அதுஇன்றாமென ஆர்த்து அவர்
புரந்த மங்கையர் அரங்குஎதிர் போயினார்.

பொருள்: உழவர்கள் ஒன்றிணைந்து; மருதப்பறை-தண்ணுமை என்ற இசைக் கருவிகள் கொண்டு ஒலி எழுப்பி இசை மிழிற்றுவதால், சோர்வு நீங்கிய உழவரின் மனைவியரான உழத்தியப் பெண்கள் வயல் அரங்கிடத்துச் சென்றனர்.

---

* ஆங்கருபுமலருங் என்பதனை; ஆங்கு அரும்பு மலரும் எனவும் பிரித்துப் பொருள் கொள்ளலாம். ஆயின் சிறப்பன்று.

ᵀ பரந்தவாய்=எங்கும் பரந்ததாய். பரந்தவாய்=அகன்று பரந்த வாய், ⁺இணை=மருதப்பறை,
°தண்ணுமை-மத்தளம - மிருதங்கம்,
○அரந்தை=இளைப்பு.

பா.வே. 6 தேங்கி. 7 நெருங்க

12. போயபின்னர்ப்புனன்மறித்தாங்கவ
ராயசெய்வரம்பெங்குமமைத்துநின்
றேயமேதியினங்கொடுழுந்தொறுஞ்
சேயசங்கமுழுந்திகழ்செய்யெலா.

போயபின்னர் புனல்மறித்து, ஆங்கவர்
ஆய செய்வரம்பு எங்கும் அமைத்துநின்று
ஏய மேதி இனம்கொடு உழுந்தொறும்,
சேய சங்கமும் உழும் திகழ் செய்யெலாம்

பொருள்: வயலரங்கில், உழவரோடு ஒன்று கூடிய அவர்தம் மனைவியர், தம் துணைவரோடு இணைவுகொண்டு விளைவாக்கத்தைத்தரும் வரம்புகளை வயலிடத்து அமைத்து நின்றனர். உழவர்கள் எருமைக் கடாக்களைக் கொண்டு வயலிடத்தை உழுதனர். அவர்கள் உழுத உழவு சால்களில், நீர்நிலைகளில் உள்ள இளமைமிகு சங்கினங்களும் உழுதன.

13. *செய்யமாமணியைத்திகழ்பச்சையுந்
துய்யநீலமுஞ்சூழ்ந்தொளிர்கின்றது
வெய்யவன்பரிவேடமுடன்பெரு
வையமீதுவயங்குதல்போலுமே

செய்ய மாமணியைத் திகழ் பச்சையும்
துய்ய நீலமும் சூழ்ந்து ஒளிர்கின்றது,
வெய்யவன் பரிவேடமுடன் பெரு
வையமீது வயங்குதல் போலுமே.

பொருள்: உழவுசால்களில் ஒளிமிக்க மணிகள் (இரத்தினங்கள்) சிந்திக்கிடக்கின்றன. வயலிடத்து முளைவிட்ட பசும் நெற்பயிர்களின் வண்ணமும், வானத்தின் நீலமும் மணிகளிற் படிகின்றன. அதனால் அம்மணிகள், வயலிடத்துப் பலநிறங்கொண்ட ஒளிகளைப் பரப்புகின்றன. இக்காட்சி சூரியனைச் சுற்றி அமைவுறும் பரிவட்டமானது பல்வகைப்பட்ட நிறங்களைப் பூமியிடத்துப் பரவ விடுவது போன்றிருந்தது. (பரிவட்டத்தில் எழுவகை நிறங்களுண்டெனக்கூறுவது மரபு இவ்வெழுவகை நிறங்களைவிட வேறுபல நிறங்களும் அப்பரிவட்டத்தில் உண்டு. அவை கண்ணுக்குப் புலனாவதில்லை. அதனால் பல்வகைப்பட்ட நிறங்கள் எனப் பொருள் கூறப்பட்டது.)

---

* செய்யமாமணி = வெண்மை நிறங்கொண்ட வைரக்கல்.
செய்யமாமணி = நாகரத்தினக்கல். செம்மை நிறம் பொருந்திய கல்.

14. மேனிலாவெறிசங்கும்வெண்முத்தமும்
வானிலாவொடுதாரகைமானலா
லானவாவியுமம்புயராசியும்
பானுவின்கடல்பாய்கதிரொத்ததே:

மேல் நிலா எறி சங்கமும் வெண் முத்தமும்
வான் நிலாவொடு தாரகை மானலால்,
ஆன வாவியும் அம்புய ராசியும்
பானுவின் கடல் பாய்கதிர் ஒத்ததே.

பொருள் : சங்கில் இருந்துவரும் வெண்மை யொளியும் - முத்துக்களில் இருந்து வெளிவரும் ஒளியும்; வானிடத்துத்தோன்றும் நிறைநாண்மதியையும் - நட்சத்திரக் கூட்டங்களையும் போன்றிருந்தது. வயலிடத்தமைந்த நீர்த்தடத்தில் உள்ள தாமரைமலரின் ஒளி, காலைச் சென்கதிரோன் ஒளி கடலிடத்துப்பரவுவது போன்றிருந்தது.

15. தேடரும்மணிசெங்கனியென்னவந்
தாடிவானரமங்கையெடுத்தய
லோடிநோக்கிநெருப்பிதென்[8]றூடியுள்
வாடிநோந்துமணிக்கைதுடைக்குமால்-

தேட அரும் மணி செங்கனி என்ன வந்து,
ஆடி வானரமங்கை எடுத்து, அயல்
ஓடி நோக்கி, நெருப்பு இது என்று ஊடி, உள்
வாடி நாந்து மணிக்கை துடைக்குமால்.

பொருள் : தேடிப்பெறுதற்கரிய சிவந்த மணியினைக்கண்ட தேவர் உலகப் பெண்; அதனைச் செம்மைசான்ற இன்கனியென எண்ணி மகிழ்ச்சியினால் ஆடிச்சென்று எடுத்து அயல் சென்று நோக்கினாள். அதுகனி அன்று என உணருகின்றாள். இது நெருப்பின் துண்டமோ எனஎண்ணி உணர்வுப் பிணக்கம் அடைகின்றார்; அப்பிணக்க உணர்வு அவளிடத்தில் அச்சவுணர்வினைத் தோற்றுவிக்கின்றது. அதனால் மனம்வாடி நொந்து, தன் அழகிய கையினைத் துடைத்துக்கொள்கின்றாள். ஆல். ஈற்றசை.

பா. வே. 8 ஊதி

16. துடைத்தமுன்றிலைத்தூர்த்தெறிகுப்பையைக்
குடைத்தலைச்சுடர்க்கோழிகள்சீப்பமண்
ணடைத்தமாமணிகால்பட்[9]டிலங்கலா
லுடைத்த[10]பேடையுட்பெய்மணியொக்குமால்.

துடைத்த முன்றிலைத் தூர்த்து எறிகுப்பையைக்,
குடைத் தலைச் சுடர்க் கோழிகள் சீப்ப, மண்
அடைத்த மாமணி கால்பட்டு இலங்கலால்,
உடைத்த பேடை உட்பெய் மணி ஒக்குமால்.

பொருள் : முற்றத்தினைத் துப்புரவு செய்து துடைத்தெறிந்த குப்பைகள் கொண்ட மேட்டினைக் குடைபோன்று அமைவு பெற்ற தலைச் செண்டுகளையுடைய அழகிய கோழிகள், தம் கால்களினாற் கிளறுகின்றன. அதனால் அவற்றின் கால் விரல்களுக்கிடையே, மண்ணோடு - மண்ணில் உள்ள மணிக்கற்களும் இணைவு பெறுகின்றன. இந்நிகழ்வால் ஏற்பட்ட காட்சி பிளவுபட்ட இடுக்கில் மணி பதித்தது போன்றிருந்தது.

17. கும்பமால்கரிக்கோடுபெயர்க்குமண்
விம்பமாமணிவிட்டுவிளங்கலாற்
பம்புகாரிடையம்புலிப்பாதியி
னும்பரிற்குசனொப்பநவிற்றலாம்.

கும்ப மால்கரிக் கோடு பெயர்க்கு மண்,
விம்ப மாமணிவிட்டு விளங்கலால்,
பம்புகாரிடை அம்புலிப் பாதியின்,
உம்பரில் குசன் ஒப்ப நவிற்றலாம்.

பொருள் : கழுத்தின்மேல் அழகுபெறத்திரண்டு அமைவு பெற்ற ஏரியினையுடைய யானை, தன் நீண்ட தந்தத்தால் மண்ணைக் கிளறுவதனால் அவ்விடத்தில் உள்ள மண் மேல் கிளம்புகின்றது. அப்பள்ளத்தில் ஒளிமிக்க மணிக்கல் ஒளி விடுகின்றது. அப் பள்ளம்; வளைந்த கொம்பினால் தோண்டப்பட்டதால் அதன் வடிவம் அம்புலிப் பாதிபோல் காட்சி அளித்தது. அப்பாதி வடிவான பள்ளத்தில் தோன்றும் மணிக்கல், வானத்தில் நீர் கொண்ட முகில் நடுவிலே தோன்றும் பிறைச்சந்திரனின் வளைவின் உட்புறம் செவ்வாய்க்கோள் விளங்குவது போல் இருந்ததெனக் கூறலாம்;

பா. வே.: [9]அலங்கலால். [10]பேழையுட்

18. [11]விற்றமாமணிக்கென்கொல்விலையெனச்
சொற்றவர்க்கோர்விலையெதிர்சொல்கலா
ருற்றசெஞ்சுடர்நாடொருமோங்கலா
[12]லற்றையற்றையதிகமுரைப்பரால்.

விற்ற மாமணிக்கு என்கொல் விலையெனச்,
சொற்றவர்க்கு ஓர்விலை எதிர் சொல்கலார்,
உற்ற செஞ்சுடர் நாடொரும் ஓங்கலால்,
அற்றை அற்றை அதிகம் உரைப்பரால்.

பொருள்: விலைபோய உயர்ந்த மாணிக்கக் கல்லின்விலை என்ன எனக் கேட்பவர்க்கு, அதற்குரிய ஒரு விலையினைப் பதிலாகச் சொல்லார். ஏனெனில் செம்மைசான்ற ஒளிவீசும் மணிக் கற்களின் பெறுமானம் நாள்தோறும் உயர்ந்து செல்வதால் அன்றைக்கன்றே அவற்றின் பெறுமான விலையினைக் கூறுவர்.

19. பரவுபேட்டொடுபார்ப்புடையூர்க்குரீஇ
யிரவுகூட்டிடைத்தீபமிடும்படி
விரவுமின்மினியென்று[13]மின்கான்மணி
வரவுகொண்டுதன்வாய்கொடெடுக்குமால்

பரவு பேட்டொடு +பார்ப்புடை ஊர்க்குரீஇ,
இரவு கூட்டிடைத் தீபம் இடும்படி,
விரவு மின்மினி யென்றும் மின்காண்மணி,
வரவு கொண்டு தன்வாய்கொடு எடுக்குமால்

பொருள்: பேடுடன் இணைந்து தன்குஞ்சோடு வாழும் ஊர்க் குருவி; இரவு நேரத்தில் தாம்வாழும் கூட்டிற்கு விளக்கு ஏற்றுவ தற்கு, என்றும் ஒளிபரப்பிக் கொண்டேயிருக்கும் மணிக் கற்களைத் தன்வாயினால் எடுத்துக்கொண்டு வந்து கூட்டின் உட்பக்கத்தே அழகு பொருந்த வைக்கும்.

மருதநிலவளம்

20. [14]எடுத்துநீள்வரம்பேத்துசெய்யெங்கணு
மடுத்தநென்முளையாமெனவன்னமும்
[15]விடுத்துவால்வளைவெண்டரளங்களை
மடுத்துவாயுறக்கவ்வுமருதமே

+ பார்ப்பு = குஞ்சு.

பா.வே. 11 விற்கும் 12 அற்றைக்கற்றை 13 மென்கால்.
14 எடுத்த, 15 விடுத்த.

எடுத்து நீள்வரம்பு ஏத்து செய் எங்கணும்,
மடுத்த நென்முளையாமென அன்னமும்,
விடுத்து வால்வளை வெண் தரளங்களை,
மடுத்து வாயுறக் கவ்வும் மருதமே.

பொருள்: நன்செய் நிலமாகிய நெல்வயலிடத்து, நீண்ட வரம்பு களை உயரமாக எடுத்து அமைவுறச் செய்ததால் நீர்வளம் சிறந் திருந்தது. அந்நீரிடத்தில் சங்குகள் முத்துக்களை ஈன்றுள்ளன. அவற்றின் ஒளி பசுமை நிறம் கொண்ட நெல்முளைகளின் நிறத்தைப் பெற்று வெளிவருகின்றன. அதனால் முத்துக்கள் நெல்முளைகள் போல் காட்சி அளிக்கின்றன. இதனைக் கண்ணுற்ற அன்னம் அவை நெல்முளைகளென எண்ணித் தம் அலகால் கவ்வும். இத்தகைய இயற்கை வளம் சிறந்து விளங்குவது வயலும்-வயல்சார்ந்த நிலமுங் கொண்ட மருதம்.

குறிஞ்சிநிலவளம்

21. மேகநீரருவிப்[16]பணைவிம்முற
நாகமாமணிநல்விளக்கேந்தவந்
தோகையாடச்சுரும்பிசைபாடுவ
[17]தாகவோங்கலலங்குறிஞ்சியே

மேக நீர் அருவிப் பணைவிம்முற,
நாக மாமணி நல்விளக்கு ஏந்த வந்து,
தோகை ஆடச் சுரும்பு இசை பாடுவது,
ஆக ஓங்கல் அலங் குறிஞ்சியே,

பொருள்: முகில்பொழியும் நீர்; மலை அருவியாகி நீர்த்தடங் களைச் செழுமையுறச் செய்கின்றது. நாகமானது தன்நாசரத்தினத் தினை நல்ல விளக்காக ஏந்தி நிற்கின்றது. அவ்வொளியில் மயில் தோகைவிரித்து ஆடுகின்றது. இவ்வாட்டத்திற்கு வண்டுகள் இசை பாடுகின்றன. நாடு ஒருமைப்பாடு கொண்டிருப்பதனால் நாகமும் மயிலும் பகைமறந்து இன்புறுகின்றன. இவ்வியல்பினாற் புகழும் செழுமையும் அழகும் கொண்டு பெருமைபெற அமைந்துள்ளது: மலையும் மலைசார்ந்த நிலமுமாகிய குறிஞ்சி.

பா.வே. 16 புனல், 17 ஏகவோங்கலிலங்கு.

முல்லைநிலவளம்

22. குறித்தவேய்ங்குழலோதையுங்கோற்கொடு
[18]மறித்தகாலின்மணிக்குரற்சும்மையும்
வெறித்தவேற்றுவியன்பறைக்கெளவையு
முறித்தயிர்க்கடையோசையுமுல்லையே

குறித்த வேய்ங்குழல் ஓதையும், கோற்கொடு
மறித்த காலின் மணிக்குரற் சும்மையும்,
வெறித்த வேற்று வியன்பறைக் கெளவையும்,
குறித்த தயிர்க்கடை ஓசையும் முல்லையே.

பொருள்: முல்லைநில மக்களான இடையர்கள் முல்லைப் பண்ணினை மூங்கில் கொண்டு தயாரிக்கப்பட்ட குழலின்மூலம் இசைக்கின்றனர். அவ்வின்னிசை ஓசைக்கேற்ப அவர்கள் வீரக்கழல் அணிந்த கால்களை மறித்து ஆடுகின்றனர். அதனால் எழும் கழல்களின் ஒலியும்-அடிபெயர்த்தாடும் தட்டின் ஒலியும் வெறியாட்டுக்கு முழக்கும் பல்வகைப்பட்ட பறைகளின் ஒலியும், இடையமகளிரான ஆச்சியர் மத்துக்கொண்டு தயிரினைக் கடையும் ஒலியும் எங்கும் பரகிவுன்றன. இவ்வினிய ஓசைகள் தம்முள் ஒன்றிணைந்து குழலின் ஓசையுடன்-கால்மறித்தாடும் கழலின் ஓசையுடனும் கலந்து முல்லை நிலமெங்கும் இனிமை பரப்புகின்றது. காடும் காடுசார்ந்த நிலமும் முல்லையெனப்படும்.

நெய்தல்நிலவளம்

23. ஏறுசங்கமொலிப்பவிலைத்தலைச்
சோறுதாழைசொரிதரப் [19]புன்னைகண்
மாறில்காவணஞ்செய்யமணஞ்செய்வார்
வீறுகொண்டதுவெண்டிரைநெய்தலே.

ஏறு சங்கம் ஒலிப்ப, விலைத்தலைச்
சோறு தாழை சொரிதரப், புன்னை கண்
மாறில் காவணம் செய்ய, மணம் செய்வார்,
வீறுகொண்டது வெண்திரை நெய்தலே.

பொருள்: கடற்கரையில் கடல்படு திரவியங்களை விலைகூறும் வணிகர், சங்கொலி செய்து பண்டங்களின் இயல்பினைப் பகிர்ந்து ஒலி எழுப்புகின்றனர். தாழைமரங்களின் மடல்களில் முத்துக்கள் வெடித்ததனால் அதன் உள்ளிருக்கும் சோறு சிதறிச்சொரிகின்றது. புன்னைமரங்கள் தம்மலர்க் கண்களை விரித்து மலர்தூவி வேற்றுமைக்கிடனற்ற நல்வாழ்த்தினைத் தெரிவிக்கின்றன. இத்தகைய நலன்கள் சிறக்க நெய்தல் நிலமக்களான மீனவர்களும், மீனவப் பெண்களும் மனம் மகிழ்ந்து மணம் செய்வர். அதனால் இயற்கை அறமும்-பொருளும்-இன்பமும் இணைவு பெற்றிருக்கும் மேட்டிமை கொண்டது; வெண்டிரை வீசும் கடலும் கடல்சூழ்ந்த நெய்தல் நிலம்.

ப.வே. 18 மாறித்தகாலி, 19 புன்னைகள்.

24. நெய்தலீறுகுறிஞ்சிநிலந்தலை
செய்தநானிலமுந்திசைநான்கினு
மெய்தியிந்தவிலங்கையிலங்கலா
லுய்யுமெவ்வளமும்பிறந்துள்ளதே.

நெய்தல் ஈறு, குறிஞ்சி நிலம் தலை,
செய்த நால் நிலமும் திசை நான்கினும்
எய்தி, இந்த இலங்கை இலங்கலால்,
உய்யும் எவ்வளமும் பிறந்து உள்ளதே.

பொருள் : மலையும் மலைசார்ந்து வளஞ்சிறந்து விளங்கும் குறிஞ்சி நிலத்தைத் தன் தலையாகவும், கடலும் கடல்சார்ந்து வளங்கொழிக்கும் நெய்தல் நிலத்தைத் தன் அடிப்பாகமாகவும், மருத நிலத்தை இதயமாகவும், முல்லை நிலத்தை மற்றைய உறுப்பு களாகவும் கொண்டு நாட்டின் நான்கு திக்குகளிலும் பரவிப்பல் வளங்கட்கும் இடனாக இலங்கை அமைந்துள்ளதால், அனைத்து யிர்களும் நல்வாழ்வு பெறும் வளத்தினைப் பெற்றுள்ளது.

[20]வேறு

25. பிறப்பெலாமணியினீட்டம்[20]பெருக்கலாமணீயினீட்ட
மிறப்பெலாநடையின்பேரே[21]யிலையெனுநடையின்பேரே
சிறப்பெலாமுழுமெய்ச்சங்கந்தெருவெலாமுழுமெய்ச்சங்க
[22]மறப்பெலாம்[23]வரையிலாரம்வரையெலாய்வரைவிலாரம்

பிறப்பு எல்லாம் மணியின் ஈட்டம்,
  பெருக்கு எலாம் மணியின் யீட்டம்,
இறப்பு எல்லாம் நடையின் பேறே.
  இலை யெனும் நடையின் பேரே,
சிறப்பு எலாம் முழுமெய்ச் சங்கம்
  தெருவெலாம் முழுமெய் சங்கம்,
மறப்பு எலாம் வரையில் *ஆரம்
  வரையெலாம் வரைவில் 0ஆரம்,

---

* ஆரம் முத்து 0 சந்தனமரம்
பா. வே. [20]அனுசீர் ஆசிரிய விருத்தம்.
[21]இலையெனிலடையின்பேரே.
[22]வறப்பெறலாம்
[23]வரைவிலாரம்.

பொருள் : நாட்டில் முகிழ்வன அனைத்தும் செழுமை கொண்டு அழகு செய்கின்றன. மலை அருவிப் பெருக்கிலும், கடல் அலைப் பெருக்கிலும், மணியும் முத்தும் பொலிகின்றன. இறந்தன எனக் கூறுவது; நடந்து நிறைவுபட்ட செயல்களையும்- இல்லையென்ற; சொற்களையுமே. இந்நாட்டகத்து அனைத்துச் சிறப்புகளும் முழுமை பெற்று நிறைந்துள்ளன. தெருக்கள் தோறும் முழுதுணர்ந்த சான்றோர் ஒன்றுகூடி உக்பொருள் ஆய்வு செய்கின்றனர். மக்கள் மறந்தவை எல்லைக்கடங்காப் பொருட்குவைகளையே.

26. °ஆரணமுழக்கமெங்குமலைகடன்முழக்கமெங்கும்
வாரணஞ்சொரியுந்தானமறையவர்க்களிப்பர்தானம்
பூரணமாகுஞ்ஞானம்பொருந்திடாததுவஞ்ஞானம்
நாரணனனையபூவைநந்தனமெங்கும்பூவை.

ஆரணம் முழக்கம் எங்கும்,
அலைகடல் முழக்கம் எங்கும்,
வாரணம் சொரியும் தானம்
மறையவர்க்கு அளிப்பர் தானம்,
பூரணமாகும் ஞானம் பொருந்திடா
அது அஞ்ஞானம்,
நாரணன் அனைய பூவை
நந்தனம் எங்கும் பூவை.

பொருள் : நாட்டின் மூலை முடுக்கெல்லாம் வேதம் ஓதும் ஒலிமுழங்கும். அவ்வொலி போல் கடலும் முழங்கும், புரவலர்கள்; வேதம் வல்ல அந்தணர்களுக்கு யானைகளை அறக் கொடையாகக் கொடுப்பர். அனைவரிடமும் பேரறிவு நிறைந்துள்ளது. அங்கு இடம்பெறாது இருப்பதும் ஒன்றுண்டு. அது அறிவின்மை, சோலைகளிடத்துத் திருமாலின் நிறத்தையொத்த நாகணவாய்ப்பறவைகள் நிறைந்துள்ளன. அச்சோலைகள் அனைத்தும் தேன் சொரியும் அன்றலர்ந்தமலர்கள் நிறைந்துள்ளன.

27. °பூவெலாந்துய்யவாசம்புனமெலாம்முனிவர்வாச
மாவெலாங்குயிலினோசைமலையெலாங்குயிலினோசை
காவெலாமுயர்ந்ததாழைகரையெலாங்கமழுந்தாழை
பாவெலாமரனார்தன்சீர்பகர்வரிதன்னோர்தன்சீர்

பூ எலாம் துய்ய வாசம்,
புனமெலாம் முனிவர் வாசம்,
மா எலாம் குயிலின் ஓசை,
மலையெலாம் குயிலின் ஓசை,
கா எலாம் உயர்ந்த *தாழை,
கரையெலாம் கமழுந் தாழை,
பா எலாம் அரனார் தன்சீர்,
பகர்வரிது அன்னோர் தன்சீர்.

பொருள்: மலர்கள் அனைத்தும் இனிமைதரும் நறுமணம் உடையன, காடுகள் அனைத்திலும் முனிவர்களே வாழ்கின்றனர். மாஞ் சோலைகளில் குயில்களின் இனிய ஓசைகள் கேட்கின்றன. அவற்றினைக்கேட்ட மலைச்சோலைகளில் உள்ள குயில்களும் இன்னோசையெழுப்புகின்றன. கடற்கரைச் சோலைகளில் உயர்ந்த தென்னை மரங்கள் அமைந்துள்ளன. கடற்கரைகளில் நறுமணம் மிக்க மலர்களைப் பூக்கும் தாழை மரங்கள் நிறைந்துள்ளன. அதனால் நெய்தல் நிலம் புலால் நாற்றம் நீங்கி மலர் நாற்றத்தினைப் பெற்றுள்ளது. இசை பாடுபவர்கள் இறைவனின் புகழையே பாடுவர். அவ்வண்ணம் பாடும் அடியவர்கள் பெருமையினைச் சொற்கள் கொண்டு விளக்குதல் அரிது. *தாழை=தென்னைக்கும்-தாழைக்கும் பொதுப் பெயர்.

28. °அன்னைபோலளிப்பாருண்டியனைவருஞ்சுத்தவுண்டி
பின்னையென்னார்களையம்பெண்[24]கடன்னிடையேயைய
மென்னையாளரன்விழாவேயெங்கனும்பெருவிழாவே
தன்னைநேருழவர்பண்ணைதண்கலையுணர்வோர்பண்ணை.

அன்னைபோல் அளிப்பார் உண்டி,
அனைவரும் சுத்த உண்டி,
பின்னை என்னார்கள் ஐயம்,
பெண்கடன் இடையே ஐயம்,
*என்னையாள் அரன் விழாவே
எங்கணும் பெருவிழாவே,
தன்னைநேர் உழவர் பண்ணை,
தண்கலை உணர்வோர் பண்ணை.

பொருள்: நாட்டில் வாழும் மக்கள் பசித்திருப்போர்க்குத் தாயன்புடன் உணவளிப்பர். அனைத்து மக்களும் சைவ உணவேயுண்பர். எதனையும் பின்பு செய்வோம் எனக்கூறும் வழக்கம் மக்களிடமில்லை. அத்தகைய வழக்கு இடம்பெறுதல் ஐயமே (சந்தேகம்) பெண்கள் தம் கடமைகளில் தவறுவதில்லை. அவர்களிடம் ஒழுக்கக்கேடு இடம்பெறுதல் இல்லை. அப்படி எண்ணுபவர்கள் இருப்பதே ஐயம். நாட்டில்; என்னை ஆளும் இறைவன் விழாவே நிகழ்கின்றது. அது பெருவிழாவாகக் கொண்டாடப்படுகின்றது. தன்னைத்தான் உணர்ந்த சான்றோர்களின் இருக்கைகளே

பா.வே. 24 கடமிடையே.

எங்கும் நிறைந்துள்ளன. அல்லாத இடங்களில் வளம்மிக்க இன்கலை உணர்ந்த புலவர்கள் இருக்கைகள் நிறைந்துள்ளன.

*மூன்றாம் அடியில் உள்ள என்னை என்பதனை வினாவாகக் கொண்டு பொருள் காணின்; அன்னைபோல் உணவு அளிப்போரும் சைவஉணவு உட்கொள்வோரும் நாட்டகத்து நிறைந்துள்ளனர். பின்செய்வோம் எனக் கூறுவோரும், பெண்களிடையே ஒழுக்கக் கேடுடையவர்களும் நாட்டகத்தில் இல்லாதிருக்கின்றனர். இவற்றிற்கு அடிப்படையாக விருப்பது அண்டமனைத்தையும் நெறிப்படுத்தி ஆள்கின்ற இறைவனின் கோயிலில் நடைபெறும் பெருவிழாவே. அன்றியும் மக்களின் வாழ்வை நெறிப்படுத்தத் தம்மை உணர்ந்த சான்றோரும், இன்கலை உணர்ந்த புலவர்களும் நாட்டகத்தில் நிறைந்திருப்பதுமாகும்.

29. °பண்ணுவர்மறையோர்யாகம்பாடுநர்க்களிப்பர்தியாகங்
கண்ணுளர்புரிவராடல்காவலர்புரிவராடல்
மண்ணுளர்புகழவுண்டுவருவிருந்தோம்பலுண்டு
[25]எண்ணிநர்விரைவிலாரை[26]யேத்துநர்விரைவிலாரை

பண்ணுவர் மறையோர் யாகம்,
பாடுநர்க் களிப்பர் தியாகம்,
கண்ணுளர் புரிவர் ஆடல்,
காவலர் புரிவர் ஆடல்,
மண்ணுளர் புகழ வுண்டு
வருவிருந்து ஓம்பல் உண்டு,
எண்ணுநர் °விரைவிலாரை,
ஏத்துநர் °விரைவிலாரை.

பொருள்: அந்தணர்கள் மறையோதி யாகம் செய்வர். இசை வல்லோர் நாதப் பிரமத்தைத் தம் இசையிடத்துக்கண்டு இன்புறுவர். தெளிந்த பார்வையுடைய சான்றோர் இறைவன் திருநடனத்தைக் கண்டு தாமும் ஆடி இன்புறுவர். நாட்டுக் காவலில் ஈடுபட்டோர்; எங்கும் அமைதியும் இன்பமும் நிறைந்துள்ளதால், தம்பணிசெய் யாது அவ்வேளையில் ஆடிமகிழ்வர். இதனைக்கண்டு மண்ணிடத்து வாழும் மக்களும் புகழ்ந்து வாழ்த்துவர். இந்நாட்டகத்து மக்கள், தம்மகத்து வருவோர்க்கு இல்லையென்று கூறாது விருந்திட்டு மகிழ்வர். செயல்திறன் அற்றவர்களை எண்ணி அவர் நல்வாழ்வு பெறத் தக்காங்கு வழிசமைத்துக் கொடுப்பர்.

°26ம் பாட்டில் இருந்து 29ம் பாட்டுவரையுள்ள நான்கு பாடல்களும் பல ஏட்டுப் பிரதிகளில் இல்லையென்பர். பு. பை. வை. தேசிகர்.
°செயற்பாடு குறைந்தவர். °செயலற்றவர்.
பா.வே. 25 எண்ணுனர். 26 ஏத்துனர்.

30. வரையெலாமாரமாரம்வனமெலாநன்கார்நன்கார்
நிரையெலாஞ்சாலிசாலிநிலையெலாங்கன்னல்கன்னல்
தரையெலாநீலநீலந்தடமெலாநாறுநாறுங்
கரையெலாமன்னமன்னங்கடலெலாமீழமீழம்

[1]வரையெலாம் [2]ஆரம் ஆரம்,
வனமெலாம் [3]நன்கார் நன்கார்,
நிரையெலாம் [4]சாலி சாலி,
நிலையெலாம் [5]கன்னல் கன்னல்,
தரையெலாம் [6]நீலம் நீலம்,
தடமெலாம் நாறும் நாறும்,
கரையெலாம் [7]அன்னம் அன்னம்,
கடலெலாம் [8]ஈழம் ஈழம்,

பொருள்: நாட்டில் அமைந்துள்ள மலைகளிடத்தில் உள்ள மூங்கில்களும் கரும்புகளும் முற்றிவிளைந்து முத்துக்களைச் சிந்திப் பரப்புகின்றன. மலைகளில் சந்தனமரங்கள் ஓங்கி வளர்ந்துள்ளன. அச்சந்தனச் சோலைகளில் சூல்கொண்ட முகில்கள் படிந்து நீர்வளத்தினைச் சுரக்கின்றன. அதனால் காட்டகத்தும் கார்இன நெற்பயிர்கள் செழுமைபெற்று வளர்கின்றன. செம்மைப்படுத்தப்பட்ட வயல்நிலங்களில் எல்லாம் சாலிஇன நெற்பயிர்கள் செழுமைபெற்று வளமூட்டுகின்றன. வயல்வரம்புகளில் கரும்புகள் செழுமை பெற்றுள்ளன. நீர்த்தடங்களில் உள்ள உயிரினங்கள் இன்னிசை எழுப்புகின்றன. நிலம் எங்கும் மரகத-நீலநிற மணிக்கற்கள் நிறைந்துள்ளன. நீர்த்தடங்களில் நீலோர்ப்பல மலர்கள் விரிந்து மணம் பரப்புகின்றன. நீர்த்தடங்களில் அன்னங்கள் நீந்தி விளையாடுகின்றன. கரைகளில் கவரிமான்கள் மகிழ்ச்சி கொண்டு துள்ளி விளையாடுகின்றன. ஈழத்தின் கடற்கரையில் பொன் கொழிக்கின்றது-கடல்படு திரவியங்கள் கரைவந்து சேர்கின்றன. இவை அனைத்தும் நிரைபட ஒழுங்கமைந்திருப்பதற்குச் சாலி என்று கூறப்படும் அருந்ததிபோன்ற கற்பின் மகளிர் நாட்டகத்தில் நிறைந்திருப்பதே ஏதுவாகும்.

---

1 வரை=மலை-எல்லை, 2 ஆரம்=சந்தனமரம்-முத்து, 3 நன்கார்=சூல்கொண்டம் முகில்-நெல், 4 சாலி=நெல்-அருந்ததி, 5 கன்னல்=கரும்பு-யாழ்நரம்பில் எழும் இனியஇசை. 6 நீலம்=நீலோற்பல மலர்-நீலமணிக்கற்கள்-7 அன்னம்=அன்னப் பறவை=கவரிமான். 8 ஈழம்=இலங்கை-ஈழநாடு-பொன்.

31. ஈழமும்பளிங்கு[27]நேருமெறிநவமணியுமெல்லாந்
தாழமண்மடந்தைநல்குந்தரளமுஞ்சங்குந்துப்பு
மாழியென்றொருநீர்த்தெய்வமளித்திடுவரைமீதுள்ள
வேழமென்றனேகமேகம்[28]வெளிறுமுத்துகுக்குமம்மா.

ஈழமும் பளிங்குநேரும் எறி
நவ மணியும் எல்லாம்,
தாழ மண் மடந்தை நல்கும்
தரளமும் சங்கும் துப்பும்,
ஆழிஎன்று ஒரு நீர்த் தெய்வம்
அளித்திடு, வரைமீது உள்ள
வேழம் என்ற அனேகமேகம்
வெளிறும் முத்து உகுக்கும் அம்மா.

பொருள்: நீர்வளத்தைத் தரும் கடல்தெய்வம்; பொன்னையும் பளிங்கு போன்ற ஒளிமிக்க ஒன்பதுவகை மணிக்கற்களையும்–முத்துக் களையும்—சங்குகளையும், மண்மகள் –தாங்கமுடியாது சுமக்கும் வண்ணம் நற்கொடையாக அள்ளிக் கொட்டும் (துப்பும்), மலைமீது படிந்துள்ள சூல்கொண்ட யானைகள் போன்ற முகில்கள், கடலி டத்து மொண்டெடுத்த வெண்முத்துக்களை, மண்மகள்-தழும்பும்படி கொட்டும். அம்மா வியப்பிடைவந்த அசை.

32. அம்பொன்[29]மெய்யிலங்கைநீளத்தளவுநானூற்றின்காதம்
பம்புநாட்டகலமத்திற்பாதியினாற்பதேற
வும்பராலயங்கள்கோடியொன்பதுண்ட[30]மரர்க்குள்ள
செம்பொனாலயங்கள்மூன்றுகோடியிற்றிகழுமாங்கே.

அம்பொன் மெய்யிலங்கை நீளத்து
அளவு நானூற்றின் காதம்,
பம்புநாட்டு அகலம் அத்திற்பாதியின்
நாற் பத்து ஏற,
உம்பர் ஆலயங்கள் கோடி,
ஒன்பதுண்டு அமர்க்கு உள்ள,
செம்பொன் ஆலயங்கள் மூன்று
கோடியில் திகழும் ஆங்கே.

பா.வே. 27 நீரு, 28 விளங்குமுத்து, 29 மேயிலங்கை, 30 அசுரக்குள்ள.

பொருள் : அழகிய இவ்விலங்கையின் நீளம் நானூறு 0காதமாகும் அகலம் அதன் பாதி அளவும் நாற்பதுங்கொண்ட இருநூற்று நாற்பது காதமாகும். இங்கு தெய்வங்கட்குரிய ஆலயங்கள் எண்ணிறந்தன (கோடி) அவற்றுள் தேவ கோட்டங்கள் ஒன்பது, அழகுமிக்க செம்பொன் மாளிகைகள்; தெய்வங்கட்குரிய ஆலயங்களிலும் மும்மடங்கு எண்ணிக்கை கொண்டனவாகும்.

33. திகழ்ந்த முத்திலகநிற்குஞ்செவ்விமாக்கோட்டினாலு
நிகழ்ந்தமாமேருக்குன்றநிகரெனநெடிதுதோற்று
மகிழ்ந்திடுமரகதத்தைமாணிக்கக்குவையின்சோதி
யுகழ்ந்ததனாலுமீசனுமைதனைமணத்தலொக்கும்

திகழ்ந்த முத்திலக நிற்கும்
செவ்வி மாக் கோட்டினாலும்,
நிகழ்ந்த மாமேருக் குன்ற
நிகரென நெடிது தோற்று,
மகிழ்ந்திடு மரகதத்தை மாணிக்கக்
குவையின் சோதி,
யுகழ்ந்த அதனாலும் ஈசன்
உமைதனை மணக்கல் ஒக்கும்.

பொருள் : முத்திநெறியை அடைந்த சான்றோரின் நிலைப்பாட்டை வெளிப்படுத்தி நிற்கும் தென்கயிலையான திரிகோணமலை; விநாயகன் தன்கொம்பை எழுத்தாணியாகக் கொண்டு எழுதிய மேருமலை போன்று பெருமை பொலியத் தோன்றி நிற்கும். அத்திருமலையிடத்தில் உள்ள மரகதமணிக் கற்களின் ஒளியும் மாணிக்கக் கற்களின் ஒளியும் ஒன்றுகலந்து ஒளிவீசுவது இறைவன் உமையைத் திருமணம் செய்தது போன்றிருந்தது. செம்மணி-சிவம்; பச்சைமணி=சக்தி.

34. ஒக்கவானுயர்ந்துநம்பனுறுத்துதாணிறுத்துங்குன்றந்
தொக்கவெள்ளருவிநான்குசூழ்திசைதோறும்வீழ்த
லக்கருவரையிற்பாதத்தமரர்பூசித்ததீர்த்தம்
புக்கதீவினைபோமாறுபொழிவதாம்புடையுளோர்க்கே

---

0 ஒரு காதம் நான்கு கூப்பிடுதூரம் கொண்டது.
ஒரு கூப்பிடுதூரம் நேர்பார்வையில் கண்ணுக்கெட்டியதூரம்.

ஒக்க வானுயர்ந்து நம்பனுறுத்து
 தான் நிறுத்துங் குன்றம்,
தொக்க வெள்ளருவி நான்கு
 சூழ்திசை தோறும் வீழ்தல்,
அக் கருவரையில் பாதத்து
 அமரர் பூசித்த தீர்த்தம்,
புக்க தீவினை போமாறு
 பொழிவதாம் புடை யுளோர்க்கே.

பொருள் : கயிலையைத் தன் அடியவனான இராவணன் வான் நோக்கி உயர்த்திய பொழுது, அவனை ஒறுத்து அதன் நிலை பிற ழாமல் திறுத்தியவன் இறைவன். அவ்விறைவன் எழுந்தருளியிருக்கும் கயிலையின் புனிதநீர் அருவி; நான்கு திக்குகளிலும் வீழ-அவ் வருவிவீழும் இடத்தில் தேவர்கள் நீராடி இறைவனின் திருவடியினைத் தொழுதனர். அதனால் வினை நீங்கப்பெற்றனர் அத்தகைய புனித நீர் திருமலையைச் சூழ்ந்து பரவுவதனால் அதன் அயலில் வாழ்வோரும் வினை நீக்கம் பெறுகின்றனர்.

35. புடைத்துமால்கரிக்கைவீசுங்[31]கீழ்த்திசைச்சிகரமுற்றுந்
துடைத்திடுந்துகிலேபோலவெண்முகில்சூழ்ந்துலாவு
மடித்தபொற்குவட்டிற்செல்காலடிக்கடியருக்கன்[32]றேரிற்
படைத்திடுபரிதங்காலிற்படுமெனமறுகாற்பாயும்.

புடைத்து மால்கரி கைவீசும்
 கீழ்த்திரை சிகர முற்றும்
துடைத்திடும் துகிலே போல,
 வெண்முகில் சூழ்ந்து உலாவும்,
மடித்த பொற் குவட்டில் செல்
 காலடிக் கடியருக்கன் தேரில்,
படைத்திடு பரிதங் காலிற்
 படுமென மறுகாற் பாயும்.

பொருள் : கீழ்த்திசையில் அமைந்த கடல் நீரை அத்திசைக்கும் காவலாக அமைந்த பலமிகு திக்குயானை தன் துதிக்கையால் அள்ளிவீசுவதானால் உதயமால் வரையின் முடி (குவடு) நீரினால் தோய்கின்றது. அதனைத் துடைத்துத் துப்பரவு செய்வது போன்று அம்மலை முகட்டில் வெண்மை கொண்ட துகில் போல் வெண் முகில் சூழ்ந்துலாவும். பலகுவடுகளைக் கொண்ட அழகிய அம் முகடுகளின் மேலாக வேகமுடன் செல்லும் கதிரவனின் தேரிற் பூட்டிய குதிரைகள், மலைக்குவட்டில் உள்ள வெண்முகில்கள் தம் கால்களிற் பட்டுத் தடுக்குமென எண்ணி அவற்றைக் கடந்து தாவிப்பாயும்.

பா. வே. [31]பூழ்த்திசை, [32]தேர்க்கால்

36. மறுகெலாமரம்பைவெள்ளைவாரணம்புலவர்மல்கப்
பெறுதலாற்கற்பகத்திற்பிறங்கலானிறங்கொளீழ
முறுதலால்வாசவன்[34]றாருலவலாலமுதின்சாலை
துறுதலாலிலங்கைநாடுசுரேந்திரநாடதொக்கும்

0மறுகெலாம் அரம்பை, வெள்ளை
வாரணம் புலவர் மல்கப்
பெறுதலால், கற்பகத்தில் பிறங்கலால்
நிறங் கொள் ஈழம்
உறுதலால், வாசவன் தார்
உலவலால் அமுதின் சாலை.
துறுதலால், இலங்கை நாடு
சுரேந்திர நாட தொக்கும்.

பொருள் : நாட்டின் கான்கரை புறம் போக்கெல்லாம் வாழை யினங்கள் கனிதருகின்றன. புரவலர்கள் புலவர்களுக்கு வெள்ளை யானைகளைப் பரிசளிக்கின்றனர். அதனால் புலவர்கள் கற்பகத்தை நாடாது ஈழநாட்டினை நோக்கி வருகின்றனர். இத்தகைய பெருமை கொண்ட ஈழத்தில் இந்திரன் மலர்மாலை யணிந்து உலவுகின் றான். அவன் வருகையால் அமுதத் தேன் எங்கும் பரந்து இனிமை யூட்டுகின்றது. இத்தகைய சிறப்புகள் கொண்ட ஈழம் தேவர்கோன் நாட்டைப் போல் சிறப்புற்று விளங்குகின்றது.

37. நாடருஞ்சிகரத்தும்பர்நவமணிப்புதியசோதிப்
பாடலம்விண்ணும்மண்ணும்படர்ந்துகீழ்ப்பளிங்குமுன்றி
லூடெழுநிழல்போயப்பாலுரகமாமணியும்வெள்க
நீடரும்பாதலத்தினெறியுறப்புகுதல்போலும்.

நாடருஞ் சிகரத்து உம்பர்,
நவமணிப் புதிய சோதிப்
பாடலம் விண்ணும் மண்ணும்
படர்ந்து கீழ்ப்பளிங்கு முன்றில்,
ஊடெழு நிழல்போய் அப்பால்
உரகமாமணியும் வெள்க,
நீடரும் பாதலத்தில் எறியுறப்
புகுதல் போலும்.

பா. வே. [33]மேலுலாவலால் - மேருலவலால் [34]உரகர்
0மறுகு= கான்கரை - புறம்போக்கு

பொருள் : சென்றடைதற்கரிய மலைமுகட்டின்மேல் உள்ள ஒன்பது வகையான மணிக்கற்களின் குவியல்களில் இருந்துவரும் ஒளிக்கதிர்கள் விண்ணிலும் மண்ணிலும் பரந்தது. மண்ணிற்பரந்த ஒளி பளிங்கில் பட்டு மீண்டும் மறுதலித்து ஒளிபரப்புவது; விண்ணுக்கும் மண்ணுக்கும் அப்பாலுஞ் சென்று ஆதிசேடனிடத்தில் உள்ள நாகமணியும் நாணமடையும்படி செல்லுதற்கரிய பாதலத்திற்சென்று புகுவது போலிருந்தது.

38. புகுந்தசீரிலங்கைநாடும்புலவர்பொன்னாடுந்தூக்கிப்
பகுந்தபோதந்தநாட்டின்படியணுக்குறைந்தபின்னு
மிகுந்தமாமணியாற்பொன்னான்மேன்மையான் மருந்தாலொத்த
திகழ்ந்தவானாடென்றாலுமிலங்கைக்குத்தோற்றதம்மா

புகுந்த சீர்இலங்கை நாடும் *புலவர்
பொன் நாடுந் தூக்கிப்
பகுந்தபோது, அந்த நாட்டின்படி
அணுக் குறைந்த பின்னும்,
மிகுந்த மாமணியால் பொன்னால்
மேன்மையால் மருந்தால் ஒத்த
திகழ்ந்த வான் நாடென்றாலும்
இலங்கைக்குத் தோற்றது °அம்மா.

பொருள் : ஈழநாட்டிற்கு வந்த புலவர்கள் பெருமைமிகு இலங்கையையும் - தேவர்கள் நாட்டையும் சீர்தூக்கிப் பகுத்து ஆராய்ந்த போது இலங்கை செழுமையிற் சிறிது குறைந்தபோதிலும், மிகுந்திருந்த – அளவிடமுடியாத தவமணிகளாலும் - பொன்னாலும் புகழாலும் உயர்வுற்றிருந்ததனைக் கண்டனர். தேவர் நாட்டில் சாவா மருந்தாய் அமிழ்தம் இருந்த போதிலும், ஈழ நாட்டின் புகழுக்கு அத்தேவர் நாடு ஈடு கொடுக்க இயலாது தோற்றுவிட்டது என வியந்தனர்.

---

* புலவர் = அறிவால் ஐம்புலன்களையும் வென்ற சான்றோர்.
புலவர் = புலமை மிக்க கல்வியாளர்
புலவர் = தேவர்

° அம்மா - வியப்புப் பொருளில் வந்த அசைச் சொல்

39. தோற்றுமிவ்விலங்கை நாட்டின்றொல்வளஞ்சிறிதிங்கேனுஞ்
சாற்றினனிசைக்குமிந்தத்தலத்திலுத்தரபாலாக
[35]வாற்றணிவேணியண்ணலருளுடனமருகின்ற
[36]வூற்றமில்கயிலைத்தோற்றமொருசிறிதுரைக்கலுற்றாம்.

தோற்றும் இவ்விலங்கை நாட்டின்
தொல்வளம் சிறிது இங்கேனும்
சான்றினன், இசைக்கும் இந்தத்
தலத்தில் உத்தர பாலாக
ஆற்றணி வேணியன் அண்ணல்
அருளுடன் அமருகின்ற
ஊற்றமில் கயிலைத் தோற்றம்,
ஒரு சிறிது உரைகல் உற்றாம்.

பொருள் : இப்புவியிடத்து தோற்றமுற்று வளஞ்சிறந்து விளங்குவது இலங்கை நாடு. இதன் தொல்பழம் பெருமையினையும் செழுமையினையும் சிறிது கூறினேன். இசைவு பெற்ற புகழ் கொண்ட இந்நாட்டின் வடபக்கலில் கங்கையினைச் சடையில்தரித்த உமை பங்கன் - என் தலைவன் எழுந்தருளியிருக்கின்ற - பெருமைமிக்க கயிலை மலையின் தோற்றத்தினை ஓரளவு கூற முயல்கின்றேன்.

ஈழமண்டலச் சருக்கம் முற்றிற்று

திருவிருத்தம் 39

பா. வே. [35]வேற்றினானிருக்கம் வண்ண மொரு வரை யெய்தல் செய்த [36]வூற்றமுற் புராண சொற்றவுரை தெரித்துரைப்பணிப்பால்.

இரண்டாவது

திருமலைச்சருக்கம்

1. உரைத்தநால்வேதத்துச்சியொருதனித்தலைவனாகி
யரைத்தலைப்பாம்புசூழ்வானாணையாலயன்மாலும்பர்
நிரைத்தபேரண்டகோடிநெடுமுகடனைத்துஞ்சாயக்
கரைத்தலைதெரியாவூழிக்கடல்புடைபெயர்ந்ததந்நாள்

உரைத்த நால்வேதத்து உச்சி
ஒருதனித் தலைவன் ஆகி,
அரைத்தலைப் பாம்பு சூழ்வான்
ஆணையால், அயன் மால் உம்பர்
நிரைத்த பேர் அண்டகோடி
நெடுமுகடு அனைத்துஞ் சாயக்,
கரைத்தலை தெரியா ஊழிக்
கடல்புடை பெயர்ந்தது அந்நாள்.

பொருள்: வேதங்கள் அனைத்தினதும் முடிந்த முடிபுமாகி - அவற்றின் தலையாய முதலுமாகி - ஒப்பும்மிக்கும் இல்லாத் தனியொரு தலைவனாகி அரையிலும் தலையிலும் பாம்பினை அணிந்து இருப்பவன் எம்பெருமானாகிய சிவன். எம்தலைவனாகிய சிவன் தன் ஆணையால், படைப்புக் கடவுளான பிரமனும், காத்தற் கடவுளான திருமாலும், மற்றைய தேவர்களும், எண்ணுக்கடங்காது நிரைபட அமைந்த அண்ட கோடிகளும் - அவற்றுள் அமைந்த உயர்ந்த பெருமலைக்குவடுகளும், அவை அனைத்திலும் அமைவு கொண்டிருக்கும் ஆற்றல்களும். தன்னுள் அடங்க - எல்லைகாண முடியாப் பேரூழியான கடல்; எங்கும் பரந்து நின்றது.

தத்துவப் பொருள்: வேதங்களின் முடிவு பேரறிவே. அப் பேரறிவே வேதங்களின் துணிபொருள் - தலைமைப் பொருள். அப்

பொருள் ஆற்றல் வடிவாகக் குண்டலினி சக்தியாக வெளிவரும் பொழுது; பிரபஞ்ச இயக்கமான படைப்பாற்றலும் (பிரமன்) அதில் இருந்து எழும் இயல்பு நெறிவாய்ந்த காப்பாற்றலும் (திருமால்) அவற்றால் உயிர்கள் பெறும் உயர்நிலை வாழ்வும், இவற்றின் நிலைப்பாட்டுக்கு இடனாய் அமைந்த எண்ணற்ற பேரண்டங்களும் - செயலாக்கம் பெற்று நிலைபெறுகின்றன. அப்பேராற்றல்தன்னில் தான் ஒடுங்கித் தானேயொன்றாய் நிற்கும் பொழுது பேரூழி எனப் பகரப்படுகின்றது.

2. நாளொடுநாளுஞ்செல்லு[1] நவபெருங்கோள்களும்புத்
தேளிருநகருமோதித்திசைமுகன்பதியுங்கோத்துக்
காளமாமுகிலின்மேனிக்கடவுடன்[2]பதியுங்கொண்டு
தாளறுத்தெவையுஞ்[3]சாயத்தழீஇயதவ்வாழியெங்கும்.

நாளொடு நாளும் செல்லும்
நவபெருங் கோள்களும், புத்
தேள் இருநகரும் மோதித்,
திசைமுகன் பதியும் கோத்துக்,
காளமா முகிலின் மேனிக்கடவுள்
தன் பதியுங் கொண்டு,
தாளறுத்து எவையும் சாயத்
தழீஇயது அவ்ஆழி எங்கும்.

பொருள் : அவ்வூழியில்; ஞாயிறு - திங்கள் – செவ்வாய்- புதன் - வியாழன் - வெள்ளி - சனி இராகு - கேது ஆய ஒன்பது கோள்களும், ஞாயிற்றின் இயக்கத்தால் கணிக்கப்படும் நாள்களும், இன்பத்தின் உறைவிடமான, வானவர் நாடும், அமராபதியும் - நாகர் உலகும் - அதன் தலைநகரும் - ஒன்றுடன் ஒன்று மோதின. நான்கு திக்குகளையும் தன் திருமுகமாகக் கொண்ட பிரமன் நாட்டினையும், கருமுகில் வண்ணனான திருமால் வாழும் வைகுந்தத்தையும், ஒருசேரக் கொண்டு அவற்றின் அடிநிலையினையும் பெயர்த்து அனைத்தையும் தன்னுள் அடக்கி எங்குமாய் நின்றது ஊழிப் பெருங்கடல்.

தத்துவப் பொருள். ஆத்மன் தன்னை உணர்ந்து தானே அனைத்துமாய், அனைத்திலும் தானுமாய் நிற்கும் நிலை பேரறிவு எனப் பகரப்படும். இப்பேரறிவு நிலை துரியதீதம் எனப்படும். இந் நிலையில் இன்பம் - துன்பம் என்பனவும், அதற்கு இடனாக

பா. வே. 1 நவப் பெருங்கோள், 2 பதமும், 3 சாய்த்த

அமைந்த மனம் - புத்தி- சித்தம் - அகங்காரம் என்பனவும் - இவற்றின் விருத்திக்கிடமான இப்பிரபஞ்சமும், அதன்காப்பாய் அமைந்த இயல் நெறியும், பேரறிவில் ஒடுக்கம் பெறுகின்றன. இவ்வொடுக்கத்தில் ஆணவம் - கன்மம் - மாயை என்பன செயலற்றுப் போக அறிவாகிய எல்லையற்ற அன்பருள் எங்கும் பரந்தது.

3. எங்கணும்பரந்தநீத்தமெறிய லையலைப்பச்சிந்தித்
தங்குபேருலகமூழ்கச்சராசரமனைத்துமாய்த்துத்
துங்கவெள்விடையான்மேனிச்சுடரிடையுயிர்கள்யாவும்
பொங்குபொன்னுருகித்தம்மிற்புகுவபோற்புகுந்துநின்ற

எங்கணும் பரந்த நீத்தம் எறியலை
அலைப்பச் சிந்தித்,
தங்குபேர் உலகம் மூழ்கச் சராசரம்
அனைத்து மாய்த்துத்,
துங்கவெள் விடையான் மேனிச் சுடரிடை
உயிர்கள் யாவும்,
பொங்கு பொன் உருகித் தம்மில்
புகுவபோல் புகுந்து நின்ற.

பொருள்: ஊழிப் பெருக்கின் அலை எங்கும் பரந்து நின்றது. அவ்வலையின் வேகத்தினால் அனைத்துலகும் நிலை கெட்டுத் தடுமாறித் தம்நிலை இழந்தன. அதனால் இயற்கையில் தோன்றிய அனைத்தும் செயலற்று ஒடுங்கின. இவ்வொடுக்கம் அனைத்தும்; மேன்மைமிக்க புனிதம்மிகு வேதத்தைத் தன் ஊர்தியாகக் கொண்ட ஒளிவடிவினனான இறைவனில் சென்று அடங்கின. உயிர்கள் அனைத்தும் பொன்னோடு பொன் உருகிக் கலந்தது போல் பேரொளியாகிய அம் மூல வித்தில் ஒன்று கலந்தன.

தத்துவப் பொருள்: பேரருளின் அருள் அலையில்; உலகியல் இயக்கம் அனைத்துங் கரைந்து நிற்க, பஞ்சபூதங்களும் - இவற்றின் வெளிப்பாடாகத் தோன்றும் பஞ்சப்புலன்களும் - இப்புலன்களின் அனுபவமான பஞ்ச இந்திரியங்களும் செயல் அற்று இன்றாகிவிடும். அந்நிலையில் உள்பொருள் - தெளிவு தோன்றும். அது ஆத்மனுக்குக் கிடைக்கும் விடை. அது துங்க வெண் விடையெனப் பகரப்படுகின்றது. அதனால் உள்பொருள் - தெளிவு கொண்ட ஆத்மன் துங்க வெள்விடையான் எனப் பகரப்படுகின்றான். பேரறிவின் ஒளியில் வேற்றுமையற்று அனைத்தும் தானேயாகி, தானே அனைத்துமாகி நின்ற பேரறிவுநிலை எங்கும்பரந்த நீத்தம் எனப்படுகின்றது.

4. நின்றபேராழியூழிநிமலனிவ்வுலகையெல்லாங்
கொன்றிடவிடுத்தசேனைக்குழாமெனமுழங்குகாலை
[4]யன்றதனாப்பணீங்க[5]வருவரைகுமிழியாக
பொன்றலில்சோதி[6]தாமாய்ப்புகவிளையாடிற்றாங்கே.

நின்ற பேராழியூழி, நிமலன்
இவ்வுலகை யெல்லாம்
கொன்றிட விடுதத சேனைக்
குழாமென முழங்கு காலை,
அன்று அதன் நாள் பணிநீங்க, வரு
வரை குமிழியாகப்,
பொன்றில் சோதி தாமாய்ப்புக
விளையாடிற்று ஆங்கே.

பொருள்: வினையின் நீங்கிய விளங்கிய அறிவன்; ஒடுக்க காலத்தில் அனைத்தையும் தன்னுள் கொண்டு பெருவெள்ளமாய் நின்றனன். அப்பெருவெள்ளப் பேரூழி நாதப் பேரோசையினைச் செய்யப், பூமியைத் தாங்கி நின்ற சிவபத்தனான ஆதிசேடன்; அந்நாள் தன் பணியில் நின்றும் விலக, மிகப் பெரும் மலையான மேருவும் பேரூழி வெள்ளத்திற் சிறு குமிழிபோல் மறைந்தது; மாற்றத்துக்குட்படாக் குறைவற்ற இறை; ஒளிவடிவாகி எங்கும் தானேயாய் திருவிளையாடல் செய்தது.

5. ஆங்கெறிபரவைவெள்ளமடங்கலுங்கார்மீதேறி
யீங்குயருலகத்தூடேயிழிந்துநின்றுலாவிமீண்டுந்
தேங்குநீர்க்கடல்போமாப்போற்சிவனளித்தகிலத்துற்ற
தாங்கருஞ்சுடர்கள்யாவுந்தனிச்சுடரடைந்ததன்றே.

ஆங்நெறி பரவை வெள்ளம்
அடங்கலும், கார்மீது ஏறி
ஈங்குயர் உலகத் தூடே
இழிந்துநின்று உலாவி, மீண்டும்
தேங்குநீர்க் கடல் போமாற்போல்
சிவன் அளித்த அகிலத்துற்ற,
தாங்கரும் சுடர்கள் யாவும்
தனிச்சுடர் அடைந்தது அன்றே.

பா. வே. 4 அன்றவனால், 5 பரை, 6 தானாய்

பொருள்: பேருழிக்காலத்தில் உலகெலாம்பரந்த வெள்ளம்; முகில்களின் மேல் தாவி ஏறிப் பரந்த அண்டத்தின் வழி நீராய் வழிந்தது. அவ்வண்ணம் வழிந்த நீர்ப் பெருக்கானது எங்கும் உலவித் தேங்கி நிற்கும் கடலாய் அமைவு பெற்றது போல, இறைவனால் படைக்கப்பட்ட இவ்வுலகிடை அடங்கியது. வடகடலிடையெழுந்த கனலும் அதனால் எழுந்த சுடர் அலைகளும் (வடவாமுகாக்கினி) பேருழியின் மூலவித்தாய் அமைந்த தனிப்பேரொளியில் ஒடுங்கின. அப்பரஞ் சுடர் தானே ஒன்றாய் எங்கும் நீக்கமறநின்றது.

6. அடைந்தவச்சோதிநாதமதன்மொக்குள்விந்துவாகப்
படர்ந்ததோரநேககோடிபரிதியிற்படலைகான்று
கடந்தபேருழியாழிக்கடலலைத்தாலுஞ்சால
விடந்துளங்காதுமேன்மேற்றிகழ்ந்துமீதெழுந்ததம்மா.

அடைந்த அச்சோதி நாதம்,
அதன் மொக்குள் விந்துவாகப்
படர்ந்ததோர் அனேக கோடி,
பரிதியிற் படலை கான்று
கடந்த பேருழியாகிக், கடல்
அலைத்து ஆலும் சால,
விடம் துளங்காது மேன்மேல்
திகழ்ந்து மீதெழுந்தது அம்மா.

பொருள்: சோதியாக நின்ற அம்முதற் பொருள்; நாதமாய்ப் பரந்தது. அந்நாதம் விந்தாக முகிழ்ந்து. அனைத்திற்கும் தானே வித்தாகியது. அவ்வித்து; எண்ணற்ற கோடிக்கணக்கான கதிரவர் ஒன்றிணைந்து ஒளிபரப்பியது போன்று பேருழி கடந்து அலைவற்றுத் திண்மை கொண்டு மிக்குயர்வு பெற்று நின்றது.

அம்மா வியப்பிடை வந்த ஈற்றசை

7. [7]எழுந்ததுகுமிழியாயவெம்பிரானனந்தகாலங்
கொழுந்திரைக்கடலினின்றுபின்னொருகருணைகூரப்
பொழிந்ததுபடலைச்செந்தீபுணர்ந்ததுபுணரிமேலோர்
செழுந்தலைவெற்புமாலைசிறுபொடிபொடித்தசுற்றும்.

பா. வே. 7 எழுந்திடு

எழுந்தது குமிழியாய எம்பிரான்
அனந்த காலம்.
கொழுந்திரைக் கடலின் நின்று
பின்னொரு கருணை கூரப்
பொழிந்தது படலைச் செந்தீ,
புணர்ந்தது புணரிமேல், ஓர்
செழுக்கலை வெற்பும் ஆலைச்
சீவ சிறுபொடி பொடித்தசுற்றும்

பொருள்: பேருழியில் - குமிழாய் - நாதவிந்துமாய் வடிவு கொண்ட எம்மிறைவன்; செழுமை கொண்டு வற்றாப் பெருவெள்ளமாய்நின்ற பெருங்கடலை நோக்கி அருள்நோக்கம் செலுத்த, அந்நோக்குவழி ஒளிப்பிளம்பானது எங்கும்பரந்து நீரோடு இணைவு பெற்றது. அதனால் ஆலையில் அகப்பட்ட கற்கள் பொடியாவது போன்று மலைகள் பொடியாயின. அப்பொடிகள் சுற்றும் பரந்து செறிந்தன.

8. சுற்றெலாம்பொடித்த தூளிஅதை தமதிலாகமுந்நீர்
வற்றினும்வற்றாமொக்குண்மதிற்கொருசிகரமாக
வுற்றதோரிலக்கங்கோடியோசனையுயர்ந்திரண்டு
பெற்றபங்ககலமாகிப்பெயர்விலாக்கயிலையான.

சுற்றெலாம் பொடித்த தூளி
சுதை மதிலாக, முந்நீர்
வற்றினும் வற்றா மொக்குள்
மதிற்கு ஒரு சிகரமாக.
உற்றதோர் இலக்கம் கோடி
யோசனை உயர்ந்து, இரண்டு
பெற்றபங்கு அகலம் ஆகிப்
பெயர்விலாக் கயிலை ஆன.

பொருள்- சுற்றும் பரந்து செறிந்த பொடிகளின் தூசி. வெண்மை பொருந்திய சுண்ணாம்பு பூசிய மதில்போல் வடிவு பெற்றது. பின்பு அது பலகுவடுகளைத் தன்னகத்தே கொண்டு கயிலையெனப் பெயர் பெற்றது. இக்கயிலை; மழையாலும் - ஊற்றாலும் - மலைபடுதிர வியத்தாலும், பெருகிப்பரந்த கடல்வற்றினும். தன்வளம் குன்றாப் பெருகை கொண்டது. இது ஒரு இலட்சம் கோடி யோசனை தூரம் உயர்ந்து, அதனைப் போல் இரு மடங்கு அகலம் கொண்டு நிலை பெயராத் திண்மையுடன் இவ்வுலகில் விளங்கியது.

9. ஆணவக்கயிலைக்கங்கமரும்பரையாகத்தொல்லை
யீனமில்சோதியோராயிரம்பெருஞ்சிகரமாக
வானநாற்றிசையும்வாயின்மற்றைநாற்சத்தியாகத்
தானமாயதற்குநாப்பண்டங்குமெங்கடவுடோற்றம்-

ஆன அக்கயிலைக்கு அங்கு அமரும்
பரையாகத், தொல்லை
ஈனம்இல் சோதி ஓர் ஆயிரம்
பெருஞ் சிகரமாக
வான நாற்றிசையும் வாயின்
மற்றை நாற் சத்தியாகத்
தானமாய் அதற்கு நாப்பாண் தங்கும்
எம் கடவுள் தோற்றம்.

பொருள்: குறைவற்ற ஒளிபொருந்திய ஓராயிரம் மலைக்குவடுகளும் கயிலை மலைக்கமைந்த பழைமைமிக்க சக்தியாகவும், பரந்த வானமும், விரிந்த நான்கு திசைகளும் வாயில்களாகவும், மற்றைய நான்கு திசைகளும், இன்பம் - வீரம் – செழுமை- பொருண்மை என்ற நான்கு சக்திகளின் வடிவாகவும் பொருந்த, அம்மலையின் நடுவில் எமது இறைவனாகிய சிவன் எழுந்தருளி இருந்தனன்.

இமையத்தைப் பரனாகவும் அதில் அடங்கியுள்ள குவடுகளைப் பரையாகவும், அப்பரையே படைத்தலுக்கு ஆக்கம் அளிக்கும் சக்தியாகவும் காத்தல் (ஈசானதிக்கு) ஒடுக்சம் (தெற்கு) மறைத்தல் (மேற்கு) அருளல் (வடக்கு) என்பன மற்றைய சக்திகளாகவும் புலவர் உருவகப்படுத்தியுள்ளார்.

10. தோற்றியதானும்பாகத்தோகையுமிருந்தவெல்லை
சாற்றிய[8]தோகைச்செங்கைத்தாமரைபிறந்தவிந்து
மாற்றருஞ்சோதியான்முன்வருவித்தவூழித்தீயை
யூற்றமோடுண்டுவெம்மையொருகணத்தமைத்தாங்கே.

தோற்றிய தானும் பாகத்
தோகையும் இருந்த எல்லை,
சாற்றிய தோகைச் செங்கைத்
தாமரை பிறந்த விந்து,
மாற்றரும் சோதியான் முன்
வருவித்த ஊழித் தீயை,
ஊற்றமோடு உண்டு வெம்மை
ஒருகணத்து அமைத்தது ஆங்கே.

பா. வே. 8 தோகை,

பொருள்: அவ்வெல்லை கடந்த தோற்றத்துடன் தன்பாகமாய் அமைந்த மலைமகளுடன் இருந்த வேளையில் அம்மலைமகளின் சிவந்த அகங்கையான தாமரையில் தோன்றிய விந்தின் சக்தி; எல்லையற்றுப் பரந்த - மாற்றத்துக்குட்படாத ஒளிவடிவினனான இறைவனால் முன்வகுத்த ஊழிமுடிவுக்குரிய பெருந்தீயைத் தன்னுள் அடக்கி, அதன் வெம்மையினைக் கணப்பொழுதில் அடக்கித் தண்ணளி செய்தது.

11. அமையுமக்காலத்தந்தவரும்பெருங்கயிலைக்குன்றத்
துமையுமெம்பிரானுமொன்றாயறைந்துழியூழிமேனா
ளிமையவர்முனிவரண்டரிந்தி[9]ரனரன்மால்வேதன்
[10]சமயமுன்றுடைத்தாய்மீளச்சமைக்குதிதலைவவென்றாள்.

அமையும் அக்காலத்து அந்தவரும்,
பெருங் கயிலைக் குன்றத்து
உமையும் எம்பிரானும் ஒன்றாய்
உறைந்துழி ஊழி மேனாள்
இமையவர் முனிவர் அண்டர்
இந்திரன் அரன் மால் வேதன்
சமய முன்றுடைத்தாய் மீளச்
சமைக்குதி தலைவ என்றாள்.

பொருள்: சிவபெருமான்: ஊழியின் முடிவில், எல்லைக்கடங்க மாண்புமிகுபெருந் தவமுடைய சான்றோர் சூழ, மலைமகளுடன் திருக்கயிலையில் ஒன்றாய் எழுந்தருளியிருந்தனன். அவ்வேளையில் உமையவள் இறைவனை நோக்கி, வேதமுடிவானவனே! எம் தலைவனே!! தேவர்கள், முனிவர்கள், அண்டத்து உருத்திரர், இந்திரன், பிரமன், திருமால், உருத்திரன் ஆகியோரை மீளவும் படைத்தருள்க என வேண்டினாள்.

12. [11]என்றலுமிமைக்குளுன்னியிலங்குதன்வடிவத்தூடே
யன்றுருந்திரன்மால்வேதனண்டமண்டத்துளோரைத்
துன்றுவித்தவர்க்குத்தத்தந்தொழிற்குணம்[12]பயிற்றிமுன்னாப்
பொன்றுபல்லுயிருமீளப்படைத்தனன்பொருவிலாதான்.

என்றலும், இமைக்குள் உன்னி
இலங்குதன் வடிவத்து ஊடே,
அன்று உருத்திரன் மால் வேதன்
அண்டம் அண்டத்து உளோரை
துன்றுவித்து, அவர்க்குத் தத்தம்
தொழிற்குணம் பயிற்றி, முன்னர்ப்
பொன்று பல்லுயிரும் மீளப்
படைத்தனன் பொருவிலாதான்.

பா. வே. அயன்தால் வேதம், 10 சமயமுந்துடைத்தாய்,
11 என்றலுமிதயத்துன்னி, 12 தொழிற்குள

பொருள்: உமையின் வேண்டுதலுக்குச் செவிசாய்த்த இறைவன்; கணப்பொழுதில் நினைத்து-விளக்கம் பெற்ற தன் ஒளிவடிவினூடாக, உருத்திரன் மால் பிரமன் ஆகியோரையும். அண்டங்களின் காவலர் களையும், அண்டங்களையும், அனைத்து உயிர்களையும் படைத் தனன். படைப்புக்குட்பட அனைவர்க்கும் செயல்முறைகளை வகுத்து நெறிப்படுத்தினன்.

13. [13]படைத்தவத்தலைவரீசன்பணித்தவப்படியேகீழ்பாற்
கடைத்தலைக்கமடமாதிக்கனமூதண்டமீறா
யிடைத்தலைப்படுவயாவுமெவ்வுயிர்த்தொகையுஞ்செய்து
சடைத்தலையிறைவற்காணச்சயிலவெண்கயிலைபுக்கார்.

படைத்த அத்தலைவர்; ஈசன்
பணித்த அப்படியே கீழ்பால்
கடைத்தலைக் *கமடம் ஆதி
ககனம் மூதாண்டம் ஈறாய்
இடைத்தலைப் படுவ யாவும்
எவ்வுயிர்த் தொகையுஞ் செய்து,
சடைத்தலை இறைவற் காணச்
சயில வெண்கயிலை புக்கார்.

பொருள்: இறைவனால் 'படைக்கப்பட்ட மும்மூர்த்திகளும் - தேவர் தலைவர்களும்! கீழ் உலகு, மேல் உலகு ஆகியன உட்பட அண்டங்களையும் அவற்றினைத் தாங்கும் கூர்மமாகிய ஆமையையும், அவற்றிற்குஉட்பட்ட அனைத்தையும், உயிர்க்குலத்தையும் படைத்த பின், பேராற்றலின் சின்னமாய் அமைந்த சடைகளைக் கொண்ட சிவபெருமானைக் காண்பதற்கு - வெண்மை நிறம் பொருந்திய கயிலையினைச் சென்று அடைந்தனர்.

14. புக்கவரிறைஞ்சிநின்றபொழுதுபூங்கமலத்தோனை
[14]முக்கணன்பார்த்துவெள்ளிமுதுகுன்றமிதற்குநாப்பண்
டொக்பேரவைக்குப்பீடந்தொகுத்துநீசமைத்தியென்ன
வக்கணத்திருகைகூப்பிமயனினிதமைக்கலுற்றான்.

---

* கமடம் = கூர்மம் = ஆமை
பா. வே. 13 படைத்தமுத்தலைவரீசன்
14 முக்கணநோக்கி

புக்கவர் இறைஞ்சி நின்ற பொழுது,
　　பூங் கமலத்தோனை
முக்கணன் பார்த்து, வெள்ளி
　　முதுகுன்றம் இதற்கு நாப்பண்
தொக்க பேரவைக்குப் பீடம்,
　　தொகுத்து நீ சமைத்தியென்ன,
அக்கணத்து இருகை கூப்பி
　　அயன் இனிது அமைக்கலுற்றான்.

பொருள்: கயிலை சென்றடைந்த தேவர்கள் இறைவனை வணங்கி நின்ற பொழுது; இறைவன் தாமரைமலரில் வாழும் பிரமனை நோக்கி; இவ்வெள்ளி மலைக்கு நடுவில் பெரும் அவை கூடுவதற்கேற்ற முறையில் அமைப்பாய் எனப் பணித்தனன். அதனைக்கேட்ட பிரமன் தன் இருகையினையுங் கூப்பி வணங்கி, இருக்கையினை அழகு பெற அமைக்கத் தொடங்கினன்.

15. அமைவுறுகிரணநீலத்தடக்கிமுத்தருகுபோக்கித்
தமனிய[15]நீலஞ்சேர்த்துச்சலாகையிற்கால்கணாட்டி
யிமைதருமரிமானேந்தவியற்றியபீடந்தாங்கி
யுமையொருபாகன்முன்னருய்த்தனனுலகமுய்த்தான்.

அமைவுறு கிரணநீலத்து அடக்கி,
　　முத்து அருகு போக்கித்,
தமனிய நீலம் சேர்த்துச்
　　சலாகையிற் கால்கள் நாட்டி,
இமைதரும் அரிமான் ஏந்த
　　இயற்றிய பீடம் தாங்கி,
உமையொரு பாகன் முன்னர்
　　உய்த்தனன் உலகம் உய்த்தான்.

பொருள்: இருக்கையினை உருவாக்க முனைந்த பிரமன்; கருநீலம் கொண்ட கற்களைப் பொருத்தமுற அமைத்து, அவற்றின் அருகில் முத்துக்களைப் பொருந்தும்படி இணைத்தனன். அவற்றோடு பொன்னுடன் இள நீலம் கலந்த கற்களை இழைத்துத் தண்டுகளை வடிவமைத்தனன். அத்தண்டுகளுடன் பொருந்தும்படி இருக்கைக்குரிய கால்களையும் அமைத்தனன். இத்தகைய இருக்கையினை உயிர்ப்புடைய ஆண் சிங்கத்தின் முதுகில் பொருந்தும்படி வைத்து மலைமகளைத் தன் பாகமாகக் கொண்ட சிவன் முன் இட்டனன் உலகினைப் படைத்த பிரமன்.

பா. வே. 15 நிலத்திற் சேர்த்திச். 16 பீடத்தன்ன

16. உய்த்தவப்பீடந்தன்னையுருத்திரகணங்கநோக்கி
யத்தனுக்கொருதேராழி[17]யாயினவருக்கரெல்லா
மித்தலை[18]யின்றுபீடத்திருந்திடுநிலைமையென்னச்
சத்தியுஞ்சிவனுமந்தத்தமனியப்பீடஞ்சார்ந்தார்.

உய்த்த அப் பீடந்தன்னை
உருத்திர கணங்கள் நோக்கி,
அத்தனுக்கு ஒரு தேர் ஆழி
ஆயின, அருக்கர் எல்லாம்
இத்தலை இன்று பீடத்
திருந்திடு நிலைமை யென்னச்,
சத்தியும் சிவனும் அந்தத்
*தமனியப் பீடஞ் சார்ந்தார்.

பொருள்: பிரமனால் வடிவமைக்கப்பட்ட அழகிய இருகையினைக் கண்ட உருத்திரகணங்கள்; இவ்விருக்கை சில்லுகளைக் கொண்டதேர் போல் அமைவுற்றுள்ளது. இதில் அமைந்த உறுப்புகள் - அண்டங்களில் உலவும் சூரியர்களைக் கொண்டு அழகு செய்யப்பட்டன என எண்ணும்படி இருந்த தெனப் பகர்ந்தனர். பேரம்பலத்தமைந்த இத்தகைய சிங்கந் தாங்கிய இருக்கையில் உமையும் சிவனும் எழுந்தருளியிருந்தனர்.

17. [19]சாரணிசடிலத்தெம்மான்சத்தியோடுறைந்தவெல்லை
யாரணன்[20]முதன்மூவோருமரகரவென்னக்கேட்டும்பர்
சீரணிமுனிவர்நாகர்சித்தரோடியக்கர்மிக்கோர்
வாரணி[21]முலைத்தமாதருடனவர்வந்துபுக்கார்.

சாரணி சடிலத்து எம்மான்
சத்தியோடு உறைந்த எல்லை,
ஆரணன் முதல் மூவோரும்
அரகா என்னக்கேட்டு, உம்பர்
21 முலைத்தம்மாதர்
சீரணிமுனிவர் நாகர் சித்தரோடு
இயக்கர் மிக்கோர்
வாரணி முலைத்த மாதர்
உடனவர் வந்து புக்கார்.

---

* தமனியம் = பேரம்பலம்
பா. வே. 17 ஆகிய, 18 ஒன்று, 19 தாரணி, 20 முதல்,

பொருள்: பாம்பினைத் தன் அணியாய்ப்பூண்டு கயிலையில் எழுத்தருளிய எமது தலைவன் தன் சக்தியோடு வீற்றிருந்த திருவோலக்கக் காட்சியினைக்கண்ட வேதம் ஓதும் பிரமன் - திருமால் உருத்திரன் ஆகிய மும்மூர்த்திகளும் அரகர எனக் கூறி வணங்கினர். அவ்வொலியினைக் கேட்ட தேவர் - செம்மைசான்ற தவத்தோர் - நாகர் - சித்தர் ஆகியோருடன் இயக்கரும் வந்து புகுந்தனர். அவ்வேளையில் மார்புக் கச்சணிந்த - அழகிய தனங்களையுடைய அவர் தம் மனைவியரும் இறைவன் சன்னிதி வந்து புக்கனர்.

18. [22]புக்கனர்பழுமரத்தின்புட்குலம்புகுவபோல
நக்கன்மாக்குன்றஞ்சூழ்வார்நவிலுமக்குன்றிற்சால
மிக்கவெங்களிற்றின்[23]கூட்டம்பிடியொடும[24]ருவியேறற்
[25]றக்கதேயுவமையல்லாற்சாற்றலாமுவமையுண்டோ.

புக்கனர் பழு மரத்திற்
புட்குலம் புகுவ போல,
நக்கன் மாக்குன்றம் சூழ்வார்
நவிலும் அக்குன்றில், சால
மிக்க வெங்*களிற்றின் கூட்டம்
*பிடியொடும் மருவி ஏறல்,
தக்கதே உவமை அல்லால்
சாற்றலாம் உவமை உண்டோ.

பொருள். பழுத்த கனிகள் உள்ள நன்மரத்தை நாடிப் பறவையினங்கள் செல்வதுபோல், தேவாதிதேவர்கள் இறைவன் எழுந்தருளியிருக்கும் 'கயிலையினைச் சூழ்ந்தனர். கயிலையினைச் சூழ்ந்த தேவர்கள் தம் துணைவியரோடு மலையிடை அமைந்த பாதையில் ஏறிச் சென்ற காட்சி ஆண்யானைகள் தம் பெண்யானைகளுடன் செல்வது போன்றிருந்தது. இதனைத்தவிர அந்நிகழ்வுக்கு வேறு உவமை கூறுதல் இயலாது.

பா. வே. 22 புக்கவர் - புக்கரன், 23 களிற்றீனீட்டம், 24 விரவியேற 25 தொக்கதோர்.
* களிறு = ஆண்யானை * பிடி = பெண்யானை

19. உண்டிலையென்னநின்றமருங்கொடுமொருங்குகோடி
[26]வண்டிமிக்குழலார்வெள்ளிமலையிடைத்தொடருந்தோற்ற
மண்டமுமண்டம்யாவுந்தழுவியவசலஞ்சூழ்ந்த
தண்டலில்பசும்பொற்சோதித்தளிர்க்கொடிபடர்வபோலும்.

உண்டு இல்லை என்ன நின்ற
மருங்கொடும் ஒருங்கு கோடி
வண்டுஇமிர் குழலார் வெள்ளி
மலையிடைத் தொடரும் தோற்றம்
அண்டமும் அண்டம் யாவும்
தழுவிய அசலம் சூழ்ந்த
தண்டலில் பசும்பொற் சோதித்
தளிர்க் கொடி படர்வபோலும்.

பொருள்: அண்டமும், அவ்வண்டம் அமைந்த பேரண்டப்பெரு வெளியும் பொருந்தத் தோன்றி நிற்கும் கயிலைமலையில் செல்லும் இளம் நங்கையர்; உண்டோ இல்லையோ என்னும் தோற்றந்தரும், இடையோடும், அவ்வழகிய இடைகள், தனங்களின் தாக்கத்தால் ஒரு பக்கஞ்சரிந்து கோட, அன்றலர்ந்த மலர்களைத் தம் கூந்தலில் சூடிச் செல்கின்றனர். கூந்தலின் அழகினைக்கண்ட வண்டுகள்; மலர்ச்சோலையென எண்ணித் தேனினைச் சுவைக்கக் கூந்தலை மொய்த்தன. மொய்த்த வண்டுகள் கூந்தலின் அழகில் மயங்கித் தேன்பருகமறந்து இன்னிசை எழுப்புகின்றன. இத்தகைய இளம் நங்கையர் கயிலையையண்டி அதன் மேல் செல்வது; தன்மைமிகுந்த சோலையிடத்து அழகிய பசும் பொன் ஒளிபடர்வது போன்றும் தளிர்களையுடைய வள்ளிக்கொடி அசைந்து செல்வது போன்றும் இருந்தது.

20. படரொளிச்சிலம்புபம்பும்பாவையர்[27]பதத்துச்[28]செம்பஞ்
சுடரடிச்[29]சுவட்டிற்பற்றித்துலங்கியகயிலைத்தோற்றங்
கடவுள்வெண்பாலின்வேலையிடைக்கமலம்பூத்த
தடைவினைநிகர்வதல்லாலல்லதுசொல்லலாமோ.

படர் ஒளிச் சிலம்பு பம்பும்
பாவையர் பதத்துச் செம்பஞ்
சுடரடிச் சுவட்டிற் பற்றித்
துலங்கிய கயிலைத் தோற்றம்

பா. வே. 26 வண்டமர், 27 பதச், 28 செம்பஞ்சு, 29 சுவடுபற்றி

கூடவுள் வெண்பாலின் வேலையிடை
இடைக் கமலம் பூத்த
தடைவினை நிகர்வது அல்லால்
அல்லது சொல்லலாமோ.

பொருள்: ஒளிபரவும் அழகிய சிலம்பு ஒலிக்க நடந்து செல்லும் நங்கையரின் செம்பஞ்சு போன்ற பாதத்தின் ஒளி, கயிலையின் மேல் பரந்து விளங்கியது. அதனால் திருக்கயிலையின் தோற்றம் - திருமால் பள்ளிகொள்ளும் திருப்பாற்கடலிடையே சிவந்த தாமரை மலர்கள் பூத்ததனை ஒத்திருந்தது. இதனைத்தவிர அதற்கு நிகராக எதனையும் இயம்புதல் பொருந்தாது.

21. ஆமிவர்சாயலாலுமருமடநடையினாலு
மேமுறுமினமென்றெண்ணியிமையில்பிடியொடன்னந்
தாமவார்குழலார்[30]சொல்லுந்தாளிணைபிறகேசெல்லக்
[31]காமுறலனேகமென்னின்மகளிர்தங்கணக்கார்சொல்வார்.

ஆமிவர் சாயலாலும், *அரு
மட நடையினாலும்,
மேவுறும் இளம் என்றெண்ணி
இளமயில், பிடியொடு, அன்னம்,
தாமவார் குழலார் சொல்லும்
தாளிணை பிறகே செல்லக்.
காமுறல் அனேகம் என்னின்
மகளிர்தம் கணக்கார் சொல்வார்.

பொருள்: இளமங்கையரின் வண்ணமிகு அழகுத் தோற்றத்தாலும், அரிய பண்புமிகு நடையினாலும், தம்உறவுக்குரிய நல்லினத்தார் என எண்ணிய தோகையுடைய மயிற்பேடும் - பெண் யானையும் அன்னப்பேடும் அவர் பின்னே ஒன்று கூடின. அழகிய நீண்ட கூந்தலுடைய இளநங்கையர் தம்முள் கலந்துரையாடும் இன்மொழி கேட்டு அதன் இனிமையில் மயங்கி அப்பெண்களின் இரு அடிகளையும் பின்பற்றிச் சென்றன. இவ்வண்ணம் அப்பெண்களிற் பெருவிருப்புக் கொண்டு செல்லும் நிகழ்வுகள் எண்ணிறந்தன வென்றால் பெண்களின் எண்ணிக்கையினை யாரால் சொல்லுதல் இயலும், அது இயலாத ஒன்றே. *அருமடம் = கொள்ளத்தக்க நற்பண்புகளைக் கொண்டு அவ்வணம் கொண்டவற்றை உயிர் இழப்பினும் விடாமை.

பா. வே. 30 செல்லுந்தாளிணைப் பிறகே,
31 காமுறலனேக மென்றால்

22. சொல்லருமரம்பைமாதர்சுரிகுழல்மலருந்தேவர்
மல்லலம்புயத்திற்றாங்குமாலையுமியக்கர்மார்பி
னல்லளிகுமுறுந்தாருநாகர்தம்முடியிற்போது
மெல்லையிற்கோடிகாதம்பரிமளித்தெழுந்ததாங்கே.

சொல்அரும் அரம்பை மாதர்
சுரிகுழல் மலரும், தேவர்
மல்லல் அம்புயத்தில் தாங்கும்
மாலையும். இயக்கர் மார்பில்
நல்அளி குமுறும் தாரும்,
நாகர்தம் முடிவிற் போதும்,
எல்லையிற் கோடி காதம்
பரிமளித்து எழுந்தது ஆங்கே.

பொருள்: சொற் கொண்டு விளக்க இயலா அழகுமிகு தேவ மாதர்தம் சுருண்டு நீண்ட அழகிய கூந்தலில் அணிந்த பல்வகைப் பட்ட மலரும், தேவர்களின் அகண்ட அழகிய புயங்களில் அணிந்துள்ள மாலையும், இயக்கர்களின் மார்பில் வண்டுகள் தேன் பிளிற்றும் அன்றலர்ந்த மலர்களால் ஆன மாலையும், நாகர்தம் முடியிடத்தில் அழகுற அணிந்த மலரும், நன்மணத்தைப் பரப்பி நின்றன. அந்நறுமணம் எல்லைக்கடங்கா தூரம்வரை சென்று பரவியது.

வேறு

23. ஆங்குவானவர்மவுலியிற்செம்மணியழகும்
பாங்கின்மாதர்தங்கருங்குழற்கருமையும்பலவா
யோங்கல்[52]வெள்ளிவெண்பளிங்கொடுநிழல்விடவோடை
தாங்குமாம்பலுஞ்சூழ்வருவண்டுபோற்றயங்கும்.

ஆங்கு வானவர் மவுலியில்
செம்மணி அழகும்,
பாங்கின் மாதர்தம் கருங்குழற்
கருமையும் பலவாய்,
ஓங்கல் வெள்ளி வெண்பளிங்கொடு
நிழல்விட, ஓடை
தாங்கும் ஆம்பலும் சூழ்வரு
வண்டும்போல தயங்கும்.

பா. வே. 32 வெண்பளிங்குட்புற நிழல்விடவேடை

பொருள்: கயிலையில் சூழ்ந்த தேவர்களின் முடிகளில் பதிக்கப் பட்ட சிவந்த மணிகளின் அழகும், அவர் பக்கலில் நின்ற தேவ மாதரின் அழகியகரிய கூந்தலின் வண்ணக் கருமையும், பலவிதமாய் அழகு செய்தன. மிக்குயரத்திலே தோன்றும் வெள்ளியினங்கள்; ஒளி பரப்பி அழகு செய்தன. வெள்ளிகளின் ஒளியும், பெண்களின் வண்ணக் கூந்தலின் கருமையொளியும், இமயமலையெங்கும் பரந் திருந்த வெண்பளிங்குக் கற்களில்பட்டு மறுதலித்து ஒளிபரப்பின. இக்காட்சியானது, நீர்பாயும் ஓடைகளில் உள்ள ஆம்பல்மலரும், அதனைச் சூழ்ந்து – தேன் அருந்த மொய்க்கும் வண்டுகளும் போலிருந்தது.

24. தயங்குகின்னரர்வீணையின்சுருதியுத்தமையோர்
முயங்குமங்கையர்சிறுமொழிமழலையுமுயங்கும்
வயங்குபல்லியத்தமலையுமறையின்வாயொலியு
மியங்குமண்டவானை[33]முகடளவிசைபடவிசைக்கும்.

தயங்கு கின்னரர் வீணையின்
சுருதியும், தகையோர்
முயங்கு மங்கையர் சிறுமொழி
மழலையும், முயங்கும்
வயங்கு பல்லியத்து அலையும்,
மறையின் வாயொலியும்,
இயங்கும் அண்டவான் முகடளவி
இசைபட இசைக்கும்.

பொருள்: பொருள் விளக்கம் பெற்ற கின்னரர்களின் வீணை யின் இசையமைதியும் (சுருதி), தகைசான்ற ஆடவர்கள் தம்தலை வியருடன் இணைந்து மகிழும்பொழுது, அந்நங்கை நல்லார் புணர்ச்சிக்காலத்தில் தம்மை மறந்து உணர்ச்சிவயப்பட்டுப்பேசும் மதலைமொழியும் ஒன்று கலந்து ஒலிக்கும். இவ்வொலியோடு தோற்கருவிகளின் இனிய ஒலியும் - இசையின் ஒலியும், மறை யோதும் அந்தணர் வாய் ஒலியும் ஒன்று கலந்து அண்டவெளி யெங்கும்பரவியது, அவ்வண்ணம் பரவிய ஒலி, இயக்க ஆற்றலுடன் இயைவு கொண்டு, இசைமரபு தவறாது அண்டங்கள் அனைத்தும் இசைவுபட, ஓங்கார ஓசையினை இசைக்கும்.

பா. வே. 32 முகடளவதிப்பட

25. இசைக்குநூலோடுமுப்புரிநூலினரிருக்கை
யசைத்தகுண்டிகைத்தண்டினர்மரவுரியரையர்
குசைப்பசும்புலர்விரிசடைமுடியினர்குழுவித்
திசைகடோறும்பல்லாயிரகோடியர்செறிந்தார்.

இசைக்கு நூலொடு முப்புரி
நூலினர் இருக்கை,
அசைத்த குண்டிகைத் தண்டினர்
மரவுரி அரையர்,
குசைப் பசும்புலர் விரிசடை
முடியினர் குழுமித்,
திசைகள் தோறும் பல்லாயிர
கோடியர் செறிந்தார்.

பொருள்: முப்புரிநூல் அணிந்த அந்தணர் இசைக்குரிய சாம வேதத்தினை ஓதியவண்ணம் கயிலை இடத்தில் வாழ்கின்றனர். மரவுரிகளைத் தம் ஆடையாய் அணிந்த துறவோர்; தண்டினையும் - கமண்டலத்தினையும் அசைத்துக் கொண்டு கயிலையிடத்துக் குழுமினர். தருப்பைப் புல்லைத்தம் தவத்திற்கு இருக்கையாகக் கொண்ட விரித்த சடை முடிகளையுடைய முனிவர்களும் கயிலையிடத்தைச் சூழ்ந்தனர். இவ்வண்ணம் குழுமியவர் பல்லாயிரகோடியினராக இருந்ததனால் கயிலையின் திசைகள்தோறும் பரந்திருந்தனர்.

26. செறிந்தகாய்கனியுண்டியாற்றிருவுரும்புலர்ந்தோர்
நறுந்தளிர்த்தொகைமலர்கொய்துமுனிவர்க்குநயப்போர்
குறைந்தசிற்றிடைவற்கலையுடுத்தகொம்பனையா
ரறைந்தமாதவர்பன்னியர்துன்னினரனேகர்.

செறிந்த காய்கனி உண்டியால்
திரு உருப் புலர்ந்தோர்,
நறுந்தளிர்த் தொகைமலர் கொய்து
முனிவர்க்கு நயப்போர்,
குறைந்த சிற்றிடையர் வற்கலை
உடுத்த கொம்பனையார்,
அறைந்த மாதவர் பன்னியர்
துன்னினர் அனேகர்.

பொருள்: காய் கனிகள் செறிந்த உணவினை உட்கொள்வதனால் தம் அழகிய வடிவத்தின் செழுமை குன்றியுள்ள முனிவர்களின் மனைவியர்; மிக மெலிந்த சிறிய இடையை உடையவராகவும், மரவுரிகளைத் தம் ஆடைகளாக அணிபவராகவும் வாழ்கின்ற போதிலும், மெல்லியல்புடைய தளிர் கொண்ட இளம் கொம்பர் போன்றவர்களாகவே இருக்கின்றனர். அருளன்புகனிந்த இச் செம்மைசான்ற நங்கையர்; தம்பணியாக, நறிய மணம் வீசும் தளைகளையும் மலர்களையும் தம் கணவரின் பூசனைக்காக ஆய்ந்து கொடுப்பர். தம் துணைவியர்களோடு முனிவர்கள் பலர் கயிலை யிடத்துச் சூழ்ந்தனர்.

27. துன்னியிம்முறைமகளிருங்கடவுளர்தொகையுங்
கன்னிநாண்மலர்ப்பெருமழைசொரிதருங்கரத்தார்
நன்னராசிசொனாவினர்நடைநடைதோறுஞ்
சன்னிராசித்தலைநொக்கியேவிழுந்தெழுந்தலையர்.

துன்னி இம்முறை மகளிரும்
கடவுளர் தொகையும்,
கன்னி நாண்மலர்ப் பெருமழை
சொரிதரும் கரத்தார்,
நன்னர் ஆசிசொன் நாவினர்,
நடை நடை தோறும்
சன்னிதித்தலை நோக்கியே விழுந்து
எழும் தலையர்.

பொருள்: கயிலை மலையில் தேவ மாதரும், முனிமகளிரும் தத்தம் இறைவர்களான தம்கணவர்களுடன் வந்து கூடினர். இவர்கள் அன்றலர்ந்த புத்தம் புதிய மலர்களை இறை பூசனையின் பொருட்டுத் தம்கைகளால் மழை போற் சொரிந்து வழிபடும் இயல்பினர். நன்மொழிகளான மறைகளை ஓதும் இயல்பினர். எப்பொழுதும் நிறைமொழிகளான மந்திரங்களை வாழ்த்தொலியாக முழங்கும் நாவினர். இவர்கள் அனைவரும் சிவன் எழுந்தருளியிருக்கும் இடம் நோக்கித் தம் தலை தாழ்த்தி வணங்கித் - தம்உடல் அப்புனித பூமியில் பொருந்தும்படி நிலந்தோய வணங்கி எழும் இயல்பினர்,

கடவுளர் = புராணமரபின்படி அகத்தியர் போன்ற முனிவர்கள் கடவுளராகக் கருதப்படுகின்றனர்: சான்றோரான கற்புடை மகளிர் கணவரும் கடவுளராகப் போற்றப்படுகின்றனர். கடவுளர் பஞ்சபூதத்தின் இயல்பினையும் இடகலை, பிங்கலை எனப்படும். சந்திர - சூரிய நாடிகளின் செயற்பாடுகளையும், சுழுமுனை நாடி மூலம் பேராற்றலான குண்டலினியினையும் எழுப்பிப்பிரம மந்திரமான துரியாதீத நிலையில் என்றும் நிலைத்திருப்பவர்.

28. தலையுருத்திரகணத்தவரநேகர்செஞ்சடையர்
நிலவெறித்தவெண்ணீற்றொளிமேனியினிறத்தர்
கலைமதித்திருமுடியினான்கயிலைமேற்பாலி
னலைகடற்பரந்தடைவதுபோலவந்தடைந்தார்.

தலை உருத்திர கணத்தவர்
அனேகர் செஞ்சடையர்
நிலவு எறித்த வெண்ணீற்றுஒளி
மேனியன் நிறத்தர்,
கலை மதித் திருமுடியினான்
கயிலை மேல், பாலின்
அலைகடல் பரந்து அடைவதுபோல்
வந்து அடைந்தார்.

பொருள்: உருத்திரகணத்தலைவர்கள் அநேகர் இவர்கள் செஞ்சடையுடையவராய், நிலவு ஒளிவீசுவது போன்று தம்முடலனைத்தும் வெண்ணீற்றினை அணிந்து வந்தனர். இவ்வண்ணம் வந்த நிகழ்வானது; கயிலை மலையிடத்து அலைகொண்ட பாற்கடல் சூழ வந்தது போலிருந்தது. முதல் அடியினை; தலை உருத்திரகணத்தவர் எனப்பிரித்து செஞ்சடையர் என்பதனையும் தனியாகப்பிரித்து அனேகர் என்ற சொல்லை இரு இடங்கட்கும் பொருத்திப் பொருள் கொள்வதாயின் தலை உருத்திரகணத்தவர் அனேகர், செஞ்சடையர் அனேகர் எனவும் பொருள் கொள்ளலாம்.

29. அடைந்ததேவராய்ப்பிறந்தவரநேகர்க்குங்கயிலை
யிடந்தனித்தனிவரவரப்பெருத்ததென்சொல்கேன்
கடந்துமுதண்டம்யாவையுங்காட்டியபரைதன்
படர்ந்தமேனியாம்பழைமையும்புதுமையோபகரில்

அடைந்த தேவராய்ப் பிறந்தவர்
அநேகர்க்கும் கயிலை
இடம் தனித்தனி வரவரப்
பெருத்தது என்சொல்கேன்,
கடந்து மூதண்டம் யாவையும்
காட்டிய பரைதன்
படர்ந்த மேனியாம் பழைமையும்
புதுமையோ பகரின்.

பொருள்: மண்ணகத்து வாழ்ந்த அனேகர் தேவராய்ப்பிறந்து கயிலையினை அடைந்தனர். அவ்வண்ணம் அடைந்தவர்க்கு இடம் கொடுக்கும்படி கயிலை அகன்று பெருத்தது. இப்புதுமைபற்றி என் னென்று கூறுவேன். பரையாகிய சக்தி பழைமைமிகு அண்டங்கள் அனைத்தினையுங்கடந்து அனைத்திலுந்தானாய்ப் பொலிந்த அத் திருவின் - அழகும் அதன் பழைமையும் புதுமையல்லவே.

30. பகரில்வெள்ளியங்கிரிதனைப்பெரிதெனப்பகர்கோ
சிகரமால்வரைநீளமுள்ளளைவெலாஞ்செறியு
நிகரில்வானவர்குழாந்தனைப்பெரிதெனநினைக்கோ
மகரநீர்மணலெண்ணினுமெண்ணொணாமனத்தால்

பகரில் வெள்ளியம் கிரிதனைப்
பெரிதெனப் பகர்கோ,
சிகர மால்வரை நீளமுள்ள
எலாம் செறியும்
நிகரில் வானவர் குழாந்தனைப்
பெரிதென நினைக்கோ,
மகர நீர்மணல் எண்ணினும்
எண்ணொணா மனத்தால்.

பொருள்; எதைக் கூறுவது, எப்படிக் கூறுவது வெண்மைநிறம் பொருந்திய கயிலையினைப் பெரிதெனக் கூறுவதா! அன்றிப் பல குவடுகளையுடைய கயிலையின் நீண்ட பரப்பில் அனைத்திடங் களிலும் பரந்து செறிந்த தேவர்கள் கூட்டத்தைப் பெரிதெனப்பகர் வதா!! மீனினம் வாழும் அலை கொண்ட கடற்கரையின் மணலை எண்ணினும், எண்ணித் தொலையாத் தேவர் - முனிவர் - அவர்தம் மனைவியர் சிவனெறிச் செல்வர் ஆகியோரின் பெருக்கம் எங்கும் பரந்திருந்தது. அதன் கணக்கீட்டினை மனத்தாலும் கற்பனை செய்ய இயலாது;

31. ஆலமுண்டவர்கயிலையை[34]யிவ்வண்ணமனுகு
மேலையிந்திரன்முதலினோர்விழிப்புனல்பொழிந்து
சாலநந்திகைப்பொற்பிரம்பேவலாற்றலைவன்
கோலவாயிலுங்கடந்துபொற்கோயிலுட்புகுந்தார்

ஆலம் உண்டவர் கயிலையை,
இவ்வண்ணம் அணுகும்
மேலை இந்திரன் முதலினோர்,
விழிப்புனல் பொழிந்து,
சால நந்திகைப் பொற்பிரம்பு
ஏவலால், தலைவன்
கோல வாயிலும்கடந்து பொற்
கோயிலுற் புகுந்தார்.

பொருள்: ஆலகால நஞ்சினை உண்டு அனைத்துயிர்களையும் காத்தருளிய சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் கயிலை மலையினை இந்திரன் முதலிய தேவர்கள் சென்றடைந்து, அன்பின் மிகுதியால் கண்ணீர் சொரிந்து நின்றனர். அவ்வேளையில் நந்திதேவர் தன் கையில் தாங்கிய அழகிய கோல் கொண்டு (பிரம்பு) ஏவலை பணிப்ப, அப்பணியினைபெற்று அழகிய திருவாயில் கடந்து, சிவன் எழுந்தருளியிருக்கும் பொன்மயமான கோயிலைச் சென்றடைந்தனர்.

32. தாரகைக்குலந்தழுவமீதொருதலைப்பிறைக்க
ணாருஞ்,செக்கர்போலக்குடன்பிறையணிந்தவனை
யீரநாண்மலர்விரிஞ்சனன்றியற்றுபீடத்தின்
மேருமால்வரைபவளவெற்பெனவிருந்தவனை

தாரகைக்குலந் தழுவ மீதொரு
தலைப் பிறைக்கண்
ஆரும் செக்கர்போல் *அக்குடன்
பிறை அணிந்தவனை,
ஈர நாண்மலர் விரிஞ்சனன்
இயற்று பீடத்தின்
மேரு மால்வரை பவள
வெற்பென இருந்தவனை.

பொருள்: ஒளிபரப்பும் வெள்ளியினங்களும் மூன்றாம்பிறைச் சந்திரனும் ஒளிபரப்பச் சிவந்து தோன்றும் வானம் போல; சிவபெருமான் உருத்திராக்க மாலையினை அணிந்து திருமுடியில் பிறைச்சந்

பா. வே. [34]இவ்வண்ணமணுகி

திரன் துலங்க தன்மை மிகுந்த தாமரைமலரில் பெரும் பிரமன் இயற்றிய இருக்கையில் இருந்தனன். இக்காட்சி மாண்புமிகு மேரு மலையில் பவளக் குன்று இருந்தது போல் இருந்தது.

*அக்கு = உருத்திராக்கம்

33. [37]இருக்கும்பேருலகேழிளோடேழையுமேந்தும்
பெருக்கும்வளராக்கங்கணம்பிறங்குகையவனை
யுருக்குந்தீயிடையரக்கெனவுமையுமுள்ளுருகத்
திருக்கடைக்கணாநோக்கியதிருமுகத்தவனை

இருக்கும் பேருலகு ஏழினோடு
ஏழையும் ஏந்தும்
பெருக்கும் வாளராக் *கங்கணம்
பிறங்கு கையவனை.
உருக்கும் தீயிடை *அரக்கென
உமையும் உள்ளுருகத்,
திருக் கடைக்கணால் நோக்கிய
திரு முகத்தவனை.

பொருள்: நிலை பெயராதிருக்கும் பதினான்குலகங்களையும் தன் ஆயிரந் தலைமுடிகளிற் சுமந்து தாங்கும் பெருமைமிகு ஒளிமிகுந்த ஆதிசேடன் என்ற பெருந்தவத்தோனைத் தன்கையில் கங்கணமாக அணிந்த சிவனை; அவன் பாகமாய் அமைந்த மலைமகள். தீயிடைப் பட்ட மெழுகு போல் உள்ளம் கசிந்து உள்ளுருக - அவள் உள்ளம் மகிழ்ந்து இன்புறும் வண்ணம் கனிவுடன் நோக்கிய அழகிய திருமுகத்தினையுடைய இறைவனை;

34. [38]முகமுகத்துடனெதிர்ப்படக்கண்களான்முகந்து
நெகுநெகுக்கனிந்தென்புறவுருகிநின்றிரங்கி
யகமலர்ந்துதம்மெய்ம்முழுதந்நிலத்தழுந்தப்
புகவிழுந்தரகரவெனமுறைபுகழ்ந்தார்

முகம் முகத்துடன் எதிர்ப்படக்
கண்களால் முகந்து,
நெகு நெகுக்கனிந்து என்புற
உருகி நின்றிரங்கி,
அகம் மலர்ந்து தம்மெய்முழுதும்
அந்நிலத்து அழுந்தப்
புக விழுந்து அரகரவென
முறைமுறை புகழ்ந்தார்.

---

* கங்கணம் = கையணி = காப்பு. * அரக்கு – பெருகு

பா. வே. 37 இருக்கு மெழுலகேழினோடெழையும்,
38 நெக நெகக்கனிந்து

பொருள்: கயிலை சென்றடைந்த அனைவரும் அவ்வண்ணம் இருந்த இறைவனின் திருமுக அழகினைத் தங்கண்களால் முகந்து முகம்மலர நோக்கினர். அவன்முன் உளம் கசிந்துருகிக் கனிந்து என்புருக நின்றனர். அன்புணர்வால் உணர்வு நெகிழ உளம் மலர்ந் தனர். இவ்வண்ணம் மெய்ப்பாடுற்ற சிவனடியவர்கள், தம் உடல் முழுதும் அப்புனித நிலத்தைத்தழுவ விழுந்து வணங்கினர். அவ் வண்ணம் வணங்கியவர்கள் அரகர என்று பல முறை போற்றியிசைத் தனர்.

35. புகழ்ந்தனர்சிலர்தங்கண்ணீர்பொழிந்தனர்சிலருள்ளன்பு
நிகழ்ந்தனர்சிலர்பெம்மானைநினைகிலார்செனனந்தன்னை
யிகழ்ந்தனர்சிலர்[39] தூரத்திலிருந்தனர்சிலர்கைகூப்பித்
திகழ்ந்தனர்சிலர்*பொன்மாரிசிதறினர்சிலராய்நின்றார்.

புகழ்ந்தனர் சிலர், தங்கண்ணீர்
பொழிந்தனர் சிலர், உள்ளன்பு
நிகழ்ந்தனர் சிலர், பெம்மானை
நினைகிலார் செனனந்தன்னை
இகழ்ந்தனர் சிலர், தூரத்தில்
இகழ்ந்தனர் சிலர், கைகூப்பித்
திகழ்ந்தனர் சிலர், பொன்மாரி
சிதறினர் சிலராய் நின்றார்;

பொருள்: திருக்கயிலையைச் சென்றடைந்தவர்கள் சிலர் புகழ்ந்து மகிழ்ந்தனர். சிலர் அன்பின் மிகுதிப்பாட்டால் நெகிழ்ந்து தம்கண் களில் இருந்து நீர்பெருக நின்றனர். உள்ளன்பின் மீதூர்ந்த நிலை யால் மெய்மறந்து நின்றனர் சிலர். தலைவனான சிவனை நினைக் காதவர்களின் பிறம்பினைச் சிலர் இகழ்ந்தனர்' சிவனடியார்களின் நெருக்கீட்டால் தள்ளுப்பட்டு நின்றனர் சிலர். சில அடியவர் கைகூப்பித் தொழுதனர். பொன் போன்ற அழகிய மலர்களை மழை போல் சொரிந்து போற்றி வழிபட்டனர் சிலர். இத்தகைய சிவநெறி வழிபாட்டாளர்கள் எங்கும் பரந்து நின்றனர். *பொன் மாரி = கொன்றை - திருவாத்தி போன்ற பொன் நிறம் உள்ள மஞ்சள் மலர்களைக் குறிக்கும் அன்றிப் பொன் எனக் கொள்வது முண்டு.

பா. வே. 39 தூரத்தி விறைஞ்சினர்

36. நின்றகலாதசோதிநிழலெனக்கோடிகோடி
துன்றுமெண்டிசைகடோறுஞ்சாரதிபரேந்துஞ்சோதி
யன்றொருகுமிழாய்நின்றருளுநாளமர்ந்தசோதி
யின்றுபற்பலவாய்த்தோன்றிற்றென்னலாங்கயிலையெங்கும்,

நின்று அகலாத சோதி நிழல்எனக்
கோடி கோடி,
துன்றும் எண் திசைகள் தோறும்
சுராதிபர் ஏந்தும் சோதி,
அன்று ஒரு குமிழாய் நின்று
அருளுநாள் அமர்ந்த சோதி,
இன்று பற்பலவாய்த் தோன்றிற்று
என்னலாம் கயிலை எங்கும்.

பொருள்: இறைவன்; என்றும் நின்று நிலவும் ஒளிவடிவினன். இப்பிரபஞ்சம் அனைத்தும் அகலாது பரந்து நிற்பவன். அவனது ஒளியின் நிழலாக எண்ணுக் கணக்கற்ற கோடானுகோடி தொகை எங்கும் பரந்துள்ளது. கயிலையை அணுகி நெருங்கி நின்ற தேவர்கள் எட்டுத் திக்கிலும் நீக்கமற நிறைந்துள்ளனர். அவ்வண்ணம் நின்ற தேவர்கள் தம்கையில் ஏந்தி நிற்கும் சோதியாயும் எம்தலைவன் நின்றனன். இவ்வடிவனைத்தும்; அன்றொருநாள் பிரமனும் மாலும் அடிமுடி தேடிக்காணாத ஒரே ஒளிவடிவு கொண்டு நின்ற – சோதி யின் வடிவே. அதுவே இன்று கயிலைதன்னில் பற்பலவாய்த் தோன்றிற்று.

37. எங்கணுமெழுந்ததூபத்திட்டசீதாரிக்கந்த
மங்குறநிறைந்துதிக்குமண்டமுநிரம்பித்தெய்வத்
திங்கள்சூடியவெம்பெம்மான்சிவலோகத்தெருக்கடோறும்
பொங்கியதென்றாலந்தப்பெருமையார்புகறற்பாலார்.

எங்கணும் எழுந்த தூபத்திட்ட
*சீதாரிக் கந்தம்,
அங்குற நிறைந்து திக்கும்
அண்டமும் நிரம்பித் தெய்வத்
திங்கள் கூடிய எம்பெம்மான்
சிவலோகத் தெருக்கள் தோறும்,
பொங்கியது என்றால் அந்தப்
பெருமையார் புகறற்பாலார்.

---

*சீதாரி = சாம்பிராணி எனவும் கருதப்படும். இங்கு வாசனைப் பொடிகள் என்றே கருதப்பட்டு விளக்கம் கூறப்பட்டுள்ளது.

பொருள்: கயிலையில் தூபத்திட்ட வாசனைப் பொடிகளின் நன்மணம் அனைத் திடலும் பரந்தது. அவ்வண்ணம் பரந்தபுகையின் நறுமணம் திக்கனைத்தும் பரந்து அண்டத்தினையும் நிரப்பியது. திங்களைச் சடைமேல் தரித்த எம் தலைவனான சிவன் எழுந்தருளியிருக்கும் சிவலோகத் தெருக்கள் அனைத்திலும் அருள் பொங்கிப்பரப்பது போன்று நன்மணம் பொங்கிப்பரந்தது. இச்சிறப்பினை எடுத்துக்கூறுதற்கு யாரால் இயலும்.

38. பாலலைப்பள்ளியானும்பங்கயத்தயனுங்காணாக்
[40]காலினையெவருங்காணக்காட்டியகடவுட்கின்ற
மேலுறப்பொழிபூமாரிவேலைநீடுயிர்த்துமாறா
யேலநாண்மலரைமொண்டுண்டிறைப்பதுநிகர்க்குமம்மா.

பால்அலைப் பள்ளியானும் பங்கயத்து
அயனும் காணாக்,
கால்இணை எவருங் காணக்
காட்டிய கடவுள், குன்றம்
மேலுறப் பொழி பூமாரி. வேலை
நீடு உயிர்த்தும் ஆறாய்
ஏலநான் மலரை மொண்டு உண்டு
இறைப்பது நிகர்க்கும் அம்மா4

பொருள்: எம் தலைவனான சிவன்; அலை வீசும் பாற்கடலில் பள்ளி கொள்ளும் பரந்தாமனும், தாமரைமலரில் வீற்றிருக்கும் பிரமனும் தேடியும் காண இயலாத தன் இணையற்ற திருவடிகளையும் காட்டி நின்றனன். அவ்வேளையில் கயிலையில் எம்தலைவனின் திருவடிகளை வணங்கிச் சொரிந்த மலர்கள் அனைத்தும் ஒன்று சேர்ந்து அக் குன்றிலும் உயர்ந்து நின்றன. சிவனடியார்களான தேவர்கள். முனிவர்கள் - சான்றோர்கள். அவர்தம் மடந்தையர் மலர் கொண்டு பூசித்த நிகழ்வு. கடலானது தன் அலைக் கைகளை நீளப்பரப்பி ஒலிஎழுப்பி ஆறு போல் இயக்கம் பெற்று அன்றலர்ந்த மலர்களை அள்ளி இடையீடின்றி இறைப்பது போல் இருந்தது.

அம்மா என்பது வியப்பிடை வந்த ஈற்று அசை, முன் வந்த பாடல்களின் கருத்தியைவுக்கேற்ப இப்பாடலின் பொருள் விளக்கத்தில் தேவர்கள் முனிவர்கள் சான்றோர்கள் அவர் தம் மடந்தையர் ஆகியவைகளும் வருவித்துரைக்கப்பட்டனர்.

பா. வே. 40 காலினை

39. மாதவர்முனிவர்வானோர்வழுத்தியமுழக்கத்தோட
[41]யோதியகாளதாளமுதல்வலம்புரிப்பேரோதை
சோதியைவணங்கப்போந்தார்சுரரெனத்தொடர்ந்துபின்வந்
தோதவேலைகளோரெழுந்துதிசெய்வதொக்குமன்னோ-

மாதவர் முனிவர் வானோர்
வழுத்திய முழக்கத் தோடே,
ஓதிய காள தாளம்முதல்
வலம்புரிப் பேரோதை,
சோதியை வணங்கப் போந்தார்
சுரர்எனத் தொடர்ந்து பின்வந்து
ஓத. வேலைகள் ஓர் ஏழும்
துதிசெய்வது ஒக்குமன்னோ.

பொருள்: திருக்கயிலையில் சோதிவடிவாய் ஒளிபரப்பி நின்ற இறைவனை; வணங்க வந்து குழுமிய பெருந்தவத்தோர், முனிவர்கள் – சான்றோர் - தேவர்கள் ஒன்றிணைந்து, போற்றி வழிபாடு செய்தனர். அவர் வழிபாடு செய்து போற்றி இசைத்த ஒலி எங்கும் வந்தது. அவ்வொலியுடன், சிறுபறையும் தாளமும் - வலம்புரிச்சங்கும் இணைந்து ஒலித்த ஒலியும், அதனைத் தொடர்ந்து வந்த தேவர்களின் வேதம், ஓதும் ஒலியும் இணைவு பெற்றன. அதனால் கயிலையெங்கும் இறைவனைப் போற்றும் பேரொலியே கேட்பதாயிற்று. இந்நிகழ்வு சம்வர்த்தம், ஆவர்த்தம், புட்கலாவர்த்தம், சங்காரிதம், துரோணம், காளமுகி, நீலவருணம் ஆகிய ஏழு கடலும் ஒன்றிணைந்து இறைவனின் துதிபாடித் தொழுவது போன்றிருந்தது. இறுதியில் நின்ற மன்னோ என்ற சொல்லை அப்படியே கொண்டாலும் சரி அன்றி அன்னோ எனக் கொண்டாலுஞ்சரி அது ஈற்றசையாகும்.

40. மன்னியவிந்நிலைவானநாடருந்
துன்னியமுனிவரும்பிறருஞ்சோதியைச்
சன்னிதிவந்துகண்டிறைஞ்சித்தாண்மலர்
சென்னியிற்புனைந்துதந்துயரஞ்சிந்தினார்

மன்னிய இந்நிலை வான நாடரும்,
துன்னிய முனிவரும் பிறரும், சோதியைச்
சன்னிதி வந்து கண்டு இறைஞ்சித், தாள்மலர்
சென்னியில் புனைந்து, தம் துயரம் சிந்தினார்.

பா. வே. 41 மேதியதாளகாளமுழாவலம்புரிப்பேரோதை

பொருள்: தேவர்கள் முனிவர்கள் சான்றோர்கள் உட்பட்ட அனைவரும் கயிலையிடத்து நெருக்கமுற்று வந்தனர். வந்த அனைவரும் ஒளிவடிவினனான இறைவன் எழுந்தருளியிருக்கும் புனிதஇடமான சன்னிதி வந்து வணங்கினர். இறைவனது திருவடிமலரைத்தம் தலையிடத்துச் சூடித் துன்பம் அனைத்தினையும் போக்கினர்.

41. சிந்தைநீசிந்தையிற்றெளியுஞ்சோதிநீ
எந்தைநீயாயுநீயெங்கட்காவிநீ
விந்துநீநாதநீமேலுங்கீழுநீ
பந்தநீவீடுநீபகலுமல்லுநீ

சிந்தை நீ, சிந்தையில் தெளியும் சோதி நீ,
எந்தை நீ, ஆயும் நீ, எங்கட்கு ஆவி நீ,
விந்து நீ, நாதம் நீ, மேலும் கீழும் நீ,
பந்தம் நீ, வீடு நீ, பகலும் அல்லும் நீ.

பொருள்: ஓங்காரப் பொருளே! எம் இறையே!! தலைவா!!! நீயே உள்ளமாய் இருக்கின்றாய் – அவ்வுள்ளத்தெழும் சோதியான உணர்வலையாக இருக்கின்றாய். எம் தந்தையும் நீயே. தாயும் நீயே. நீயே எங்கள் உயிர். பிரபஞ்சத்தின் வித்தாகவும் – அவ்வித்தின் முகிழ்வுக்கு அடிநிலையாக விருக்கும் நாதமாகவும் நீ இருக்கின்றாய். அண்டமனைத்தின் மேலாம் விரிவாகவும். அவற்றின் கீழாம் ஒடுக்கமாகவும் நீ இருக்கின்றாய். ஆன்மாக்களைத் தளைக்கும் தளையாகவும் – வீடு பேறாகவும் இருப்பவன் நீயே. இன்பமாயும் துன்பமாயும் – பகலாயும் இரவாயும் இருப்பவனும் நீயே.

42. நீயலாற்பிறிதிலைநிலமுதற்பிறப்
பாயனவம்[42]பூதங்களங்கங்காயினை
நாயகநின்பதநளினம்போற்றுதற்
கேயதுபெருந்தவ[43]மென்செய்தேமரோ

நீ அலால் பிறிது இல்லை, நில முதல் பிறப்பு
ஆய ஐம் பூதங்கள் அங்கங்கு ஆயினை,
நாயக; நின் பத நளினம் போற்றுதற்கு
ஏயது பெருந்தவம் என் செய்தேமரோ.

பொருள்: இறைவா! நீயன்றி எதுவுமேயில்லை. வான் – நெருப்பு காற்று நீர் நிலம் ஆயவையாய் – மெய் வாய் – கண் – மூக்கு – செவி என்றஐம் புலன்களாய் – சுவை, ஒளி, ஊறு – ஓசை, நாற்றம் என்ற தன் மாத்திரைகளாய் வேதங்களாய் அவற்றின் உறுப்புகளாய்

பா. வே. 42 பூதங்களங்கள்களாயினை, 43 என் செய்தோமரோ

நின்றனை. நீயே அனைத்துக்குந் தலைவன். இறைவனே உன்திருவடியழகு போற்றுவதற்குரியது. அத்திருவடிகளின் அருட் செழுமையினைப் போற்றி வழிபட நாம் என்ன தவம் செய்தோம். அதனை நாம் அறியமாட்டோம். அரோ ஈற்றசை.

வேறு

43. [44]செய்யுமெத்தவமேபோற்றி[45]சிவபரம்பரனேபோற்றி
வையகம்படைத்துங்காத்துமறித்துயிர்துடைப்பாய்போற்றி
ஐயனேபோற்றியெம்மையாண்டநாயகனேபோற்றி
தையலோர்பங்காபோற்றிதாணுவேபோற்றிபோற்றி.

செய்யும் எத்தவமே போற்றி,
சிவபரம் பரனே போற்றி.
வையகம் படைத்தும் காத்து
மறித்துயிர் துடைப்பாய் போற்றி,
ஐயனே போற்றி, எம்மை
ஆண்ட நாயகனே போற்றி,
தையலோர் பங்கா போற்றி,
*தாணுவே போற்றி போற்றி.

பொருள்: செய்கின்றஅனைத்துத் தவமாக இருப்பவனே வணக்கம் செமைசான்ற பரம் பொருளே வணக்கம். பிரபஞ்சம் அனைத்தையும் படைத்துக் காத்து, மீண்டும் அவை அனைத்தையும் அடக்கித் தன்னில் தானாய் நிற்பவனே வணக்கம். எம்மை ஆண்டநாயகனே வணக்கம். சத்தியாகிய உமையைப் பங்காகக் கொண்டவனே வணக்கம். அண்டப்பெரு வெளியாய் நிற்பவனே! அனைத்திலும் ஆற்றல்வடிவாக நிற்பவனே பூரணனே! உன்னை வணங்கிப்போற்றுகின்றோம்.

44. போற்றியேமறையுள்தேடும்பூங்கழற்புண்டரீகஞ்
சாற்றியவெமக்குத்தந்தாய்தண்ணளியெளிமையென்னோ
வாற்றலையொலிக்குஞ்சென்னியமலனேயின்றுநின்ற
தோற்றம்போலென்றும்யாங்கடொழுகமுன்னிற்கவென்றார்.

போற்றியே மறையும் தேடும்
பூங்கழற் புண்டரீகம்,
சாற்றிய எமக்குத் தந்தாய்
தண்ணளி எளிமை யென்னோ,

பா. வே. 44செய்யு மெய்த்தவம் 45 சேயொளி, 46 யாங்கள்தொழற்கு
* தாணு = பூரணன்

ஆற்றலை ஒலிக்குஞ் சென்னி
அமலனே! இன்று நின்ற
தோற்றம்போல் என்றும் யாங்கள்
தொழுக முன்னிற்க என்றார்.

பொருள்: திருவடித்தாமரையில் அழகிய வீரக்கழல் அணிந்த எம் தலைவனே! மறைகளாலுந் தேடி உணரப்படாதவனே!! போற்றி வணங்குகின்றோம். நீ எமக்கு அருள்கனிந்த அன்பொளியினைத் தந்தாய் உயிர்களிடத்தில் நீ கொண்ட அன்பின் பெருக்கால் எளிமை வடிவு கொண்டாய். அதனை எப்படிப் பகர்வோம். விரித்தசடையுடைய ஆற்றல் வடிவான உன் தலையில் இருந்து, நாதம்–பிரணவ, வடிவு கொண்டு ஒலிக்கக் கேட்கின்றோம். மலபந்தம் அற்றவனே! நீ இன்று அருள் சுரந்து நிற்கும் வடிவுடன் என்றும் நாங்கள் கண்டு தொழ எம்முன் நிற்பாயாக என்று கயிலை வந்த அனைவரும் வேண்டினர்.

45. என்றவர்மீண்டுமீண்டுமிணையடிபணியும்தோறு
மன்றவர்[47]மோலிமாலையரதனச்சோதிக்கற்றை
குன்றமாகயிலையெல்லாங்கோடிபல்[48]வெய்யோர்போல
வென்றிவெங்கிரணச்சூழல்[49]விரிந்தெனவிரிந்ததெங்கும்

என்றவர் மீண்டும் மீண்டும்
இணையடி பணியுந் தோறும்,
மன்றவர் மோலி மாலை
அரதனச் சோதிக் கற்றை,
குன்றமா கயிலை எல்லாம்
கோடி பல் வெய்யோர் போல,
வென்றி வெம் கிரணச் சூழல்
விரிந்தென விரிந்தது எங்கும்.

பொருள்: மன்றில் ஆடும் இறைவனை நோக்கி வேண்டிநின்ற, அடியவரான தேவர் – முனிவர் – மற்றுமுள்ளோரும், அவன் இணையற்ற திருவடிகளை வணங்குந்தோறும் அவன் முடியில் மாலையாய் அணிந்த படவரவின் நாகமணி ஒளி, பெருமை மிகு கயிலைக் குன்றெங்கும், பல கோடி கதிரவனின் ஒளியினையும் வென்று தன்னிலும் மிக்க தொன்றில்லா ஒளியினைப் பரப்பி நின்றது.

பா. வே. 47 மவுலி, 48 வெய்யோரீண்டி, 49 விரித்தென

46. விரிகதிர்த்தரளக்கொங்கைமெல்லியலரம்பைமாத
ரரிவையர்பிறரும்யாருமம்மைமுன்னிறைஞ்சியெம்மைத்
திருவடிக்கடிமைகொண்டுன்றிருவருள்சுரத்தியென்னப்
புரிவளைக்கரங்கள்கூப்பிப்புகழ்ந்தயனின்றாரன்றே.

விரிகதிர்த் தரளக் கொங்கை
மெல்லியல் அரம்பை மாதர்,
அரிவையர் பிறரும் யாரும்
அம்மைமுன் இறைஞ்சி, எம்மைத்
திருவடிக்கு அடிமை கொண்டு
உன்திருவருள் சுரத்தி யென்னப்,
புரிவளைக் கரங்கள் கூப்பிப்
புரந்து அயல் நின்றாரன்றே.

பொருள்: பவளம்போன்று மின்னொளிபரப்பும் திரண்ட கொங்கைகளையுடைய மெல்லியல்பு கொண்ட தேவர் தேவியரும் மற்றும் பிறபெண்களும்; அம்மையாகிய உமையின் முன்னின்று வேண்டுதல் செய்து வணங்கினர். அவ்வண்ணம் வணங்கிய அம் மகளிர் தம்வேண்டுதலில்; அம்மையே உன்திருவடிப்பணி செய்யும் அடியவர்களாக எம்மை ஏற்றருள்க எனக்கூறி, அழகிய சித்திரவேலைப் பாடமைந்த கங்கணங்கள் பூண்ட இருகைகளையும் கூப்பிப் புகழ்ந்து அம்மையின் அயலில் நின்றனர்.

47. அன்றந்தவமரவெள்ளமனைத்தையுந்[50]நனைத்தண்டாமக்
கொன்றையஞ்சடிலக்கோமான்குளிர்மலர்க்கடைக்கணோக்கி
நின்றதோர்நந்திதன்னைநின்கையிற்பிரம்பாநீக்கி
யின்றவையாகநிற்பித்திருபுறனிறுத்துகென்றான்.

அன்றந்த அமர வெள்ளம்
அனைத்தையும், நனைத் தண்டாம், அக்
கொன்றையம் சடிலக் கோமான்
குளிர்மலர்க் கடைக்கண் நோக்கி,
நின்றதோர் நந்திதன்னை நின்
கையிற் பிரம்பால் நீக்கி,
இன்று அவையாக நிற்பித்து
இருபுற நிறுத்து கென்றான்.

பா. வே. 50 நறைத்

பொருள்: கொன்றை மலர்கள் கொண்ட இளந்தளிர்களைச் சூடிய கயிலை இறைவன்; தன் அன்பருள்கொண்ட திருக்கண்ணால் அயல் நின்ற நந்திதேவரை நோக்கி; நின்கையில் உள்ள பிரம்பினால் வெள்ளம்போல் இங்கு கூடிய கூட்டத்தினரை விலக்கி, அவரவர் முறைமைக்கேற்ப இருபக்கங்களிலும் நிறுத்துக எனப் பணித்தனன்.

48\. நிறுத்தினனந்தியந்தநெடியமாலயனுந்தெய்வத்
திறத்தொருகோனும்வானோர்தொகுதியும்பிறருஞ்சேரக்
குறித்தவந்[51]நிலையேநின்றுகூப்பியகையராகி
மறைத்தபேருலகைமீளவகுத்தவாறுணர்த்துகென்றார்

நிறுத்தினன் நந்தி, அந்த
நெடியமால் அயனும் தெய்வத்
திறத்தொரு கோனும் வானோர்
தொகுதியும் பிறரும் சேரக்,
குறித்த அந்நிலையே நின்று
கூப்பிய கையர் ஆகி,
மறைத்த பேருலகை மீள
வகுத்தவாறு உணர்த்துக என்றார்.

பொருள்: மூதண்ட கூடம் முகடுமுட்டத் தன் திருவடியால் அளந்த நெடியோனான திருமாலும் – படைப்பின் கடவுளான பிரமனும் – தெய்வத் தன்மை பொருந்திய மறையவரும் – தேவர்தலைவனான இந்திரனும் – தேவர்கள் கூட்டமும், மற்றையோரும் தத்தம் தகுதிக்கேற்பக் குறித்த இடங்களில் நிற்கும்படி நந்திதேவர் நிறுத்தினார். அவ்வண்ணம் ஒழுங்குபட நின்ற அவர்கள்; தம் இருகைகளையும் இணையக் கூப்பி – ஒடுக்கம்பெற்று நின்ற உலகினை மீண்டும் வகுத்தமைத்த தன்மையினை உணர்த்துக என்று வேண்டி நின்றனர்.

49\. உணர்த்தருமுலகையெல்லாமுததிகொண்டலைத்தவெல்லைக்
குணிப்பருமனந்தகாலம்[52]பரையொருகுமிழியாகத்
தணிப்பிலாக்குமிழிக்கேயாமொளியெனத்தரித்துநின்று
பணித்தனமுழிச்செந்தீயதுகடல்பருகிற்றன்றே.

உணர்த அரும் உலகை எல்லாம்,
*உததி கொண்டு அலைத்த எல்லைக்,
குணிப்பரும் அனந்த காலம்,
பரையொரு குமிழி ஆகத்

பா.வே. 51 நிலையினின்று 52 குலவியபரமயோகம்.

தணிப்பு இலாக் குமிழிக்கேயாம்,
ஒளியெனத் தரித்து நின்று,
பணித்தனம் ஊழிச் செந்தீ,
அது கடல் பருகிற்றன்றே.

பொருள்: உணர்த்துதற்கரிதான இவ்வுலகனைத்தையும், கடஊழி தன்னகத்தே கொண்டு அலைத்ததனைக் குறிப்பிட்டுக் கூறக் கூடியதான காலம்; எல்லையுடையதன்று. அவ்வேளை உமையாகிய சக்தி குமிழியாகி நின்றனள். அக்குமிழியாகிய சக்தியிடம் பேரொளி யாகச் செறிந்து நின்று ஊழித்தீயை வெளிப்படுத்தும்படி பணித்தனன். அவ்ஆழிச் செந்தீ; ஊழிப் பெருக்காய் நின்ற கடல்நீர் அனைத்தையும் அன்றே தன்னுள் அடக்கியது *உததி=கடல்.
அன்றே: பொருள்தரும் அசைச்சொல்.

50. பருகலுங்குமிழியிந்தப்பருப்பதாயிற்[53]றங்கண்
மருவினந்துணைவியோடேமறித்துநம்வடிவத்தூடே
யருநெறிமூவரைத்தந்தவர்பொருட்டகிலமெல்லாம்
விரிதரச்[54]செய்வித்திந்தச்சேடனைவிடுத்தோமென்றான்

பருகலும் குமிழி இந்தப் பருப்பதம்
ஆயிற்று, அங்கண்
மருவினன் துணைவியோடே மறித்து
நம் வடிவத்து ஊடே,
அருநெறி மூவரைத் தந்து, அவர்
பொருட்டு அகிலம் எல்லாம்
விரிதரச் செய்வித்து இந்தச்
சேடனை விடுத்தோம் என்றான்

பொருள்: ஊழித்தீயானது; ஊழிப்பெருவெள்ளத்தைத் தன்னுள் அடக்கிய பொழுதில் குமிழியானது கயிலை மலையாயிற்று. அதில்; ஒளிவடிவில் நின்றும்மாறி என்துணைவியான சக்தியுமையுடன் எழுந் தருளினேன். பெருமைக்குரிய பிரமன், திருமால், உருத்திரன் ஆகிய மூவரையும் படைத்து படைத்தல்–காத்தல் *ஒடுக்கல் ஆயமுத் தொழி லையும் செய்யும்படி பணித்தேன். அதனால் இந்நிலம் அனைத்தும் (பிரபஞ்சம்) விரிந்து செழுமையுற்றது. இவ்வகிலத்தைத் தாங்கி நிற்கும்படி என் அடியவனான ஆதிசேடனை விடுத்தேன் என இறைவன் பகர்ந்தனன். படைத்தல்–காத்தல்–அழித்தல் என முத்தொழிலையும் குறிக்கும் மரபுண்டு. இந்து தத்துவத்தின்படி அழிவு இல்லை. ஒடுக் கமேயுண்டு.

பா.வே. 53 இங்ஙன், 54 செய்வித்தேந்தச்.

51. என்றலுமிரலையூர்தியிறைஞ்சிநின்[55]றைம்பூதத்தா
லுன்றிருவருளாலெந்தவுலகிற்குநிலைமையல்லா
லன்றியும்பிறிதொன்றில்லையாதலாலெமைச்சொலாது
வென்றியிற்சேடனேந்துமென்றதென்விமலவென்றான்.

என்றலும் *இரலை ஊர்தி, இறைஞ்சி
நின்று, ஐம்பூதத்தால்
உன் திருவருளால் எந்த உலகிற்கும்
நிலைமை அல்லால்,
அன்றியும் பிறிது ஒன்று இல்லை,
ஆதலால் எமைச் சொலாது,
வென்றி இச்சேடன் ஏந்தும் என்றது
என் விமல என்றான்,

பொருள்: இறைவன் மொழிகேட்ட வாயுதேவன் இறைவனை வணங்கி நின்று, உன்திருவருளால் ஐம்பூதத்தின் செயல் கொண்டு இவ்வுலகு அமைவு பெற்றுள்ளது. இவ்வுலகம் நிலைப்பதற்கு உன் அருளே துணையாகும். உன் திருவருளைத் தவிர வேறு ஒன்றும் இதற்குத் துணையாகமாட்டா. ஆதலால் இறைவா! எம்மைப்பணிக்காது, வெற்றி பொருந்திய ஆதிசேடன் ஏந்தி நிற்பப் பணித்ததேன் என வினவினான். * இரலை = காற்று, ஊர்தி = வாகனம் காற்றினைத் தன் ஊர்தியாகக் கொண்டதனால் வாயுதேவன் இரலையூர்தியெனப்பட்டான்.

வேறு

52. ஆனகாலையங்கரவினுக்கரசனின்றாழலா
வூனமொன்றிலார்பற்பலரிருப்பநீயொருவன்
மானவென்வலிசொல்லலுமனம்பதைத்தெழுந்தா
யீனநின்மதிகாண்மதியென்பதிங்கிதுவே.

ஆனகாலை அங்கு அரவினுக்கு
அரசன் நின்று அழலா,
ஊனம் ஒன்றிலார் பற்பலர்
இருப்ப, நீ ஒருவன்
ஆன என் வலி சொல்லலும்
மனம் பதைத்து எழுந்தாய்
ஈன நின்மதி காண்மதி
என்பது இங்கு இதுவே.

பா. வே. 55 அறைவான் 56 ஈனநின்மதிகான்

பொருள்: வாயுதேவன் இறைவனை நோக்கி; ஆதிசேடனுக்குப் பூமியினைத்தாங்கும் பணியினைக் கொடுத்ததேன் என வினவி நின்ற பொழுது, அதனைக்கேட்ட நாகங்களின் அரசனான ஆதிசேடன் வாயுதேவனை நோக்கிச் சினந்து; குறைபாடுகள் ஒன்றும் இல்லாத சினமற்ற சான்றோர் பலர் இருக்கவும், நீ ஒருவன் மட்டும் இத்தகைய வினாவினைக் கேட்டதேன், அதற்கு என்வலிமையே பதில் சொல்லும். மனச் செம்மையற்றுப் பொறுக்காது காழ்ப்புணர்வு கொண்டு நீ எழுந்தனை. உன்னுடைய இழிந்த புத்தியினியல் பினைக் காண்பாயாக. மதித்தல் என்பது அவரவர் இயல்பின் ஆற்ற லைப் பொறுத்ததாகும்.

53\. இதுமொழிந்தநின்னாண்மையெத்தனைக்குமீறாக
வதிருமாயிரம்வாயிலோர்வாய்க்கடையமையும்
விதுவுஞ்செங்கதிர்க்கடவுளும்விழுங்குவனென்றால்
முதிருந்தேவர்முன்னீகொலோவிகழ்ந்தெனை[57]மூவாய்.

இதுமொழிந்த நின் ஆண்மை
எத்தனைக்கும் ஈறாக
அதிரும் ஆயிரம் வாயில்
ஓர்வாய்க்கடை அமையும்,
இதுவும் செங்கதிர்க் கடவுளும்
விழுங்குவது என்றால்,
முதிரும் தேவர்முன் நீகொலோ
இகழ்ந்தது என்ன *மூவாய்.

பொருள்: வாயுவே! இவ்வண்ணம் கூறிய உன் ஆண்மை அத்த னைக்கும் முடிவாக, அதிர்ச்சி செய்யும் என் ஆயிரம் வாயில் ஓர் வாயின் கடைப்புறத்து அமையும் – இம்மலையையும், செங்கதிர் கடவுளான கதிரவனையும் விழுங்குவேன். அத்தகைய வலியுடைய என்னைப் பெருமைமிகு, மூத்த தேவர் முன் இகழ்ந்தனை. அடக்க மற்ற இழியியல்பு கொண்டவனே! நீயா என்னை இகழ்வது.
*மூவாய் = மூதேவி

54\. வாயினாற்சிலசொல்லலாம்வருவதொன்றுளதோ
நாயகன்றிருவருளினானாமிரு[58]வோருந்
[59]தீயபூசலையியற்றினாற்றெரியுமிங்கென்றான்
மேயவாயுவுநகைத்தெதிர்புகையெழவிழித்தான்,

பா.வே. 57 முனிவாய் 58 இருபேரும் 59 தீயபூசல்

வாயினாற் சில சொல்லலாம்
    வருவது ஒன்று உளதோ
நாயகன் திரு அருளினால்
    நாம் இருவோரும்
தீய பூசலை இயற்றினால் தெரியும்
    இங்கு என்றான்,
ஏய வாயுவும் நகைத்து எதிர்
    புகையெழ விழித்தான்.

பொருள்: மீண்டும் ஆதிசேடன் வாயுவை நோக்கி; வாயினாற் சிலவற்றைச்சொல்லலாம் அதனால் வரும் பயன் ஒன்று உண்டோ? தலைவனான சிவனின் திருவருளை முன்னிட்டு நாம் இருவரும்; மாறுகொண்ட பயனற்ற ஒரு போராட்டத்தினைச் செய்தால் தெரியும் எமது தகுதி எனக் கூறினன். அதனைக் கேட்ட வாயு தேவன் அக்கூற்றுக் கெதிராகப் புகையெழ விழித்து நகைத்தான்.

55\. விழிகண்மூன்றுடையெம்பிரானேவலால்விதித்த
வழிவில்பேரண்டச்சராசரமனைத்திற்குநினக்கு
மூழுதுமாவியுள்யானொருமுயக்கமாய்[60]முயங்காப்
பொழுதுநிற்குநில்லாதெனவறிகிலைபுல்லோய்.

விழிகள் மூன்றுடை எம்பிரான்
    ஏவலால், விதித்த
அழிவில் பேரண்டச் சராசரம்
    அனைத்திற்கும் நினக்கும்
மூழுதும் ஆவியுள் யான். ஒரு
    முயக்கமாய் முயங்காப்
பொழுது நிற்கும் நில்லாது என
    அறிகிலை புல்லோய்.

பொருள்: சூரியன் சந்திரன் அக்கினி ஆகியவற்றை முக்கண்ணாக வுடையவனும் சூரியகலை சந்திரகலை சுழுமுனை என்ற முத்திறத் தாலும் இப்பிரபஞ்சத்தினை இயக்குபவனுமான எம் தலைவன் சிவனின் பணிப்பின் பேரில் விதித்த முறைக்கிணங்க வழுவேற் படாது, இப்பேரண்டத்தில் அமைந்த பிரபஞ்சம் அனைத்திற்கும், உனக்கும் உயிரின் உயிர்ப்பாய் நின்று இயங்குகின்றேன். யான்; இயங்காதுவிட்டால் அனைத்துமே இயங்காது நிற்கும். நான் இயங்கி னாலே அனைத்தும் இயங்கும். இதனை இழிந்த இயல்பு கொண்ட நீ உணரவில்லை.

பா. வே. 60 இயங்கா, 61 நானுழிதரவுழிந்ததிவ்வுலகர், 62 உரைப்பதும்

56. ஓயவோய்ந்து[61] நானொழிந்தபோதொழிந்ததிவ்வுலகிற்
காயமாதியவநாதியாய்வருவதுங்கருதாய்
நீயிருக்கிலென்பொருகிலெனீயுமோர்பொருளோ
மேயகோபுரந்தாங்கியென்று[62]ரைப்பதுவிருதோ.

ஓய ஓய்ந்து நான் ஒழிந்தபோது
ஒழிந்தது இவ்வுலகில்
காயம் ஆதி அவ் அநாதியாய்
வருவதும் கருதாய்,
நீ இருக்கிலென் பொருகிலேன்,
நீயும் ஓர் பொருளோ,
ஏய கோபுரம் தாங்கி என்று
உரைப்பது விருதோ.

பொருள்: ஆதிசேடா இவ்வுலகம் நான் ஓய்ந்ததும் ஓய்ந்து விடும். நான் இல்லாது போனால் அதுவும் ஒழிந்துவிடும். இவ்வுலகில் வடிவு கொண்டுதோன்றும் அனைத்திற்கும் தொடக்கமும் முடிவும் உண்டு. ஆயின் எம் இறைவனாகிய தலைவன் தோற்றமும் முடிவுமற்று அனாதியாய் இருப்பவன். அதன் உள்பொருள் இயல்பினை நீ உணரவில்லை. நீ இருப்பதும் போர் செய்வதும் பயனற்ற செயலே. பெரிய அமைப்புடைய கோபுரத்தில் அதனை அழகு செய்ய அக் கோபுரத்தைத் தாங்கி நிற்கும் முறையில் அமைக்கப்பட்ட பாவை — போன்றவன் நீ எனக் கூறுவது வேடிக்கைச் சொல் அன்று அதுவே சரி.

57. விருதுகூறியநின்வலியென்வலிவிரைவிற்
பொருதுகாண்குதுமென்றலுமுரகனும்புகைந்து
வருதியென்றனனிருவருமிறைவனைவணங்கித்
தருதிபோரெனப்போர்க்கிடங்கொடுத்தனன்றலைவன்.

விருது கூறிய நின்வலி
என்வலி விரைவில்
பொருது காண்குதும் என்றலும்,
உரகனும் புகைந்து
வருதி என்றனன், இருவரும்
இறைவனை வணங்கித்
தருதி போர்எனப் போர்க்கு
இடம் கொடுத்தனன் தலைவன்.

பொருள்: வாயுதேவன் ஆதிசேடனை நோக்கி; வீரமொழி புகன்று புகழ்ந்து நிற்கும் உனது வலிமையையும் என் வலிமையையும் மிக்க விரைவில் போர் புரிந்து காண்போம் எனக் கூறினன். அதனைக் கேட்ட ஆதிசேடனும் சினந்து போருக்கு வருக என்றனன். இருவரும் இறைவனை வணங்கிப் போருக்கு இடந்தருக என வேண்டி நின்றனர். அவ்வேண்டுதலையேற்ற சிவபெருமான்; போர் செய்வதற்கு இடங் கொடுத்தனன்.

58. தலைவன்கூறியபணியினாற்றமனியமேரு
நிலவுமாயிரஞ்சிகரமுந்திசைதிசைநெருங்கப்
[64]பலபணாமுடிபரப்பிநான்மறைப்பனீபறிக்கி
னுலகெலாமுனக்கொருதனித்தலைமையுண்டென்றான்.

தலைவன் கூறிய பணியினால்,
தமனிய மேரு
நிலவும் ஆயிரம் சிகரமும்
திசை திசை நெருங்கப்
பல பணாமுடி பரப்பி
நான் மறைப்ப, நீபறிக்கின்
உலகு எலாம் உனக்கு ஒரு
தனித் தலைமை உண்டென்றான்.

பொருள்: வாயுதேவா! இறைவன் கூறிய ஆணைப்படி, பொன் மயமான மேருமலையில், திக்குகள் அனைத்தும் விளங்கும் ஆயிரம் குவடுகளையும், என் பலங்கொண்ட தலைகளின் விரிந்த படங்களால் மூடி மறைக்கின்றேன். அப்போது மேருவில் உள்ள அதன் குவடுகளை நீபறித்து எறிவாயாயின், அனைத்துலகிலும் உனக்குத் தனித்தலைமை உண்டு என ஒப்புக்கொள்வேன் எனக் கூறினன் ஆதிசேடன்.

59. உண்டெனப்பரிபவம்பெரிதுரைத்தவாயுடைத்து
மண்டுசூடிகைப்பொறிப்படங்கிழிபடமலைந்து
சண்டவூழியினுலகெலாந்தவறினுந்தவறாக்
கொண்டன்மால்வரைச்சிகரமுங்கொள்வன்யானென்றான்.

உண்டு எனப் பரிபவம், பெரிது
உரைத்த வாய் உடைத்து,
மண்டு சூடிகைப் பொறிப்படங்
கிழிபட மலைந்து,
சண்ட ஊழியின் உலகு எலாம்
தவறினும், தவறாக்
கொண்டன் மால்வரைச் சிகரமும்
கொள்வன் யான் என்றான்.

பா.வே. 63 தவளவான் கயிலை 64 பல பணாமுடிப் பரப்பி

பொருள்: ஆதிசேடா! வலிமை எனக்குண்டு எனப் பெரிதும் புகழ்ந்துரைத்த உன்வாயினை உடைத்து, உன் தலைகளில் உள்ள புள்ளிகள் கொண்டமைந்த விரிந்த படங்களையும் கிழித்துச் சிதைப்பேன். இப்போரின்மூலம், ஊழியிறுதியில் உலகெலாம் அழிந்தபோதும் தான் அழியாது நிற்கும்–மழைக்கருக் கொண்ட முகில் சூழ்ந்த மேருவின் குவட்டினை, யான் கொள்வேன் எனக் கூறினன் இரலையூர்தி.

60. என்றவாயுவுஞ்சேடனுமெதிரெதிர்மலைந்து
நின்றபூசலைநோக்குவம்யாமெனநிமலன்
நன்றுணைப்பெருந்தேவியுந்தானும்வானவருஞ்
சென்றுமுன்றிலிற்போந்துபுன்முறுவலுஞ்செய்தான்

என்ற வாயுவும் சேடனும்
எதிர் எதிர் மலைந்து
நின்ற பூசலை நோக்குவம்
யாம் என நிமலன்,
தன்துணைப் பெரும் தேவியும்
தானும் வானவரும்
சென்று முன்றிலில் போந்து
புன் முறுவலுஞ் செய்தான்.

பொருள்: வீர உரைகள் பகர்ந்த வாயுதேவனும்–ஆதிசேடனும், எதிர் எதிராக 'நின்று தாக்குதல் செய்யும் போரைக் காண்போம் யாமென இறைவன் கூறினன். அவ்வண்ணம் புகன்ற இறைவன் தன் பாகமாகக் கொண்ட உமையுடன், தேவர்கள் சூழத் தான் எழுந்தருளியிருந்த திருக்கோயிலின் முற்றத்தில் சென்று அமர்ந்து புன்முறுவல் செய்தான்.

61. செய்யசூடிகைப்[65]பொறிபடம்விரித்தவச்சேடன்
மொய்கொளாயிரங்குவடுமுட்புதைபடமூடி
யையன்வெண்ணிறக்கயிலைக்குச்செந்நிறத்தநேகந்
துய்யமாமணிக்கோளகைவிரித்தெனச்சூழ்ந்தான்

செய்ய சூடிகைப் பொறி
படம் விரித்த அச்சேடன்,
மொய்கொள் ஆயிரம் குவடும்
உட் புதைபட மூடி,
ஐயன் வெண்ணிறக் கயிலைக்குச்
செந்நிறத்து அனேகம்
துய்ய மாமணிக் கோளகை
விரித்தெனச் சூழ்ந்தான்.

பா.வே. 65 பொறிப்பட

பொருள்: பெருந்தவத்தோனான ஆதிசேடன்; தன் அழகுமிகு புள்ளிகள் கொண்ட படங்களை விரித்து, ஆயிரம் குவடுகளையும் அதனுள் அடக்கி தன் உடலால் அவற்றைச் சுற்றிவளைத்து நின்றனன். இந்நிகழ்வினால், ஆதிசேடனின் தலைமுடியில் இருந்த நாக மணிகளின் ஒளிகள் இறைவன் வீற்றிருந்த வெண்மை நிறங்கொண்ட கயிலை மலைக்குச் செம்மை யூட்டின.

62. சூழுமாருதக்கடவுளுஞ்சுழித்தெறிந்தார்த்தான்
பாழிமேருவே[66]முதலியபருவரைக்குழாமு
மாழியம்பெருங்குன்றமுமடிபெயர்ந்தசைய
வூழிகாலமோவிதுகொலென்றுலகுளோருலைந்தார்

சூழும் மாருதக் கடவுளும்
சுழித்து எறிந்து ஆர்த்தான்,
பாழி மேருவே முதலிய
பருவரைக் குழாமும்
ஆழியம் பெருங் குன்றமும்
அடி பெயர்ந்து அசைய,
ஊழி காலமோ இதுகொல் என்று
உலகுளோர் உலைந்தார்

பொருள்: ஆதிசேடன் அவ்வண்ணம் சூழ்ந்து நின்றபொழுது, காற்றின் தலைவனான வாயுதேவனும், வேகத்துடன் சுழித்து மிகுந்த பேரொலியினை எழுப்பினன். அவ்வேளை; பாதாளம்வரை ஆழ்ந்து வான்வரை உயர்ந்துநின்ற மேருவும், அதுபோன்ற மலைக்கூட்டங்களும், ஆழிப்பேருழியிலும் நிலைகெடாது நின்ற இமயமும், தம்நிலை கெட்டு அசைந்தன. ஊழிக்கால இறுதியோ இதுவென உலகோர் எண்ணும்படி உலைந்தன.

63. உலைந்தவாயிரகோடிபேரண்ட[67]மோடுலக
மலைந்தபூசலுமலைபவன்பவனுமாகக்
கலைந்தவெள்ளிவெற்பதிலொருபெண்ணெனக்கறங்கத்
தொலைந்துமண்ணெடுவிண்முதல்சுழல்படச்சுழன்றான்

உலைந்த ஆயிர கோடி
பேர் அண்டமொடு உலகம்,
மலைந்த பூசலும் மலைபவன்
பவனனும் ஆகக்,

பா.வே. [66]ஆகிய, [67]ஒருலக

கலைந்த வெள்ளி வெற்பு அதில்
ஒரு பெண்ணெனக் கறங்கத்,
தொலைந்தது மண்ணொடு விண்முதல்
சுழல்படச் சுழன்றான்.

பொருள்: ஆயிரங்கோடி பேரண்டங்கள் உட்பட அனைத்துலகும் வாயுதேவனின் செயலால் அலைவுற்றுச் சுழன்று, மயக்க மடைந்தன. வெள்ளி மலையான கையிலையும் அச்சுழற்சியினால் ஒரு பெண் நடனமாடுவதுபோல் சுழன்றாடியது. மேலும் மண்ணும்–விண்ணும், தொலைந்து போம்படி சுழன்று ஆடினன் இரலையூர்தி.

64\. சுழலுமேழ்கடற்பரப்பெலாஞ்சிறுகுறுந்துளிபட்
டுழலுமெண்டிசைக்கிரிபொடிபறக்குமென்றி[68]சைத்தாற்
றழலுநீத்தமும்விண்ணுமண்ணுந்தடுத்திடினு
மழலுமாருதத்தெறிசினமடங்குமோவடங்கா.

சுழலும் ஏழ்கடல் பரப்புஎலாம்
சிறு குறுந் துளிபட்டு
உழலும் எண்டிசைக் கிரி
பொடி பறக்கும் என்றுஇசைத்தால்,
அழலும் நீத்தமும் விண்ணும்
மண்ணும் தடுத்திடினும்,
அழலும் மாருதத்து எறிசினம்
அடங்குமோ அங்கா.

பொருள்: இரலையூர்தியான வாயுதேவனின் மிக்க வேகங் கொண்ட சுழற்சியால், உப்புக்கடல், தேன்கடல், கருபஞ்சாற்றுக் கடல், தயிர்க்கடல், நெய்க்கடல், பாற்கடல், சுத்தோதகக் கடல் ஆகிய ஏழு பெருங்கடல்களிடைப்பட்ட நீரெலாம், சிறு சிறு துளிக ளாகச் சிதறின. எட்டுத்திக்கும் காவல் அரண்களாக அமைந்த இமயம்–ஏமகூடம்–கந்தமானதம்–கயிலை, நிடதம், நீலகிரி, மந்த தரம், விந்தம் ஆகிய மலைகள் அனைத்தும் பொடிப் பொடியாயின வெனக் கூறின்; ஊழித்தீயும் ஊழிநீர்ப்பெருக்கும், விண்ணுலகும்–மண்ணுலகும் தம்முள் இணைவு கொண்டு ஒன்றுசேர்ந்து தடுக்க முனைந்தாலும் சினங்கொண்டெழுந்த இரலையூர்தியின் ஆற்றலை அடக்க முடியுமோ? அது இயலாது.

பா.வே. 68 என்றுரைத்தாற் சுத்தநீர்க்கடல் என்றும் பாடம்

65. அடங்குமப்பொழுதமரருமுனிவருமயனும்
படங்கொள்பாயலான்முதலியபலருமெம்பகவ
னிடங்கொள்சேவடியிறைஞ்சினின்றினியொருகணத்தி
லொடுங்குமண்டமுஞ்சராசரக்குழாங்களுமுரவோய்

அடங்கும் அப்பொழுது அமரரும்
முனிவரும் அயனும்
படங்கொள் பாயலான் முதலிய
பலரும், எம்பகவன்
இடங்கொள் சேவடி இறைஞ்சி நின்று,
இனி ஒரு கணத்தில்
ஒடுங்கும், அண்டமும் சராசரக்
குழாங்களும் உரவோய்.

பொருள்: வாயுதேவனின் அடக்கமுடியாச் செயலினால் நிகழ்ந்து கொண்டிருக்கும் நிலைதடுமாற்றத்தைக் கண்ட, தேவர்கள் – முனிவர்கள் – பிரமன், ஆதிசேடனைப் படுக்கையாகக்கொண்ட திருமால் முதலான பலரும் எம் தலைவனான சிவனின் திருவடிகளை வணங்கி நின்று; இறைவா! இனி ஒரு கணப்பொழுதேனும் இச்செயல் தொடருமாயின், அண்டங்களும் – அவற்றுள் அடங்கிய இப்பிரபஞ்சமும் ஒன்றுசேர ஒடுக்கம் பெற்றுவிடும் என்றனர்.

66. உரமிரண்டினுமொன்றோடொன்றிழி[69]படாதொருவர்
விரவுமோர்தலைவிலக்கலேநன்றெனவிளம்ப
வரவையாயிரங்குவட்டிலோர்குவடுவிட்டகலச்
சுராரியம்புமினெனவிளம்பின[70]னுமையவடுணைவன்

உரம் இரண்டினும் ஒன்றொடு ஒன்று
இழிபடாது ஒருவர்
விரவும் ஓர்தலை விலக்கலே
நன்று என விளம்ப,
வரவை ஆயிரம் குவட்டில்
ஓர் குவடு விட்டு அகலச்
சுரர் இயம்புமின் என விளம்பினன்,
உமையவள் துணைவன்.

பா.வே. 69 ஒளிபடர்ந்து, 70 உமைதுணைவன்

பொருள். இறைவா! ஆதிசேடனோ அன்றி வாயுதேவனோ வலிமையில் ஒருவருக்கொருவர் இளைத்தவரல்லர். ஆதிசேடன், குவடுகளை மூடிய தன் ஆயிரம் படங்களில் ஒன்றினை விலக்குதலே நன்று' எனத் தேவர்கள் கூறினர். அதனைக்கேட்ட மலைமகளைத் தன் பாகமாகக் கொண்ட இறைவன் – தேவர்களை நோக்கி, மலைக் குவட்டில் ஆயிரத்தில் ஒன்றினை விட்டு விலகும்படி ஆதிசேடனிடம் கூறுக எனப் பணித்தனன்.

67. துணைக்கைகூப்பினரோடினர்சொல்லினர்சேட
னணைக்குமாயிரம்பணாமுடிக்கொருமுடியகற்றப்
பணைக்குமச்சிகரந்தனைக்கையுறப்பறித்துக்
கணைக்குநேர்கண்ணிபங்கன்முன்வைத்ததக்காலே.

துணைக்கை கூப்பினர் ஓடினர்
சொல்லினர். சேடன்
அணைக்கும் ஆயிரம் பணாமுடிக்கு
ஒருமுடி அகற்றப்
பணைக்கும் அச் சிகரந்தனைக்
கையுறப் பறித்துக்
கணைக்கு நேர் கண்ணிபங்கன்
முன்வைத்தது அக்காலே.

பொருள்: அதனைக் கேட்ட தேவர்கள், இறைவனை நோக்கித் தம்மிரு கையும் கூப்பி வணங்கினர். ஆதிசேடனிடம் விரைந்து ஓடினர். இறைவன் பணித்த உரையினைப் பகர்ந்தனர். அதனைக் கேட்ட ஆதிசேடன், தன் ஆயிரம் படங்கள் கொண்ட தலைகளில் ஒன்றினைக் குவடு ஒன்றிலிருந்து விலக்கினன். அவ்வேளையில் வலிமை மிக்க அக்குவட்டினை வாயுதேவன் தன் கைகளால் பறித்து, கூரிய அம்பு போன்ற ஒளிமிக்க கண்களையுடைய மலைமகளைத் தன் பங்காகக் கொண்ட சிவன் முன் வைத்தனன்.

68. காலமீறெனவிறந்திடாதுலகெலாங்[71] காத்த
[72] தாலவாளராவொருபடஞ்சாய்ந்தெனவறைந்தார்
மேலைவானவர்[73] நீலனை நோக்கியுன்வீரம்
போலவாருளர்வீரமென்றவனையும்புகழ்ந்தார்.

பா.வே. 71 காத்தாய், 72 வலரா, 73 அனிலனை

காலம்ஈறென இறந்திடாது
உலகெலாம் காத்த
ஆல வாளரா ஒருபடம்
சாய்த்தது என அறைந்தார்,
மேலை வானவர் நீலனை
நோக்கி உன்வீரம்
போல ஆருளர் வீரம்என்று
அவனையும் புகழ்ந்தார்.

பொருள்: தேவர்கள் ஆலகால நஞ்சினைத் தன்னிடம் கொண்ட ஆதிசேடனை நோக்கி, ஊழிக்கால முடிவு இதுவென நிகழ்ந்திடாது உன் ஒரு படத்தினை விலக்கி உலகெலாம் காத்தனை எனப் புகழ்ந்து பாராட்டினர். மேலும் அவர்கள் வாயுதேவனையும் நோக்கி உன்வீரம் போல் வேறுயாரிடம் வீரம் உண்டு எனப் புகழ்ந்தனர்.

69. புகழ்ந்தவாயுவைக்கயிலையின்றென்புறம்[74]போந்து
திகழ்ந்தவித்திரிகூடமாஞ்சிகரத்தையேந்தி
மகிழ்ந்தி[75]யாமதில்வருகுவந்தென்கடன்மருங்கே
நிகழ்ந்தவீழத்தின்வடகரைநிறுத்துநீயென்றான்.

புகழ்ந்த வாயுவைக் கயிலையின்
தென்புறம் போந்து,
திகழ்ந்த இத்திரி கூடமாம்
சிகரத்தை ஏந்தி,
மகிழ்ந்து யாம்அதில் வைருகுவம்,
தென்கடல் மருங்கே
நிகழ்ந்த ஈழத்தின் வடகரை
நிறுத்து நீ என்றான்.

பொருள்: இறைவன்; தேவர்களால் புகழப்பட்ட வாயுதேவனை நோக்கி, உன்னால் பறிக்கப்பட்ட மூன்று கோணம் அமைந்த இம் மலைக்குவட்டினை யேந்திச் சென்று, தென்கடலின் பக்கத்தே அமைந் துள்ள ஈழநாட்டின் வடகரையில் நிலை நிறுத்துக எனப் பணித்தனன்.

பா.வே. 74 பொலிந்து, 75 யாமிதில்.

வேறு

70\. என்றரன்றிரிகூடவெற்பிலெழுங்கொழுந்துறவேறினன்
துன்றுமாலயன்வாசவன்சுரநாடர்சூழவணங்கினார்
நின்றவாயுவைநோக்கியிந்தநெடுங்குவட்டினையேந்தென
வன்றுகூறினனென்றுநாகமதாடவம்புலிசூடினான்.

என்று அரன் திரிகூடவேற்பில் எழும்
கொழுந்துற ஏறினன்,
துன்றுமால் அயன் வாசவன் சுரநாடர்
சூழ வணங்கினார்,
நின்ற வாயுவை நோக்கி, இந்த நெடுண்
குவட்டினை ஏந்தென,
அன்று கூறினன் என்றும் நாகமதாட
அம்புலி சூடினான்.

பொருள்: முடிமேல் இருக்கும் நாகம் என்றும் ஆட மூன்றாம் பிறைச் சந்திரனைச் சூடிய இறைவன்; தன்முன்னே வணங்கி நின்ற வாயுதேவனை நோக்கி, இந்த நெடிய குவட்டினை ஏந்தென அன்று பணித்தனன். அப்பணிப்பின்படியே, வாயு திரிகோண வடிவுடைய அம்மலைக் குவட்டினை தென்கடலிடை ஈழநாட்டின் வடபுறத்தே வைத்தனன். அம்மலைக் குவட்டில் செம்மை சான்ற செழுங்கொடி படருவதுபோல், தன்துணைத் தேவியுடன் ஏறினான் இறைவன். அவ்வேளையில்; நெருக்கமுற்று நின்ற திருமால்–பிரமன்–இந்திரன் முதலியவர்களுடன் வானநாட்டவரும் சூழ்ந்து நின்று வணங்கினர்.

71\. அம்புராசிகொளூழிபோயபினாமுகம்பதினெட்டுகளும்
நம்புசீரவியத்தமாதிநடக்குமிந்தவுகத்துளே
விம்பர்வாழவிலங்கையிற்கடிதெய்துவந்திரி[76]கூடமோ
டும்பர்மாலயனீவிர்வம்மெனவோதினா[77]னுலகாதியான்.

அம்புராசிகொள் ஊழி போயபின்,
நா முகம் பதினெட்டுளும்,
நம்பு சீர் ரவி, அத்தம், ஆதி
நடக்கும் இந்த உகத்துளே,
இம்பர் வாழ இலங்கையில் கடிது
எய்துவம் திரிகூடமோடு,
உம்பர் மால் அயன் நீவிர் வம்மென
ஓதினான் உலகாதியான்

பா.வே. 76 கூடமே 77 உமையாதியான்

பொருள்: மீனராசியில் இருந்து மிதுனராசிவரை—உத்திரட்டாதியில் இருந்து புணர்பூசம் வரையுள்ள ஒன்பது நட்சத்திரங்களின் நாட்கள் கழிந்தபின் மிகுதியாய் அமைந்த பதினெட்டு நட்சத்திரங்களில் அத்த நட்சத்திரத்தில், சூரியன் இருக்கும் நல்லோரையில் உலகோர் நல்வாழ்வுபெற இலங்கைக்கு விரைந்து சென்று முக்கோணவடிவு கொண்ட திருமலையில் எழுந்தருளுவேன். அவ்வேளையில், தேவர்கள் திருமால்—பிரமன் உள்ளிட்ட அனைவரும் வருக என்று அருளினன் உலகமுதல்வனான சிவன்.

72\. ஆதிகேசவனாதிவாசவனமரர்நன்பரிவாரமாய்ப்
போதவேதனியற்றியிட்டசடங்கினிற்கலைபுகலநீ
யோதவேலையிலங்கையுத்தரமுயரும்வெற்பினடிக்கொரு
[78]தாதுபோற்கதவிட்டுமீதுதரித்தனன்னமருத்தனே

ஆதி கேசவன் ஆதி வாசவன்
அமரர் நன் பரிவாரமாயப்
போத வேதன் இயற்றி இட்ட
சடங்கினில் கலை புகல, நீ
ஓத வேலை இலங்கை உத்தரம்
உயரும் வெற்பின் அடிக்கொரு
தாதுபோல் கதவிட்டு, மீது
தரித்தனன் அன்ன மருத்தனே.

பொருள்: பிறப்புக் குரியரான திருமால், உருத்திரன், இந்திரன் உள்ளிட்ட தேவர்கள் அனைவரும் நன்முறையில் ஒழுங்கமையச் சூழ்ந்து நிற்கத் தாமரை மலரோனான பிரமன்; வேதம் ஓதிச் சடங்குகளைச் செய்து இன்கலைகளைப் பகர்ந்து நின்றனன். அவ்வேளையில் இறைவன்; பிரமனை நோக்கி, ஒலிமிக்க அலைகொண்ட கடலிடத்தமைந்த இலங்கையில் நிலைப்படுத்தப்பட்ட திருமலையின் அடிக்கு, வித்துப்போல் கதவிடுக என்று பணித்தனன். அவ்வண்ணம் பிரமன் இயற்றவே, அத்திருமலை மீதில் ஆன்மாக்களின் மலம் நீக்கும் மருத்துவனான இறைவன், எழுந்தருளி இருந்தனன்.

73\. அருத்திசித்திரையுத்தராயணமாதபத்தினமத்தநாட்
குருத்திகழ்ந்திடுமோரைபூரணைகூடுமாணியம்வேனிலாம்
பருத்தமாமகரத்துமுன்னொருபங்குறத்[79]திரிகோணமிங்
கிருத்துகாலமெனத்தெரிந்தயன்யாவருக்குமியம்பினான்.

பா.வே. 78 தாதுபொற்கதவிட்டு

+அருத்தி சித்திரை உத்தராயண மாத
*பத்தினம் அத்தநாள்;
குருத் திகழ்ந்திடும் ஓரை பூரணை கூடும்
+ஆன் இயம் ▽வேனிலாம்
பருத்த மாமகரத்து முன்னொரு
பங்குறத், திரிகோணமிங்கு
இருத்து காலமெனத் தெரிந்து, அயன்
யாவர்க்கும் இயம்பினான்.

பொருள்: அருமை மிகு உத்தராயண காலத்தில்—வசந்தகாலப் பருவத்தில், சித்திரை மாதமும்—பூர்வபக்கமும் ஞாயிற்றுக்கிழமையும் அத்த நட்சத்திரமும் விருத்தியோகமும், தைதுலகரணமும் கூடிய முழுமதி நாளில், குருவோரையில்—சனி மகரராசியில் புகும் நேரத்தில்—இடப இலக்கின சுபவேளையில், திரிகோண மென்ற திருமலையில் இறைவன் எருந்தருளலாமென ஆராய்ந்து கூறினன் பிரமதேவன். +அருத்தி=அருக்கன்=அருக்கன்நாள்=ஞாயிற்றுக்கிழமை *பத்தினம்= விருத்தியோகம் +ஆன்=இடபம். ▽வேனிலாம் பருத்தன்=சூரியன்—மைந்தனான சனி. வேனிலான்=சூரியன். பருத்தன் சனி.

74. நானிலம்பெருமகளுடுத்தகடற்குள்யோசனைநண்ணிய
மேனிலத்தினையாறுதண்டுநிமிர்ந்தடிப்புடை[80]விரவின
வானகாவதநான்குகொண்டுதன்வளர்கொழுந்திடமைந்துமூன்
றானதண்டிடைபெற்றதக்குவடண்டகூடநிகர்த்ததால்.

நாநிலம் பெருமகள் உடுத்த கடற்குள்,
யோசனை நண்ணிய
மேல் நிலத்தினை ஆறு தண்டு நிமிர்ந்து
அடிப்படை விரவின,
ஆன காவத நான்கு கொண்டு தன்வளர்
கொழுந்திடம், ஐந்து மூன்று
ஆன தண்டிடை பெற்றது அக்குவடு
அண்ட கூடம் நிகர்த்தலால்

பா.வே. 79 திரிகூடமிங், 80 விரிவினால்.

பொருள்: குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் ஆகிய நன்னிலம் நன்கினையும் கொண்ட நிலமகள்; தன் ஆடையாக அணிந்த கடற்குள் – ஒரு யோசனை தூரம் அணுகிய மேல் நிலத்தில் ஓடும் புனித ஆறு, நிமிர்ந்து நிற்கும் மலையடி வாரத்தில் புடைத்துப் பரவியது. அம்மலையிடத்து; நான்கு காதவதூரம் கொண்ட உயரத்தில் இருந்து ஊற்றெடுத்துப் பெருகும் ஆறும், பஞ்ச பூதங்களான, நீர் – நிலம் – தீ காற்று வான் என்னுமவற்றுடன் – சூரியன், சந்திரன் அக்கினியாகியவையும் அமைவு பெற்றிருந்தன. அதனால் அத்திரு மலை அண்ட கூட மலையினைப் போலிருந்தது.

75. அண்டர்நாயகனக்குவட்டிடைக்கங்கைபொங்கவழைத்தன
[81]னெண்டிசைக்குநடுப்படச்சிவலிங்கமேனிதிகழ்ந்துநீள்
விண்டதோர்ககனக்கபாடமொடுருவுபாதலமீதுவேர்
கொண்டுமேவின[82]மேலனேகரருச்சனைப்படிகொள்ளவே

அண்டர் நாயகன் அக்குவட்டிடைக்
கங்கை பொங்க அழைத்தனன்,
எண்டிசைக்கும் நடுப்படச் சிவலிங்க
மேனி திகழ்ந்து நீள்
விண்டதோர் ககனக் கபாடமொடு
உருவு பாதலமீது வேர்
கொண்டு மேவின, மேல் அனேகர்
அருச்சனைப்படி கொள்ளவே.

பொருள்: அண்டங்கள் அனைத்தின் தலைவனாகவும், அவ்வண்டங்களை நெறிப்படுத்தும் தேவர்களின் தலைவனாகவும் உள்ள சிவன்; அத்திருமலையிடத்தில் கங்கை நீர் பெருகிப் பாயும்ப அழைத்தனன். பின் எட்டுத்திசைகட்கும் நடுவில் அமைவுறும்படி சிவலிங்கத்திருமேனியுடன் பெருவடிவு கொண்டு எழுந்தருளினன். அவ்வடிவத்தினால் நீண்டு அகன்ற விண்ணகத்தில் – தேவர்உலகின் பொற்கதவம் திறக்கத் – திருமுடி ஊடுருவப் – பாதலத்தில் அடி பதித்து மேவினன். இத்தகைய வடிவு கொண்டதனால், மேலுலகத்தவரும் கீழ் உலகத்தவரும் பூசனை செய்து வழிபட – அதன் மூலம் அருள் பெற வழி வகுத்தனன்.

பா. வே. 81 தெண்டிரைக்கு, 82 மேலை நாகர்

76. கொள்ளுமேனியடங்கலுங்குளிர்கங்கைகண்டதுகோதைகண்
டுள்ளமர்ந்ததெனெம்பிரானுனதடிபணிந்துலகுய்யவே
வெள்ளநின்பதமீதுநின்றிடநீயதன்புறமேவுற
வள்ளலேவருகென்னவந்தனன்மாறிலாவிடையேறினான்

கொளும் மேனியடங்கலும் குளிர்கங்கை
  கண்டது, கோதை கண்டு
உள்அமர்ந்ததென் எம்பிரான் உனதடி
  பணிந்து உலகு உய்யவே,
வெள்ள நின்பதம்மீது நின்றிட, நீ
  அதன் புறம் மேவுற
வள்ளலே வருகென்ன, வந்தனன்
  மாறிலா விடை ஏறினான்.

பொருள்: திருவடிவு கொண்ட சிவலிங்க மேனியெங்கும் தண்மை பொருந்திய கங்காதேவி அணைந்து தழுவியதும்; உமையம்மை அதனைக் கண்டு என்தலைவ! கங்கையின் தழுவலில் நீ உள்ளே அமர்ந்ததேன். இவ்வுலகம் உனது திருவடிகளை வணங்கி உய்வு பெறல் வேண்டும். கங்கை நீரின் செழுமை – அதன் பெருக்கு, உன் திருவடிக் கீழ் நின்றிடல் வேண்டும் வள்ளலே எழுந்தருளி வருக. என்று உமையம்மை வேண்டினள். வேண்டுவார் வேண்டும் வண்ணம் அருள் – சுரக்கும் உள் பொருள் வடிவினனும் – மாறிலாப் பேரறி வாளனுமான இறைவன்; அனைவரும் வணங்கும் வண்ணம் வெளி வந்தனன்.

77. ஏறுமித்திரிகூடம்வந்ததிருந்ததிப்படியதனிடை
வீறினுத்தரமொருபெருங்குகையதின்[83]முனித்தொகைமேவிடுங்
கூறுதென்குகைமணியுகும்புனன்முத்தமுங்குட[84]குகைபெரு
மாறிலானுளகங்கையிற்புகவழிதருங்குகைபூருவம்

ஏறும் இத்திரிகூடம் வந்ததிருந்தது
  இப்படி அதன் இடை,
வீறின் உத்தரம் ஒருபெருங் குகை
  அதின் முனித்தொகை மேவிடும்,
கூறு தென்குகை மணியுகும் புனல்
  முத்தமும் குடகு கைபெரு
மாறிலான் உள் கங்கையில் புக
  வழிதரும் குகை*பூருவம்

பா. வே. 83 முனிக்கணம், 84 குகைபுகும்.

பொருள் : பெருமைமிகு திருமலையில் ஏற்றமுடன் சிவன் எழுந் தருளி இருந்தனன். அவன் எழுந்தருளிய அத்திருமலையின் வடபுறத்து அமைந்த குகையிடத்திலிருந்து தவஞ் செய்யும் முனிவர்கள் தொகையோ எண்ணில் அடங்கா. தென்புறத்தமைந்த குகையிடத்து ஒளிமிக்க மணிகள் சொரியும். கீழ்த்திசையில் அமைந்த கடற் பெருக்கினால் கரையோரங்களில் கைகளால் அள்ளித் தொலையா முத்தங்கள் நிறைந்திருக்கும். இத்தகைய செழுமை பூண்ட நாட்ட கத்துப் பேரருள்வடிவினனான இறைவனின் அருள் பெற்ற கங்கையில் அது ஊற்றெடுக்கும் மலைக் குகையில் நாம் புகுவோம்.
*பூருவம்=புகுவோம்

78. உவந்ததோர்நிருதித்திசைக்குகைவெள்ளியாலயமுள்ளுற
நிவந்தபூதமதொன்றுநின்றிடுநெடியவாயுதிசைக்குகை
சிவந்தநாகருலோகமேல்வழிசெல்வதீசர்திசைக்குகை
தவந்தரத்தருமுத்தியில்வகைகுகை[85]யோரேழ்வகைசார்ந்ததே.

உவந்ததோர் நிருதித் திசைக்குகை
வெள்ளி ஆலயம் உள்ளுற
நிவந்த பூதம் அது ஒன்று நின்றிடு
நெடிய வாயுதிசைக் குகை
சிவந்த *நாகர் உலோகமேல், வழி
செல்வது ஈசர்திசைக் குகை,
தவந்தரத் தருமுத்தி இவ்வகைக் குகை,
ஓரேழ் வகை சார்ந்ததே.

பொருள் : திருமலையில் அமைந்த வெள்ளியம்பலத்தில்—அமை வுற்ற திருக்கோயிலைச்சூழ; உள்ளும் புறமுமாய் அமைந்த குகை கள் ஏழுவகையினை உடையதாகும். இக்குகைகளில்; தென்மேற் குத் திசையில் சான்றோர் விருப்புக்குரிய நிருதிதிசைக் குகை, பலம் மிகும் நெடிய பூதகணம் நிற்கும் வாயு தேவனுக்குரிய வடமேற் குத் திசையில் அமைந்த குகை, செம்மைசான்ற தேவர் உலகு செல்லும் வழி அமைந்த ஈசனெற்குரிய வடகீழ் திசைக்குகை, தவம் செய்யத்தகுந்த முத்திதரும் பெருமை வாய்ந்த குகை என் பன சிறப்பானவை. இவற்றோடு பிறதிசைகளிலும் குகைகள் அமைவு பெற்றிருந்தன, இவ்வ நல்வரந்தருவனவாகவும் முத்திதரு வனவாகவும் இருந்தன. * நாகர் = தேவருலகோருக்கும் நாகர் உலகோர்க்கும் பொதுப்பெயர். இடம் நோக்கிப் பொருள் கொள் ளப்பட்டது.

பா. வே. 85 ஏழ்வகை

9. தேடும்வெற்பினிலுட்பெருஞ்சுனைசென்றுதுன்னியசேவடி
[86]நீடுபாடலமப்புறந்தொழநின்றநாதனையிப்புற
நாடுமண்டல[87]மண்புறத்தொழநண்ணினானுயர்[88]விண்ணுளே
[89]யோடியோரொளியாகிநின்றருளுன்னினான்மறைமன்னினான்.

தேடும் வெற்பினில் பெருஞ்சுனை
சென்று துன்னிய சேவடி,
நீடு பாடலம் அப்புறம் தொழ
நின்ற நாதனை, இப்புற
நாடு மண்டல மண்புறத் தொழ
நண்ணினான், உயர் விண்ணுளே
ஓடி ஓர்ஒளியாகி நின்று, அருள்
உன்னினான் மறை மன்னினான்.

பொருள் : இறைவன் - திருமைமலையைச்சூழ்ந்தகங்கை நீர்ப் பெருக்கில் தன் செம்மை சான்ற திருவடிநீளப் பாதலம் அளாவி நின்றனன். அதனால் பாதலத்தில் உள்ளோரும் – அதற்கு அப்புறத்தில் உள்ளோரும் அவன் திருவடியினை வணங்கினர். இம்மண்ணிடத்தில் நாடிவந்த தேவர்கள் அப்புனித பூமியில் மண்தழுவ வீழ்ந்து வணங்கினர். மறை மொழிந்த முதல்வன் பேரொளிவடிவாகி நின்று அனைவர்க்கும் அருள் சுரந்தனன்.

வேறு

80. மன்னினானரனித்திறமப்பெருவரைக்க
ணன்னமால்வரைப்பெருமையையாவரேயறைவார்
மின்னு[90]வெள்ளியும்பேரொளிவெண்ணிலாவெறிப்பத்
துன்னுகார்க்கடல்பார்க்கடலாயதத்தோற்றம்.

மன்னினான் அரன் இத்திறம்,
அப்பெரு வரைக் கண்
அன்ன மால் வரைப் பெருமையை
யாவரே அறைவார்,
மின்னு வெள்ளியும் பேரொளி
வெண்ணிலா எறிப்பத்
துன்னு கார்க்கடல் பார்க்கடல்
ஆயது அத் தோற்றம்.

பா. வே. 86 நீடுபாதலம், 87 மண்புறந்தெழ, 88 விண்ணுளோர்க், 89 கூடுபேரொளியாக, 90 வெள்ளியம்.

பொருள்: ஒளி வடிவுடன் நின்று அருள்புரிந்த இறைவன் அத் திருமலையிடத்தில் எழுந்தருளினன். அவன் எழுந்தருளிய அத்திரு மலையின் பெருமையினை முற்றுமுழுதாக உணர்ந்து கூறுதற்கு யாரால் இயலும். அம்மலை சூழ்ந்த கடற்பரப்பு, வெள்ளி இனங் களின் (நட்சத்திரங்கள்) ஒளியாலும் வெண்ணிலவின் வெண்மை பொலிந்த ஒளியாலும் பாற்கடல்போன்று காட்சி அளித்தது.

81. தோற்றும்வெண்ணிலாமிளிர்கின்றசோதியங்கற்றை
வீற்றிருந்தவான்புடையுடுக்குலமிடைந்தென்னப்
[91]பாற்றரும்பெருங்கயிலையின்புறமெலாம்பணிலத்
தேற்றினங்கடற்றிரையொடுங்கரைதவழ்ந்தேறும்.

தோற்றும் வெண்ணிலா மிளிர்கின்ற
சோதி அம்கற்றை.
வீற்றிருந்த வான்புடை உடுக்குலம்
மிடைந்து என்னப்,
பாற்றரும் பெரும் கயிலையின்
புறமெலாம், பணிலத்து
ஏற்றினம் கடல்திரை யொடும்
கரை தவழ்ந்து ஏறும்.

பொருள்: வானத்தில், வெண்ணிலவின் தோற்றத்தால் – எழுந்து ஒளிவீசும் அதன் அழகிய ஒளிப்பிளம்பு – அகண்ட வானிடத்துப் பரந்தது. அவ்வானிடத்தில் பரவிய வெள்ளியினங்கள் அவ்வொளிக் கற்றையின் ஊடே பரவியிருந்தன. இக்காட்சி, வெண்மைமிகு ஒளி பரப்பும் – பெருமைமிகு தென்கயிலையின் சுற்றுப்புறமெலாம் பரந் திருந்த கடலின் அலைகள் கொண்டுவந்து, கரைகள்தோறும் எற்றிய வலம்புரிச் சங்குகள் போன்றும் – அவையீன்ற முத்துக்கள் போன்று மிருந்தன.

82. ஏறும்வெண்கதிர்க்கற்றையேழ்குகைதொறுமெறித்து
வீறு[92]பாதலந்திசைதொறுமிருளறவிளக்கச்
சீறுநாகர்தம்பணாமுடிமாணிக்கச்சிவப்பு
மாறிலாதவெண்முத்தமாய்வெளுத்ததெம்மருங்கும்.

பா.வே. 91 போற்றரும், 92 பாதலத்திசை

ஏறும் வெண்கதிர்க் கற்றை
ஏழ் குகைதொறும் எறித்து,
வீறு பாதலந் திசைதொறும்
இருள் அற விளக்கச்,
சீறு நாகர்தம் பணாமுடி
மாணிக்கச் சிவப்பு,
மாறிலாத வெண் முத்தமாய்
வெளுத்தது எம்மருங்கும்.

பொருள்: கடற்கரையெங்கும் அலைகளால் எற்றப்பட்ட சங்கினங்கள் ஏறிய இடங்களில் ஈன்ற முத்துக்கள், வெண்மையான ஒளி பரப்பி நின்றன. அவ்வொளியின் செறிவு ஏழ்குகைகளிலும் புகுந்து ஒளிபரப்பின. அது மேலும் சென்று, மேட்டிமை பொருந்திய நாகர் உலகிலுஞ்சென்று பரவியது. அதனால் நாகர்களின் பரந்து விரிந்த முடிகளில் உள்ள செம்மையொளிவீசும் நாகமணிகளும், வெண்மையொளி பெற்று மாற்றுவிட, முத்துக்கள்போல் எங்கும் காட்சி அளித்தன.

83. மருங்கெறிந்துமண்ணுலகெலாம்பரப்பிவானுலகி
னெருங்கும்வெண்சுடர்க்கற்றையானிறம்பிறிதாகிப்
பெருங்கதிர்ச்செழும்பருதியுங்குசனுமம்பிறரு
மொருங்குவெண்மதிக்கடவுளாய்விளங்கினருடலம்.

மருங்கு எறிந்து மண்
உலகெலாம் பரப்பி, வானுலகில்
நெருங்கும் வெண் சுடர்க்
கற்றையால் நிறம் பிறிதாகிப்
பெருங் கதிர்ச் செழும் பருதியும்
*குசனும் அம்பிறரும்
ஒருங்கு ०வெண்மதிக் கடவுளாய்
விளங்கினர் உடலம்.

பொருள்: திருமலைக் கடற்கரையிடத்துப் பரந்த முத்துக்களின் ஒளி, அயலிடங்களில் எல்லாம் வெண்மை ஒளியினைப்பரப்பி மண்ணுலகத்திலும் பரந்தது. அதனால் செழுமை மிக்க பேரொளி பரப்பும் சூரியனும் - செவ்வாயும் மற்றைய பிற கோள்களும் ஒருங்கே தம் நிறம் மாறின. இத்தகைய மாற்றத்தால் அக்கோள்கள் நிறை மதிக் கடவுள்போல் தோன்றின. (சந்திரன்)

---

* குசன் = செவ்வாய். செவ்வாய் சிவந்த நிறமுடைய கோள் என்பர். ० வெண்மதி = முழு நிலவு.

84. உடனெதிர்ந்துமுன்மாலயனுருத்தநாளுமைதன்
னிடமிருந்ததோரெம்பிரான்றழல்வடிவெடுத்துப்
படருமேனியினீற்றொளிபூத்தவப்படியே
கடவதன்றியும்வேறிணையில்லைத்தென்கயிலை.

உடன் எதிர்ந்து முன் மால் அயன்
    உருத்த நாள், உமைதன்
இடம் இருந்ததோர் எம்பிரான்,
    தழல் வடிவு எடுத்துப்
படரும் மேனியில் நீற்றுஒளி
    பூத்த அப்படியே
கடவதன்றியும் வேறு இணை
    இல்லைத் தென்கயிலை.

பொருள் : அன்றொருநாள் திருமாலும் பிரமனும் தம்முள் முரண்பட்டு யார் பெரியர் எனச் சினந்து நின்ற வேளை, இடப் புறத்தே உமையைப் பாகமாகக் கொண்ட எம் தலைவனான சிவன், சோதி வடிவு கொண்டு எங்கும் பரந்து நின்றனன். அத்திருவடிவில் வெண்ணீறு ஒளி வீசி மலரநின்றது போலிருந்தது தென்கயிலை. இதனைத்தவிர அதற்கு வேறு ஒப்புவமை கூறுதல் இயலாது.

85. கயிலையங்கிரிக்குழுவொடுதழுவியகன்னி
மயிலியாவையுமன்னமதாக்கித்தன்வடிவாற்
சயிலமேநிகர்கருங்களிறனைத்தையுந்[93]தாரும்
பயிலுநாட்டயிராவதநிறம்பெறப்பண்ணும்.

கயிலையங் கிரிக் குழுவொடு
    தழுவிய கன்னி,
மயில் இயாவையும் அன்னமதாக்கித்
    தன் வடிவால்
சயிலமே நிகர் கருங் களிறு
    அனைத்தையும்; *தாரும்
பயிலும் நாட்டு அயிராவதம்
    நிறம் பெறப் பண்ணும்.

பொருள் : கயிலைமலைக் குழாத்தொடு இணைந்து நின்ற கன்னியாகிய திருமலை; தன் வெண்மையான ஒளியின் தன்மையால்— மயில்கள் அனைத்தையும் வெண்மைநிறம் கொண்ட அன்னங்கள் போல் ஆக்கி மலைநிகர்த்த ஆனைகள் அனைத்தையும் கற்பக

பா. வே. 93 திருப். *தார் = கற்பகதரு

தருப் பொருந்தியுள்ள வானவர்நாட்டு அயிராவதம் என்ற வெள்ளை யானையின் நிறத்தினைப் பெறச் செய்தது. தா ர்=கற்பக தரு.

86. நிறத்தமால்வரைக்கருங்கடற்புடைதழீஇநிமிருந்
திறத்தையுமதன்சுடர்வடிவனைத்தையுஞ்செப்பிற்
புறத்துலாவருமா[94]ழியாமூழியம்போழ்து
[95]மறித்தடங்கையாலெழுபெருங்குமிழியைமானும்

நிறத்த மால்வரைக் கருங்கடல்
புடை தழீஇ நிமிரும்
திறத்தையும் அதன் சுடர்வடிவு
அனைத்தையும் செப்பில்,
புறத்து உலாவரும் ஆழியாம்
ஊழியம் போழ்து
மறித்து தடங்கையால் எழு
பெருங் குமிழியை மானும்

பொருள்: வெண்மை நிறம் கொண்ட தென்கயிலை; கருமை நிறங்கொண்ட கடலின் கரையினைத் தழுவி நிமிர்ந்து நிற்கும் தன்மையை—ஒளிவடிவைப் பகரின்; ஆழிப் பெருநீர்ப் பெருக்கு—ஊழிக் காலத்தில், தன் அலைக்கையால் உயர எழுந்து வீசும்பொழுது, வானளாவி நின்ற பெருங் குமிழியை ஒத்திருந்தது.

87. மாநிலப்பெருந்தகழியின்மறிகடனெய்யி
லானவக்கிரிநிறுத்தியவிழைத்திரியதன்மேன்
ஞானநாயகனுலகுளோர்மனவிருணலிய
[96]மேனிமீதுறவெறிசுடர்விளக்கெனவிளங்கும்

மாநிலப் பெருந் தகழியின்
*மறிகடல் நெய்யில்,
ஆன அக்கிரி நிறுத்திய
இழைத்திரி, அதன்மேல்
ஞான நாயகன் உலகுளோர்
மன இருள் நலிய
மேனி மீதுற எறிசுடர்
விளக்கு என விளங்கும்.

மறிகடன்—எய்யில், எனவும் பிரிக்கலாம். இரு வகைக்கும் பொருந்தப் பொருள் கூறப்பட்டுள்ளது.

பா.வே. 94 ஆழியிலூழியம் பொழுது; 95 மறித்தடங்கணாளெழு பெருங் குமிழியே மானும் 96 மேனிவந்து.

பொருள்: மறித்து வீசும் அலைகள் நிறைந்த கடலில் இடப்பட்ட தென் கயிலை; பெருநிலமான இப்பூமியின் விளக்காக அமைந்தது. அதனைச் சூழ்ந்துள்ள அலைகடல் நெய்யாக அமைவுபெற, ஒளிவிடும் திரியாகத் தென்கயிலையின் வெண்மைநிறம் கொண்ட குவடு விளங்கியது. அதனால் பூமி இருள் நீங்கியது. இது பேரறிவு வடிவினனான எம்தலைவன் சிவபெருமான், உலகில் உள்ள உயிர்களின் மயக்க நிலையினை–அதனால்வரும் இருள் நிலையினை நீக்கத் தன் ஒளி வடிவின் மூலம் ஆன்மாக்களுக்கு அருளுவது போன்றிருந்தது.

88. விளங்குநாற்பெருந்திசைதொறுந்திசைதொறும்வீசித்
துளங்குசீகரத்திவலைவெண்[97]முத்தொடுதுளித்தல்
களங்கவல்வினை[98]நீங்கினதாமெனக்கடலுந்
தளங்கொள்பூமழைபொழிந்தடிதாழ்வதேநிகர்க்கும்

விளங்கு நாற்பெருந் திசைதோறும்
திசைதொறும் வீசித்
துளங்கு சீகரத்திவலை, வெண்
முத்தொடு துளித்தல்,
களங்க வல்வினை நீங்கினதாம்
எனக் கடலும்,
தளங்கொள் பூமழை பொழிந்து
அடி தாழ்வதே நிகர்க்கும்.

பொருள்: கடல்; விளக்கம் பெற்ற நான்கு திசைகளிலும் தன் அலைகளைவீசி நீர்த்துளிகளுடன் முத்துக்களையுஞ் சிந்தி நின்றது. இந்நிகழ்வு; துன்பத்துக்கிடமான கொடிய வினை நீங்கியதென்று எண்ணி, தென்கயிலை சூழ்ந்த கடற்கரையில், தன் அலைக் கைகளால் பூமழை பொழிந்து வணங்கித் தாழ்ந்து எழுவது போன்றிருந்தது.

89. நிகரிலாச்சிவனெம்மையேதாங்கினனித்தம்
[99]பகருமங்கவன்றன்னையும்பரிப்பமென்றெண்ணிப்
புகரிலாக்கங்கைதிரண்டுமுக்கோணமாய்ப்பொருந்தி
மகரவேலையினிற்பதேபுரையுமிவ்வரையும்.

நிகரிலாச் சிவன் எம்மையே
தாங்கினன் நித்தம்,
பகரும் அங்கவன் தன்னையும்
பரிப்பம் என்று எண்ணிப்,
புகரிலாக் கங்கை திரண்டு
முக்கோணமாய்ப் பொருந்தி
மகர வேலையில் நிற்பதே
புரையும் இவ்வரையும்.

பா.வே. 97 முத்தொடும், 98 நீக்கினேம்யாமென 99 பகருமாங்கவன்.

பொருள்: ஒப்பற்ற பரம்பொருளான சிவன்; நித்தம் எம்மைத் தாங்கி அருள் புரிகின்றனன். அத்தகைய பரனை யானும் தாங்கிப் பணிசெய்வேன் என்று எண்ணிய புனித கங்கையானவள், தன் வடிவினை முக்கோணமாக அமைத்துக்கொண்டு மீனினங்கள் நிறைந்த கடலில் நிற்பதனை ஒத்திருந்தது தென்கயிலையின் தோற்றம்.

90. வரையறப்பலதேவ[100]ரெம்மருங்குசூழ்ந்திறைஞ்சப்
புரமெரிக்குநாண்மாலொருவெள்விடைப்பொற்பாய்ப்
பரமனைப்பரித்ததுவெனப்பகரலாம்பரவைத்
திரைநடுப்படவிம்மலைநிலைக்குமிச்செய்கை

வரையறப் பலதேவர் எம்மருங்கு
சூழ்ந்து இறைஞ்ச,
புரம் எரிக்கும் நாள், மால்ஒரு
வெள்விடைப் பொற்பாய்ப்
பரமனைப் பரித்தது எனப்
பகரலாம், பரவைத்
திரை நடுப்பட இம்மலை
நிலைக்கும் இச்செய்கை.

பொருள்: ஆழ்ந்து அகன்ற அலைகடல் நடுவில் திருமலை நிலைத்து நிற்கும் தோற்றம்; சிவன் புரமெலாம் எரித்தகாலத்தில் எண்ணற்ற தேவர்கள் அனைத்திடத்திலும்–எல்லாப் பக்கங்களிலும் சூழ்ந்து வணங்கத்–திருமால்; வெண்மை பொருந்திய மலைபோன்ற எருதாகத் தோன்றி இறைவனைச் சுமந்து நின்றதுபோலிருந்தது.

91. செய்தவத்துளோர்தேவருத்தரத்திருக்கயிலைக்
கெய்துவார்களிக்கயிலையின்[102]வாமமக்கயிலைக்
குய்யமேவுவாருத்தரகயிலையுற்றிடவு
மையமாக்கியததற்கிதுவடிவினாலம்மா

செய்தவத்து உளோர் தேவர்
உத்தரத் திருக் கயிலைக்கு;
எய்துவார்கள், இக் கயிலையின்
*வாமம் அக் கயிலைக்கு
உய்ய மேவுவார் உத்தர
கயிலை உற்றிடவும்,
ஐயம் ஆக்கியது அதற்கு
இது வடிவினால் அம்மா

பா.வே. 100 மருங்கு, 101 உத்தரதிருக்கயிலை, 102 வரவுமிக்கயிலை·
*வாமம் = இடம்பக்கம்

பொருள்: மேலாம் தவத்தினைச் செய்பவர்களும், தேவர்களும் புனிதம் நிறைந்த வடகயிலைக்குச் செல்வர். அவர்களும் அக்கயிலையின் உறுப்பாய் அமைந்த தென்கயிலைக்குச் சென்று உய்தி பெறுவர். பெருந்தவத்தோரும் தேவர்களும் புனிதமிகு வடபெருங் கயிலைக்குச் செல்வதற்கு இத்தென்கயிலை நடுவிடத்தில் அமைந்துள்ளது. வடகயிலையின் சிறப்புகள் அனைத்தும் இத்தென்கயிலைக்கும் அமைந்துள்ளது. அதனால் அதற்கு இதுவே ஒப்பானது அம்மா வியப்பினைக் குறித்து நின்ற ஈற்று அசை.

வாமம் – இடப்பக்கம்

92. மாலையந்துளாய்மணமுமத்தாமரைமணமு
மேலைநாட்டுறைகற்பகவிரைமலர்மணமுங்
காலையந்தியுமுச்சியுங்கயிலையின்மணக்குஞ்
சாலவந்துவந்தமரர்மாலயனிவர்தாழ

மாலையம் துளாய் மணமும்,
அத்தாமரை மணமும்,
மேலை நாட்டுறை கற்பக
விரைமலர் மணமும்,
காலை அந்தியும் உச்சியும்
கயிலையின் மணக்கும்,
சால வந்து அமரர்
மால் அயன் இவர்தாழ.

பொருள்: தென் கயிலையாகிய திருமலையிடத்தில்; துளசிமாலை அணிந்த திருமாலும், தாமரைமலர்கள் அணிந்த பிரமனும் வந்து வணங்குவதால் அவற்றின் மணமும், இந்திரன் முன்னிட்டுத் தேவர்கள் அனைவரும் வந்து வணங்குவதால் தேன்சொரியும் கற்பக மலரின் மணமும், காலை – நண்பகல் – மாலை வேளைகளில் செய்யப் படும் பூசனையால் எழும் அருள்மணமும், ஒன்றிணைந்து நறுமணம் பரப்பின.

93. தாழுமால்கடல்வரங்கொலோயிலங்கையின்றவமோ
சூழுநாவலந்தீவுளோர்புண்ணியத்தொடர்போ
வாழியுத்தரதிசையினுங்கொடுவந்துவைத்த
பாழிமாருதப்பயன்கொலோவென்பர்கள்பலரும்

தாழும் மால்கடல் வரம் கொலோ,
இலங்கையின் தவமோ,
சூழும் நாவலந் தீவுளோர்
புண்ணியத் தொடர்போ.
வாழி உத்தர திசையினும்
கொடு வந்து வைத்த
பாழி மாருதப் பயன்கொலோ,
என்பார்கள் பலரும்.

பொருள்: திருமலையாகிய தென்கயிலை இவ்வண்ணம் அமைந்தது; மயக்கத்தைத்தரும் ஆழ்ந்தகன்ற கடல் செய்த தவமோ, அன்றி இலங்கை செய்த தவமோ – நாவலந்தீவென நவிலப்படும் பாரத பூமியில் உள்ள பெருந்தவத்தவர் புண்ணியத் தொடர்போ. வளம் பெற்ற வாழ்வுக்கிடனாய் அமைந்த வடகயிலையின் குவட்டினை, வலிமிக்க வாயுதேவன்; ஈழநாட்டின் வடபுலத்தேயமைந்த ஆழமிகு கடலிடை அமைத்ததனால் வந்த பயனோ என்பர் பலரும்.

94. கள்ளரும்புபூங்கொன்றையானுறைந்ததென்கயிலை
வெள்ளியங்கிரியிவ்வகைவிளங்கியதிப்பா
லள்ளல்வேலைநஞ்சுண்டவரருச்சனைக்கனேக
ருள்ளமன்பொடுதொடர்கதையாயதிங்குரைப்பாம்

கள்ளரும்பு பூம் கொன்றையான்
உறைந்த தென்கயிலை,
வெள்ளியம் கிரி இவ்வகை
விளங்கியது, இப்பால்
அள்ளல் வேலை நஞ்சு உண்டவர்
அருச்சனைக்கு அனேகர்
உள்ளம் அன்பொடு, தொடர்
கதையாயது இங்கு உரைப்பாம்.

பொருள்: தேன் சொட்டும் அன்றலர்ந்த கொன்றை மாலை சூடிய சிவன் எழுந்தருளிய தென்கயிலையாகிய திருமலை இலங்கையின் வடபுலத்தில் மேற்கூறப்பட்ட, அனைத்துச் சிறப்புகளையும் கொண்டு விளங்கியது. இனிப் பாற்கடலிடத்து வாசுகி கக்கிய ஆலகாநஞ்சினை அள்ளியுண்ட சிவபெருமானின் பூசனைக்கு எண்ணிறந்தோர் உள்ளன்பொடு இடையறாது வந்துகொண்டிருக்குஞ் செய்தியினைக் கூறுவோம்.

திருமலைச்சருக்கம் முற்றிற்று

திருவிருத்தம் 94

மூன்றாவது

புவனோற்பத்திச்சருக்கம்

1. ஆயநன்சிவலிங்கமென்னுமருபமாகுமுருஉவினை
நேயமுற்ற[1]வருச்சனைக்கதுநிச்சயப்பொருளாமெனச்
சேயுருத்திரன்வேதன்மாலிவர்செய்யுமர்ச்சனைகாணவே
தூயமெய்ப்*புவனத்தின்மேலவருற்பவித்ததுசொல்லுவாம்.

ஆய நன்சிவலிங்கம் என்னும்
அருபபமாகும் உருஉவினை
நேயம் உற்ற அருச்சனைக்கு
அது நிச்சயப் பொருளாமெனச்,
சேய் உருத்திரன் வேதன் மால்
இவர் செய்யும் அர்ச்சனைகாணவே,
தூய மெய்ப் *புவனத்தின்மேல்
அவர் உற்பவித்தது சொல்லுவாம்

*புவனத்தில் மேலவர் உற்பவித்தது எனவும் பிரித்துப் பொருள் கொள்ளலாம். இவ்விருவகைப் பிரிப்புக்கும் இயைவுபடக்கூடியவகையில் பொருள் காணப்பட்டுள்ளது.

பொருள் : ஒப்பும்மிக்கும் இல்லாத மேலோனான சிவன்; தன் அடியவர்களான செம்மைசான்ற உருத்திரன் – பிரமன், திருமால் ஆகிய மும்மூர்த்திகளும் பூசனைசெய்து வழிபடுவதனைக் காண்பதற்காக–அவ்வண்ணம் வழிபடுபவர்கள் தன்னைக்கண்டு நற்பேறாம் திருவருளினைப் பெறும் வண்ணம், அருவுருவாகிய சிவலிங்கத் திருமேனிகொண்டு – அதுவே உள் பொருள் என விளக்கிநிற்கும் வடிவுடன், அவர்கள் செய்யும் பூசனையையேற்று அருள் செய்வதற்குச் சிவபூமியாகிய இந்நிலத்தில் திருநிலை கொண்ட செய்தியினைக் கூறுவோம்.

2. சொல்லுறும்பதினெட்டெனப்புவிதுன்னுகின்றவுகங்களில்
வில்லுலாமவியத்தமாதிவியத்தம்விந்தமலங்குதம்
வல்லவாமநிலங்களானமகாவுகங்களொரைந்தினு
நல்லதென்கயிலாயவாதியைநாடிவந்தனர்சங்கரர்.

பா. வே. 1அருச்சனைக்கிது.

சொல்லுறும் பதினெட்டெனப் புவி
துன்னுகின்ற உகங்களில்
வில்லுலாம் அவியத்தம், ஆதிவியத்தம்,
விந்தம், அலங்குதம்,
வல்ல வாம நிலங்களான
மகா உகங்கள் ஒருஐந்தினும்,
நல்ல தென்கயிலாய ஆதியை
நாடி வந்தனர் சங்கரர்.

பொருள்: இந்திரதிக்கு (கிழக்கு), அக்கினிதிக்கு (தென்கிழக்கு), எமதிக்கு (தெற்கு), நிருத்திதிக்கு (தென்மேற்கு), வருணதிக்கு (மேற்கு), வாயுதிக்கு (வடமேற்கு), குபேரதிக்கு (வடக்கு), ஈசானதிக்கு (வடகிழக்கு), வானம், – பூமி, – பாதலம், அண்டகடாக ஓட்டின் கீழிடம், அண்டகடாக ஓட்டின் மேலிடம், ஒளிமிக்க அவியத்தம், ஆதிவியத்தம், விந்தம், அலகுங்குதம், வல்ல வாமம் எனப் பெயர் கொண்ட பதினெண் உருத்திரகணங்கள் வாழும் உலகில்; அவயத்தம் தொடங்கி வல்ல வாமம் ஈறாக உள்ள உகங்கள் ஐந்துமே மிகச் சிறந்தன. இவ்வைந்து நிலங்களிலும் மிகச் சிறப்புடையது, பூமியில் உள்ள தென்கயிலை. அதனால் சங்கரனாய சிவன், தென்கயிலையாகிய திருமலையை நாடி வந்தனன்.

3. சங்கரன்கிரீசன்சம்பு[2]சமாருடன்பகவன்சூலி
கங்கையன்விருபன்[3]மூர்த்தி[4]கலாதரன்வாமனீச
னிங்குருத்திரர்கள்பன்னோரிறைவர்தென்கயிலைமீதி
லங்குளபரனையன்பாயருச்சனைசெய்யுங்காலம்.

சங்கரன், கிரீசன், சம்பு,
சமாருடன், பகவன், சூலி
கங்கையன், விருபன், மூர்த்தி,
கலாதரன், வாமன், ஈசன்(ர்)
இங்கு உருத்திரர்கள் பன்னோர்
இறைவர் தென்கயிலை மீதில்
அங்குள பரனை அன்பாய்
அருச்சனை செய்யுங் காலம்.

பொருள் : சங்கரன் முதலாய் வாமன் ஈறாக உள்ள உருத்திரக்கடவுளர் பதினொரு பேரும் தென்கயிலை வந்து அங்கு எழுந்தருளியிருக்கும் இறைவனுக்கு அன்புடன் பூசனைகள் செய்து வழிபட்டனர். (ஈசன் என்பதனைத் தனியே கொண்டால் உருத்திரர்கள் பன்னிருவராவர் ஆயின்பின் பன்னோர் எனக் கூறப்பட்டதால் ஈசர் எனக் கொண்டு பொருள் கூறப்பட்டது.) அக்காலத்தில்;

பா. வே. 2சமாட்டகன், 3தீபத்மூர்த்தி 4சுகலாதரன்.

4. செய்திடுபூசைநோக்கிச்சிறக்குமவ்வியத்தாலந்தத்
துய்யவாகாயந்தோற்றத்துலங்குதாரகைகடோற்ற
வையனுக்கபிடேகத்துக்காகவென்றுதகந்தோற்றப்
பொய்யிலாவிந்தக்காலம்புவனிவித்தாகத்தோற்றும்:

செய்திடு பூசை நோக்கிச்,
சிறக்கும் *அவ்வியத்தால், அந்தத்
துய்ய ஆகாயம் தோற்றத்
துலங்கு தாரகைகள் தோற்ற,
ஐயனுக்கு அபிடேகத்துக்கு
ஆகவென்று ०உதகம் தோற்றப்,
பொய்யிலா இந்தக் காலம்
புவனி வித்தாகத் தோன்றும்.

பொருள் : செய்த பூசனையின் பயனாய் சய்தன்னியமான பேராற்றல் தோன்றியது. அப்பேராற்றலில் இருந்து வானம் தோன்றியது. அவ்வானத்தில் நட்சத்திரக்கூட்டங்கள் தோன்றின. இறைவனுக்குத் திருநீராட்டுதற்காகப் புனித நீர்ப்பரப்புத் தோன்றியது. இந்நீரிடத்துப் பிரபஞ்சத்திற்கு வித்தாகியமைந்த நிலம் தோன்றுவதாயிற்று.

5. வித்தகன்[5]கனலிவெற்பின்விளக்கெனக்கனலிதோற்ற
வத்தகையிறைவற்கானவலங்குதமென்னுங்காலம்
[6]முத்தடுத்தருக்கள்யாவுமுனிந்தொளிவிடுத்தான்வெய்யோ
னொத்தெழும்வெயிலையாற்றவுதித்தனன்குடபாலாலோன்.

வித்தகன் +கனலி வெற்பின்
விளக்கெனக் +கனலி தோற்ற
அத்தகை இறைவற்கு ஆன
x அலங்குதம் என்னும் காலம்
முத்தடுத்தருக்கள் யாவும் முனிந்து
ஒளி விடுத்தான் வெய்யோன்
ஒத்தெழும் வெயிலை ஆற்ற
உதித்தனன் ꞓகுடபால் ஆலோன்.

பா.வே. 5 கயிலை 6 முத்தலத்திருள்கள்

* அவ்வியம் = சைதன்னியம் = பேராற்றல்:
० உதகம் = கடல் = பெருநீர்ப்பரப்பு:
+ கனலி = அங்கினி — சூரியன்; x அலங்குதம் = விளக்கம் பெற்ற;
ꞓ குடபால் = மேற்குத்திசை.

பொருள்: தீயினை ஏந்தித் திருநடஞ் செய்யும் வித்தகனான சிவன் எழுந்தருளிய தென்கயிலையின் விளக்கெனக் கூறும்படி சூரியன் தோன்றினான். இந்நிகழ்வு, அனைத்துயிர்களும் இறைவனைக்கண்டு வணங்குவதற்குரிய விளக்கம் பெற்ற காலமாகவும், முற்றி விளைந்த மரங்கள் நிறைந்த சோலைகளின் இருளினைப் போக்குவதற்காகச் சினந்து தன் கதிர்களைப் பரப்புவதாகவுமிருந்தது. சூரியனின் வெப்பத்தினைப் போக்குவதற்காகச் சந்திரன் மேற்குத் திசையிற் தோன்றினான்.

6. ஆலமுண்டவர்தென்கோணையமலனுக்கானகால
மேலுருத்திரர்களேந்திக்கொடுத்திடுமிலைபூவாதி
தூலநின்மாலியங்கடூர்த்தலகிடுவார்போல
ஞாலமேல்வாயுவென்பானலத்தினாலுதித்துவந்தான்.

ஆலம் உண்டவர் தென்கோணை
* அமலனுக்கு ஆன காலம்,
மேல் உருத்திரர்கள் ஏந்திக்
கொடுத்திடும் இலை பூ ஆதி,
தூல நின்மாலியங்கள் தூர்த்து
அலகு இடுவார் போல,
ஞாலமேல் வாயு என்பான்
நலத்தினால் உதித்து வந்தான்.

பொருள் : ஆலகால நஞ்சையுண்டு அகிலத்தைக் காத்த வினையின் நீங்கிய விளங்கிய அறிவு வடிவினனான சிவன், திருமலையாகிய தென்கயிலையில் எழுந்தருளி இருந்தபொழுது – மேன்மை பொருந்திய சிவகணங்களான உருத்திரர்கள் பூசனைக்காக ஏந்திவந்து கொடுத்த புனிதம் நிறைந்த இலை – பூ முதலியவற்றை நீக்கும் வண்ணம் துப்புரவு செய்பவர்போல, இவ்வுலகின்மேல் நலம் செய்யும் பொருட்டு வாயுதேவன் வந்து தோன்றினான்.

* அமலன் = மலம் அற்றவன் = வினையின் நீங்கிய விளங்கிய அறிவன்.

7. வந்தனைசெய்யவேண்டிமலர்க்கரம்குவித்தசென்னி
யிந்திரனங்கிகாலனெழில்பெறுநிருதிநீர்ம
னந்தரவாயுச்சோமனரியவீசானன்றோற்றச்
சுந்தரவசுக்களெண்மர்தோன்றினரேற்றமாக.

வந்தனை செய்ய வேண்டி
 மலர்க்கரம் குவித்த சென்னி,
இந்திரன், அங்கி, காலன்,
 எழில்பெறு நிருதி, நீர்மன்,
அந்தர வாயுச், சோமன்,
 அரிய ஈசானன், தோற்றச்
சுந்தர வசுக்கள் எண்மர்
 தோற்றினர் ஏற்றமாக

பொருள்: ஒளியும் அழகும் மிக்க எண்திசைக் காவலர்களான; இந்திரன், தீக்கடவுள், எமன், நிருதி, நீர்க்கடவுள் (வருணன்) இரலையூர்தி (வாயுதேவன்) சோமதேவன், ஈசானன் எனப் பகரப் படும் உயர்வுடைத்திக்குப் பாலகரும், சிவனைப் போற்றி வழிபடுவதற் காகத் தத்தம் தலையின் உச்சிமீதில் அழகியமலர் போன்ற கைகளைக் கூப்பிய வண்ணம் இறைவனின் அருளை வேண்டி, தென்கயிலை யாகிய திருமலையிடத்து வந்து குழுமினர்.

8. கன்னலுமமுதுந்தேனுங்கனிந்தெனமுனிந்திடாத
இன்னசொற்கமலைவாணியெழுவகைமாதர்தோற்ற
வந்நிலையைம்பத்தொன்றாமக்கரநிலைமைதோற்றப்
பொன்னொடுமணியொன்பானும்புகுந்தொளிவிளைத்துநின்ற

கன்னலும் அமுதும் தேனும்
 கனிந்தென முனிந்திடாத
இன்னசொல் கமலை வாணி
 எழுவகை மாதர் தோற்ற,
அந்நிலை *ஐம்பத்து ஒன்றாம்
 அக்கர நிலைமை தோற்றப்,
பொன்னொடு மணி ஒன்பானும்
 புகுந்தொளி விளைத்து நின்ற

பொருள்: கரும்பின்சாறும் – அமுதும் தேனும் ஒன்று கலந்து இனிமை பயப்பது போன்ற சினமற்ற சொல்லின்பம் மிளிர்றும் கலைமகளும்; கவுரி, அபிராமி, மகேசுவரி, நாராயணி, வராகி, இந்திராணி, காளி என்ற ஏழு தெய்வமாதரும் தோற்றினர், அப் போது வான் – தீ – காற்று – நீர் – நிலம் ஆகிய ஐம்பூதங்களும் அவற்றின் வெளிப்பாடான, மெய் – வாய் – கண் – மூக்கு – செவி என்ற பஞ்சப் புலன்களும், அப்பஞ்சப்புலன்களின் வெளிப்பாடான சுவை – ஒளி – ஊறு – ஓசை நாற்றம் என்ற தன்மாத்திரைகள் ஐந்தும் தோற்றுவதற் கேதுவாக அமைந்த ஓங்காரம் ஐந்தாகிப் பத்தாகி

அச்சிவம் தானே அகரமாக நிற்க; பொன்னும். * ஒன்பது வகை மணிகளும் (நவரத்தினம்) ஒன்றிணைந்து ஒளிபரப்பின.

*மரகதம் – பவளம் – நீலம் – வச்சிரம் – பதுமராகம் – முத்து – கோமேதகம் – புருடராகம் – வைடூரியம்.

தத்துவப்பொருள்: * ஐம்பத்தொன்றாம் அக்கரநிலை. இதற்குப் பற்பல பொருள் உரைப்பர். தமிழ் நெறி நோக்கில் உள்பொருள் காணும் பொழுது கீழ்க்காணும் விளக்கங்கள் கொள்ளத்தகும்.

அ–இ–உ–எ–ஒ என்ற 'ஐந்து உயிரில் முன் மூன்றும் முறையே 'அ'து என்ற பிரமத்தையும், 'இ'து என்ற ஆன்மாவையும் 'உ'து என்ற பிரபஞ்ச இயற்கையையும் குறிக்கும். 'எ' என்பது எது என்ற வினாவினை எழுப்ப 'அ'வில் ஒன்றாவது என்பதை விளக்குவது 'ஓ' இவ்வைந்தும் விரிவடையும் பொழுது ஆ–ஈ–ஊ–ஏ–ஓ என ஒலிப்பினைப் பெறும். இவை பிரபஞ்ச விரிவினைக் குறிக்கும். 'ஐ' அஇ என நின்று அதுவாகிய பிராமும் இதுவாகிய ஆன்மாவும்ஒன்றிணையும் பொழுது ஏகமாய் நிற்கும் பிரமத்தினையும், ஆன்மாவையும் குறிக்கும். 'ஔ' அஉ எனநின்று அதுவாகிய பிரமமும் உதுவாகிய பிரபஞ்சமும் ஒன்றாம் தன்மையாக நின்று அனைத்திலும் பிரமத்தின் செயற்பாடு செறிந்திருப்பதனைக் குறிக்கும். இவை அனைத்திற்கும் அககரம் எனப் பகரப்படும் அகரமே முதலாக அமைவு பெறுகின்றது. இந்த அகரமும், அதற்கும் மூலமாய் நின்ற ஓங்காரத்தில் இணைவு பெறுகின்றது. எனவே மூல ஒலியான நாதப் பிரமத்தில் இருந்து எழும் அகரம், ஐந்தாகி – பத்தாகி விரிந்து மீண்டும் மூல முதலான நாதப்பிரமத்தில் அதாவது ஓங்காரத்தில் ஒடுக்கம் பெறுகின்றது.இதனைத்தத்துவ நூலார் அத்வைதம் 'என்றும் கைவல்யம்' என்றும் பகர்வர்.

இதனைத் திருமந்திரம்

''ஐம்பத்து* எழுத்தே அனைத்து வேதங்களும்
ஐம்பத்து* எழுத்தே அனைத்து ஆகமங்களும்
ஐம்பத்து* எழுத்தின் அடைவை அறிந்தபின்
ஐம்பத்து* எழுத்தே அஞ்செழுத்தாமே.'' என நவிலும்.

*ஐம்பதெழுத்தே. இதற்கு விளக்கஞ் சொல்வோர் ஐம்பது (50) எழுத்தெனக் கொள்வர். அனுபவ நிலையில் ஆய்வு நோக்கில் ஒன்று மூன்றாக – ஐந்தாக – பத்தாக விரிவுபட்டதே தமிழும், பிரபஞ்சமும் என மூலத்தமிழ் கூறும்.

9. விளைந்திடுதவமுமன்புமேன்மையுநெறியுஞ்செஞ்சொ
லளைந்திடநாவுமுள்ளவகத்தியன்முதலோர்தோற்ற
வளைந்திடுதிசையோரெட்டும்வரைகளோரெட்டுமெண்டோள்
களைந்தமாநாகமெட்டுங்கடாசலமெட்டுந்தோற்ற

விளைந்திடு தவமும் அன்பும்
மேன்மையும் நெறியும் செஞ்சொல்
அளைந்திட நாவும் உள்ள
அகத்தியன் முதலோர் தோற்ற
வளைந்திடு திசை ஓர் எட்டும்
வரைககள் ஓர் எட்டும் எண்தோள்
களைந்த மா நாகம் எட்டும்
*கடாசலம் எட்டும் தோற்ற.

பொருள்: பிரபஞ்சத்தில் நல்விளைவுகளைச் செய்யும் தவமும்–அத்தவத்தின் ஊட்டமாக நின்றிலங்கும் அன்பும், அவற்றால் பெறும் உயர்வும், இனியஅருள் மொழிகளைப் பகர்கின்ற சீர்பெற்ற நாவும் கொண்ட சான்றோரான கடவுள்முனி அகத்தியன், அத்திரி, வசிட்டர், கச்சியப்பர், கௌதமர், பரத்துவாசர், விசுவாமித்திரர், ஜமதக்கினி முதலான பெருந்தவத்தோர் தோற்ற அனந்தன்–கார்க்கோடகன்–குளிகன்–சங்கபாலன்–தங்கன்–பதுமன்–மகாபதுமன்–வாசுகி ஆயநாகங்கள் தோற்ற அண்டமனைத்தையுஞ் சூழ்ந்து நிற்கும் கிழக்கு–தென்கிழக்கு–தெற்கு, தென்மேற்கு, மேற்கு, வடமேற்கு–வடக்கு–வடகிழக்கு ஆய எண்திசைகளும் தோற்ற அத்திசைகளைத் தாங்கிநிற்கும் மதம்மிக்க, ஐராவதம், புண்டரீகம், வாமனம், குமுதம், அஞ்ஞனம் புட்பதந்தம், சார்வபௌமம், சுப்பிரதீபம் ஆய யானைகளும்தோற்ற அத்திசைகளின் அண்டப்பித்திகையின் பேரரண்களாக; இமயம், ஏமகூடம், கந்தமானதம், கயிலை நிடதம், நீலகிரி, மந்தரம், விந்தம்ஆய. பெருமை மிகு அசைவற்ற மலைகள் தோற்ற; கடாசலம் – மதயானை.

10. தோற்றமுநெறியுநேருந்துலங்கியவுலகோரேழு
மாற்றிடவெவர்க்குமாற்றாமகோததியேழுந்தோற்ற
தோற்றியதீர்த்தமேழுந்தினங்கண்மூவேழுமற்றும்
போற்றுபொன்மேருவொன்றும் பொருந்தியங்கிருந்தகாலை

தோற்றமும் நெறியும் நேரும்
துலங்கிய உலகு ஓரேழும்,
ஆற்றிட எவர்க்கும் மாற்றா
மகோததி ஏழுந் தோற்ற:

தோற்றிய தீர்த்தம் ஏழும்
தினங்கள் மூவேழும், மற்றும்
போற்று பொன் மேரு ஒன்றும்
பொருந்தி அங்கு இருந்தகாலை.

பொருள்: ஒழுங்கும் நேரிய முறைமையும் விளக்கமுற; சுவர்க்கம், பூலோகம், புவர்லோகம், மகாலோகம், ஜனலோகம், தபோலோகம், சத்தியலோகம் என்பனவும், எத்தகையோராலும் மாற்றி அமைக்க முடியாத பெருநீர்ப் பரப்புகளான, உப்புக்கடல், தேன்கடல், கருப் பஞ்சாற்றுக்கடல் தயிர்க்கடல், நெய்க்கடல், பாற்கடல், சுத்தோதகக் கடல், என்பனவும், புனிதநீர்ப் பெருக்காக அமைந்த; கங்கை, யமுனை, சரஸ்வதி, நருமதை, குமரி, கோதாவரி, காவேரி ஆய ஏழு நதிகளும், ஞாயிறு–திங்கள்–செவ்வாய் புதன்–வியாழன்–வெள்ளி–சனி–இராகு–கேது ஆய ஒன்பது கோள்களும், மேடம் (சித்திரை), இடபம் (வைகாசி), மிதுனம் (ஆனி), கற்கடகம் (ஆடி), சிங்கம் (ஆவணி), கன்னி (புரட்டாதி) துலாம் (ஐப்பசி), விருச்சிகம் (கார்த்திகை), தனு (மார்கழி) மகரம் (தை), கும்பம் (மாசி) மீனம் (பங்குனி) ஆகிய–போற்றலுக்குரிய இருபத்தொரு நாள்களும்–கோள்களும் அழகியதும் வளம்மிக்கதுமான மேருமலை யொன்றும் இப்புவிவாழ்வு நெறிப்பட, இணைவுகொண்டு தோற்றின. அவ்வேளையில்;

11. [8]காலையில்வருணனக்கிகலந்த[9]விஞ்ஞானவேத
மேலவாம்பதுமயோனியென்றுறுமுகங்க[10]ளைந்தின்
[11]காலமெய்க்கமலமீதிற்குடிபுகும்பிரமரெண்மர்
பால்புரைநீறுபூத்தபரமர்தாள்விரவவந்தார்.

காலையில் வருணன் அக்கி
கலந்த விஞ்ஞானவேத
மேலவாம் பதுமயோனி
என்றுறு முகங்கள் ஐந்தின்
காலமெய்க் கமல மீதிற்
குடிபுகும் பிரமர் எண்மர்,
பால்புரை நீறுபூத்த
பரமர்தாள் விரவவந்தார்.

பொருள் : காலை நேரத்தில் வருணனும், தீக்கடவுளும் பேரறிவு செறிவுற்ற வேதப்பொருளை ஓதி நின்றனர். ஓங்காரத் துட்பொருளாய் அமைந்த; அ – இ – உ – எ – ஒ என்பவற்றின் மூலம் பிரபஞ்ச விரிவினைச் செய்து நிற்கும் தாமரை மலர் போன்ற மென்

பா.வே. 8 காலையின், 9 விஞ்ஞானம், 10 ஐந்திற், 11 கோலமெய்.

மையும் பளிங்கு போன்ற தண்மை யொளியுங் கொண்ட குழந்தைமைக்குரிய 'அ' கர முகத்தினையும் (ஈசானம்), இளமை பொலியும் 'இ' கர முகத்தினையும் (தற்புருடம்), ஆணையிடும் 'உ' கரமுகத்தினையும் (அகோரம்), பெண்மை செறிந்த 'எ' கர முகத்தினையும் (வாமம்) அரசாண்மை பொருந்திய 'ஓ' கர முகத்தினையும் (சத்தியோசாதம்) பால் வெண்ணீறணிந்த வடிவினையுங் கொண்டு எழுந்தருளியிருக்கும் சிவபரம் பொருளின் வடிவினை வணங்கும் பொருட்டு; வேதா – விரிஞ்சன், கமலவாசி, சயம்பு, பத்மபூ, பூசிட்டி, பிதாமகன், சதுர்முகன், ஆகிய படைப்புக்கடவுளர் எண்மரும் ஒன்று சேர்ந்து வந்தனர்.

12. விரவினனாதிவேதன்விரிஞ்சன்மெய்க்கமலவாசி
தரைதொழுசயம்புமிக்கசதுமுகன்பதுமபூதன்
வரபிதாமகன்பூசிட்டிவயங்கியவெண்மர்கோனைப்
பரமனைவழுத்துங்காலம்பயின்றுளசிறிதுசொல்வாம்.

விரவினன் ஆதிவேதன், விரிஞ்சன்,
மெய்க் கமலவாசி,
தரை தொழு சயம்பு, மிக்க
சது முகன், பதுமபூதன்,
வரபிதாமகன், பூசிட்டி, வயங்கிய
எண்மர் கோனைப்
பரமனை வழுத்தும் காலம்
பயின்றுள சிறிது சொல்வாம்.

பொருள் : திருமலையிடத்து வந்து தோன்றிய வேதன்–விரிஞ்சன் 5 கமலவாசி, பூமிதொழும் சயம்பு, மேன்மைமிகு சதுர்முகன், பதுமபூதன், பிதாமகன், பூசிட்டி என்று பகரப்படுகின்ற பிரமர்கள் கோணைநாயகனான பரமனை வணங்கிய பொழுது நிகழ்ந்தவற்றைச் சிறிது கூறுவோம்.

13. வாய்ந்திடும்வருணகாலம்வயங்கினவெழுமேகங்க
ளேய்ந்திடுமக்கிகாலமிசைந்தன[12]முத்தியெங்கும்
போந்தவிஞ்ஞானகாலம்புகுந்தனவித்தையாவுந்
தோய்ந்தவேதத்தில்வேதந்துலங்கினதலங்கள்யாவும்.

பா. வே. 12முத்தீ=காலை – நண்பகல் – மாலை ஆகிய மூன்று வேளைகளிலும் முனிவர்களால் தீ வளர்த்து வேட்கப்படும் வழிபாடு. அது, ஆகவநீயம், தக்கணாக்கியம், காருகபத்தியம் எனப்படும்.

வாய்ந்திடும் வருண காலம்
வயங்கின எழுமேகங்கள்,
ஏய்ந்திடும் அக்கிகாலம் இசைந்தன
முத்தி எங்கும்,
போந்த விஞ்ஞான காலம்
புகுந்தன வித்தை யாவும்,
தோய்ந்த வேதத்தில் வேதம்
துலங்கின தலங்கள் யாவும்.

பொருள் : நீர்த்தெய்வமான வருணனுக்குரிய பருவகாலத்தில் எழுகின்ற; சம்வர்த்தம், ஆவர்த்தம், புட்கலாவர்த்தம், சங்காரிதம், துரோணம், காளாமுகி நீலவருணம் ஆகிய எழு வகைப்பட்ட மேகங்களும் முறையே முத்துநவமணிகள், நீர், பொன்போன்ற கனிப்பொருட்கள், பூக்கள், மண், தீ—கல் என்பவற்றை வளம், பொலியச்சுரந்தன. போற்றத்தக்க அந்நிகழ்வினால் அக்காலத்தில் முத்தியின்பம் எங்கும் செழுமைபெறப் பொருந்தியிருந்தது. பேரறிவாய்வுகள் அனைத்து மக்களிடம் பெருகுவதாயிற்று. அனைத்துக் கலைகட்கும் வித்தாக அமைந்த வேதக் கருத்துக்கள் விளக்கமுற்றன. கோயில்கள் அனைத்திலும் வேதம் ஒலித்தது.

14. தலமிசைப்பதுமயோனிதனியுகம்புகுதுங்காலங்
குலவுமுப்பத்துமூன்றுகோடிநற்றேவர்தம்மோ
டலகிலாமுனிவர்தோற்றவவனிகண்முழுதுந்தாங்கி
நிலமிசைமுதன்மையாகநின்றதம்மேருவந்நாள்

தலைமிசைப் பதும யோனி
தனியுகம் புகுதும் காலம்,
குலவும் முப்பத்துமூன்று கோடி
நல் தேவர் தம்மோடு,
அலகிலா முனிவர் தோற்ற,
அவனிகண் முழுதும் தாங்கி,
நிலமிசை முதன்மையாக நின்றது
அம்மேரு அந் நாள்

பொருள் : நிலமிசை தாமரை மலரோனான பிரமன் சிறப்பு மிக்க வாழ்வியற்காலத்தினை அமைவுறச் செய்தகாலத்தில், நலம் மிக்க முப்பத்து மூன்று கோடி தேவர்களோடு, குற்றமற்ற பெருந்தவத் தோரான முனிவர்களும் தோன்றினர். அந்நாளில் இப்புவியிடத்துப் பிரபஞ்சச் செயற்பாட்டினை உறுதி செய்யும் வண்ணம், மேரு மலையானது அனைத்தையும் தாங்கி முதன்மை பெற்று நின்றது.

51. அந்தமாமேருவென்னுமசலமொன்றேழிரண்டு
தந்தபேரகிலம்யாவுந்தனித்தனிதோற்றத்தோன்றிச்
சுந்தரக்ககனச்சோதிதுலங்கிநின்றிலங்கிவெண்மை
சிந்துரம்பசுமைபொன்மைதிசைதிசைசிறந்துதோற்றும்.

அந்த மாமேருஎன்னும் அசலம்
ஒன்றே, ஏழிரண்டு
தந்த பேர்அகிலம் யாவும் தனித்தனி
தோற்றத் தோன்றிச்
சுந்தரக் ககனகச் சோதி, துலங்கி
நின்று இலங்கி, வெண்மை
சிந்துரம் பசுமை பொன்மை
திசைதிசை சிறந்து தோற்றும்.

பொருள் : அத்தகைய பெருமைசான்ற மேருமலை ; அதலம் – விதலம் – சுதலம் – தார்தலம் – இரசாதலம் – மகாதலம் – பாதலம் என்னும் கீழ் உலகங்கள் ஏழினையும், பூலோகம் – புவலோகம் 0 சுவலோகம் – சனலோகம் – தபோலோகம் – மகலோகம் – சத்திய லோகம் என்ற மேல் உலகங்கள் ஏழினையும் தனித்தனியே தோன்றச் செய்து, பொன்மயமான ஒளியுடன் வெண்மை – செம்மை – பசுமை – பொன்நிறம் என்பவற்றை அனைத்துத்திசைகட்கும் பரப்பிச் சிறப்புறத் தோன்றி நின்றது.

வேறு

16. திசையிற்றிசைககனத்தொளிசென்றுற்றெழுமேரு
வசைவற்றிடவெழுபாதலமடையப்பதமுருவி
மிசையிற்பகிரண்டப்பெருமுகடுச்சியின்விரவி
நசையுற்றுலகீரேழினுநடுவேநெடிதுயரும்.

திசையில் திசை ககனத்து
ஒளிசென்று உற்றெழு மேரு,
அசைவு அற்றிட எழுபாதலம்
அடையப் பதம் உருவி,
மிசையில் பகிரண்டப் பெரு
முகடு உச்சியின் விரவி,
நசையுற்று உலகு ஈரேழினும்
நடுவே நெடிது உயரும்.

பொருள் : திசையனைத்தும் ஒளிபரவும்படி வானளாவி எழுந்த மேருமலை அசைவற்று இப்பூமியில் நிலைகொண்டது. அதன் நிலைப்

பரட்டால் கீழ் உலகு ஏழும் நிலைகொண்டன. அது வானத்தினை யும் ஊடுருவி, வாயு மண்டலம், வருண மண்டலம், சூரிய மண்டலம் - சந்திரமண்டலம் நட்சத்திர மண்டலம்-அக்கினி மண்டலம்-திரிசங்கு மண்டலம் ஆகியவற்றிற்கும் ஒளிபரப்பி அப்பாலுஞ் சென்று அண்டத் தின் முகடளாவி அதன் புறப்பகுதிக்கும் தன் ஒளியினைப் பரப்பிப் பதின்நான்கு உகங்கட்கும் நடுவே இப்பூமியிடத்து நெடிது உயர்ந்து நின்றது. (15ம் பாட்டுரையின் பதின்னான்குலகும் குறிக்கப்பட்டுள்ளது)

17. உயர்வுற்றிடுமேருத்திகளுயரத்திலிரட்டி
யயர்வற்றிடுமடியிற்புடையாகப்புவிசெல்லும்
[13]பயமிற்றுயர்[14]சதிரச்சிரபந்தத்தியல்வடிவா
யியலுற்றதனடுவேயொருராசத்தருவுளதே.

உயர்வு உற்றிடும் மேரு, உத்திகள்
உயரத்தில் இரட்டி
அயர்வு அற்றிடும் அடியில்
புடையாகப் புவிசெல்லும்
பயம் இற்று உயர் +சதிரச்
சிரபந்தத்து இயல் வடிவாய்
இயல் உற்று, அதன் நடுவே
ஒரு *ராசத்தரு உளதே

பொருள்: அவ்வண்ணம் உயர்ந்து நின்ற மேரு தன் உயரத்தி லும் பார்க்க இரு பங்காகத் தன் அடிப்பகுதியினை விரித்து, புவியின் அடியிற் சென்று உலகோர் அச்சத்தினை நீக்கி நின்றது. இவ்வண் ணம் நின்ற மேருமலையின் செம்மை சான்ற அழகிய குவட்டின் நடுவே இயல் நெறி மாறாத செழுமை கொண்ட ஓர் அரசமரம் அமைவு பெற்றிருந்தது.

+ சதிர் + அச் + சிர + பந்தத்து எனப் பிரித்துப் பொருள் கொள்ளப்பட்டது. சதிர் = செம்மை. சிரபந்தத்து = உச்சியில் ஒழுங் கமைந்த இடத்தில்.

* ராசத்தரு = அரசமரம் — கற்பகதரு என்னும் இரண்டிற்கும் பொதுப்பெயர். புலவர் எதனை எண்ணினாரோ தெரியவில்லை. அரச மரம் இந்துக்களால் இன்றும் போற்றி வழிபடப்படுகின்றது.

பா.வே. 13 பயமற்று, 14 சதுரச்சிரபந்தத்தியல் வடிவாய் - இதனை, சதுர் - அச்சிரபந்தம் எனப் பொருள்கொள்ளல் வேண்டும். அச்சிரம் = கோணம்.

18. தருவைத்தருமுடியிற்கொடுமுடியிற்றனிநீள
முருகுற்றெழுமளவோசனைமூவாயிரமுளதாம்
வருமப்படிமுடியாயிரம்வரைபெற்றுளதம்பொன்
னுருபத்திடுமணிபோன்மணியொளியைச்சொலவெளிதோ

தருவை தருமுடியில், கொடு
முடியில் தனிநீள
முருகு உற்று எழும் அளவு
'யோசனை மூவாயிரம் உளதாம்,
வருமப்படி முடி ஆயிரம் வரை
பெற்றுளது அம்பொன்
உருபத்திடும் மணிபோன் மணி
ஒளியைச் சொல எளிதோ.

பொருள்: மலைமுகட்டில் அமைந்த பெருமைமிகு புனித மரத்தின் சிறப்பமைந்த அழகிய இளந் தளிர்கள், நீளமாக எழுந்து மூவாயிரம் யோசனை தூரம் பரவி நின்றன. அவ்வண்ணம் நின்ற அப்புனிதமரத்தின் வடிவம் ஒளிமிக்க மணிகளை இழைத்தது போன்றிருந்தது. அதன் உயர்வுமிக்க அழகினை – ஒளியின் சிறப்பினைச் சொல்லுதல் எளிதோ? அன்று.

' ஒரு யோசனை = கண்ணுக்கு எட்டிய தூரம்

19. தோல்பச்சிலைகனிநாண்மலர்சுடர்பொன்படர்நாவ
லேல்தெற்குளமேறிக்கரசெழிலத்தியோர்கீழ்பா
லாலுத்தரமழகுற்றெழுமம்மால்வரையின்கீழ்
நால்திக்கினும்வழிபாதலநகரிற்செலவுளதே.

தோல் பச்சிலை கனி நாண்மலர்
சுடர் பொன்படர் நாவல்
ஏல் தெற்குள, மேல்திக்கு அரசு,
எழில் அத்தி ஓர்கீழ்பால்,
ஆல் உத்தரம் அழகுற்று எழும்,
அம் மால்வரையின் கீழ்
நால் திக்கினும் வழி பாதல
நகரில் செலவுளதே.

பொருள்: மரத்தின் பட்டை – பசியஇலை – கனி – அன்றலர்ந்த மலர் என்பன பொன்னொளி பரப்ப நின்ற நாவல் மரம் பெருமைக் குரிய தென்திசையிலும், புனிதம்மிக்க அரசமரம் மேற்குத்திசையி

பா. வே. 15 உருவுற்று 16 மேல்திக்

லும், அழகும் செழுமையுங் கொண்ட அத்திமரம் கிழக்குத்திசையிலும் ஆல மரம் வட திசையிலும் அழகுற அமைவு பெற்றிருக்க, அத்திரு மலையின் கீழ்ப்பாகத்தில் நான்கு திசைகளிலும் கீழ் உலகங்கட்குச் செல்லும் பாதைகளும் அமைவுற்றிருந்தன.

20. உளவெங்கணு நிறையும்புனலூறுஞ்சுனைமாறா
திளகுஞ்சிறையெகினங்கிளியேனம்பிணைகடமா
களபம்பரிசிங்கம்புலிகைபெற்றிடுமுகமா
[17]வளவன்றியதினமாய்விளையாடும்புனலாடும்.

உள எங்கணும், நிறையும்
புனலூறும் சுனை மாறா
இளகும் சிறை எகினம், கிளி,
ஏனம், பிணை, கடமா,
களபம், பரி, சிங்கம், புலி,
கை பெற்றிடு முக மா,
அளவு அன்றிய தினமாய்
விளையாடும் புனலாடும்.

பொருள்: திருமலையின் அனைத்திடங்களிலும் நீர் நிலைகள் நிறைந்துள்ளன. ஊற்றெடுக்கும் அருவிகள் அவற்றைச் செழுமை யூட்டுகின்றன. அன்னங்களும், கிளிகளும் நீர்த்தடங்களிலும், சோலைகளிலும் நிறைந்துள்ளன. பன்றி – பெண்மான் – ஆண்மான் – யானை– குதிரை – சிங்கம் – புலி – யாளி என்பன அளவின்றி நிறைந்துள்ளன. அவை அனைத்தும் பகையின்றி விளையாடும் நீராடும்.

21. ஆடொன்றியமுகமாவுடனண்பாவனசரபங்
கோடொன்றியமதமாவொடுகூடன்புறுமரிமா
நீடும்பணிதன்னோடெதிர்நேராதனகலுழன்
நாடுந்திறமிவையேலெவர்நண்ணார்புகழ்பண்ணார்.

ஆடொன்றிய முகமாவுடன்
நண்பாவன சரபம்,
கோடொன்றிய மதமாவொடு
கூடன்புறும் அரிமா,
நீடும் பணிதன்னோடு எதிர்
நேராதன கலுழன்,
நாடும் திறம் இவையேல், எவர்
நண்ணார் புகழ் பண்ணார்.

பா. வே. 17 வளவின்றிய

பொருள் : திருமலையிடத்தும் அதனைச்சூழவுள்ள இடங்களிலும் வாழ்கின்ற அனைத்துயிர்களும் அன்புறவு கொண்டு வாழ்கின்றன. அதாவது, யாளியோடு-பாம்பும், தந்தங்களையுடைய யானையோடு-சிங்கமும், நீண்ட வடிவுகொண்ட பாம்போடு கருடனும் பகையற்று வாழ்கின்றன. அதனால், கடவுளர்-தேவர்கள்-முனிவர்கள் மற்றுமுள்ள கணங்கள், மனிதர்கள் அனைவரும் திருமலையை நாடிச் செல்கின்றனர். அவ்வண்ணம் செல்பவர்கள் புகழ்கொண்ட வாழ்வினைப் பெறுகின்றனர். அவ்வண்ணம் சென்றடையாதவர்கள் புகழினைப் பெறாதவரே.

22. பண்ணாறியவளியின்றொகைபாடும்புதுமலரின்
கண்ணாறியதடமுங்குளிர்கானாறியகடமும்
விண்ணாறியமுடியுந்தருவிரைநாறிய[18]வடியுந்
[19]தண்ணார்முனிகணமுஞ்சுரர்கணமுந்தழுவிடமே.

பண்ணாறிய வளியின் தொகை
பாடும் புது மலரின்
கண்ணாறிய தடமும், குளிர்
கான் நாறிய கடமும்
விண்ணாறிய முடியும், தரு
விரை நாறிய வடிவும்,
தண்ணார் முனி கணமும்,
சுரர் கணமும் தழுவிடமே.

பொருள் : வண்டின் கூட்டங்கள் தேன் உண்டு களிக்கும் இனிய ஓங்கார ஓசை எங்கும்பரவ, தேன்சுரக்கும் கண்களான மலர்களைத் தரும் நீர்த்தடங்களும், குளிர்ந்த நீருடைய கால்வாய்களில் உள்ள மலர்களின் மணமும், விண்முட்டிநின்ற திருமலையின் மலைக் குவட்டில் உள்ள சோலைகளின் மலர்களின்மணமும், புனித மரங்களின் மலர்களில் இருந்து சொரிந்த மகரந்தங்களின் மணமும் தேன் ஒழுக்கும், செந்தண்மை பூண்ட முனிவர்களின் கூட்டமும் இன்பவுலகினரான தேவர்களின் கூட்டமும் ஒன்றிணையுமிடமே திருமலை.

23. இடமொன்றியவம்மேருவினிடையிற்புடைமதியுங்
கடறுன்றியகதிருந்திசைகாணத்திரிதரலா
லடறுன்றியபகிரண்டமொடகிலாண்டமதெங்கும்
படமேவியவதனுக்கிணைபகரப்பொருளுளதோ

பா.வே. 18 வடியுங், 19 கண்ணார், 20 படிறின்றிய.

இடம் ஒன்றிய அம் மேருவின்
இடையில் புடை மதியும்,
கடல் துன்றிய கதிரும்
திசை காணத் திரிதரலால்,
அடல் துன்றிய பகிரண்டமொடு
அகிலாண்டம் அது எங்கும்,
பட மேவிய அதனுக்கு இணை
பகரப் பொருள் உளதோ.

பொருள்; அனைத்து நல்வியல்புகளும் ஒருங்கமையப் பெற்ற அம் மேருமலையில் தோன்றிய; திங்கட் செல்வனும், கீழ்த்திசைக் கடலில் தோன்றிய கதிரவனும் அனைத்துத் திக்குகட்கும் ஒளி பரப்பித் திரிகின்றன. அவ்வொளி; வலிமையும் செழுமையுங்கொண்ட அண்டம் அனைத்துக்கும் அண்ட வெளியினுக்கும் ஒளியூட்டியது. இத்தகைய பெருமைசான்ற திருமலைக்கு இணையாக எப்பொருளினைக் கூறலாம். அது இயலாது.

வேறு

24. தோமுறுமொருபாலார்க்குச்சுடரவன்குடபாற்சேற
லேமுறுமொருபாலார்க்குக்கீழ்பாலாயெழுதலொன்றாற்
றேமுறுநான்குபாலின்தீவுக்குமிந்தச்செம்பொன்
மாமலைவடபாலுள்ளமலையெனமதிக்கலாமால்

தோமுறும் ஒரு பாலார்க்குச் சுடரவன்
குடபால் சேறல்
ஏமுறும் ஒருபாலார்க்கும் கீழ்பாலாய்
எழுதல் ஒன்றால்,
ஏமுறும் நான்கு பாலின் தீவுக்கும்
இந்தச் செம்பொன்
மாமலை வடபால் உள்ள
மலையென மதிக்கலாமால்.

பொருள்: திருமலையில் தோன்றும் கதிரவன்; இப்புவியிடத்து ஒரு பால் வாழ்பவர்க்கு மேற்குத் திசையில் தோன்ற, இன்னொரு பாலார்க்கு அதே கதிரவன் கீழ்த்திசையில் உதிப்பது போல் தோற்றி வருவதனால் நான்கு திக்குகளிலும் அமைந்த தீவுகளில் உள்ள மக்கள் அனைவர்க்கும் ஒளிபரப்பி நின்றது. அதனால் இத்திருமலையை! வடபால் அமைந்த கயிலையினை ஒத்ததெனப் பகரலாம்.

25. மால்வரையதனைச்சூழ்ந்துவளைகின்றநான்குதீவுங்
கோலமாமோரோர்தீவுங்கோடியோசனையினூடே
யேலுமூன்றிலக்கம்பன்னீராயிரத்தைஞ்ஞூறேகச்
சாலும்யோசனையுட்கொண்டுதனித்தனிவிளங்குமாதோ.

மால்வரை அதனைச் சூழ்ந்து
வளைகின்ற நான்கு தீவும்,
கோலமாம் ஓர் ஓர் தீவும்
கோடி யோசனையின் ஊடே,
ஏலும் மூன்று இலக்கம் பன்னீர்
ஆயிரத்து ஐஞ்ஞூறு ஏகச்,
சாலும் யோசனை உட்கொண்டு
தனித் தனி விளங்குமாதோ.

பொருள் : பொன்மலையைச் சூழ்ந்து வளம் பெற்ற நான்கு தீவுகளும் – செழுமை கொண்ட பல்வேறு தீவுகளும் கோடி யோசனைக்கிடையே, ஏற்றுக்கொண்ட கணக்கின்படி மூன்று இலட்சத்துப் பன்னீராயிரத்து ஐஞ்ஞூறு யோசனைதூரங்கட்கு இடையே, தனித் தனியே விளங்கும் நிலப்பரப்புகளைக் கொண்டு அமைவு பெற்றிருந்தன மாதோ. வியப்பிடை வந்த ஈற்றசை.

26. விளங்குமத்தீவுட்டென்பால்விரிதருசம்புத்தீவு
களங்கமிலதற்கிரட்டியுவர்க்கருங்கடலேசூழு
முளங்கொளுமதற்குமப்பாற்பிலங்கமென்றொருதீவந்த
வளங்கொளுந்தீவைப்பாலின்மறிகடல்வளையாநிற்கும்.

விளங்கும் அத்தீவுள் தென்பால்
விரிதரு சம்புத் தீவு,
களங்கமில் அதற்கு இரட்டி
உவர்க் கருங்கடலே சூழும்,
உளம் கொளும் அதற்கும் அப்பால்
பிலக்கம் என்று ஒருதீவு, அந்த
வளங் கொளுந்தீவைப் பாலின்
மறிகடல் வளையா நிற்கும்.

பொருள் : விளக்கம் பெற்றுள்ள அத்தீவுகளின் தென் திசையில்; பரந்த நிலப்பரப்புக் கொண்ட குற்றமற்ற வளஞ்சிறந்த சம்புத்தீவும் – அத்தீவின் இருபங்கு அகன்ற நீர்ப்பரப்புக் கொண்ட கருங்கடலும் சூழ்ந்திருக்கும். மனம் விரும்பத்தக்க அவற்றிற்கும் அப்பால் பிலக்கம் என்று ஒரு தீவுண்டு. அந்த வளஞ்சிறந்த தீவினைப் பாற்கடல் சூழ்ந்திருக்கும்.

பா. வே. 21தீவிற்

27. நிற்குமங்கதற்குமப்பாஎெடுங்கிரவுஞ்சதீவு
சொற்குலவந்தத்தீவைத்தயிர்க்கடல்சூழ்ந்துதேங்கு
முற்குறியதற்குமப்பான்முதுகுசைத்தீவாமந்த
நற்குசைத்தீவைநெய்யினறுங்கடல்வளைக்குமாங்கே.

நிற்கும் அங்கு அதற்கும் அப்பால்
நெடும் கிரவுஞ்ச தீவு
சொற்குலவு அந்தத் தீவைத்
தயிர்க்கடல் சூழ்ந்து தேங்கும்,
முற்குறி அதற்கும் அப்பால்
முதுகுசைத் தீவாம், அந்த
நற்குசைத் தீவை நெய்யின்
நறுங்கடல் வளைக்கும் ஆங்கே.

பொருள் : இவ்வண்ணம் அமைவு பெற்ற தீவுகட்கும் அப்பால், நீண்ட பெரிய கிரவுஞ்சம் என்ற பெயர் கொண்ட தீவும் – அதனைச் சூழ்ந்த தயிற்கடலும், அதற்குமப்பால் பழைமைமிக்க, வளம் கொண்ட, முதுகுசைத்தீவும் – அதனை நெய்க் கடலுஞ் சுற்றி வளைத்து நிற்கும்.

28. ஆங்கதற்கப்பான்மேவும்புட்கரமாகுந்தீவு
தாங்கருமந்தத்தீவைமதுக்கடறழுவிவாழு
மீங்கதற்கப்பாலேசான்மலியெனவிசைக்குந்தீவா
மோங்குசீரந்தத்தீவையொலிபுனற்கடலேசூழும்.

ஆங்கு அதற்கு அப்பால்மேவும்
புட்கரமாகுந் தீவு,
தாங்கரும் அந்தத் தீவை
மதுக்கடல் தழுவி வாழும்,
ஈங்கு அதற்கு அப்பாலே சான்மலி
என இசைக்கும் தீவாம்,
ஓங்குசீர் அந்தத் தீவை
ஒலிபுனற் கடலே சூழும்.

பொருள் : அவ்வண்ணம் கூறப்பட்ட இடங்கட்கு அப்பால் அமைந்திருப்பது புட்கரம் என்ற தீவு. இப்பெரிய தீவினை மதுக் கடல் தழுவிச் சூழ்ந்திருக்கும். இதற்கும் அப்பால் சான்மலி என்னும் தீவு அமைந்துள்ளது. வளம் ஓங்கிச் சிறந்த அந்தத்தீவை அலை ஒலிமுழங்கும் கடல் சூழ்ந்திருக்கும்.

29. சூழுமங்கதற்கப்பாலேசாகமாந்தீவுதுன்னும்
வாழுமத்தீவைக்கன்னன்மறிகடற்பரவைமேவு
மேழ்பெருந்தீவுமிவ்வாறேழ்பெருங்கடலுமந்த
வாழியஞ்செம்பொற்குன்றம்புறங்கொளவகத்துளாமால்

சூழும் அங்கு அதற்கு அப்பாலே
சாகமாம் தீவு துன்னும்
வாழும் அத்தீவைக் கன்னல்
மறிகடல் பரவை மேவும்
ஏழ்பெரும் தீவும் இவ்வாறு
ஏழ்பெருங் கடலும் அந்த
வாழி அம்செம்பொற் குன்றம்
புறங் கொள அகத்துளாமல்.

பொருள் : சூழ்ந்திருக்கும் அக்கடலுக்கு அப்பால் சாகமாம் தீவு அமைவு பெற்றுள்ளது. அத்தீவினைக் கருப்பங்கடலின் அலைகள் தழுவும். இவ்வகையில் ஏழ்பெருந் தீவுகளும் ஏழ்பெருங்கடல்கள் சூழ்ந்திருக்க, வளம் கொண்ட செம்மை சான்ற அழகிய பொன்மலை அமைந்திருந்தது.

30. மால்வரைச்சம்புவிற்கும்பிலிக்கமற்றதற்கும்வண்மை
சால்கிரவுஞ்சமந்தத்தீவுக்குங்குசையத்தன்மை
கேல்வருபுட்கரத்தீவிதற்குஞ்சான்மலியீதிற்கு
மேல்வருசாகமொன்றொன்றிரட்டிவேலையுமிவ்வாறே.

மால்வரைச் சம்பு விற்கும்
*பிலிக்கமற்ற அதற்கும், வண்மை
சால் கிரவுஞ்சம் அந்தத் தீவுக்கும்
குசையத் தன்மைக்கு
ஏல்வரு புட்கரத் தீவிற்கும்
சான்மலி ஈதிற்கும்
மேல்வரு சாகம் ஒன்று ஒன்று
இரட்டி வேலையும் இவ்வாறே.

* குற்றமற்ற

பொருள் : பொன்மலையானது; மலைகள் நிறைந்த செழுமை குன்றா குற்றமற்ற சம்புத்தீவுக்கும், வளம் நிறைந்த கிரவுஞ்ச தீவுக்கும், குசையத்தீவுக்கும், புட்கரத்தீவுக்கும், சான்மலிதீவிற்கும், சாகமத்தீவுக்கும் நடுவே பெருநீர்ப்பரப்புச் சூழ இருந்தது. *பிலிக்கம்=தூற்றுதல் – குற்றம். பிலிக்கமற்ற என்ற தொடருக்கு இடம் நோக்கி செழுமை குன்றா குற்றமற்ற எனப் பொருள் கொள்ளப் பட்டது.

31. இவ்வகையோசனைப்பானூற்றிருபத்தைங்கோடி
செவ்வகையிதற்கிரட்டிகடலுமாய்த்திசைகடோறு
மெய்வகைமேருவெற்பைச்சூழ்ந்தமண்விளங்குமெல்லை
யவ்வகையைஞ்ஞூறாழியாயிரகொடியாமால்.

இவ்வகை யோசனைப்பால் நூற்று
இருபத்து ஐங்கோடி,
செவ்வகை இதற்கு இரட்டி
கடலுமாய் திசைகள் தோறும்
மெய்வகை மேரு வெற்பபைச்
சூழ்ந்தமண் விளங்கும் எல்லை
அவ்வகை அஞ்ஞூறு, ஆழி
ஆயிரங் கோடியாமால்.

பொருள் : இவ்வண்ணம் நூற்று இருபத்தைந்து கோடி யோசனை தூரங்கொண்டு அமைந்திருந்த தீவுக்கூட்டங்களும், இதனினும் இருமடங்கு கொண்ட இருநூற்றைம்பது கோடி யோசனை தூரப்பரப்பளவு கொண்ட கடலும் சூழ்ந்திருக்கும் வண்ணம் மேரு மலை விளங்கியது. மேருமலையினைச் சூழ்ந்த நிலம் ஐஞ்ஞூறு கோடி யோசனை தூரப்பரப்புக் கொண்டதாக இருந்தது. நீர்ப் பரப்பு ஆயிரம் கோடியோசனை தூரம் பரந்ததாக இருந்தது.

32. ஆயவிவ்வுலகமெல்லாங்கவிப்பதோரண்டமந்தச்
சேயபேரண்டமந்தவண்டமாய்த்திருப்பேர்செப்புந்
தூயவங்கதற்குமாழிகிரிக்குமப்புறமாய்ச்சூழப்
பாயிருள்கடியுஞ்சோதிபகிரண்டம்பயிலுமன்றே.

ஆய இவ்வுலகம் எல்லாம்
கவிப்பதோர் அண்டம் அந்தச்
[22]சேய பேரண்டம் அந்த
அண்டமாய்த் திருப்பேர் செப்பும்,
தூய அங்கு அதற்கும் ஆழி
கிரிக்கும் அப்புறமாய்ச் சூழப்,
பாயிருள் கடியும் சோதி
பகிரண்டம் பயிலும் அன்றே.

பொருள் : தோற்றிநிற்கும் இவ்வுலகனைத்தையும் தன்னுள் அடக்கிநிற்பது அண்டம். இச்செம்மைசான்ற அண்டம், எல்லை

பா. வே. 22 சேயபொன்னண்டம் வேதண்ட மாய் 23 சோதிப் பகிரண்டம்.

யற்ற பேரண்டப் பெரு வெளிக்குள் அடங்கும். இத்தகைய பெருமை சான்ற பேரண்டப் பெருவெளிக்கும், அதனுள் அடங்கிய அண்டகோளத்திற்கும், அளப்பெரும் பெருமை கொண்டு கீழ்கடல் அமைந்த உதயமால்வரைக்கும், ஒளிபரப்பிப்-பரந்த இருளை நீக்கிப்; பேரொளியினைப் பரப்பி நின்றது பொன்மலை.

வேறு

33. பயிலுமங்கதுபன்னவொண்ணாதது
வெயிலும்வெண்ணிலவும்மிளிராதது
செயலெவர்க்குந்தெரிவரிதாயது
மயலிருட்பிணிமாசொன்றிலாதது.

பயிலும் அங்கு அது பன்ன ஒண்ணாதது
வெயிலும் வெண்ணிலவும் மிளிராதது
செயல் எவர்க்கும் தெரிவரிது ஆயது
மயல் இருட்பிணி மாசு ஒன்று இலாதது.

பொருள் : அப்பொன்மலையின் பெருமை சொற்களுக்கு அடங்காதது. வெங்கதிரோன் ஒளியும் – வெண்ணிலவின் தண்ணொளியும் அப்பொன்மலையிடத்து ஒளிமழுங்கிவிடும். அதன் அளப்பெரும் ஆற்றலைச் – செயற்பாட்டினை, அறிதற்கு இயலாது. மயக்கத்திற்கும் அதனால்வரும் துன்பத்திற்கும் இடமில்லாதது. குற்றமற்ற நிறைபண்பு கொண்டது.

34. துன்னுமாருதமெங்குந்[24]துவண்டது
மின்னுபேரொளிவெள்ளம்விழைந்தது
கன்னிமாலினும்வேதன்கரத்தினு
மன்னுமேனிவகுப்பரிதானது.

துன்னு மாருதம் எங்கும் துவண்டது,
மின்னு பேரொளி வெள்ளம் விழைந்தது,
கன்னி மாலினும் வேதன் கரத்திலும்,
மன்னு மேனி வகுப்பரிதானது.

பொருள் : அத்தகைய பெருமை சான்ற பொன்மலையிடத்து இளம் தென்றல் காற்று எங்கும் பொருந்தி மென்மையுடன் தவழ்ந்தது. அன்றியும் மிகுந்த விளக்கத்தினைச் செய்யும் பேரொளி; வெள்ளமாய் எங்கும் பரந்தது. என்றும் இளமைமிக்க காத்தற் கடவுளான திருமாலாலும், வேதம் ஓதும் படைப்புக் கடவுளான பிரமனாலும், நிலைபேறுடைய அதன் வடிவினைப் படைத்தல் இயலாது. அச் செயல் மிகவும் அரியது.

பா. வே. 24துவன்றது

5. ஆனவப்பகிரண்டமடங்கலு
ஞானமாயொருசோதிநயந்தது
தானமற்றதுதன்னுடலற்றது
பானமற்றதுபாவனையற்றது.

ஆன அப்பகிரண்டம் அடங்கலும்
ஞானமாய் ஒரு சோதி நயந்தது,
தானம் அற்றது தன்னுடல் அற்றது,
பானம் அற்றது பாவனை அற்றது.

பொருள் : தோற்றத்துக்குள்ளான அப் பேரண்ட மெங்கும் பேரறிவான ஒளிபரந்தது. அது அங்கிங்கெனாதபடி எங்கும் நிறைந்தது. தனக்கொரு வடிவம் இல்லாதது. உணர்தற்கரியது. அறியவொண்ணாதது.

36. அற்றநுண்பரமாணுவிலெட்டிலொன்
றிற்றவண்ணமுமில்லையெனுஞ்சுடர்
பற்றிநின்ற[25]பராபரமானது
நற்றுமங்கதினாதமெழுந்தது.

அற்ற நுண் பரமாணுவில் எட்டில் ஒன்று
இற்ற வண்ணமும் இல்லை எனும் சுடர்,
பற்றி நின்ற பராபரம் ஆனது,
நற்றும் அங்கு அதி நாதம் எழுந்தது.

பொருள் : அப்பேரொளி அடிப்படை அணுவின் துகளில் எட்டில் ஒன்று கூட இல்லாதது. அதனிடம் எவ்வகை வடிவமும் இல்லை யெனக்கூறத்தக்கது. ஆயின் பேரறிவு வடிவானது. அனைத்திலும் நீக்கமற நின்ற பராபரமானது. அவ்வண்ணம் நின்ற அப் பராபரத்தின் இயக்கத்தால் மிக்க ஒளி எழலாயிற்று.

37. எழுந்தநாதமதீன்றதொர்விந்துவை
யழுந்துவிந்துவதனுட்சதாசிவங்
கொழுந்துவிட்டதுட்பட்டொருகோயிலாய்
விழைந்துநின்றவெளியினிருந்தது.

எழுந்த நாதம் அது ஈன்றது ஓர் விந்துவை,
அழுந்து விந்து அதனுள் சதாசிவம்,
கொழுந்து விட்டது உட்பட்டு ஒரு கோயிலாய்,
விழைந்து நின்ற வெளியின் இருந்தது.

பா. வே. 25 பரபரமாயது.

பொருள் : எழுச்சிபெற்ற நாதம் விந்துவாயது. அவ்விந்தின் இடத்தில் சதாசிவத் திருமேனி கொண்டவடிவுடன் இறைவன் தோன்றினான். இவன் கற்பனை கடந்த சோதி வடிவினன். இவன் சுடரொளிபரப்பி எங்கும் நிறைந்து நின்றனன். பொன்மலை; சதாசிவன் எழுந்தருளியிருக்குங் கோயிலாய்ச் சிறப்புற்று விளங்கியது. பேரண்டப் பெருவெளி அனைத்தும் வியாபித்திருந்த பேரறிவு; நாதமாய் - விந்தாய் உருவத்திருமேனி கொண்ட சதாசிவமாய் இருந்தது. அது உள்ளும் புறமும் நீக்கமற நிறைந்திருந்தது. இதனைத் திருமூலர்.

''தூரத்திற்சோதி தொடர்ந்தொரு சத்தியாய்
ஆர்வத்துநாதம் அணைந்தொரு விந்துவாம்
பாரச்சதாசிவம் பார்முதல் ஐந்துக்கும்
சார்வத்து சத்திஒர் சாத்து மானாமே.'' என்பர்

கற்பனை கடந்தசோதி; எண்ணத்திற்கு உட்பட்டு வரும் சக்தியாய், நாதத்தைப் பொருந்திய – விந்துவாய், ஐந்தொழிலினை யேற்று நடத்தும் சதாசிவமூர்த்தியாய்த்தோன்றி; நிலம் நீர்–தீ–காற்று–ஆகாயம் ஆய ஐம்பூதங்கட்கும் சத்தியாகவும், ஒப்பற்ற பேராற்றல் உடையவராகவும் இருப்பார் யோகநெறியில் சதாசிவன் ஆஞ்ஞைச் சக்கரத்துக்குரியவனாகக் கருதப் படுகின்றான். சதாசிவன்; சிவன்சக்தி விளங்க ஏதுவாக இருப்பதாக தடத்தசிவம் எனவும் பெயர் பெறுவார்.

38\. இருந்தகாலைமகேசனொடீசன்மால்
விரிஞ்சனாதியவிண்ணவர்யாவரும்
பரிந்துவந்திருபாதங்களைக்கையாற்
றெரிந்துதண்மலர்சிந்திவணங்கினார்.

இருந்தகாலை, மகேசனொடு ஈசன் மால்
விரிஞ்சன் ஆதிய விண்ணவர் யாவரும்,
பரிந்து வந்து இருபாதங்களைக் கையால்
தெரிந்து தண்மலர் சிந்தி வணங்கினார்.

பொருள்: இறைவன் சதாசிவத் திருமேனி கொண்டு எழுந்தருளியிருந்தபொழுது, மகேசன் – ஈசன் – திருமால் – பிரமன் ஆகிய கடவுளரும் தேவர்களும் உள்ளம் அன்பினால் நெகிழ்வுற வந்து தம்மிரு கைகளாலும் அவன் திருவடிகளுக்கு அன்றலர்ந்த மலர்களையிட்டு வணங்கினர்.

39. வணங்குமன்றொருவாலப்பிரமனை
இணங்குவிச்சுவகன்மனையேவியே
யணங்குபாகனழைத்தவனர்ச்சனைக்
குணங்கொழுங்கதைகூறலுற்றாமரோ.

வணங்கும் அன்று ஒரு வாலப் பிரமனை,
இணங்கு விச்சுவகன் மனை ஏவியே,
அணங்கு பாகன் அழைத்தவன் அர்ச்சனைக்
குணங் கொளும் கதை கூறலுற்றாமரோ.

பொருள்: வணங்கிய இறைவர் – வானவருள், ஓர் இளம் பிரமனை அழைத்து சதாசிவன் ஆணையிட்டனன். அவ்வாணையினை ஏற்றுச் சென்ற அவ்விளம் பிரமன், விச்சுவகன் என்ற படைப்புக்கடவுள் மனை சென்று, உமையை ஒரு பாகமாகக்கொண்ட இறைவன் அழைத்தனன் எனக்கூற, அவ்விச்சுவகன் பூசனை வழிபாட்டுக்குரிய முறைப்படி வந்த கதையினைக் கூறுவாம். 'அரோ' ஈற்றசை.

புவனோற்பத்திச் சருக்கம் முற்றிற்று.

திருவிருத்தம் 39

நான்காவது

அர்ச்சனா விதிச்சருக்கம்

1. அரனருஞ்சுடராயபரம்பரன்
பரவுமாறிருவுந்தியிற்பங்கயம்
விரவுவேதன்வெளிப்படவிச்சுவ
கருமனைத்_ னிகாட்டுவமென்றரோ.

அரன் அரும் சுடர் ஆய பரம்பரன்,
பரவுமாறு திரு வுந்தியில் பங்கயம்,
விரவு வேதன் வெளிப்பட விச்சுவ
கருமனைத் தனி காட்டுவம் என்றரோ,

பொருள்: சிவன் ஒப்பற்ற தலைவன். ஒளிவடிவானவன். எங்கும் நிறைந்தவன். அத்தகைய பரனை வணங்கும் வண்ணம், திருமாலின் தொப்புளில் மலர்ந்த தாமரையிடத்தில் (உந்திக்கமலம் = மணி பூரகம்) தோன்றியவனும், வேதப் பொருளை விளக்க வந்தவனும் படைபபுக் கடவுளுமான பிரமன் தோற்ற; இறைவன் விச்சுவ கர்மன் மூலம் பிரமனை அழைத்து, அவனுக்கிட்ட பணியினைக் கூறுவாம். 'அரோ' ஈற்றசை.

2. ஓதவந்தங்குதித்தவற்கோதுவான்
மாதவன்றிருப்பள்ளிவளர்ந்தது
மீதெவர்க்குமமுதம்[1]விளைந்தது
பாதகந்தெறவந்ததொர்பாற்கடல்.

ஓத வந்து அங்கு உதித்தவற்கு ஓதுவான்
மாதவன் திருப்பள்ளி வளர்ந்ததும்
ஈது எவர்க்கும் அமுதம் விளைந்தது
பாதகம் தெற வந்த ஓர் பாற்கடல்.

பொருள்: சிவன்; வேதத்தை ஓதவந்த விச்சுவகர்மனை நோக்கி, திருமால் அறிதுயில் கொண்டதும் (தன்னை உணர்ந்த நிலையில் கொள்ளும் யோக நித்திரை) இக்காலத்தில் தேவர்கள் அமுதம்

பா. வே. 1 விளைந்ததும்

வேண்ட அதனைப் பெறுவதற்காகத் திருமால்; பள்ளி கொண்ட பாற்கடலைக் கடைந்ததும், அச்செயல் - மாறுபட்ட பயனைக் கொடுத்ததும், வாசுகி ஆலகால நஞ்சினைப் பாற்கடலிற் கக்கியதும், அதனால் பாற்கடலே துன்பத்திற்கு இடனாய் மாறியதுமாகிய செய்திகளைக் கூறினன்.

3. பாலடுத்தகடற்[2]குளோர்பாந்தனுண்
டாலடுத்தமலர்[3]களுண்டத்திரு
மாலடுத்தவயிற்றினுண்டோர்மலர்
மேலடுத்ததிலுண்டொருவேதியன்

பால் அடுத்த கடற்குள் ஓர் பாந்தன் உண்டு,
ஆல் அடுத்த அமலர், களுண்ட அத்திரு
மால், அடுத்த வயிற்றின் உண்டு ஓர் மலர்,
மேல் அடுத்ததில் உண்டு ஒரு வேதியன்.

பொருள்: பாற்கடலை; மந்தரமலையை மத்தாகக் கொண்டு வாசுகியை நாணாகப்பூட்டிக் கடைந்தகாலை, வாசுகி பாற்கடலிடத்து ஆலகால நஞ்சினைக் கக்கியது அதனை வினையின் நீங்கிய முதல்வன் சிவன் உண்டனன். பாற்கடலில் ஆலகால நஞ்சு நீங்கிய பின், செந்தாமரை மலரில் தோன்றிய இன்ப ஊற்றான(கள்) இலக்குமியைத் திருமால் தனதாக்கிக் கொண்டார். அத்திருமாலின் வயிற்றில் - தொப்புளில் உண்டாய செந்தாமரையின் மேல் வேதம் ஓதும் பிரமன் தோன்றினான்.

4. அன்னதாமரைநீளமனேகமாய்த்
துன்னுமுள்வயின்சொல்லரிதாதலாற்
பொன்னிதழ்புடைமூடப்பொகுட்டினு
ளுன்னிநம்பதயோகத்துறங்கினான்

அன்ன தாமரை நீளம் அனேகமாய்த்
துன்னும் உள்வயின் சொல்லரிது, ஆதலால்
பொன் இதழ் புடைமூடப், பொகுட்டினுள்
உன்னி நம்பத யோகத்து உறங்கினான்

பொருள்: திருமாலின் தொப்புளிடம் தோன்றிய தாமரை நீண்டு வளர்ந்த தன்மையினை உள்ளபடி சொல்லுதல் அரிதாகும். எனவே அதனை விடுத்து பொன் போன்ற அழகிய தாமரை மலரின் இதழ் மூடிய வித்திடத்தில் தோன்றிய பிரமனின் யோக நித்திரை பற்றிக் கூறுதும்.

பா. வே. 2. ஓர், 3 கண்ணுற்றான் = இதனை; மலர்களுண்ட திருவெனவும் கொள்வர் அது சிறப்பன்று.

5. உறங்கும்வேதனைநீசென்றுணர்த்தியே
பிறங்குதென்கயிலாயப்பெருங்கிரி
திறங்கொள்பூசனைசெய்வித்தவன்குலத்
தறங்கொளெண்மரோடாகுதியென்றனன்

உறங்கும் வேதனை நீ சென்று உணர்த்தியே,
பிறங்கு தென் கயிலாயப் பெருங்கிரி
திறங்கொள் பூசனை செய்வித்து, அவள் குலத்து
அறங்கொள் எண்மரோடு ஆகுதி என்றனன்.

பொருள்: விச்சுகர்மனை நோக்கி, உறக்கத்தில் உள்ள பிரமனை நீ சென்று எழுப்பி அருள் பொலியும் தென் கயிலை மலைக்கு வருக எனக் கூறுக. இங்கு வந்து முறைமை சான்ற பூசனை செய்து, அவன் குலத்து முன்னோர் செய்த அறநெறி நின்று முன் வந்த பிரமர்கள் எண்மருடனும் சேருக எனப் பகரும்படி பணித்தனன் பரமன்.

6. என்றுகூறவிறைஞ்சியேபாற்கடல்
சென்றுமாலையுஞ்செங்கைகுவித்தவன்
[4]துன்றுமுந்தியந்தாமரைத்தோடெலாம்
வென்றிவிச்சுவகன்மன்விரித்தனன்

என்று கூற, இறைஞ்சியே, பாற்கடல்
சென்று, மாலையுஞ் செங்கை குவித்தவன்,
துன்றும் உந்தியந் தாமரைத் தோடெலாம்
வென்றி விச்சுவகன்மன் விரித்தனன்.

பொருள்: பரமன் பணிப்புரை கேட்ட விச்சுவகன்மன் பரமனை வணங்கிப் பாற்கடல் சென்றனன். பாற்கடலில் பள்ளி கொண்ட திருமாலைத் தன் செம்மை சான்ற கைகளால் வணங்கினன். அத்திரு மாலின் தொப்புளில் தோன்றிய தாமரைமலரில் யோக நித்திரையில் இருந்த பிரமனுக்கு பரமனின் பணிப்புரையை விளக்கினன்.

7. விரித்துநான்முகன்வெள்ளைவிடைப்பிரா
னருச்சனைக்குனையாங்கழைத்தானென
நிருத்தனென்னைநினைத்தனனோவெனாப்
பெருத்தவோகைப்பெருங்கடன்மூழ்கினான்

விரித்து நான்முகன், வெள்ளை விடைப் பிரான்
அருச்சனைக்கு உனை ஆங்கு அழைத்தான் என,
நிருத்தன் என்னை நினைத்தனனோ எனாப்
பெருத்த ஓகைப் பெருங்கடல் மூழ்கினான்.

பா. வே. 4 றுன்று

பொருள்: திருமால் உந்திக்கமலத்தினை விரித்த விச்சுவகன்மனாகிய பிரமன், திருமாலின் உந்திக்கமலத்திருந்த பிரமனை நோக்கி தூய வேதத்தினை ஊர்தியாகக் கொண்ட (இடபம்) சிவன் உன்னை அருச்சனை செய்யும் பொருட்டு அழைத்தனன் எனப் பகர்ந்தான். அதனைக் கேட்ட தாமரைமலரில் வாழும் பிரமன் ஆனந்த நடம் புரியும் எம்தலைவன் என்னை நினைத்தனனோ எனக் கூறிப் பெரும் மகிழ்ச்சிக்கடலில் மூழ்கினன்.

8. நான்முகன்றனயனமொரெட்டினு
மேன்முகந்தவிருப்பில்வரும்புனல்
பான்முகந்தபணிக்கடலெங்கணுஞ்
சமன்முகந்தமழையிற்சொரிந்தவே

நான்முகன் தன் நயனம் ஓர் எட்டினும்,
மேல் முகந்த விருப்பில் வரும் புனல்,
பால் முகந்த பணிக்கடல் எங்கணும்,
சூல் முகந்த மழையிற் சொரிந்தவே.

பொருள்: மலரவனான பிரமனின் கண்கள் எட்டிலுமிருந்து, அன்பின் பெருக்கால்; இறைவன்மேற் கொண்ட விருப்பால் கண்ணீர் சொரிந்தது. அது சூல் கொண்ட முகிலானது தண்மை நிறைந்த பாற்கடல் எங்கும் நிறையும்படி பெய்த மழை போல் இருந்தது.

9. வேதமும்பெருவிண்ணவருந்தவர்
போதமுந்தனி[5]தேடும்புராதன
னேதமுஞ்சினமுமிகழாதவென்
மாதவங்கண்மதிந்ததெவ்வாறரோ

வேதமும் பெரு விண்ணவர், அருந்தவர்
போதமும் தனி தேடும் புராதனன்,
ஏதமும் சினமும் இகழாத என்
+மாதவம் கண் மதித்தது எவ்வாறரோ.

பொருள்: இறைவன் வேதத்தால் உணரப்படாதவன் - பெருமை மிகு தேவர்களாலும் அறிதற்கு அரியவன் - அருந்தவமுடைய ஞானிகளாலும் கண்டுணர முடியாதவன். அவன் பழைமைக்கும் பழைமையானவன். அத்தகைய பரம்பொருள், காழ்புணர்வையும் - அதனால் வரும் பகையினையும் - சினத்தினையும் இகழ்ந்து நீக்காத என்னைத் தன் அன்பு நிறைந்த அருட் கண்களால் நோக்கி என்னையும் ஒரு பொருட்டாக எண்ணினன். இது நான் செய்த பெருந்தவமே இது எவ்வாறு நிகழ்ந்தது என்பதனை அறியேன் 'அரோ' ஈற்றசை.

+ மாதவங்கள் மதித்தது எவ்வாறரோ என்னு கொண்டு பொருள் காண்பது நயமுடையதன்று. அதில் பொருட் சிறப்பும் இல்லை.

பா. வே. 5 தேரும்

10. மதித்தநான்[6]மலருச்சியின்வைத்ததாள்
விதித்தவென்கையிற்பூசைவிரும்புமோ
வுதித்ததிங்கட்கொழுந்தொளிருஞ்சடை
பதித்தவெள்ளறுதுப் பலசூடுமால்.

மதித்த நான்மலர் உச்சியில் வைத்த தாள்,
விதித்த என் கையிற் பூசை விரும்புமோ!
உதித்த திங்கள் கொழுந்து ஒளிரும் சடை
பதித்த வெள்ளறுகும் பல சூடுமால்.

பொருள் : ஒளிபரப்பும் மூன்றாம் பிறைச் சந்திரனைத் தன் திருமுடியிடத்து அணிந்து வெள்ளறுகினைச் சூடியவன் எம் தலைவனான சிவன், அவன் போற்றுதற்குரிய; திருவாத்தி - கொன்றை - மந்தாரை - வெட்சி ஆகிய மலர்களால் தாங்கப்படும் திருவடிகளையுடையவன். நான் விதிக்குக்கட்டுப்பட்டவன். வினையுடையவன். இத்தகைய இயல்பு கொண்ட என் கைப்பூசனையை அப்பேருளாளன் விரும்புவரோ!

11. மாலிழைத்தவங்கொலம்மாலுறை
பாலிழைத்தகடல்செய்[8]பலன்கொலோ
மேலிழைத்தவறங்கொன்மிடற்றினா
லாலிழைத்தவரென்னையழைத்ததே.

மால் இழைத்த தவம் கொல், எம் மாலுறை
பால் இழைத்த கடல் செய் பலன் கொலோ,
மேல் இழைத்த அறம் கொல், மிடற்றினான்
ஆல் இழைத்தவர், என்னை அழைத்ததே.

பொருள் : ஆலகால நஞ்சுண்ட நீல மணிமிடற்றினையுடைய அறமே வடிவான இறைவன் என்னை அழைத்தது; எனையீன்ற திருமால் செய்த தவமோ அன்றி அவர் அறிதுயில் கொள்ளும் பாற்கடல் செய்த தவத்தின் பயனோ - யான் முன் செய்த அறத்தின்பயனோ யான் அறியேன்.

12. அழைத்தசொற்கொடரசரவென்றெழுந்
திழைத்தயோகமொழிந்தெதிரன்பினாற்
றழைத்த விச்சுவகன்மனையுந்தழீஇப்
பிழைத்தன[9]னிப்பிறவிநோய்க்கென்றனன்.

பா. வே. 6மறையுச்சியில், 7வெள்ளெருக்கு, 8பலன் கொள்யான்
9இப்பிறவித்துயர்க்கொன்றான்.

அழைத்த சொற்கொடு அரகர என்று எழுந்து
இழைத்த யோகம் ஒழிந்து, எதிர் அன்பினால்
தழைத்த விச்சுவகன்மனையும் தழீஇப்
பிழைத்தனன், இப்பிறவி நோய்க்கு என்றனன்.

பொருள்: விச்சுவகன்மன் அழைத்த சொல் கேட்டு அரகர என்று கூறிக் கொண்டு எழுந்தனன் பூவில் உறை பிரமன். தான் செய்த யோகத்தினையும் விட்டொழித்தனன். அன்பின்மேலீட்டால் விச்சுவகன்மனைத் தழுவி நீ இங்கு வந்து சிவன் பணிக்கு என்னை அழைத்ததனால் யான் பிழைத்தேன் - என் பிறவி நோயும் என்னை விட்டு நீங்கியது எனப் பகர்ந்தனன்.

13. பிறவிதீர்க்கும்பிரான்[10]றனதர்ச்சனைக்
குறுவதெங்ஙன்யானுய்குவதெவ்விட
மறுவிலாதவசொல்கெனமற்றவ
னிறைவதென்கயிலாயத்திலென்றனன்

பிறவி தீர்க்கும் பிரான் தன் அர்ச்சனைக்கு
உறுவது எங்ஙனம், யானும் உய்குவது எவ்விடம்,
மறுவில் ஆதவ சொல்கென, மற்றவன்
இறைவ! தென் கயிலாயத்தில் என்றனன்.

பொருள்; நற்றவத்தை உடையவ! தவத்தால் ஒளிபெற்றவ!! வேத ஆகமங்களை உணர்ந்தவ!!! பிறவித்துன்பத்தை நீக்கும் எமது தலைவனின் சிவனின் பூசனைக்குச் செல்வது எப்படி? யான் சென்றடைய வேண்டிய இடம் யாது? அதனைச் சொல்வாயாக எனப் பூவில் உறை வேதன் கேட்டனன். அதற்கு விச்சுவகன்மன்; பிரமனை நோக்கி இறைவ! எம்தலைவன் சிவன் எழுந்தருளியிருக்கும் தென்கயிலையாகிய திருமலைக்கு என்றனன்.

14. என்றலுங்கமலத்திலிழிந்தயன்
சென்றனன்[11]பிரான்நீயினடம்புரிந்
தொன்றுமூழியழிந்தபின்[13]பொய்யல
நின்றதேநிகரல்லதுநேருமோ

என்றலும் கமலத்தில் இழிந்து, அயன்
சென்றனன், பிரான் தீயில் நடம் புரிந்து
ஒன்றும் ஊழி அழிந்தபின், பொய்யல
நின்றறதே நிகர் அல்லது நேருமோ.

பா. வே. 10 என தர்ச்சனைக். 11 பரன். 12 போயயல்

பொருள்: விச்சுவகன்மவேதன் பகர்ந்தது சேட்ட பூவில் உறை வேதன், தன் இருக்கையான தாமரை மலர் விட்டு நீங்கித் தென் கயிலை சென்றனன். அங்கு சிவன் திருவோலக்கங் கண்டு, எம் தலைவன் ஊழித்தீயில் நடம்புரிந்து அனைத்து அண்டப்பிரபஞ்சங் களையும் தன்னுட் கொண்டு நின்ற நிலைக் கொப்பானதே இத் தோற்றம் இதற்கு வேறு ஒப்புமை கூறுதல் இயலாது என்றனன்.

15. நேருந்தென்கயிலைத்திசைநீள்வழி
யூருமன்னத்துடனவனூர்ந்தனன்
சேருமந்தத்திருமலைகண்டுளங்
கூருமன்பொடிழிந்துகைகூப்பினான்

நேரும் தென் கயிலைத் திசை நீள்வழி
ஊரும் அன்னத்துடன் அவன் ஊர்ந்தனன்,
சேரும் அந்தத் திருமலை கண்டு, உளம்
கூரும் அன்பொடு இழிந்து கை கூப்பினான்.

பொருள்: பூவில் உறை அயன் நீண்ட தென்கயிலை வழியினைத் தன் ஊர்தியாகிய அன்னத்தின்மேல் ஏறிச் சென்றனன். அங்கு சென்ற பொழுது இறைவன் எழுந்தருளிய திருமலையினைக்கண்டு உள்ளத்தில் மீதூர்ந்த அன்பினால் நெகிழ்வுற்றுக் கைகூப்பி வணங் கினான்.

16. நானநாண்மலர்நான்முகன்றாழ்தலும்
மானவிச்சுவகன்மனும்வாழ்த்தியே
தானுமங்கைத்தலங்குவித்தேவிழி
யானபத்தினுநீத்தமரும்பினான்

நான நாண்மலர் நான்முகன் தாழ்தலும்,
மான விச்சுவகன்மனும் வாழ்த்தியே,
தானும் அங்கைத் தலம் குவித்தே, விழி
ஆன பத்தினும் நீத்தம் அரும்பினான்.

பொருள்: அன்றலர்ந்த மலர்கள் அணிந்த நான்முகப்பிரமன்; அவை அசைவுறத் தாழ்ந்து வணங்கினான். அவனுடன் சென்ற பெருமைமிகு ஐமுகப்பிரமன் விச்சுவகன்மனும்; இறைவனை வாழ்த்தி, தன் அழகிய கைகளையும் குவித்து தன் பத்து விழிகளிலும் கண்ணீர் பெருக வணங்கினன்.

17. நீத்ததெங்கணெடுவினையென்றயன்
கூத்தன்குன்றிற்குளிர்சுனைமூழ்கியே
தீர்த்தமேந்தியதீர்த்தன்கயிலையை
யேத்தியாலயமுன்னின்றிறைஞ்சினான்

நீத்தது எங்கண் நெடுவினை என்று அயன்
கூத்தன் குன்றில் குளிர் சுனை மூழ்கியே
தீர்தம் ஏந்திய தீர்த்தன் கயிலையை.
ஏத்தி ஆலயம் முன்னின்று இறைஞ்சினான்.

பொருள் : பரம்பொருளை வணங்கிய நான்முகன்; எம்மிடம் அமைந்த – நீண்டு வளர்ந்த அனைத்து வினைகளும் அழிந்தன எனக் கூறினன். அவ்வண்ணம் கூறிய நான்முகன்; சங்கையைச் சடையில் தாங்கி உயிர்கட்கு அருள் சுரந்த . வினையின் நீங்கிய விளங்கிய அறிவினனான சிவபரம்பொருள் எழுந்தருளியிருக்கும் தென்கயிலை யாகிய திருமலையை வணங்கித் திருக்கோயிலின் முன்னின்று வழி பட்டான்.

18 முன்புநின்னைமுடிப்புறத்தேடியு
மன்பிலாமையஃதின்மைமாதவந்
தென்பிறந்ததிருவுருக்காணவின்
றென்பிறந்துமாதவமென்றனன்

முன்பு நின்னை முடிப்புறத் தேடியும்
அன்பு இலாமை அஃது இன்மை, மாதவம்
என்பிறந்தது திருவுருக் காண இன்று
என்பிறந்தது மாதவம் என்றனன்.

பொருள் : சிவபரம்பொருளே! முன்பொரு காலத்தில் உனது அடிமுடி தேடினோம். எமது அன்பற்ற இயல்பினால் அது இயலாது போனது, இன்று உன்திருவுருக்காண யான் செய்த மாதவம் என்னே என்று நான்முகன் போற்றிப் பகர்ந்தனன்.

19. என்றரன்றிருமுன்னரிசைத்துப்பின்
துன்றுமாசனந்தோன்றவிருந்தயன்
மின்றுலங்கியமேனிநிமிர்ந்து சீ
ரொன்றுசானுவினுட்பதம்வைத்தனன்

என்று அரன் திரு முன்னர் இசைத்துப் பின்
துன்றும் ஆசனம் தோன்ற இருந்து அயன்,
மின் துலங்கிய மேனி நிமிர்ந்து, சீர்
ஒன்று சானுவின் உட்பதம் வைத்தனன்.

பொருள் : சிவபரம் பொருளின்முன் வணங்கி வாழ்த்தி நின்ற நான்முகன், அப்பரம் பொருள் எழுந்தருளி இருந்த பொழுது தன் ஒளிபொருந்திய உடலினை நிமிர்த்தித் திருவடியின் கீழிட்டு வணங்கினன். பின் உடலினுள் அமைந்த உள்ளத்துள்ளே அவன் திருவடியினை நினைந்து இறைவன் திருவடிக் கீழ் அமர்ந்தனன்.

20. வைத்தகண்டுளைத்துண்டம்வயங்கிட
முத்தநன்னகைமெல்லிதழ்மூடிட
வந்தமத்திமவங்குலிநாசிமீ
துய்த்தருஞ்சிவமந்திரமுன்னினான்

வைத்த கண் துளைத் துண்டம் வயங்கிட,
முத்த நன்னகை மெல்லிதழ் மூடிட,
*அத்த ०மத்திமம் +அங்குலி நாசி மீது.
உய்த்து அரும்சிவ மந்திரம் உன்னினான்.

பொருள் : சிவபரம் பொருள் எழுந்தருளிய திருவோலக்கங் கண்டகண்கள் ஒளிமிகப் பொருந்த, முத்துப்பற்கள் கொண்ட நகை பொலியும் மென்மை வாய்ந்த இதழ் மூடியிருக்க, வலக்கையின் பெருவிரலும் சுண்டு விரலுக்கடுத்த மோதிர விரலும் மூக்கினைப் பிடிக்க, உயிர்ப்புடை மூச்சினை (பிராணாயாம்) இழுத்தடக்கி, இடைகலை பிங்கலை எனப்பகரப்படும் சந்திர நாடி சூரிய நாடிகளை முறைமையில் செயற்பட வைத்து, குண்டலினி எனச் சொல்லப்படும் மூலாக்கினியை எழுப்பிப், பிரமதண்டம் எனப்படும் முள்ளந்தண்டின் உள்ளே இருக்கும் சுழுமுனை நாடி மூலம் மேல் எழுப்பி, சுழுமுனையாகிய புருவ மத்தியில் அதனை நிலைப்படுத்தி அரிய ஓங்கார நாதத்தின் வித்தாய சிவமந்திரத்தை எண்ணி இருந்தனன் நான்முகப் பிரமன்.

---

* அத்தம் = இடக்கலை - பிங்கலை நாடிகளைக் குறித்து நின்றது.
० மத்திமம் = சுழுமுனை நாடியினைக் குறித்து நின்றது.
\+ அங்குலி = விரல்

21. உன்னுநன்மைபிராணனொடுட்புகப்
[13]பன்னுபாவம்பரன்றனோடேகிட
வின்னநாசியியற்றிப்பொருமினன்
கன்னமீதுமுக்காற்கரம்வைத்தரோ.

உன்னு நன்மை பிராணனொடு உட்புக,
பன்னு பாவம் பரன்தன்னோடு ஏகிட,
இன்ன நாசி இயற்றிப் பொருமினன்,
கன்ன மீது முக்கால் கரம் வைத்தரோ.

பொருள் : ஓங்காரத்துட்பொருளான அரும் சிவமந்திரத்தை உள்ளுணர்ந்து தன் மயமாகக் கொண்டனன் பிரமன். அதன்பயனாய் செய்த பாவம் அனைத்தும் பரம்பொருளின் அருள் வயத்தால் நீக்க முறப் பெற்றனன். மூக்குத் துவாரத்தின் மூலம் உள்வாங்கிய உயிர் பாற்றலால் மூலாதாரத்திலிருந்து குண்டலினியாகிய வெப்பாற்றல் மேலோங்க, கன்னங்கள் முகிழ்ந்தெழ (புடைக்க) தன் கன்னத்தில் மூன்றுதரம் கையினை வைத்துச் சிவசிவ என்றனன். 'அரோ' ஈற்றசை.

22. கரத்துடன்கரந்தைவரக்காட்சியா
லுரைத்தவங்குலியொன்றுடனொன்றுறப்
பரத்துளீசர்பதினொருமந்திர
நிரைத்தபாணிநியாசமுடித்தனன்

கரத்துடன் கரந்தைவரக் காட்சியால்
உரைத்த அங்குலி ஒன்றுடன் ஒன்றுறப்,
பரத்துள் ஈசர் பதினொரு மந்திரம்,
நிரைத்த பாணி நியாசம் முடித்தனன்

பொருள் : வலக்கையின் விரல்களில் பெருவிரலும், சுண்டு விரலுக்கு எடுத்தமைந்த மோதிரவிரலும் மூக்கில் அமைவுறப் பிடிக்கச் சுண்டு விரல் நிமிர்ந்து நிற்கப் பெருவிரலுக்கு அடுத்து நிற்கும் இரு விரல்களும் உள்நோக்கி மடிந்து நிற்க; இடக்கை, வலக் கையின் முழங்கைக்குக் கீழ் உள்ள முட்டியை ஐந்து விரல் களாலும் தாங்கி நிற்க - பதினொரு மந்திரங்களையும் உள்ளத்துள் உன்னி உயிர்பாற்றலுடன் (பிராணன்) உள்ளிருந்து இடைகலை - பிங்கலை எனப்படும் சந்திரகலை - சூரியகலை நாடிகளுடன் ஒன்றிணையச் செய்து, மூலதாரமாகிய குடண்டலினி ஆற்றலை சுழுமுனை நாடி மூலம் துரிய நிலையில் நிறுத்தி, உயிரொளி பெற்றுத் தன் தியான

பா. வே, 13 அன்னபாவம்பரனொடு

நிலையினை நிறைவு செய்தனன். பதினொரு மந்திரங்களாக அமைவுற்றவை ஓம் ஈசாயநம (அ), ஓம் தற்புருஷாயினம (இ), ஓம் அகோராயநம 0உ), ஓம் வாமதேவாயநம (எ), ஓம் சத்தியோ சாதாயநம (ஒ) என்ற இறைவன் திருமுகங்கட்குரியவையும், ஆத்மனின் உள்ளொளியான பரமன் இருக்கும் கோயிலான உடம்பின் உறுப்புகளான உச்சி (ஆ , புருவமத்தி (ஈ), கண்டம் (ஊ), இருதயம் (ஏ), தொப்புள் (ஓ), அடிவயிறு (அஉ) என்பவற்றை ஓங்காரத்துடன் சேர்த்துச் சிவபரம் பொருளை உன்னிக் கூறுதல். மூலாதாரத் திடத்தில் (அஉம்) ஓம் என இசைவுபட்டு சிவாயநம என உன்னும் பொழுது மூலக்கனல் பிரமமந்திரம் எனப்பகரப்படும் துவாதசாந்தத்தினை அடைந்து தன்னை மறந்து தன் நாமம் கெட்ட துரியாதீத நிலை ஏற்படும்.

அ - இ - உ - எ - ஒ என்பன சிவமாகவும் ஆ - ஈ - ஊ - ஏ - ஓ என்பன சக்தியாகவும் அஉ பீடமாகவும் ஓம் சிவ பரம்பொருளான சிவலிங்கமாகவும் கொள்ளப்படும். இவை ஒருமைப்பட்ட நிலையில் சிவனிடமும் - விருத்தியடைந்த நிலையில் சீவனிடமும் விளக்கமுறும். சீவனும் சிவனும் ஒன்றிய அன்பு நிலையே ஆனந்தம்.

''ஆனந்தம் ஆனந்தம் ஒன்றென் றறைந்திட
ஆனந்தம் ஆனந்தம் ஆ - ஈ - ஊ - ஏ - ஓமென் றறைந்திட
ஆனந்தம் ஆனந்தம் அஞ்சும தாயிடும்
ஆனந்தம் ஆனந்தம் அம்-ஹ்ரீப் அம்-க்ஷம்ஆம், ஆகுமே''

என்பது திருமந்திரம்.

23. முடியின்மிக்கமுகத்தினினெஞ்சினில்
[14]வடிவினாபியிற்சானுவின்மற்றுள
வடைவினங்கனியாசமமைத்தபின்
னுடலினுட்படுதன்மையுணர்த்தினான்.

முடியின் மிக்க முகத்தின் நெஞ்சினில்,
வடிவின் நாபியில் *சானுவின் மற்றுள
அடைவின் அங்க நியாசம் அமைந்தபின்,
உடலினுள் படு தன்மை உணர்த்தினான்

பொருள் : தலையின் உச்சியில் - பெருமைமிகு முகத்தில்; அழகு மிக்க மூக்கின் மூலம் உயிர்ப்பாற்றலை நிலைநிறுத்தி, உடலில் அமைந்த அனைத்துறுப்புகட்கும் அதனைச் செறிவுறச்செய்து மூலக்கனலை எழுப்பி அதன்மூலம் உடலினால் பெறும் பயனைப் பெற்றுச் சிவ பரம்பொருளை உணர்ந்தனன்.

பா. வே. 14 வடுவின்
* சானு = உடல்

24. தன்னுரந்தருசானுவினாபியின்
மின்னிலங்குமிடற்றினிநெற்றியின்
சென்னிமீதிற்செறிபடலந்தெறப்
பன்னுபாசுபதத்தையுணர்த்தினான்.

தன்னுரம் தரு சானுவின் நாபியின்,
மின் இலங்கு மிடற்றினில், நெற்றியின்,
சென்னி மீதில், செறி படலந் தெறப்,
பன்னு *பாசுபதத்தை உணர்த்தினான்.

பொருள் : தன் உடம்பில் அமைந்துள்ள ஆற்றலை மூச்சுப் பயிற்சியின் மூலம் (பிராணாயாம்) உயிர்ப்புறச் செய்து, அதனை உள்வாங்கி ஒலிமிக்க மிடற்றினில் (கழுத்தின் அடிப்பாகம்) நெற்றியில் (புருவ மத்தி) தலையின் உச்சியில் செறிவுறச் செய்தனன். அதன்மூலம் பாசுபதம் எனப் பகரப்படும் உடம்பின் இயல்பினை உணர்த்தினன்.

* பாசுபதம் என்பது மூன்று தலைகள் அல்லது சூலங்களையும் ஒன்பது கண்களையும் கொண்ட படை என உருவகிக்கப்பட்டுள்ளது. இது உடல் அமைப்பினை விளக்கி நிற்கின்றது. மூன்று சூலம் என்பது இடைகலை - பிங்கலை - சுழுமுனை எனப்பகரப்படும். சந்திர நாடி, சூரிய நாடி, அக்கினிநாடி என்பவற்றை உணர்த்தும். கண்கள் இரண்டு நாசித்துவாரம் இரண்டு, காதுத்துவாரம் இரண்டு வாய்வழி யொன்று, கழிவு நீர் செல்லும் அரச உறுப்புத் துவாரம் ஒன்று கழிவு பொருள் செல்லும் குதத்துவாரம் ஒன்றாக அமைந்த ஒன்பதும் கண்களாக உருவகிக்கப்பட்டன. இப்பாசபதத்தின் மூலமே ஆத்மனைப்பந்தித்த பகையைவென்று சிவபரம் பொருளாகிய பிரமத்தையடையலாம்.

25. [15]உணர்ந்துமண்புனநீவளியொண்விசும்
பிணைந்தமேனியுளேகபுருடனை
யணங்கிலாவெளிக்கப்புறத்தப்புற
மணங்கொள்காலுடன்வாங்கியிருத்தினான்

உணர்ந்து மண், புனல், தீ, வளி, ஒண் விசும்பு,
இணைந்த மேனியுள் ஏக புருடனை,
சுணங்கு இலா வெளிக்கு அப்புறத்து அப்புறம்,
மனம் கொள் காலுடன் வாங்கி இருத்தினான்.

பா. வே. 15 உணங்கு

பொருள் : உலகியலை உணர்த்தி நிற்கும்; மண், நீர், தீ, காற்று ஒளிமிக்க வான் ஆகிய பஞ்ச பூதங்களால் இணைவுற்றிருக்கும உடலின் அகத்தில் ஏகமாய் - அனைத்துமாய் நிற்கும் ஆத்மனை; பினிப்பற்ற சுழிமுனையான துரிய நிலைக்கு இட்டுச் சென்று அதற்கும் அப்பால் துரியாதீதம் எனப் பகரப்படும் பேரம்பலத்தில் நிலைபெற, உயிரகத்தை உள்வாங்கி இருந்தனன்.

26. இருத்து*நாபியின்கீழ்நின்றிலங்கழ
நிருத்துகாலுடன்சேரவெழும்பியுள்
ளுருத்தபோதிலுடலமனறபடு
புரிக்குநேரெனப்போதனிருந்தனன்.

இருத்து நாபியின்கீழ் நின்று இலங்கு அழல்
இருத்து காலுடன் சேர எழும்பி, உள்
உருத்த போதில உடலம அனறபடு
புரிக்கு நேரெனப் போதன் இருந்தனன்.

பொருள் : தொப்புளாகிய மணிபூரகத்தின்கீழ் அடிவயிறாகிய சுவாதிட்டானம் அமைந்துள்ளது. அதனகீழ் மூலாதாரம் உளளது. இதனைப் புருட்டம் எனவும் குதம் எனவும பகர்வர். இவ்விடத்தில உடலை இயககும் வெப்ப ஆற்றல் அமைந்துள்ளது. இவவாறறலை மேல்நோககி எழுச்சிபெறும்படி செய்தால் உடல் சுடச் சுட ஒளி ரும் பொன்போல ஒளிவிடும். இவ்வொளியின் துலக்கத்துக்குரிய குண்டலினி சக்தியை ஓங்கார ஓசையுடன இணைந்த காற்றின் மூலம் தாக்கி - விழிப்புறச் செய்தல் வேண்டும். அதற்கு உள்வாங் கும் உயிரகம் பயன்படுகிறது. அவ்வுயிர்ப்பாற்றலின தாககத்தால் எழுச்சியுற்ற குண்டலினி, பிரமதண்டம் என்னும் முள்ளந்தண்டின் மூலம் உடல் உறுப்புக்கள் அனைத்திற்கும் பேராற்றலைக் கொடுக் கும் வெப்ப ஆற்றலைப் பரப்பிச் - சிவபுரியான சுழுமுனையின் மேல் நிற்கும். சுழுமுனையின் மேலுள்ள இடத்தினைப் பிரமமந்திர மென்றும் - துவாதசாந்தம் என்றும் பேரம்பலம் என்றும், சொற் கடங்காக் - கற்பனைக்கெட்டா அதீதநிலை (துரியாதீதம்) என்றும், பலப்படப் பகவர், இதனையே வேதபோதனான பிரமன் செய்த னன். இதனைத் திருமூலர் திருமந்திரத்தில்,

''மட்டவிழ் தாமரை மாதுநல் லாளுடன்
ஒட்டி இருந்த உபாயம் அறிகிலர்
விட்ட எழுத்தை விடாத எழுத்துடன்
கட்டவல் லாருயிர் காக்கவல்லாரே'' எனக் கூறுவர்

விட்ட எழுத்து சூரியன். விடாத எழுத்து சந்திரன். அதாவது சந்திரகலை நாடியையும் சூரியக்கலைநாடியையும் இணைவு பெறச் செய்துசூழுமுனை நாடிமூலம் உயிர்ப்பாற்றலை நிலைப்படுத்தல். இதனைத் தம்பித்தல் என்பர்.

27. இருந்தவானத்திலங்கிதழாயிரம்
விரிந்தபங்கயமீதனல்வீசலுஞ்
சொரித்துவீழமுதத்துளிதோய்தலாற்
[16]சிவந்தமேனிசிவதனுவாக்கினான்.

> இருந்து வானத்து இலங்கு இதழ் ஆயிரம்,
> விரிந்த பங்கயம் மீது அனல் வீசலும்,
> சொரிந்து வீழ் அமுதத்துளி தேய்தலால்
> சிவந்த மேனி சிவதனு ஆக்கினான்.

பொருள் : அவ்வண்ணம் இருந்த பிரமன் சுழுமுனையாகிய துரிய நிலையில் நிலைகொண்ட குண்டலினி சக்தியினால் துவாத சாந்தம் எனப்பகரப்படும் துரியாதீதமாகிய பிரம மந்திரத்தைத் தாக்குறச் செய்தனன். அதனால் ஆயிரம் இதழ் கொண்ட தாமரை மலர் போன்ற அமுதகலசத்தைப் பொங்குறச் செய்தனன். அதில் இருந்து அமுதத்துளியானது, இருதய கமலமாகிய இரத்தாசயத்தில் நிரம்ப அதனை உடல் எங்கும் பரவச் செய்தனன. இதன் மூலந் தன் உடம்பினைச் சிவப் பிரமந்தாங்கும் தூய நிலைக்கு இட்டுச் சென்றனன்.

28. ஆங்குபன்னிரண்டங்குலத்தப்புறம்
போக்குவானிற்புறத்திடுமாவியை
நீக்கிமீட்டொருநெஞ்செனுமெட்டிதழ்
வீக்குபங்கயமீதிலிருத்தினான்.

> ஆங்கு பன்னிரண்டு அங்குலத்து அப்புறம்,
> போக்கு வானிற் புறத்திடும் ஆவியை,
> நீக்கி மீட்டு ஒரு நெஞ்செனும் எட்டிதழ்,
> வீக்கு பங்கய மீதில் இருத்தினான்.

பொருள் : துரியாதீத நிலையில் ஆத்மன் பேரொளியுடன் கலக்கும் நிலை அகண்டாகாரம் என்றும் பேரம்பலம் என்றும் பகரப் படும். இதனைப் புலவர்; ஆங்கு பன்னிரண்டு அங்குலத்துக்கப்பு

பா. வே. 16 தெரிந்து.

றம் எனப்பகர்கின்றார். இந்நிலையில் உடல் உணர்வு நீங்கிப் பிரபஞ்சப்பற்று விட்டு அனைத்துமேதானாய் நிற்கும் ஞானத்தின் கனிவு ஆத்மனிடம் தோற்றுகின்றது. இதனால் ஆத்மன் பிரபஞ்ச இயக்கம் அனைத்தையும் அகத்தும் புறத்தும் ஒரு சேரக் காண்கின்றான். இது ஏகம் எனப்படும் - அத்வைத நிலையாகும். இந்நிலையில் சீவன் சிவனாகின்றான். அந்நிலையில் நெஞ்சம் என்ற எண்கோண வடிவில் அமைவு கொண்ட உள்ளமாகிய எட்டிதழ்த் தாமரையில் சீவபேதம் சிவபோதமாக நிலைப்படுத்தப்படுகின்றது. இதனை நான்முகன் செய்தனன்.

29. இரும்பிணிட்டவிரசக்குளிகையாற்
திரும்பவங்கதுசெம்பொனதாவபோ
லரும்புசீவன்[17]சிவத்தொடணைந்தபின்
றுரும்பிடாதவிளக்கிற்றுலங்கினான

இரும்பில் இட்ட இரசக் குளிகையால்,
திருமப அங்கது செம்பொன் அது ஆவபோல்
அரும்பு சீவன் சிவத்தொடு அணைந்த பின்
துரும்பிடாத விளக்கில் துலங்கினான்.

பொருள் : கனிப்பொருள் மாற்றத் திறன் கொண்ட இரசாயனச் சேர்க்கையால் (இரசக்குளிகை) இரும்பு செம்மை பொருந்திய தங்கமாவது போல், யோக நெறியால் ஆற்றல மேம்பாடு கொண்டு கனிவு பெற்ற சீவன் - சிவபரம் பொருளுடன் இணைந்த பின்பு ஆத்ம ஒளி மீதூரப் பெற்றுத் தூண்டுதல அற்ற விளக்கின் ஒளி போல், துலக்க முறும். இத்துலக்க முற்ற நிலையினை நான்முகன் பெற்று விளங்கினான்.

30. நாலுமாறு[18]நலந்தருபத்துமே
டேலுமாறிரண்டெண்ணிரண்டோரிரண்
டாலமுண்டவர்க்கன்புறுமெல்லிதழ்க்
கோலமண்டபங்கொண்டுகுலாவினான்

நாலும் ஆறும் நலம்தரு பத்தும்மேல்
ஏலும் ஆறிரண்டு எண்ணிரண்டு ஓரிரண்டு
ஆலமுண்டவர்க்கு அன்புறு மெல் இதழ்க்
கோல மண்டபம் கொண்டு குலாவினான்.

பொருள் : பரு உடலும் சூக்கும உடலும் தொடர்புற்று இயங்குவன. பருஉடலில் உள்ளது முள்ளம் தண்டு. இது மேரு தண்டம் எனப்படும், இம்மேரு தண்டத்தின் அடிமுனையில் வெப்ப

பா. வே. 17 அறிவோடு, 18 நயந்தரு

ஆற்றலான குண்டலினி இருப்பதாகப் பகரப்பட்டுள்ளது. இம்மேரு தண்டத்திலிருந்து குண்டலினி ஊடுருவிச் செல்லும் அறிநிலை மையங்கள், ஆறு அமைந்துள்ளன. அவற்றை முறையே மூலாதாரம் - அடிவயிறு (சுவாதிட்டனம்) தொப்புள் (மணிபூரகம்) நெஞ்சு (அநாகதம்) மிடறு (விசுத்திர) புருவமத்தி (ஆஞ்ஞை) எனக் குறிப்பிடுவர். மிடறு வரையுள்ள ஐந்து மையங்களும் பஞ்ச பூதங்கட்கு உரியன. ஆறாவதான சுழுமுனை மையம் மனம் ஒருமைப்பாடடைந்து நிலை பெறும் இடம. அதன மேல் அமைவுற்றிருக்கும் மையம துவாதசாந்தம் அலலது பிரம மந்திரம். இது துரியாதீத நிலைக்குரியது. இது சிவபரம் பொருள் உறைவிடம எனப் பகரப் படும். அதனை அறிவால் பெறும் பேரின்ப நிலையின இருக்கை யெனக் கூறலாம். இமமையஙகள சக்கரங்கள என்றும தாமரைகள் என்றும கருதபபடுகினறன. இவை ஒவ்வொன்றிறகும குறிப்பிட்ட இதழ்கள் குறிககபபட்டுள்ளன. இவறறினை விளககும பொழுது மூலாதாரத்திறகுச் சதுரமும் அடிவயிறறுககுப் பிறைச் சந்திரனும, தொப்புளுககு முக்கோணமும். நெஞ்சுககு அறுகோணமும, மிடற்றுககும - புருவமததுககும வட்டஙகளும, குறியீடுகளாகக் குறிக்கப் படுகினறன. இவறறின இதழ்களின எணணிககையினை முறையே நானகு, ஆறு, பததுப் பனனிரணடு, பதினாறு - இரண்டு என வகுத்துளளனா மெயக நூலார். சககரஙகள் ஆறுககும தனிததனி வடிவங்கள் கொடுககபபட்டது போல, அவை ஒவ்வொனறுக்கும் ஒலி வேறுபாடுகளும் கூறப்பட்டுள்ளன. இதன் மூலம் வடிவங்களின கூற்பு நெறியும - ஒலிகளின கூர்ப்பு முறையும் இரு வேறு முறையில் அமைந்து செயறபடுவதற்கு இநத அடிப்படை ஒலிகள் (பீஜாச்சரம் Root Letter) அமைவு பெறுகின்றன. அவை தமிழில் அ-இ-உ-எ-ஒ எனவும் வடமொழியில் லம். வம். ரம், யம, கம் எனவும் குறிககப்படுகினறன. இவறறின் ஒழுங்கு முறைப்படி முறையே நிலம் - நீர் - நெருப்பு - காற்று விண் என்ற ஐந்து பூதங்களையும் குறிக்கும். சுழுத்திமையத்திற்கு அடி எழுத்து ஓம் எனப் பகரப்படுகின்றது, இதுவே அனைத்திற்கும் மூல ஒலி. இதுவே மந்திரம் எனப்படும் இதில் இருந்தே அனைத்துப் பிரபஞ்சமும் விரிவு பெற்றன. மீண்டும் இதில் ஒடுக்கம் பெறுகின்றன.

உடலில் அமைந்துள்ள நாடிகளில் முள்ளந்தண்டாகிய மேரு தண்டத்தின் இடப்பாகத்தில் - மூலாதாரத்தில் சந்திர நாடியெனப் படும் வெளிறிய இடைகலை நாடி அமைந்துள்ளது. வலப் பக்கம் சூரிய நாடி எனப்படும் சென்னிறப் பிங்கலை நாடி அமைவு பெற்றுள்ளது. இடைகலை நாடியினைப் பெண் எனவும், பிங்கலை நாடியினை ஆண் எனவும் கொள்வர். இவை மேல் நோக்கிச் செல்லும் பொழுது இடமிருந்து வலமும் - வலமிருந்து இடமுமாய்.

மாறிமாறி ஆதார நிலைகளைச் சுற்றிச் சென்று ஆஞ்ஞா சக்கரத்தை யடைந்து நாசித்துவாரங்களை நோக்கிச் செல்கின்றன. இந்நாடிகள் வழியாக உயிராற்றல் உள்ளே செல்கின்றது, வெளியே வருகின்றது. இவ்விரு நாடிகளின் இடையில் மேருதண்டம் எனப்படும் முள்ளந்தண்டு உள்ளது. இதன் வட்டத்தின் ஊடே சுழுமுனை நாடி அமைநதுள்ளது. இதில தாமத இயலபு அமைந்துளள தென்றும், இதன உளளே இராசதம்மிக்க வஜ்ரிணிநாடி அமைந்துள்ளதென்றும், இவ்வஜ்ரிணி நாடியின் உள்ளே சாதவீகம் மிக்க சித்திலினி நாடியுள்ளதெனறும, அச்சித்திரிணிக்குள்ளே பிரமநாடி உள்ளதென்றும் யோக நூல நவிலும. இப்பிரமநாடி வழியாக ஆதார நிலைகளை ஊடுருவி (சககரஙகள)ச செலலும குணடலினி யாற்றல, ஆஞ்ஞை எனற துரிய நிலை கடநது துவாத சாந்தம் என்ற துரியாதீத நிலைக்கு இட்டுச செலலபபடுகினறது. இநநிலையில சீவாத்மன் பரமாத்மனோடு ஒன்றாய் விடுகினறது, துவாத சாந்தம் என்றும் சகஸ்ராகாரம எனறும பிரயமநதிரம என்றும் பெயர் கொண்ட இந்த மையம சிவபரம பொருளின உறைவிடமாகக் கொள்ளப்படுகின்றது. இது அனபுமிகு மெலலிதழகளால அழகு செய்யப்பட்ட மண்டபம் எனப புலவரால கூறபபடுகின்றது. இபபிரம மண்டபத்தில் சென்று நானமுகன குலவுகினறான.

இவ்வுரைக்குரிய பாடலின் முதலாம் அடியும் இரண்டாம் அடியும் ஆதார மையங்களையும் அதில் அமைந்த இதழ்களின் எண்ணிக்கைகளையும் குறித்து நின்றன.

நான்கு = மூலாதரம் = நாலிதழ்;
ஆறு = அடி வயிறு சுவாதிட்டானம் = ஆறு இதழ்.
பத்து = தொப்புள் = மணிபூரகம் = பத்து இதழ்.
பன்னிரண்டு = நெஞ்சு = அநாகதம் = பன்னிரண்டு இதழ்.
எண்ணிரண்டு = மிடறு = விசுத்தி = பதினாறு இதழ்.
ஓரிரண்டு = புருவமத்தி = ஆஞ்ஞை = இரண்டு இதழ்.

கீழ் அமைந்த மூன்றாம் அடியும் நான்காமடியும் படைப்பாற்றல் கொண்ட ஆத்மன் அவ்வாற்றலின் ஊற்றாய் அமைந்த பேராற்றலுடன் இணைவுற்ற இயல்பினைக் கூறுவது.

31. குலாவுமைம்பதொடொன்றெனக்கூறிய
நிலாவுமக்கரமேவுநியாசமுங்
கலாநியாசமுஞ்செய்திடுகாட்சியான்
மலாதிதீபத்திருளின்மருண்டவே

குலாவும் ஐம்பது ஒடு ஒன்றெனக் கூறிய,
நிலாவும் அக்கரம் மேவும் நியாசமும்,
கலா நியாசமும் செய்திடு காட்சியான்,
மலாதி தீபத்து இருளின் மருண்டவே.

பொருள் : ஆற்றல் வடிவினதாய் செயல் நிலையில் நின்று இயங்கி, ஐந்தாகியும் – பத்தாகியும், பின் தானே ஒன்றாகியும நிற்கும் அக்கரம் எனப் பகரப்படும் மூல ஒலியினை உள்வாங்கி, அனைத்துக் கலைகட்கும் நாத விந்தாயிருக்கும், ஓங்காரத்தின் விரிவினை உணர்ந்து தியானித்து மயக்கந்தருகின்ற இருள் நீங்கிட, அறிவு சொரூபமான பிரம ஒளியினைப் பெற்றனன்.

அ-இ-உ-எ-ஒ என்பன, அகரமுதல் ஒலியில் இருந்து பிறந்து ஆ-ஈ-ஊ-ஏ-ஓ என விரிந்து முன்னின்ற ஐந்துடன் சேர்ந்து பத்தாகி, பல்வகைக் கலைகளையுங் கொண்ட பிரபஞ்சமாக விருந்து மீண்டும் ஒன்றான அக்கரத்தில் இணைவு பெறுகின்றன. இதுபற்றிய விளக்கம் புவனோற்பத்திச் சருக்கம் 8ம் பாட்டின் பொருள் விளக்கத்திலும் அர்ச்சனா விதிச்சருக்கம் 22ஆம் பாட்டின் பொருள் விளக்கத்திலும் கூறப்பட்டுள்ளன.

32. உண்டெனும்பிரமங்களொரைந்தினாற்
றெண்டபங்கியுஞ்செய்துவலக்கரத்
தண்டர்நாயகற்காசனமிட்டபின்
முண்டகத்தலைவாசலைமூடினான்

உண்டெனும் பிரமங்கள் ஒரு ஐந்தினால்,
தெண்ட பங்கியும் செய்து வலக்கரத்து
அண்டர் நாயகற்கு ஆசனம் இட்டபின்,
முண்டகத் தலை வாசலை மூடினான்.

பொருள் : பிரமமந்திரங்கள் எனப் பகரப்பட்ட ஈசானம், தற்புருடம், அகோரம், வாமம், சத்தியோசாதம் ஆகிய அ-இ–உ-எ-ஒ என்ற ஐந்துக்கும் உரிய பிரமமுகங்களை ஓங்கார ஒலியுடன் சேர்த்துத தியானித்தபின் தன் வலக்கையினால் அண்ட நாயகனாகிய சிவபரம் பொருளுக்கு இருக்கையிட்டனன். அதன்பின் தன் உடம்பின்கண் அமைவுற்ற புலன்வாயில்களை அடைத்தனன் பிரமன்.

33. மூடினானிருகண்ணைமுகிழ்த்துளே
நாடினான்சிவஞானவிழிச்சுடர்
வீடினான்வினையாவும்விருப்புறக்
கூடினானரன்குஞ்சிதபாதமே.

மூடினான் இருகண்ணை, முகிழ்த்துளே
நாடினான் சிவஞான விழிச்சுடர்
வீடினான் வினை யாவும், விருப்புறக்
கூடினான், அரன் குஞ்சித பாதமே.

பொருள் : புறத்தமைந்த இருகண்களையும் மூடி உள்ளே முகிழ்ந்து ஒளி பரப்பும் பேரறிவுச்சுடரான சிவஞானத்தை நாடினன் பிரமன். அதனால் சிவஞானச்சுடர் விழிப்புற, ஆணவம்-கன்மம்-மாயை ஆகிய மும்மலர்களையும் வென்றனன். வினைகளில் நின்றும் விடுபட்டு பேரருட்திறன் உணர்ந்து பேரன்பின் வயப்பட்டுச் சிவபரம் பொருளின் திருநடம் புரியும் தூக்கிய திருருவடியை நாடினன். அதனோடு கூடினன்.

34. [19]பாதியார்மதியார்தம்பதியினிற்
சோதியார்பசுமேயத்தொடர்ந்தபின்
வாதியாரிடு[20]பாசம்வழுவலா
வாதியார்பசுவாகத்திகழுவான்.

பாதியார் மதியார் தம் பதியினில்,
சோதியார் பசு மேயத் தொடர்ந்தபின்
வாதியார், இடு பாசம் வழுவலால்
ஆதியார் பசுவாகத் திகழுவான்.

பொருள் : பரம்பொருளாகிய சிவன்; உமையாகிய தன் சக்தியைப் பாகமாகக் கொண்டு பேரறிவான சந்திரனைச் சடையில் சூடித் திருமலையில் சோதிவடிவாக விளங்கினன். அவன் அருள் ஒளியை நுகர்ந்து இன்புற்ற ஆத்மன்; அவன் திருக்குறிப்பின் வழி நின்ற பொழுது வாதத்திற்கு அப்பாற்பட்ட பேரறிவு நிலையினைப் பெறுகின்றான். அதனால் ஆத்மனைச்சுற்றிப்படர்ந்த பந்தம் அறுகின்றது. பந்தம் அறுந்த நிலையில் ஆத்மன் தூய நிலையினை அடைகின்றான்.

பா. வே. 19பாதியா 20 பாதம்

35. கழுவுநீரிற்கலந்திடுமுப்பென
வொழுகுபாலினுடன்[21] புனல்புக்கென
வெழுதுமோவியமென்னவிருந்துதன்
வழுவிலாவிபரத்தில்வணங்கினான்.

கழுவு நீரில் கலந்திடும் உப்பென,
ஒழுகு பாலில் உடன் புனல் புக்கென,
எழுதும் ஓவியம் என்ன இருந்து, தன்
வழுவில் ஆவி பரத்தில் வணங்கினான்.

பொருள் : நீரில் கழுவிய உப்புப் போலவும், பாலுடன் கலந்த நீர் போலவும் தன் செயலற்று எழுதிய ஓவியம் போல் இருந்த பிரமன்; பரம் பொருளாய சிவனை வணங்கினன்.

36. [22]வணங்குரேணுவடிவுமிலாதரு
[23]லிணங்குநுணபரமாணுவிலெய்திய
வணங்கிலாவியைமீளவழைத்தன
னுணங்குநீண்மடையூர்புனலொப்பவே.

வணங்கு *ரேணு வடிவும் இலாத அரு
இணங்கு நுண் பரமாணுவில் எய்திய
வணங்கி ×இல் ஆவியை மீள அழைத்தனன்
உணங்கு நீண்மடை ஊர் புனல் ஒப்பவே.

பொருள் : அணுப்பிரமாணந்தானும் உணர்ந்து வணங்குவதற் கரிய, நுண்மை மிக்க பரம அணுவிலும் செறிந்து நிற்கும், ஆத் மனின் உயிர்போன்ற பரம் பொருளைத் தனது ஆத்மனில் பிரமன் இருத்தினன். இது வறண்ட வாய்க்காலில் மடை திறந்து விட்ட நீர்போல் இருந்தது.

* ரேணு = அணு × இல் = அகம் = உள்ளம் = மனம்

37. வேதியன்சிவன்மெல்லடிமேல்விடுஞ்
சோதிமீளவிழித்துச்சுடர்முகப்
போதிநோக்கிவினையிருள்போக்கியங்
காதிசூரியவர்ச்சனைபண்ணினான்.

வேதியன் சிவன் மெல்லடி மேல்விடும்,
சோதி மீள விழித்துச், சுடர் முகப்
போதின் நோக்கி, வினை இருள் போக்கி, அங்கு
ஆதி சூரிய அர்ச்சனை பண்ணினான்.

பா. வே. 21ஒண்புணல் 22வணங்குவானும், 23விணங்கு.

பொருள் : நான்முகன், பரம்பொருளான சிவனின் இனிய திருவடிகளின் மேல் எழும் அருள் ஒளியினை விழித்து நோக்கினன். அருள்கனிந்த முகமலரினைக் கண்டு தன் வினையால் எழுந்த மாய இருளினைப் போக்கினன். அவ்விடத்தில் இருந்து தொடக்க முதலாக அமைந்த ஒளி வணக்கத்தினைச் செய்தனன்.

38. நாலுமைந்துநயந்தபதத்தினுட்
பாலுடன்றயிர்நெய்பசுநீர்மய
மேலமாவொடுநெல்லியிரசனி
யாலமுண்டவர்க்காமெனவைத்தனன்

நாலும் ஐந்தும் நயந்த பதத்தினுள்
பாலுடன் தயிர் நெய் பசுநீர் மயம்
ஏலம் மாவொடு நெல்லி இரசனி
ஆலம் உண்டவர்க்கு ஆமென வைத்தனன்.

பொருள் : மறைகளான இருக்கு - யசுர் - சாமம் - அதர்வணம் ஆகிய நான்கையும் - நிலம் - நீர் - காற்று நெருப்பு வானம் ஆகிய பூதங்களையும், பிரபஞ்ச வாழ்வுக்கு நலஞ் செய்யும் வண்ணம் வகுத்த பரம்பொருள் எழுந்தருளியிருக்கும் திருமலையிடத்தில் - பூசனை செய்ய முனைந்த பிரமன்; பால் - தயிர் – நெய் - பசுநீர் – சாணி என்பவற்றையும், ஏலம் – மா - நெல்லி - மஞ்சள் என்பவற்றையும் ஆலகால நஞ்சுண்ட பரனுக்குப் படைத்தனன்.

39. நன்பதத்திடுசாலிநவபதத்
தொன்பதிற்றிகழ்சத்தியுடன்பர
னன்புறுத்தியகும்ப[24]மயன்றிரு
முன்புவைத்தனன்முண்டகவாசனன்

நன் பதத்திடு சாலி நவ பதத்து
ஒன்பதில் திகழ் சக்தியுடன். பரன்
அன்பு உறுத்திய கும்பம், அயன் திரு
முன்பு வைத்தனன் முண்டக வாசனன்,

பொருள் : ஒன்பது கோள்களும் பகையற்றிருக்கும் வேளையில் அருந்ததி நட்சத்திரம் உதித்த நல்லோரையில்; நன்கு தயார் செய்யப்பட்ட சாலி நெல்லினைப்பரப்பி அதில் நிறை குடம் வைத்தனன்: அக்கும்பத்தில் இறைவனால் அருளப்பட்ட அம்பிகை - கனகாம்பிகை – கௌரி - கங்கை - உமை - பராசத்தி - ஆதிசத்தி - கிரியா சத்தி - ஞானாசத்திகள் ஒன்பதினையும் எழுந்தருளப்பண்ணித் திரு

பா. வே. 24 பரமன்

நிலைப்படுத்தினன் (ஆகாவனம் பண்ணுதல்) திருநிலைப்படுத்திய பின் அதனைப் பிரமமாய் நின்றிலங்கும் பரம்பொருள் முன் வைத்தனன் தாமரைமலரோனான நான்முகன்.

40. வாசலிற்புறமன்னிய[25]வாளிகை
யாசறுக்குமகோரத்தடக்கிமேல்
வீசுபத்திவிமலசுவாகுவை
நேசமுற்றுநிறுத்தியுள்ளாயினான்

வாசலில் புறமன்னி அவளிகை
ஆசறுக்கும் அகோரத்து அடக்கி மேல்
வீசுபத்தில் விமல சுவாகுவை
நேசம் உற்று நிறுத்தி உள்ளாயினான்.

பொருள் : வாயிற்புறத்தை அணுகிய பிரமன்; இடுதிரை யெனப்படும் திரைச் சீலையினை இட்டனன். பின் குற்றம் நீக்குதற்கு அகோர நிலைக்குரிய அநாகதமான நெஞ்சிடத்தின் அடுத்த நீழிடமான மணி மணிபூரகம் என்ற தொப்புள் இடத்தில் அமைந்த பத்திதழ் கொண்ட மையத்தில் விமலர் - சுவாகு என்ற இருவரையும் (துவாரபாலகர்) அமர்த்தினன். அவ்வண்ணம் செய்தபின் பரம்பொருளிடத்தில் கொண்ட அன்பின் மிகுதியால் பரம்பொருளின் ஆலயமான உடலில் பரம்பொருளைக் காண்பதற்கு உட்புகுந்தனன். (ஆலய அமைப்பு உடலின் அமைப்பின் விதிக்கமையவே வகுக்கப்படும்.)

41. ஆயபாசுபதமெனுமந்திரந்
தூயவாசற்றுலங்களிறுத்தியுட்
போயரன்புடைவாத்துபுருடனை
நேயமாகவெழுப்பிநிறுத்தினான்

ஆய பாசுபதம் என்னும் மந்திரம்
தூய வாசல் துலங்க நிறுத்தி உள்
போய் அரன் புடை வாத்து புருடனை
நேயமாக எழுப்பி நிறுத்தினான்.

பொருள் : உட்புகுந்த பிரமன்; பாசுபதமந்திரத்தை உள்ளத்து உன்னினன். அம்மந்திரத்திற்குரிய மூன்று தலைகளையும் நான்கு கைகளையும் ஒன்பது கனல் விழிகளையும் கொண்ட தெய்வ வடிவினனை தூய்மை பொருந்திய வாயிலின்கண் நிறுத்தினன். அதன் பின் பரம்பொருளைக் காணும் வேட்கையுடன் ஆத்மனை அன்பு நிலைக் கெழுச்சியுற, நிறுத்தினான்.

பா. வே. 24 பரமன் 23 யவனிகை

42. [26]நாலுமாமுகனைம்முகநாதனை
யாலகாலமடக்கியகண்டனை
கோலமாதொடுகூடியகண்டனைக்
காலகாலனைக்கண்டுவணங்கினான்.

நாலு மாமுகன், ஐம்முக நாதனை,
ஆலகாலம் அடக்கிய கண்டனை,
கோல மாதொடு கூடிய கண்டனை
கால காலனைக் கண்டு வணங்கினான்.

பொருள் : நான்கு திருமுகங்களையும் அத்திருமுகங்கள் நான்கிலும் நான்கு வேதங்களையும் ஓதுகின்ற பிரமன்; ஈசானம் - தற்புருடம் அகோரம் - வாமதேவம் சத்தியோசாதம் என்ற ஐந்தொழில்கட்கும் உரிய திருமுகங்களைக்கொண்ட பரம்பொருளை, ஆலகால நஞ்சினையுண்டு சீவ கோடிகளைக்காத்த தலைவனை - அழகுமிகு அருள்நங்கையான உமையுடன் கூடிக்குலாவும் திருநீலகண்டனைக் காலத்துக்கும் காலனாக அமைந்த பேரருளாளனைக் கண்டு வணங்கினன்.

43. [27]வணங்குநாயகிமத்திமைகுண்டலி
இணங்குமுச்சுடர்க்கோணமதேந்திய
வணங்குவிந்துவினாதமரும்பிய
குணங்கொண்மேனிக்கொழுந்தினைநோக்கினான்.

வணங்கு நாயகி மத்திமை குண்டலி,
இணங்கு முச்சுடர்க் கோணம் அது ஏந்திய,
வணங்கு விந்துவின் நாதம் அரும்பிய,
குணங்கொள் மேனிக் கொழுந்தினை நோக்கினான்.

பொருள் : பராசக்தியால் வணங்கப்படுபவனும் பேராற்றல் வடிவினனும், அனைத்துமாயிருப்பவனும், பிரபஞ்சத்தில் கட்டுப் படாதவனும், தளைகட்கு உட்படாதவனும், தனக்குத்தானே ஒப்பானவனும், முற்றும் உணர்ந்தவனும், தொடக்கமும் முடிவும் அற்றவனும், பேரன்பு வடிவானவனும் ஆய குணங் கொள் வடிவினைக் கொண்ட பரம் பொருளை; இடைகலை பிங்கலை சுழு முனை எனப்பகரப்படும்; சந்திர - சூரிய – அக்கினியாய் அமைந்த, நாதப்பிரமத்தினை; ஓங்கார ஓசையில் - ஒளி வடிவில் கண்டு வணங்கினன் பிரமன்.

பா. வே. [26]நாலு நான்முகன் [27]வணங்கி.

44. [28]நாலுவேதநவிற்றுமைஞ்சுத்தியு
ளேழுமந்திரசுத்திசெய்தீசன்முன்
கோலுமர்ச்சனைசெய்துமைகோண்முடி
வாலவேதன்புதுமலர்வைத்தனன்.

நாலு வேதம் நவிற்றும் ஐஞ்சுத்தியுள்,
ஏழு மந்திர சுத்தி செய்து, ஈசன்முன்
கோலும் அர்ச்சனை செய்து, உமை கோன் முடி
வால வேதன் புது மலர் வைத்தனன்.

பொருள் : மறை நான்கும் நவில்கின்ற ஆன்மத்தூய்மை - இடத் தூய்மை, மந்திரத்தூய்மை, திரவியத்தூய்மை, *உடல்தூய்மை என்பவற்றுள் முதலாய் அமைந்த மந்திர சுத்தியினை மேற் கொண்டு உமையைப் பங்காகக் கொண்ட இறைவன் முன் பூசனை செய்து அவன் திருமுடிமேல் அன்றலர்ந்த நன்மலர்களைப் பிரம தேவன் சூடினான். *லிங்கத்தூய்மை எனவும் கொள்வர்.

45. வைத்தவாடைமலர்ப்பணிநீக்கிமெய்ச்
சுத்தமானசுகந்தநன்னீர்கர
முய்த்தகொள்கையதுட்படவாங்கி[29]யெண்
ணத்தனுக்கபிடேகமயன்செய்தான்.

வைத்த +வாடை மலர்ப்பணி நீக்கி, மெய்ச்
சுத்தமான சுகந்த நன்னீர், கரம்
உய்த்த கொள்கையது உட்பட வாங்கி, எண்
அத்தனுக்கு அபிடேகம் அயன் செய்தான்.

பொருள் : பரம்பொருளான சிவனுக்குத் திருநீராட்டல் செய்யு முன் அவனுக்குச் சூட்டிய அங்கிகளையும் மலர்களையும் அணிக ளையும் பிரமன் நீக்கினன். அதன் பின் எண்குணத்தானான பரம் பொருளின் திருமேனிக்கு, அன்பு மீதூரப் புனித நீரினைக் கையில் ஏந்தி ஆகமவிதிகட்கு அமைவுற நீராட்டலைச் செய்தனன்.

எண்குணங்கள், இப்பகுதியில் 43ம் பாடலில் விளக்கப்பட்டுள் ளது. +வாடை - மலர் - பணி - என்பவற்றிற்கு; அங்கி மலர்-அணி எனப் பொருள் கொள்ளப்பட்டது.

பா. வே. 28நாலு வேதம் நவின்று 29என் அத்தன்.

46. செய்யதாமரைச்[20]செம்முகமைந்துள
வையனுக்கபிடேகமருச்சனை
துய்யபோசனநாடகந்தோத்திர
முய்ய[31]வான்முறையுய்த்துமுன்னின்றனன்

செய்ய தாமரைச் செம்முகம் ஐந்துள
ஐயனுக்கு அபிடேகம் அருச்சனை
துய்ய போசனம் நாடகம் தோத்திரம்
உய்ய வான்முறை உய்த்து முன் நின்றனன்.

பொருள் : நான்முகன் அழகுமிகு தாமரைமலர் முகங்கள் ஐந்தினைக் கொண்ட சிவப் பிரமத்திற்குத் தூநீராட்டிப் பூசனை முறைமையிற் செய்தபின் திருவமுது படைத்தனன். ஆனந்த மேலீட்டால் ஆடிப்பாடினன். வாழ்த்தி வழிபாட்டினைச் செய்தனன். இவை அனைத்தையும் வேதம் - ஆகமம் கூறிய மேலாம் நெறியில் நின்று செய்து சிவனின் திருமுன்நின்றனன்.

47. நின்றபானுவுஞ்சோமனுநேர்செலா
தோன்றுகாலமுணர்ந்துரவோனுளந்
துன்றுதெய்வச்சுடரையெழுப்பியாங்
கன்றிலிங்கத்தமரமலர்த்தினான்

நின்ற பானுவும் சோமனும் நேர் செலா
தொன்று காலம் உணர்ந்து, உரவோன் உளம்
துன்று தெய்வச் சுடரை எழுப்பி, ஆங்கு
அன்று இலிங்கத்து அமர மலர்த்தினான்.

பொருள் ; சூரிய சந்திர நாடிகள் என மொழியப்படும் பிங்கலை இடைகலை என்பன நேரிய முறையில் செயற்பட ஓங்காரத்தின் ஒலிக் கூறுகளை, கால அளவினைக் கொண்ட மாத்திரைகட்கு அமைவுற உணர்ந்து, உள்ளத்தின்கண் அறிவொளியினைத் தூண்டி இலிங்கத்தின் மூலாதாரமாய் அமைந்த குண்டலினியாற்றலை விழிப்புறச் செய்தனன் பிரமன்.

ஓம் என்ற மூல ஒலியில் உள்ள அ-உ-ம் என்பவையில் 'அ'கரத்திற்கும் 'உ'கரத்திற்கும் ஒவ்வொரு மாத்திரையையும் (ஒரு நொடிப் பொழுது) 'ம'கரத்திற்கு அரை மாத்திரையையும் (அரை நொடிப் பொழுது) கால அளவாகக் குறிப்பர். மூன்றாவதாக அமைந்த 'ம'கரத்தை; அரை நொடிப் பொழுதொடு மேலும் அரை நொடிப் பொழுதினைக் கூட்டி உன்னுதல் செய்யின் - ஆன்ம நிலை பேற்றினை அடையலாம் என்பர்.

பா. வே. 30 செம்முகமைந்துளான் 31 ஆசனம்.

48. மலர்ந்தபூவும்புனலுமலர்க்கையா
லலர்ந்தபாதத்தருக்கியஞ்செய்துபின்
னிலங்குதாபனகும்பமெடுத்தரன்
றுலங்குமாமுடிதோயவிடுத்தனன்

மலர்ந்த பூவும் புனலும் மலர்க் கையால்
அலர்ந்த பாதத்து அருக்கியம் செய்து பின்,
இலங்கு தாபன கும்பம் எடுத்து, அரன்
துலங்கு மாமுடி தோய விடுத்தனன்.

பொருள்: குண்டலினி ஆற்றலை விழிப்புறச் செய்த பிரமன் அன்றலர்ந்த பூவும் புனித நீரும் கொண்டு; இறைவனின் அருள் மலரும் திருவடிகட்குத் தன் அழகிய மலர்க்கைகளினால் வழிபாடு செய்து வேண்டல் புரிந்தனன். பின் பிரபஞ்ச தத்துவமாக ஆகமம் விதித்த நிறைகும்பத்தினைக் கையில் ஏந்தி, அருள் ஒளி மிக்க திருமுடியில் புனித நீராட்டினன்.

49. விடுத்தமென்குசைசென்னியின்மீதுவைத்
தெடுத்துமஞ்சனமாட்டுதலெம்பிரான்
முடித்தவேணிமுடியவிழ்ந்தேநுனி
பொடித்தகங்கைபொழிபுனல்மானுமால்

விடுத்த *மென்குசை சென்னியின் மீது வைத்து,
எடுத்து மஞ்சனம் ஆட்டுதல், எம்பிரான்
முடித்த வேணி முடி அவிழ்ந்தே, நுனி
பொடித்த கங்கை பொழி புனல் மானுமால்.

பொருள்; நிறை கும்பத்தில் இருந்த தருப்பையினை இறைவனின் திருமுடி மேல் வைத்து, அக்கும்பப் புனித நீரால் திருமுழுக்காட்டுதலும், எம் தலைவனான சிவனின் முடித்த தலை அவிழ்ந்து தொங்கியது. அவ்வண்ணம் தொங்கிய சடையின் நுனியில் இருந்து ஒழுகிய நீர்; கங்கையூற்றுப் பெருகியது போல் இருந்தது.

*மென்குசை = மென்மையான தற்பைப்புல்

50. [32]மானுநன்பெருமாதுமுடன்புன
னானமாடுதல்கண்டுநடுங்கயன்
றானுமங்கொருசத்தியுருக்கொடு
மோனவேதமுறைமுறையோதினான்.

பா. வே. 32 மானுநன் பெருமானும்

மானு நன்பெரு மாதும் உடன் புனல்
நானம் ஆடுதல் கண்டு நடுங்கு அயன்
தானும் அங்கொரு சத்தி உருக்கொடு
மோன வேத முறை முறை ஓதினான்.

பொருள் : சிவனின் பிரிக்கமுடியாதபாகமாய் பொருந்திய சத்தி யாகிய உமையும் புனிதநீர் சொரிய நீராடுதல்கண்டு நான்முகன் அச்சமடைந்தான். அதனால் தானும் சக்தி வடிவம் கொண்டு ஆன்ம அமைதிக்குரிய வேதத்தினை முறைதவறாது ஓதினான்.

51. நானமஞ்சனமிவ்வகைநல்கினான்
[32]னானநன்சிவனார்க்கினிதம்பரங்
கானமென்களபங்கமழ்குங்குமந்
தானணிந்துபைந்தாமமுஞ்சாத்தினான்.

நான மஞ்சனம் இவ்வகை நல்கினான்
ஆன நன்சிவனார்க்கு, இனிது அம்பரம்
கான மென்களபம் கமழ் குங்குமம்
தான் அணிந்து பைந்தாமமும் சாத்தினான்.

பொருள் : புனுகு, கஸ்த்தூரி, சந்தனம், குங்குமப்பூ, காரகில் குளம்பு, பச்சைக் கற்பூரம் என்பவை கலந்த திருமஞ்சனம் எனப் படும் புனித நீரால் ஆகம விதிப்படி நீராட்டிய பிரமன், அனைத்து மாய் எங்கும் நிறைந்த சிவம்பரம் பொருளுக்குப்பட்டினை அணிந் தான். பின் நறுமணம் மிக்க சந்தனம் குங்குமம் என்பவற்றையும், அன்றலர்ந்த பசுமை கொண்டமலர்களான மாலையினையும் அணிந் தனன்.

52. சாத்திரத்தின்றலைவருமந்திர
மூர்த்தியென்னு முறைமைவழாமலே
யேத்தியேத்தியிறைஞ்சியிறைஞ்சியே
பாத்தியாசமனியம்பயிற்றினான்.

சாத்திரத்தின் தலைவரு மந்திரம்,
மூர்த்தி என்னும் முறைமை வழாமலே,
ஏத்தி ஏத்தி இறைஞ்சி இறைஞ்சியே,
பாத்தி ஆசமநீயம் பயிற்றினான்.

பொருள் : பிரமன் வேத ஆகமங்களில் கூறப்பட்ட மறை மொழிகளின் திருவடிவமே சிவன் என உணர்ந்து, அம்முறைமை

பா.வே. 32 ஈான

யில் நின்றும் வழுவாமல் போற்றி வாழ்த்தி வணங்கி வேண்டுதல் செய்தனன். பின் ஆத்ம சுத்திக்குரிய புனித நீரினை; ஓம் ஆத்ம தத்துவசிவதா, ஓம் நித்திய தத்துவசிவதா ஓம் சிவதத்துவாய சிவதா எனக் கூறித் தன் வலக்கையில் ஏந்தி உட்கொண்டான்.

53. பயின்றபங்கொருபாதிபசுமையு
மியன்றபாதியிலங்கியசெம்மையும்
வியன்றருங்களமீதிற்கருமையு
முயன்றவர்க்கருள்கூருமுகங்களும்.

பயின்ற பங்கு ஒரு பாதி பசுமையும்,
இயன்ற பாதி இலங்கிய செம்மையும்,
வியன்தரும் களமீதில் கருமையும்,
முயன்றவர்க்கு அருள் கூரு முகங்களும்.

பொருள்: சிவன்; உமையை ஒருபாகமாகக் கொண்டதால் ஒரு பாதியான இடப் பக்கம் பசுமை நிறம் கொண்டதாகவும், மற்றைவலப்பாகம் தனக்குரிய செம்மை நிறம் கொண்டதாகவும், ஆலகால நஞ்சினையுண்டதால் அழகுமிகு கண்டம் கருமை நிறம் கொண்டதாகவும் அமைவுபெற இருந்தனன். அவ்வாறு அமைவு பெற எழுந்தருளியிருந்த சிவன்; அருள் வேண்டி நின்ற அடியவரை அருள் பொலியும் தன் திருமுகங்களால் நோக்கினன்.

53. முகத்தில்வெண்புன்முறுவலுமாதவர்
மகத்தில்வேழமுரித்தமலர்க்கையு
மகத்திலாளுக்கருள்புரிநோக்கமுஞ்
சகத்திலாருயிர்தாங்குஞ்சரணமும்.

முகத்தில் வெண் புன் முறுவலும், மாதவர்
மகத்தில் வேழம் உரித்த மலர்க் கையும்,
அகத்தில் ஆளுக்கு அருள்புரி நோக்கமும்,
சகத்தில் ஆருயிர் தாங்கும் சரணமும்.

பொருள்: அருள் பொலியும் அழகிய முகத்தில், பல்முத்துக்களின் வெண்மை யொளிவீசும் இனிய புன்சிரிப்பும், தாருகாவனத்து முனிவர்களின் வேள்வித் தீயில் தோன்றி வந்த மதயானையின் தோலை உரித்துப் போர்த்த அழகிய கைமலரும், உள்ளத்தில் ஆன்மாக்களுக்கு அருள்புரியும் நோக்கும், வேண்டல் புரிபவர்கட்கு பேரருள் சுரக்கும் இனிய இயல்பும் இவ்வுலகனைத்தையுந் தாங்கி நிற்கும் இயல்பண்பும் கொண்டு, எழுந்தருளினன் - எம்மையாளுடைய சிவன்.

55. சரணமென்றவர்தங்கள்வினையனற்
றிரணமாகத்தெறுந்திருநேயமும்
புரணநீறும்புயங்கப்புயங்களும்
பிரணவத்திற்பிறங்குநிலைமையும்

சரணம் என்றவர் தங்கள் வினை அனல்
oதிரணமாகத் தெறும் திரு நேயமும்,
புரண நீறும புயங்கப் புயங்களும்,
பிரணவத்தில் பிறங்கு நிலைமையும்.

பொருள் : அவ்வண்ணம் எழுந்தருளிய சிவன்; அருள் வேண்டி அடைக்கலம் எனவந்த அடியவர்களின, கொடிய தீ போன்ற துன்பத தினை இல்லாது அழிக்கும் அன்பு கனிந்த அருளும், புராதனமான *முப்புரங்களை எரித்த வெண்ணீறும் தாமரைமலர்த் தோள்களும் ஓங்காரமாய்த்துலங்கும் பேரறிவினையுங் கொண்டு காட்சி அளித் தனன். o திரணம் – தும்பு எனக் கூறுவர். துன்பம் தும்பின் அள விருந்தாலும் நிறை இன்பம் இல்லை. அதனால் பொருட் பொருத்தம் நோக்கி இல்லாது அழிக்கும் எனப் பொருள் கொள்ளப்பட்டது.

*முப்புரங்கள்: இதனைப் பலபடக் கூறுவர்.
ஒன்று : ஆணவம் கன்மம் மாயை என்ற மும்மலங்கள்.
இரண்டாவது : தாமதம் – இராசதம் – சாத்வீகம் என்ற முக் குணங்கள்.
மூன்றாவது : அரக்கர்களின் இரும்பு - வெள்ளி - பொன் - கோட்டைகள்.

56. பிறந்திறந்துழலாதபெருமையாற்
சிறந்தமெய்ச்சிவலிங்கசிரோதய
நிறைந்துதோன்றலுங்கண்டுமநடுந்தகை
யறைந்தபைந்தரு[33]வாகவேநின்றனன்

பிறந்து இறந்து உழலாத பெருமையால்,
சிறந்த மெய்ச்சிவலிங்க சிரோதய
நிறைந்து தோன்றலும் கண்டு, நெடும் தகை
அறைந்த பைந்தருவாகவே நின்றனன்.

பொருள் : இறப்பும் – பிறப்புங் கொண்டு, பிரபஞ்சத் தொல் லைக் குள்ளாகாத உயர்சிறப்பால் - பெருமை கொண்ட சிவப் பிரமம், நாததத்துவத்தினை விளக்கும் அருவுருவான சிவலிங்க வடிவு கொண்டு தோன்றுதல் கண்டு நட்ட பசிய மரம் போல் நின்றனன் பெருந்தகையாகிய நான்முகன்.

பா. வே. 33 வாணியின்

57. நின்றுகண்ணிணைநீர்ததும்பப்புறஞ்
சென்றுரோமஞ்சிலிர்த்துவசந்தர
வொன்றுமெண்ணிலனுற்றிலனோதில
னன்றுவேதன்பரவசமாயினான்

நின்று கண் இணை நீர்ததும்பப், புறம்
சென்று ரோமம் சிலிர்த்து அவசம் தர,
ஒன்றும் எண்ணிலன்* உற்றிலன், ஓதிலன்,
நன்று வேதன் பரவசம் ஆயினான்.

பொருள் : இறைவன் திருமுன்பு நின்று இருகண்களும் அன்பினால் நீர் பெருகப், புறத்தே மயிர்க்கண்கள் புல்லரிக்க, உணர்வு மேலீட்டால் தன்நிலைமறந்து, எதனையும் எண்ணுதல் செய்யாது – கூர்ந்து - நோக்காது - ஓதுதல்தவிர்ந்து – பேச்சற்று நலம் மிக்க பரவச நிலையினை அடைந்தனன் நான்முகன்.

58. ஆயகாலையிலங்குளவந்தணர்
சேயவெண்மருமிங்கிவன்செய்கைகண்
டோய்விலாமறையோதுமுழக்கினாற்
போயதோர்கலிப்பொங்கெழிலோதையே

ஆய காலையில் அங்குள அந்தணர்,
சேய எண்மரும் இங்கு இவன் செய்கை கண்டு
ஓய்விலா மறை ஓதும் முழக்கினால்,
போயது ஓர்கலிப்பொங் கெழில் ஓதையே.

பொருள் : அவ்வண்ணம் நான்முகன் பரவசம் அடைந்து நின்ற வேளையில், அவனது நிலைகண்ட அவ்விடத்தில் நின்ற அந்தணர்களும், செம்மைசான்ற மற்றைய எட்டுப்பிரமர்களும், இடையீடு இன்றி மறையினை ஓதினர். அதனால் எழுந்த ஒலியின் எழுச்சி அலைகடல் ஒலிபோல் எங்கும் பரந்தது.

59. ஓதுகின்றவுருத்திரர்பன்னொரு
பேதமானவர்பேணுங்கரங்களிற்
றீதிலாமழைபோலவர்சிந்திய
போதுவெற்பலர்பூத்ததெனத்தகும்

ஓதுகின்ற உருத்திரர் பன்னொரு
பேதமானவர், பேணும் கரங்களில்,
தீதிலா மழைபோல அவர் சிந்திய
போது, வெற்பு அலர் பூத்தது எனத்தகும்.

பா. வே. 34 ஆர்கலி

பொருள்: வேதத்தினை இடையறாது ஓதிநிற்கும் உருத்திர கணத்தவர்; தம்கைகளில் ஏந்திய அன்றலர்ந்த தூயமலர்களால் பூசனை செய்தனர். அச்செயல் வானிடத்திலிருந்து முகில் கூட்டம், மழை சொரிவதுபோல் இருந்தது. அதனால் திருமலை எங்கும் மலர்பூத்தது போலிருந்தது.

60. தகும்பராபரைதன்னுடனொன்றியு
மிகுந்தகாரணமாய்வருமெய்யர்முன்
[35]புகுந்துவானவர்போற்றுமுழக்கொலி
திகந்தரங்களடங்கலுஞ்சென்றன.

தகும் பராபரை தன்னுடன் ஒன்றியும்,
மிகுந்த காரணமாய் வரும் மெய்யர்முன்,
புகுந்து வானவர் போற்றும் முழக்கொலி,
திகந்தரங்கள் அடங்கலும் சென்றன.

பொருள்: பரன்; பரையாகிய சக்தியுடன் ஒன்றியிருந்து திருமலையில் அருட்காட்சி செய்ததின் பயனாய், அடியவர்கள் எண்ணிறந்தோர் வந்து கூடினர். அவ்வடியர் கூட்டத்துடன் வான கத்தில் உள்ள தேவர்களும் வந்து ஒன்று கலந்தனர். இவ்வண்ணம் வந்தவர்கள் அரகர சிவசிவ என்று போற்றி வழிபட்ட முழக் கொலி, அண்டத்தின் திக்கனைத்துஞ் சென்று பரவியது.

61. நத்திலங்குநறுங்குழைவார்சடை
முத்தர்முன்பணிமாறுமுழக்கினாற்
பைத்தலைப்பெருநாகர்பரப்பினு
மெத்தலத்துமிருந்தவரெய்தினார்.

நத்திலங்கு நறும் குழை வார்சடை
முத்தர் முன் பணி மாறும் முழக்கினால்
பைத்தலைப் பெரு நாகர் பரப்பினும்,
எத்தலத்தும் இருந்தவர் எய்தினார்.

பொருள்: சிவன் கங்கையைச் சடையில் தாங்கியிருப்பதால், அச் சடையிடத்து உள்ள கங்கையில் வாழும் சங்குகளின் முழக்கொலி

பா. வே. 35 புகுந்த

கேட்கின்றது. அர்த்தனார் ஈசுவரவடிவம் கொண்டிருப்பதனால், நறு மணம் மிக்க கூந்தலும், ஒளிமிக்கதோடும், திக்கெட்டும் பரந்து தொங்கும் திருச்சடையும் கொண்டவராக — முத்தராகச் சிவன் காட்சியளிக்கின்றார். அன்றியும் கங்கையின் நறுங்குழலும் — உமை யின் நறுங்குழலும் ஒன்றிணைவதால் செழுமையும் இன்பமும் எங் கும் பரந்து செறிவுறுகின்றது. இத்தகைய முத்தர் சிவனின் முன்; தொண்டர்களும் — தேவர்களும் — முனிவர்களும் — பிரமாக்களும் ஒன்றிணைந்து செய்யும் பணியால் — தொண்டால் எழும் ஆரவார ஓசையானது, விரித்தாடும் படத்தினையுடைய நாகர் உலகிலும், அதற்கு அப்பாலும் அமைந்த பிற உலகிலுஞ் சென்றுபரவியது. அதனால் அங்குள்ளோரும் அவ்வோசையினைக்கேட்டு இன்புற்று மகிழ்ந்தனர்.

62. நாரதாதிபர்நல்குஞ்சுராதிபர்
மாரதாதிபர்மன்னுந்தராதிபர்
ராரதாதிபரானகணாதிபர்
சாரதாதிபர்சந்நிதிமேயினார்.

நாரதாதிபர், நல்கும் சுராதிபர்,
°மாரதாதிபர், *மன்னும் தராதிபர்,
+ஆரதாதிபர் ஆன கணாதிபர்,
∧சாரதாதிபர் சந்நிதி மேயினார்.

பொருள்: நாரதர் உட்பட்ட மேலான தவமுடைய முனிவர் களும், தேவர்களும், விட்டுணுக்களும், அவர்கள் தலைவர்களும் தேர் வீரர்களும், அழகுமிகு கந்தர்வர்களும், மண்ணகத் தலைவர் களும், பதின்நான்குலகத்தின் தலைவர்களும், வணக்கத்துக்குரிய கணங்களின் தலைவர்களும் — அவர் சார்ந்த மற்றைய உருத்திர கோடிகளும், சிவன் எழுந்தருளியிருக்கும் திருமலையாகிய சந்நிதி யிற் கூடினர்.

° மாரதாதிபர் = விட்டுணக்கள் — தேர்வீரர்;
* மன்னும்தராதிபர் = பதினநான்கு உலகத்தலைவர்கள்.
+ ஆரதாதிபர் = வணக்கத்துக்குரிய கணங்களின் தலைவர்கள்.
∧ சாரதாதிபர் = பூதகணங்கள் — உருத்திர கோடிகள்.

63. மேயபங்கயமுத்தனவெண்ணகை
போயநுண்ணிடைப்பொங்கழகாடவிச்
சேயவானனச்செங்கட்டுவரிதழ்த்
தூயரம்பையர்துன்னியிறைஞ்சினார்.

மேய பங்கய முத்தன வெண்ணகை,
போய நுண்ணிடை பொங்கு அழகு ஆட, இச்
சேயவானச் செங்கண் துவர் இதழ்த்
தூய அரம்பையர், துன்னி இறைஞ்சினார்.

பொருள்: உயர்வுமிக்க தாமரைமலரில் பிறந்த முத்து என எண்ணும்படிககமைந்த வெண்மை பொருந்திய புன்சிரிப்பும், உண்டோ இலலையோ என எண்ணும்படிக்கமைந்த நுண்ணிய இடையும், விம்மிப்புடைத்து மலர்ந்த அழகிய தடமுலைகளும் கொண்டு அழகே ஆடிவர, விருப்பத்துக்குரிய துவர்ப்புச்சுவைதருகின்ற அழகிய பவளம்போன்ற மென்மையான இதழ்களையுடைய, புனிதமிகு அரம்பை மாதரும், நெருக்கமுறவந்து சிவப்பரம்பொருளை வணங்கினர்.

64. இறைஞ்சியிவ்வகையாவருமேத்தலு
[36]நிறஞ்செய்நான்முகனோக்கிநிமிர்ந்தெழீஇ.
யறஞ்செயீசனணிந்தவையுண்டவை
மறஞ்செய்சண்டனுக்காக்கினன்வன்மையான்.

இறைஞ்சி இவ்வகை யாவரும் ஏத்தலும்
நிறம் செய் நான்முகன் நோக்கிநிமிர்ந்து எழீஇ
அறம் செய் ஈசன் அணிந்தவை உண்டு அவை
*மறம் செய்சண்டனுக்கு ஆக்கினன் வன்மையான்.

பொருள்: சாமவேதகானஞ் செய்பிரமன்; சிவனைப் பலவகையாகப் பூசனை செய்து வழிபட்டபின், நிகழ்வுகள் அனைத்தையும் நோக்கிச் சீர்செய்தனன். அவ்வண்ணஞ் செய்தபின் அருளறம் செய்யும் தலைவனுக்கு வேட்டனவற்றைச் சிவநெறியினைக்காக்க மறம்புரிந்த சண்டேசுரருக்கு உரித்தாக்கினன்.

* மறஞ்செய்கண்டன் = சண்டேசுவரர் சிவபூசனைசெய்து வழிபாடு செய்திருந்த வேளை அவரின் தந்தை அச்செயலை அனுமதியாது தன் காலால் சிதைத்தனர். அதனால் சினங்கொண்ட சண்டேசுவரர் துரும்பை எடுத்து அவர் காலுக்கு வீசியதும் கால் துண்டிக்கப் பட்டது. அதனால் மறஞ்செய்கண்டனெனப்பட்டார்.

பா.வே. 36 ஓகை.

65. ஆக்குநாழிகையேழுரையாகநாட்
போக்குசாமம்புகுந்திடுமெட்டினுங்
காக்குலாவுகயிலையிற்பூசனை
நீக்கிடாதுநிகழ்த்தினனாங்கவன்.

ஆக்கு நாழிகை ஏழுரையாக, நாள்
போக்கு சாமம் புகுந்திடும் எட்டினும்,
காக்குலாவு கயிலையில், பூசனை
நீக்கிடாது நிகழ்த்தினன் ஆங்க[37]வன்.

பொருள்: அறுபது நாழிகையை ஒரு பகலும் – ஒரு இரவுமாகக் கொண்ட நாளினை ஏழரை நாழிகைப்படி வகுத்து; காலை 6 மணி, காலை 9 மணி, நண்பகல் 12 மணி, பிற்பகல் 3 மணி, மாலை 6 மணி, இரவு 9 மணி, நள்ளிரவு 12 மணி பின்னிரவு 3 மணி ஆகிய எட்டு வேளைகளிலும் முறை வழுவாது அனைத்துலகினையும் காக்கும் தென்கையிலையில்; சிவபரம் பொருளுக்குப் பூசனை நிகழ்த்தினன் பிரமன்

66. அங்கணான்முகனானவச்செவ்விதழ்த்
துங்கவேதச்சுருதிமுழக்கலாற்
பங்கயத்துட்படியுஞ்சுரும்பினம்
பொங்குகீதச்சுருதியைப்போலுமே.

அங்கண் நான்முகன் ஆன அச்*செவ்விதழ்த்
துங்க வேதச் சுருதி முழக்கலால்
பங்கயத்துள் படியும் சுரும்பினம்
பொங்கு கீதச் சுருதியைப் போலுமே.

பொருள்: சிவபரம் பொருள் எழுந்தருளியிருக்கும் திருமலையிடத்து சிவந்த இதழ்களையுடைய தாமரை மலரில் வாழும் நான்முகன்; மேன்மையும் தூய இயல்புங்கொண்ட வேதத்தினை இசை மரபு வழுவாமுறையில் ஓதினன். அது தாமரை மலரிடத்தில் தேனுண்ட வண்டினம் அதன் களிமயக்கால் இன்ப உணர்வு மேலிட்டு இன்னிசை எழுப்பி ரீங்காரஞ் செய்வதுபோல் இருந்தது.

* செவ்விதழ்=சிவந்த அழகிய இதழ்களெனவும் பொருள் கொள்ளலாம். இதழ்=அதரம்–சொண்டு.

பா.வே. 37 அயன்.

67. மேனிலாவும்விரிகதிர்ப்பானுவு
ஞானநாதன்றிருமுகநண்ணலா
லானவேதற்[34]கலந்தலராமலர்க்
கானமாயினகண்ணுங்கரங்களும்.

மேல் நிலாவும் விரிகதிர்ப் பானுவும்
ஞான நாதன் திருமுகம் நண்ணலால்,
ஆன வேதற்கு, அலந்த அலரா மலர்க்
கானம் ஆயின கண்ணும் கரங்களும்.

பொருள்: வானத்தில் உள்ள சந்திரனும் கதிர்கள் விரிந்து ஒளி பரப்பும் கதிரவனும் பேரறிவாளனான சிவனின் திருமுகத்தில் கண்களாக அமைவுற்றிருந்த அருட்காட்சியினைக் கண்ட வேதகான நான்முகனுக்கு, விரிந்தும்—விரியாதும் நிற்கும் நறுமணங்கொண்ட மலர்கள் போல், அதில் தேனுண்டு இன்னிசை மிளிற்றும் வண்டினங்கள்போல் கண்களும் கைகளும் ஆயின.

68. கரங்களிற்செறிகண்களின்வாய்களி
னுரங்களிற்சரணங்களினுற்றறி
சிரங்களிற்கடன்செய்வனசெய்தபின்
புரங்களிற்பொருமீசனைப்போற்றினான்.

கரங்களில் செறி கண்களின் வாய்களின்
உரங்களில் சரணங்களில் உற்றறி
சிரங்களில் கடன் செய்வன செய்தபின்
புரங்களில் பொரும் ஈசனைப் போற்றினான்.

பொருள்: பிரமன்; கைகள், கண்கள், வாய், தலை-மற்றைய உடல் உறுப்புகள் அனைத்தாலும் செய்யவேண்டிய வழிபாடுகளைச் செய்தபின் முப்புரங்களைத் தன்வயமாக்கிய இறைவனை வாழ்த்தி வணங்கினான்.

வேறு

69. போற்றலும்விசுவகன்மன்புகுந்தரன்புண்டரீகக்
காற்றுணைவணங்கிக்கையாற்கமலனைத்தழுவிவாழ்த்தி
நீற்றனைவிடைகொண்டங்ஙனீங்கியுத்தரபாற்போந்தான்
வேற்றுளோர்விண்ணோர்யாருமகன்றுதம்வீடுகண்டார்.

பா.வே. 34 கலர்ந்து.

போற்றலும் விசுவகன்மன் புகுந்து
அரன் புண்டரீகக்
கால் துணை வணங்கிக், கையால்
கமலனைத் தழுவி வாழ்த்தி,
நீற்றனை விடை கொண்டு, அங்கண்
நீக்ங்கி, உத்தரபால் போந்தான்,
வேற்றுளோர் விண்ணோர் யாரும்
அகன்று தம் வீடு கண்டார்.

பொருள்: பிரமன், சிவனை வணங்கி வாழ்த்தியபின், விசுவ கன்மன் அவ்விடத்திற்குச் சென்றனன். சிவபரம் பொருளின் திருவடிகளை வணங்கினன். நான்முகனைத் தன்கைகளால் தழுவி வாழ்த்தினன். அதன்பின் மலங்களை, வெண்பொடியாக்கி நீறாய் அணிந்து, வேதமாகிய விடையையூர்தியாகக் கொண்ட சிவபெருமானிடம் விடைபெற்று அவ்விடம் விட்டுநீங்கி வடதிசை சென்றனன். மற்றையோரும்—தேவர்களும்—தத்தம் வீடுகட்குச் செல்வாராயினர்.

70. கண்டநஞ்சுடையகோவையருச்சித்தகமலனுந்திக்
குண்டலிக்கனலைமூட்டிக்கொடும்பகைச்சமிதைகூட்டி
யண்டருஞானநெய்யாலாகுதிமகஞ்செய்தந்தத்
துண்டவான்மாய்கைத்தர்ப்பைசுட்டவன்றிலகமிட்டான்.

கண்ட நஞ்சுடைய கோவை
அருச்சித்த கமலன், உந்திக்
குண்டலிக் கனலை மூட்டிக்
கொடும்பகைச் சமிதை கூட்டி,
அண்டரும் ஞான நெய்யால்
ஆகுதி மகம் செய்து, அந்தத்
துண்டவான் மாய்கைத் தர்ப்பை
சுட்டவன் திலகம் இட்டான்.

பொருள்: ஆலகால நஞ்சினைத் தன் அழகிய கண்டத்தில் அடக்கிய தலைவனை அருளாளனை வேண்டிப் பூசனை முறையில் செய்த நான்முகன்; மூலாதாரத்தில் அமைந்துள்ள குண்டலினி சக்தியை விழிப்புறச்செய்து, அதன் விழிப்புற்ற நிலையில், ஆணவம்-கன்மம் மாயை ஆகிய மும்மலங்களினால் ஏற்பட்ட பந்தம்—பாசம் என்ற பகைகளை விறகாகக் கொண்டு, அணுகுதற்கரிய ஆற்றல் மிக்க அறிவு என்னும் நெய்யினால் ஆகுதி செய்து வேட்டல் புரிந்தனன். அவ்வண்ணஞ் செய்தபின், ஆன்மாவை மயக்கத்தில் ஆழ்த்தும் மாயையாகிய தற்பையினைச் சுட்டுப் பொட்டாக இட்டனன்.

71. இடத்தினும்வலத்துமாகவியங்குவார்[40]விந்துசூழ
மடைத்தலைவாசலிட்டமணிவிளக்கிருபாலோங்க
கடைத்தெருநடுவேயந்தக்கறைமிடற்றண்ணலார்பா
னடத்தினன்விழாவேகாண்பானான்முகனெந்தநாளும்

இடத்தினும் வலத்துமாக
  வியங்குவார் விந்து சூழ,
மடைத்தலை வாசலிட்ட
  மணிவிளக்கு இருபால் ஓங்க,
கடைத்தெரு நடுவே அந்தக்
  கறைமிடற்று அண்ணலார் பால்,
நடத்தினன்விழாவே காண்பான்
  நான்முகன் எந்த நாளும்.

பொருள்: இடைகலை பிங்கலை என்ற இருநாடிகளும் இடம் வலமாகச் சுழன்று சுழன்று நாதவிந்தின் உந்தலால் ஆதார நிலைகள் ஐந்தினையுங் கடந்து (மூலாதாரம்-அடிவயிறு-தொப்புள்-நெஞ்சு—கண்டம்) உள்ளும் புறமும் அறிவாகிய ஒளிச்சுடர்மேல் ஓங்க, புருவமத்தியின் நடுவில் ஞானநாயகனை ஒளிவடிவில் எந்நாளும் கண்டு (துரியநிலை) மகிழ்வெய்தி இருந்தனன்-நான்முகன்.

72. எந்தையாற்கொருநாற்சென்னியிருநான்குசெங்கையெண்க
ணந்தணன்காலையுச்சியந்தியோடத்தயாமஞ்
சந்திகண்முடித்துப்பூசைசமைக்குநாடன்னிலோர்நாள்
புந்தியுளடங்கா[41]தோங்கும்பொங்கியதுயரமானான்.

எந்தையாற்கு ஒரு நால் சென்னி
  இருநான்கு செங்கை யெண்கண்,
அந்தணன் காலை உச்சி
  அந்தியோடு அத்த யாமம்
சந்திகண் முடித்துப், பூசை
  சமைக்குநாள் தன்னில் ஓர் நாள்
புந்தியுள் அடங்காது ஓங்கும்
  பொங்கிய துயரமானான்.

பா.வே. 40 குவிந்துசூழ 41 ஓங்கிப்

பொருள்: நான்கு தலைகளையும், எட்டுக்கைகளையும், எட்டுக் கண்களையுங் கொண்ட எமது தந்தை – அன்புமிகு அந்தணனாகிய பிரமன்: தண்ணளிமிக்க சிவபெருமானுக்கு; காலை – நண்பகல் – அந்தியாகிய பிற்பகல், இரவு, நள்ளிரவு, அதிகாலையாகிய சந்தி வேளைகளில் பூசனை முறையில் செய்து வரும் பொழுது, ஒருநாள் புத்திக்கடங்காப் பெருந்துயருக்குள்ளானான்.

73. ஆனவன்றுயரநோக்கியரனெழுந்தருளியுன்பான்
மானவெந்துயரம்யாதுசொல்கெனமறையோன்சொல்வான்
றேனிலாமலர்போற்பூவின்றிரளிலாப்புனல்போல்வைய
மூனிலாவுயிர்களில்லாதிருப்பதென்னுடையாயென்றான்.

ஆனவன் துயரம் நோக்கி
அரன் எழுந்தருளி, உன்பால்
ஆன வெந்துயரம் யாது சொல்கென.
மறையோன் சொல்வான்,
தேன் இலா மலர்போல், பூவின்
திரள் இலாப் புனல்போல், வையம்
ஊன் இலா உயிர்கள் இருப்பதென்
உடையாய் என்றான்.

பொருள்: நான்முகன் அடைந்த துயரத்தினை உணர்ந்த சிவப் பரம் பொருளானவன்; அவன்முன் எழுந்தருளி – உன்னிடம் அடக்க முடியாப் பெருந்துயர் ஏற்பட்டதேன். அதனைச் சொல்க என வினவினன். அதற்கு நான்முகன் சிவப்பரம் பொருளை நோக்கி, அனைத்தும் உடையவனே! எம்தலைவ!! தேன் இல்லா மலர் போலவும், சோலைகளில் இருந்து வீழும் நறுமணம்மிக்க மலர் களைத் தாங்கிச் செல்லும் செழுமைமிக்க ஆற்று நீர் இல்லா நிலம் போலவும், இவ்வுலகிடை உடல் அற்ற உயிர்கள் இருப்பதேன் எனக் கேட்டனன்.

வேறு

74\. என்றுதன்கரமெட்டுங்குவித்தெதிர்
நின்றகாலைநிலாமுறுவற்செயா
நன்றுபல்லுயிர்யாவுநீநாட்டென
வன்றுகூறினனாறணிவேணியான்.

என்று தன்கரம் எட்டும் குவித்து, எதிர்
நின்ற காலை, நிலா முறுவல் செய்யா,
நன்று பல்லுயிர் யாவு நீ நாட்டு என,
அன்று கூறினன் ஆறணி வேணியான்.

பொருள்: சிவபிரான்முன்; பிரமன் தன் எட்டுக்கைகளையும் குவித்து வணங்கி நின்ற பொழுது, சிவன் தண்ணளிமிக்க புன்சிரிப்பினைச் செய்து உன்வினா நன்றெனப் பகர்ந்தனன். பின் அவனை நோக்கிப் பல்வகைப்பட்ட உயிரினங்களையும் நிலைப்படுத்துவாயாக எனக் கங்கையைச் சடைமேல் கொண்ட கங்காதரன் கூறினான்.

75\. ஆறுபத்தினோடாறைந்துமாறுமாய்க்
கூறுதத்துவமென்னுங்குறிப்பெலா
மேறுமேறுடையான்றனதேவலால்
வீறுபோதவிதித்தனனம்புயன்

ஆறு பத்தினொடு ஆறைந்தும் ஆறுமாய்க்
கூறு தத்துவம் என்னுங் குறிப்பெலாம்
ஏறும் ஏறுடையான் தனது ஏவலால்
வீறுபோத விதித்தனன் அம்புயன்.

பொருள்: மறையாகிய எருதினை ஊர்தியாகக் கொண்ட சிவன் திருக்குறிப்பின்வண்ணம், உலகியல் தத்துவங்கள் *தொண்ணூற்றாறையும் நன்குணர்ந்து அதன் நெறி முறை வழுவாது பெருமை மிக்க தன் ஆற்றல் கொண்டு, படைப்பினைச் செய்தனன் மலரவனான பிரமன்.

* தொண்ணூற்றாறு தத்துவங்கள்

ஆத்மதத்துவம் 24, நாடிதத்துவம் 10, அவத்தை 05, மலம் 03, குணம் 03, மண்டலம் 03, பிணி 03. விகாரம் 08' ஆதாரம் 06, தாது 07, மரபு 10, கோசம் 05, வாயில் 09.

76. அம்புவிக்கியலைம்பொறியின்குண
நம்புநீர்க்கொருநாலுகனற்குமுன்
றிம்பர்காலுக்கிரண்டுவெளிக்கொரு
தம்பநன்பொறியாகத்தரித்தனன்.

அம்புவிக்கு இயல் ஐம்பொறியின் குணம்,
நம்பு நீர்க்கு ஒருநாலு, கனற்கு மூன்று,
இம்பர் காலுக்கு இரண்டு, வெளிக்கு ஒரு
தம்ப நன்பொறியாகத் தரித்தனன்.

பொருள்: பிரமன் தன் படைப்பில்; அழகிய இப்புவிக்குப் பஞ்ச பூதங்களின் ஐந்து இயல்புகளும்—அவற்றின் தன்மைகளும் பொருந்தும் வண்ணமும், நீருக்கு மண்ணின் இயல்பு நீங்க மற்றைய நான்கு இயல்புகளும் பொருந்தும் வண்ணமும், நெருப்புக்கு மண்-நீர் ஆகிய இரு இயல்புகளும் நீங்கலாக மற்றைய மூன்று இயல்புகளும் பொருந்தும் வண்ணமும், காற்றுக்கு மண்-நீர்—நெருப்பு நீங்கலாக மற்றைய இரு இயல்புகளும் பொருந்தும் வண்ணமும், பரந்த வெளிக்கு மண்-நீர்—நெருப்பு—காற்று ஆகிய நான்கும் நீங்கலாகத் தான்ஒன்றேயாக நிற்கும் இயல்பினையும் கொண்டு அமைவுறும் வண்ணம் பஞ்சபூதங்களை நிலைப்படுத்தினன்.

77. தரித்ததாளிணைசானுவுநாபியுந்
திருத்துகண்டமுநெற்றியுஞ்சென்னியும்
விரித்தமண்புனறீவளி[42]மண்ணெனப்
பொருத்துமேனிபொலியவமைத்தனன்.

தரித்த தாளிணை °சானுவும் +நாபியும்
திருத்து கண்டமும் நெற்றியும் சென்னியும்
விரித்த மண்புனல் தீவளி மண் எனப்
பொருத்து மேனி பொலிய அமைத்தனன்.

பொருள்: இருபாதங்களைக் கொண்ட இவ்வுடம்பினில்; மூலாதாரம், அடிவயிறு, தொப்புள், நெஞ்சு, கண்டம், நெற்றி, தலை என்பவற்றை அமைவுறச் செய்து அவற்றிடையே மண், நீர், நெருப்பு-காற்று, வான் என்ற ஐம்பூதங்களின் இயல்புகளையும் பிரமன் அமைவுறச் செய்தனன்.

° உடம்பு. + தொப்புள்.

பா.வே.42 விண்ணெனப்.

78. நன்நிலந்சதுரச்சிரநாடுநீர்க்
கன்னவில்லுக்கனறிரியச்சிர
மின்னும்வாயுவிலங்கறுகோணம்வா
னன்னவட்டம்படைத்துலகாக்கினான்.

நன்நிலம் சதுரச் சிரநாடு நீர்க்கு
அன்ன °வில்லுக்கு அனல் திரியச், சிரம்
மின்னும் வாயு விலங்கறு கோணம், வான்
அன்ன வட்டம் படைத்து உலகு ஆக்கினான்.

பொருள் குறிஞ்சி—முல்லை-மருதம்—நெய்தல் ஆகிய நான்கு இயல்புங் கொண்டமைந்த மண்ணகத்தைச் சூழ்ந்த கடலிடத்தில், வாயுதேவன், திரிகோண மலையினை இட்டனன். அதன் ஒளியால் ஊழித்தீயும் தன்னொளி இழந்தது அத்தகைய திருமலையினை மைய மாகக் கொண்டு அதனைச் சுற்றி அமைந்த பெருவட்டத்துள் பிரபஞ் சப் பண்பினைப் படைத்தனன் பிரமன். ° வில் = ஒளி.

79. நன்சரிப்பினடப்பனபற்பல
பன்சரிப்பிற்பறப்பனபற்பல
வுன்சரிப்பினிலூர்வனபற்பல
வின்சரிப்பற்றிருப்பனபற்பல

நன் சரிப்பில் நடப்பன பற்பல,
பன் சரிப்பில் பறப்பன பற்பல,
உன்சரிப்பினில் ஊர்வன பற்பல,
வின்சரிப்பு அற்றிருப்பன பற்பல.

பொருள்: பிரமன் படைத்த படைப்பினுள்; நன்முறையில் நடப் பனவும்-ஓசை எழுப்பிப் பறப்பனவும், உன்னி ஊர்ந்து செல்வனவும் ஒரே இடத்தில் அமைவுற்றிருப்பனவுமாகிய உயிரினங்கள் பற்பலவாக அமைவுபெற்றிருந்தன.

80. பலவுமிந்தப்படிபடியெங்கணும்
குலவுமானிடமும்பலகூட்டமு
இலகுவித்தங்கிரணியனாதியாஞ்
சிலவரக்கர்திரளுமுண்டாக்கினான்.

பலவும் இந்தப்படி படி எங்கணும்,
குலவு மானிடமும் பல கூட்டமும்,
இலகுவித்து, அங்கு இரணியன் ஆதியாம்
சில அரக்கர் திரளும், உண்டாக்கினான்.

பொருள்: பிரமன் தன்படைப்பினுள்; பிரபஞ்ச இயல்பு அனைத்தும் இடம்பெறும் வண்ணம் இப்பூமியில் அமைவுறச் செய்தனன். அவற்றுடன் மனிதக் கூட்டங்களையும், இரணியன் போன்ற அரக்கர் கூட்டங்களையும் இடம்பெறச் செய்தனன்.

81. ஆக்கினேனிவ்வுலகிற்சராசரம்
போக்கினேனெப்பிறவிப்புலையெலாந்
தேக்கினேன்சிவஞானமெனச்சிவன்
றூக்குபாதந்தொழுதுமுன்சொல்லினான்.

ஆக்கினேன் இவ்வுலகில் சராசரம்
போக்கினேன் என் பிறவிப் புலை எலாம்
தேக்கினேன் சிவஞானம் எனச் சிவன்
தூக்கு பாதம் தொழுது முன் சொல்லினான்.

பொருள்: இவ்வுலகில் இயங்கியல் இயல்பு கொண்ட அனைத்தையும் தோற்றுவித்தேன். அதன்மூலம் என்பிறப்பினால் ஏற்பட்ட இழிதன்மை யனைத்தையும் போக்கினேன். அதன்மூலம் சிவஞானப் பேற்றினைப் பெற்றுள்ளேன் என்று கூறிச், சிவனின் தூக்கிய திருவடிகளை வணங்கி அவன் முன் நின்றனன் பிரமன்.

82. சொல்லிமீளத்தொழுதுவிழுந்தெழுந்
தல்லிநாண்மலரோனினிதைந்துக
நல்லபூசனைசெய்திருநால்வருட்
புல்லியோகச்சமாதிபுகுந்தனன்.

சொல்லி மீளத் தொழுது விழுந்து எழுந்து
அல்லி நாண்மலரோன் இனிது ஐந்து உக
நல்ல பூசனை செய்து °இரு நால்வருள்
*புல்லி யோகச் சமாதி புகுந்தனன்.

பொருள்: இவ்வண்ணம் கூறிய நான்முகன்; இறைவன் முன் வணங்கி நிலந்தழுவுற வீழ்ந்து எழுந்தனன். இனிஐம்புல வேட்கை இற்றுப்போக நல்ல பூசனை செய்வேன் என எண்ணினன், தன் முன் வந்த பிரமர்கள் எண்மரையும் தழுவி விடை கொண்டு, நல் வழிபாடியற்றும் யோகநெறிமிக்க சனகர் - சனந்தனர் சனாதனர் சனற் குமாரர் ஆகிய நால்வருடனுஞ் சேர்ந்து யோகசமாதியில் இருந்தனன்.

°இருநால்வர் = எட்டுப்பிரமர்கள்
°இரு = பெருமை = மாண்பு நால்வர் சனகர்முதலியோர்
*புல்லி = தழுவி = இணைந்து = சேர்ந்து

83. புகுதுமிவ்வகைபுண்டரிகத்தவர்
தொகுதியொன்பதுபேருந்துதிசெய
வுகமொரைந்துமொழிந்தபினீரைந்து
திகிரிமாதவர்செய்தனர்பூசையே.

புகுதும் இவ்வகைப் புண்டரிகத்தவர்
தொகுதி ஒன்பது பேருந் துதி செய,
உகம் ஒரு ஐந்தும் ஒழிந்தபின், ஈர் ஐந்தும்
திகரி மாதவர் செய்தனர் பூசையே.

பொருள்: இவ்வண்ணம் யோக நெறியில் நின்று பூசனை செய்யும் தாமரைமலர் வாழ் பிரமாக்கள் ஒன்பது பேரும் துதி செய்து வணங்க, கிரேத – திரேத – துவாபர - கலியுகங்கள் நான்கும் இவற்றின் இறுதியில் நிகழும் ஊழிக்காலமும் உட்பட்ட ஐந்தும் கழிந்தன. அதன் பின் மலைக்கதிபதிகளான மாதவர்கள் எனப் பகரப்படும் திருமால்கள் பத்துப்பேரும் பூசனை செய்தனர்.

வேறு

84. ஏதமிலாவாதியில்விட்டுனுவுந்தாமோதரனுமிலங்குசங்க
மூதியவாய்நாரணனுங்கேசவனுஞ்சரோருகக்கண்ணுடையகோவு
மாதவஞ்செய்யச்சுதனுஞ்சக்கரபாணியும்வாயுதேவமாலும்
போதுபத்மநாபனுமக்கிருட்டினனுமெனப்பதின்மர்பூசித்தாரே.

ஏதம் இலா ஆதியில், விட்டுணுவும்,
தாமோதரனும், இலங்கு சங்கம்
ஊதியவாய் நாரணனும், கேசவனும்,
சரோருகக் கண்ணுடைய கோவும்,
மாதவம் செய் அச்சுதனும்,
சக்கரபாணியும், வாசுதேவ மாலும்,
போது பத்மநாபனும், அக்கிருட்டினனும்,
எனப் பதின்மர் பூசித்தனரே.

பொருள்: துன்பமற்ற தொடக்ககாலத்தில்: விட்டுணு, தாமோதரன், சங்கம் முழங்கிய நாராயணன், கேசவன், கருடவாகனனான கோ, பெருந்தவத்தினையுடைய அச்சுதன், சக்கரபாணி, வாசுதேவனான திருமால், மலர்மங்கை சேர்வனான பத்மநாபன், கிருட்டினன் எனப் பெயர்கொண்ட பத்துப்பேரும் சிவபெருமானுக்கு வழிபாடியற்றினர்.

5. பூசனைசெய்தண்டசமாமுகத்திலரன்பணிவிடையாற் புவியுள்ளோர்க்குத்
தேசுநரைமூப்புமுதற்செனிப்பித்தார்நிமிடமாய்ச்செப்புங்காலம்
[43]பேசுநலம்பிறப்பித்தாரளவிந்தம்பிறக்குமீறு
காசினியில்விதித்தாரக்கிரவுகத்திற்பிரளயநீர்காட்டினாரே.

பூசனை செய்து, அண்டசமாம் முகத்தில்
அரன் பணிவிடையால், புவியுளோர்க்கு
தேசு நரை மூப்புமுதற் செனிப்பித்தார்
நிமிடமாய்ச் செப்புங் காலம்
பேசு நலம் பிறப்பித்தார், அளவில்
அந்தம் பிறக்கும் ஈறு
காசினியில் விதித்தார், அக்கிர உகத்தில்
பிரளய நீர் காட்டினாரே.

பொருள்: பிரமன்; சிவபெருமானுக்குப் பணிவிடை செய்து பூசனை முறைமையில் புரிந்தவேளை, சிவனின் அண்டசம் எனப் பகரப்படும் முகத்தில் இருந்து, அழகு – நரை – திரை – மூப்பு என்பனவும், நலன்மிக்க செயற்பாடுகளும், இவ்வுலகுக்கு முதலாய். அமைந்த கிரேதா யுகமும் அதன்பின் நீரால் ஏற்படும் பிரளய காலமும் தோன்றின.

86. காட்டருஞ்சீர்க்கிரேதவுகந்தன்னின்முன்னாள்விசுவசிட்டி கையாற்றந்த
வாட்டகுவர்நலியாமலியந்திரஞ்செய்கங்கணங்கள்வானோர் தோளிற்
பூட்டியதுமவுணரதைப்பறித்துததியெறிந்தவும்புலவோருய்ய
நீட்டருமால்மீனுருவாய்ப்புகுந்தெடுத்துக்கொடுத்ததுவுந் தெரிந்துரைப்பாம்.

காட்டரும் சீர்க் கிரேத உகந்தன்னில்,
முன்னாள் விசுவசிட்டி கையால் தந்த
வாள் தகுவர் நலியாமல் யந்திரம் செய்
கங்கணங்கள் வானோர் தோளில்
பூட்டியதும், அவுணர் அதைப் பறித்து
உததி எறிந்ததுவும், புலவோர் உய்ய
நீட்டரும் மால் மீனுருவாய்ப் புகுந்து
எடுத்துக் கொடுத்ததுவும் தெரிந்து உரைப்பாம்.

பா. வே. 43 பேசுமலங்காரநலம்

பொருள்: எடுத்துக்காட்டாகச் சொல்லற்கு அருமைவாய்ந்த பெருமைமிகு சீர் கொண்ட கிரேத யுகத்தில், விசுவசிட்டி யென்ற பிரமனால் படைக்கப்பட்ட இவ்வுலகில், அசுரரால் ஏற்படும் துன்பம் நீங்கும் பொருட்டுத் தேவர்கள் மந்திர ஏடுகள் பொருத்தப்பட்ட யந்திரங்கள் கொண்ட கங்கணங்களைத் தோள்களில் அணிந்திருந்தனர். அக்கங்கணங்களைக் கண்ட அசுரர்கள், அவற்றைப்பறித்துக் கடலிடை வீசினர். அதனால் ஏற்பட்ட துன்பத்தில் இருந்து மீட்சிபெறக், கூறுதற்கரிய பெருமைமிகு திருமால்; மீன்வடிவம் கொண்டு கடலிடைப் புகுந்து மீட்டுக் கொடுத்தனன். இச்செய்திகள் அனைத்தையும் விளக்கமுற அறிந்து கூறுவாம்.

அர்ச்சனாவிதிச்சருக்கம் முற்றிற்று.

திருவிருத்தம் 86.

ஐந்தாவது
மச்சாவதாரச் சருக்கம்

1. உரைசிறந்ததென்கயிலைப்பெருமானையுருத்திரர்பன்னொருவர் வேதர்
நிரைசிறந்தவொன்பதின்மர் திருமாலோர்பதின்மரிவர்நீங்காராக
வரைசிறந்ததிரிகோணத் தொவ்வொருகோணந்தமக்கு[1]வாழ் வாய்க்கொண்டு
விரைசிறந்தமலர் தூவியருச்சித்துச்சிவயோகம்[2]விளங்குங்காலம்

உரை சிறந்த தென்கயிலைப் பெருமானை,
உருத்திரர் பன்னொருவர், வேதர்
நிரை சிறந்த ஒன்பதின்மர், திருமாலோர்,
பதின்மர், இவர் நீங்காராக
வரை சிறந்த திரிகோணத்து ஒவ்வொரு
கோணம் தமக்கு வாழ்வாய்க் கொண்டு,
விரை சிறந்த °மலர் தூவி அருச்சித்துச்
+சிவயோகம் விளங்கும் காலம்

பொருள்: உயர்நன்மொழிகளால் போற்றப்பட்ட தென்கயிலை யெனப் பெயர் கொண்ட திருமலையில் எழுந்தருளியிருக்கும் சிவ பெருமானை; மறையுணர்ந்த வேதர்களான உருத்திரர்கள் பதி னொரு பேரும், படைப்புக்கடவுளரான ஒன்பது பிரமாக்களும், பத்துப் திருமால்களும் — அம்மலையில் அமைந்த கோணங்கள் ஒவ்வொன்றையுந் தத்தம் குழுவினருக் கொன்றாக அமைத்துக் கொண்டு வாழ்ந்தனர். அவ்வண்ணம் வாழ்வினை அமைத்துக் கொண்டு, தேன் நிறைந்த மகரந்தப் பொடிகள் சிந்தும் புதுமலர் களையிட்டுப் பூசனை செய்து, சிவயோகஞ் செய்திருந்த வேளையில்,

° சிவவழிபாட்டுக்குரிய மலர்கள்: தாமரை, நீலோர்ப்பலம், செங்கழுநீர், அழகிய கரு நெய்தல், கொன்றை, மல்லிகை, செண் பகம், பாதிரி — செவ்வந்தி, திருவாத்தி — கமுகம்பூ — என்பன இவை கோட்டுப்பூ — கொடிப்பூ — நிலப்பூ நீர்ப்பு என நான்கு வகையாகும்.

+ பயன் நோக்காது செய்யும் தவம் சிவயோகம் எனப்படும்.

பா.வே. 1 வாழ்வாகக் கொண்டு, 2 விளங்குகாலம்

2. விளங்குமலர்விசுவசிட்டிபடைத்தவறுபத்துநால்வெள்ளஞ்சேனை
துளங்கலிலாவவுணருக்குளிரணியனென்றொருதலைவன்
சூழுமாழிக்
களங்கவிடமடக்குமவன்வடகயிலையடைந்துதவங்கடிதுசெய்தா
னுளங்குளிர்ந்துசிவனவனுக்களித்தவரமிவ்வளவென்றுரைக்
கலாற்றா.

விளங்குமலர் விசுவசிட்டி படைத்த
அறுபத்துநால் வெள்ளம் சேனை.
துளங்கல் இலா அவுணருக்குள் இரணியன்
என்று ஒருதலைவன், சூழும் ஆழிக்
களங்க விடம் அடக்கும் அவன் வடகயிலை
அடைந்து தவம் கடிது செய்தான்,
உளம் குளிர்ந்து சிவன் அவனுக்கு
அளித்தவரம் இவ்வளவு என்று உரைக்கல் ஆற்றா.

பொருள்: தாமரை மலரிடத்தில் தோன்றிய விசுவசிட்டியென்ற படைப்புக் கடவுளான பிரமன்; அறுபத்து நான்கு வெள்ளம் சேனை கொண்ட கூட்டத்தினைப் படைத்தனன். அதில் விளக்க முற்ற நல்வாழ்வினை மேற்கொள்ளாதஅசுரர்களில் இரணியன் என்ற பெயர் கொண்ட அரக்கர் தலைவன்; பால்க்கடலில் சூழ்ந்தெழுந்த ஆலகால நஞ்சினைத் தன்கண்டத்தில் அடக்கிய திருநீலகண்டனான சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் வடகயிலையினை யடைந்து கடுந்தவஞ் செய்தான். அதனால் மனம் மகிழ்ந்த சிவபெருமான், இரணியன் வேண்டிய அனைத்து வரங்களையுங் கொடுத்தான்.

3. ஆற்றலினாற்பகைவர்தம்மாலடுபடையான்மறலிதன்னாலாவி
போகான்
போற்றுமகத்தும்புறத்துமிரவுபகலிரண்டுமுயிர்போக்கிற்போகான்
கூற்றுமவன்பேர்கேட்கிற்குலைகுலையுநடக்கிலண்டகூடஞ்சாயு
மூற்றுமுகிலேழுமெறிகடலேழுங்குடங்கையிற்கொண்டொருக்கா
லுண்பான்.

ஆற்றலினால் பகைவர்தம்மால் அடுபடையால்
மறலி தன்னால் ஆவி போகான்,
போற்றும் அகத்தும் புறத்தும் இரவு பகல்
இரண்டுல் உயிர் போக்கிற் போகான்,
கூற்றும் அவன்பேர் கேட்கின் குலைகுலையும்
நடக்கில் அண்ட கூடம் சாயும்,
ஊற்றும் +முகில் ஏழும் +எறிகடல் ஏழும்
குடங்கையிற் கொண்டு ஒருகால் உண்பான்.

பொருள்: பெருவலிமையினாலோ, பகைவர்களாலோ, கொடிய படைக்கலங்களாலோ – கூற்றுவனாலோ – இரணியனது உயிரினை உடலை விட்டு நீக்குதல் இயலாது. உள்ளிடத்திலோ அன்றி வெளியிடத்திலோ, இரவிலோ–பகலிலோ அவனைக் கொல்லுதல் இயலாது. இரணியன் பெயரினை எமன் கேட்பானாயின் தன்னிலை கெட்டு உலைவுறுவான். இரணியன் நடந்தால் அண்டத்தினைக் கவிந்து நிற்கும் வான்முகடும் சாயும். முகில் கூட்டங்கள் ஏழினையும்–கடல்கள் ஏழினையும் தன் உள்ளங்கையில் அடக்கி ஒருதரத்தில் உண்பான். +திருமலைச் சருக்கத்தில் 39ம் பாட்டின் உரையில ஏழு மேகங்கள் பற்றியும், 64ம் பாட்டின் உரையில் ஏழு கடல் பற்றியும் விளக்கப் பட்டுள்ளன.

4. பானுவுஞ்சந்திரபதமுஞ்சுரர்பதமுமவன்பதத்திற்பணியாதில்லை
வானவர்கோன்முதலுலகபாலரவன்வாயிலுட்போய்வணங்
காரில்லை
[3]நானிலமுமிரணியனேநமோவென்னாநாவில்லைநாரணன்பே
ரோநமசிவாயமெனச்சிவன்[4]பெருமவன்காலத்துரைப்பாரில்லை

பானுவும் சந்திர பதமும் சுரர் பதமும்
அவன் பதத்தில் பணியாதில்லை,
வானவர் கோன்முதல் உலகபாலர், அவன்
வாயில் உட்போய் வணங்காரில்லை,
நால நிலமும் இரணியனே நமோ
என்னா நாஇல்லை, நாரணன் பேர்
ஓ(ம்) நமசிவாயம் எனச் சிவன்பேரும்
அவன் காலத்து உரைப்பார் இல்லை.

பொருள்: சூரிய–சந்திரரும், தேவர்களும் அவர்கள் வாழ் உலகில் உள்ளோரும் இரணியன் கால்களில் வீழ்ந்து வணங்குவர் அவ்வண்ணஞ் செய்யாதவர் அவ்வுலகில் இல்லை. தேவர்களின் தலைவன் இந்திரன் முதலாக உலகினைக் காவல் செய்து நிற்கும் திக்குப்பாலகரும் அவன் கடைவாயிலில் சென்று அடிவணங்குவர். அவ்வண்ணம் செய்யாதவர் அங்கும் இல்லை. குறிஞ்சி–முல்லை–மருதம்–நெய்தல் என்ற நலஞ்செறித்த நாநிலங்கொண்ட இவ்வுலகில், இரணியனே நம என்று கூறும் நாவினரேயுண்டு. நாராயணனின் பெயரையோ–ஓம் சிவாயநம எனச் சிவன் பெயரையோ இரணியன் காலத்தில் உரைத்தவர்கள் இல்லை.

பா.வே 3. நானிலத்து, 4. பெயரும்

5. இல்லமுமில்வனிதையருஞ்செல்வமுந்தந்திருநாடுமிமை யோக்கில்லை
வல்லமையாற்பேருலகமீரேழுமொருதனியேவலிதினாண்டான்
தொல்லைமகராட்டிரமாம்பதியிலரசிருந்துமுடிசூடிவாழ்ந்தான்
பலலவுணவெள்ளமொராயிரங்கோடியவன்படையாய்ப்பரவா நிற்கும்

இல்லமும் இல்வனிதையரும் செல்வமும்
  தம் திருநாடும் இமையோர்க்கு இல்லை,
வல்லமையால் பேருலகம் * ஈரேழும்
  ஒருதனியே வலிதின் ஆண்டான்,
தொல்லை மகாராட்டிரமாம் பதியில்
  அரசிருந்து முடிசூடி வாழ்ந்தான்,
பல்லவுண வெள்ளம் ஒரு ஆயிரம்கோடி
  அவன் படையாய்ப் பரவா நிற்கும்.

பொருள்: இரணியன் ஆட்சியில்; தேவர்களுக்கு வாழ்வதற்கு வீடுமில்லை—வீட்டில் இருந்து நல்வாழ்வு நடாத்தும் நங்கை நல்லாரும் இல்லை—பொருளின் தேட்டமும் இல்லை—அவர்கள் வாழ்விடமாக அமைந்த தேவர் நாடுமில்லை யென்றாகிவிட்டது. இரணியன் தன் தவவலியால் இவ்வண்டத்தில் அமைவுற்ற மேல் உலகம் ஏழையும், கீழ் உலகம் ஏழையும்தான் ஒருவனாகவே ஆண்டனன். இவன் பழைமைமிகு மகாராட்டிரம் என்னும் நாட்டகத்துத்தன் ஆட்சியினை அமைத்து முடிசூடி வாழ்ந்தனன். இவனது அரசபடை வெள்ளமாய்ப பெருகி ஓராயிரங் கோடியாக எங்கும் பரந்து நிற்கும்.
*புவனோற்பத்திச் சருக்கம் 15ம் பாட்டின் உரையில் கூறப்பட்டுள்ளது.

6. [5]திற்பரிறுத்தியசமையமெத்தனையுந்தத்தமதுநியமநீத்துக்
கற்பனவுங்கேட்பனவுமிவனாமமென்னிலென்னகழறுகிற்பேம்
நற்புவனத்திப்படியாயிரகோடிவருடமுறநடத்தியாண்மை
கற்பமெனமுப்பத்துமுக்கோடிதேவரையுங்கலக்கஞ்செய்தான்

நிற்பர் இறுத்திய சமயம் எத்தனையும்
  தத்தமது நியம நீத்துக்,
கற்பனவும் கேட்பனவும், இவனாம்
  என்னில், என்ன கழற்றுகிற்போம்.
நற்புவனத்து இப்படி ஆயிரகோடி வருடம்
  முறை நடத்தி, ஆண்மை
கற்பமென முப்பத்து முக்கோடி
  தேவரையும் கலக்கம் செய்தான்.

பா.வே. 5 நிற்ப நிறுத்திய

பொருள்: எங்கும் – எவையுமாய் – அனைத்திலும் ஆற்றல் வடிவாய் நின்றிலங்கும் முதல்வன்; உலகுக்கு வழங்கிய வழிபாட்டு நெறிகள் அனைத்தும் - தத்தமது ஒழுங்குகள் கெட்டு நிலை குலைந்தன. கற்பன – கேட்பன அனைத்தும் இரணியனைப் பற்றிய தாகவே இருந்தன. இத்தகைய நிலைப்பாட்டினைப் பற்றிக் கூறுவதற்கு என்னதான் உண்டு. நலஞ்சான்ற இவ்வுலகில்; இரணியன் தன்கொடிய ஆணையினைச் செலுத்தி ஆயிரம் கோடி ஆண்டுகள் ஆட்சி ஆண்மை செலுத்தினன். கற்பகாலம் எனக் கூறத்தகும் இக்காலத்தில், முப்பத்து மூன்று கோடி தேவர்களையும் நிலை கலங்கச் செய்தனன்.

7. செய்தவத்தை[6]நலிகின்றவவுணருக்கென் செய்வதெனத்தெரிந்து[7] வேதம்
[8]பெய்ததொரு மந்திரத்தைத் தகட்டெழுதிக்[9]கங்கணப்பொற் பெரும்பூணாக்கிக்
கைதரித்துவசீகரமீதெனநினைந்துவெருவாதகளிப்பாராகி
யெய்தி[10]யிரணியனையும்வந்திறைஞ்சாமற்புறஞ்
சிலநாளிருந்தார்விண்ணோர்.

செய்தவத்தை நலிகின்ற அவுணருக்கு
என்செய்வதெனத் தெரிந்து, வேதம்
பெய்ததொரு மந்திரத்தைத் தகட்டெழுதிக்,
கங்கணப் பொற் பெரும் பூணாக்கிக்,
கைதரித்து வசீகரம் ஈது எனநினைந்து
வெருவாத களிப்பராகி
எய்தி இரணியனையும் வந்து இறைஞ்சாமல்
புறம் சிலநாள் இருந்தார் விண்ணோர்.

பொருள்: தேவர்கள்; அசுரர்களின் கொடிய செயலால் நற்றவத்தினைச் செய்யாது துன்புற்றனர். அதனால் அசுரரின் கொடுமையில் இருந்து நீங்குவதற்கு யாது வழியெனச்சிந்தித்தனர். அச்சிந்தனையில் ஏற்பட்ட தெளிவினால், மறைதந்த நன்மொழியினை ஓர் பொற்றகட்டில் எழுதி அதனைக்கையில் அணியும் காப்பாக்கித் தம்கையில் அணிந்திருந்தனர். அக்காப்புத் தமக்கு அழகினையும், பலத்தினையும் தருமென எண்ணி அச்சமற்றுக் களிப்புடன் இருந்தனர். அதனால் இரணியனையும் வந்து வணங்கிலர். தம் வாழ்விடத்தை விட்டு நீங்கிப் புறஞ்சென்று சில நாட்கள் வாழ்ந்திருந்தனர்.

பா. வே. 6 நலிக்கின்ற, 7 + 8 வேத மெய்யது, 9 கங்கணமாமெழிற்பூணாக்கி, 10 இரணியனிடம் போந்து;

8. இருந்தபொழுதவருலகத்தேகியிவர்கைக்குமுன்னாளில்லா
திந்நாட்
[11]பொருந்தியதீதென்னென்றுதானவரும்வானவரைப்புகைந்து
நோக்கித்
திருந்துகரம்பிடித்தமரர்தங்கரத்திற்கங்கணத்தைச்சினத்தால்
வாங்கி
விரிந்தகடலிடைமேகம்பொன்மழைக்கால்விடுவதெனவிடுத்தார்
மிக்கோர்.

இருந்தபொழுது அவர் உலகத்து ஏகி, இவர்
கைக்கு முன்னாளில் இல்லாது இந்நாள்
பொருந்தியது ஈது என்என்று, தானவரும்
வானவரைப் புகைந்து நோக்கித்
திருந்துகரம் பிடித்து அமரர் தம்கரத்தில்
கங்கணத்தைச் சினத்தால் வாங்கி,
விரிந்த கடலிடை மேகம் பொன் மழைக்கால்
விடுவதென விடுத்தார் மிக்கோர்.

பொருள்: தேவர்கள் புறம் போந்து இருந்த பொழுது; அவுணர்கள் அவர்கள் வாழ்விடத்தைத் தேடிச் சென்று, இவர்கள் கையில் முன்பு இல்லாத இக்காப்புகள் இந்நாளில் எவ்வாறு வந்ததெனத் தேவர்களைச் சினந்து நோக்கி, அவர்களின் அழகிய கைகளைப் பிடித்து, அவற்றில் அணிந்திருந்த காப்புகளைச் சினங்கொண்டு பறித்தனர். அவ்வண்ணம் பறித்த அசுரர்கள் அக்காப்புகளை; பரந்த கடலிடை மேகம் பொன் மழை பொழிந்தது போல் விட்டெறிந்தனர்.

9. மிக்கவிருசுடரிழந்தவானமெனவேந்திழந்தவியனாடென்னத்
தொக்ககரமொன்றுமருப்பிரண்டுமதமூன்றிழந்ததும்பியென்னப்
புக்கதிருவிழந்தமடவாரென்னச்சிறகிழந்தபுள்ளேயென்னச்
செக்கர்விழிமுத்துதிரக்கங்கணங்களிழந்துள்ளந்திகைத்தார்
விண்ணோர்.

மிக்க இருசுடர் இழந்த வானம் என,
வேந்து இழந்த வியன் நாடு என்னத்,
தொக்க கரம் ஒன்று மருப்பு இரண்டு
மதம் மூன்று இழந்த தும்பி என்னப்,
புக்க திரு இழந்த மடவார் என்னச்,
சிறகு இழந்த புள்ளே என்னச்,
செக்கர் விழி முத்து உதிரக், கங்கணங்கள்
இழந்து உள்ளம் திகைத்தார் விண்ணோர்.

பா. வே. 11 பொருந்தியவீதென்று

பொருள்: தேவர்கள்; சூரிய-சந்திரர்களை இழந்த வானம் போன்றும், அரசனை இழந்த வளம்கொண்ட நாடுபோன்றும், இந்திரனையிழந்த தேவர் உலகுபோன்றும், துதிக்கையினையும்-பலம்மிக்க இருதந்தங்களையும் - கன்னமதம் - கபோலமதம் - பீசமதம் ஆகியமும் மதங்களையும் இழந்த யானைபோன்றும், புகுந்த இடத்தில் பெற்ற பெரும் பேற்றிற்குரிய தம் துணைவரை யிழந்த அழகுமிக்க பெண்கள்போன்றும்-சிறகுகளை இழந்த பறவைபோன்றும் அல்லற்பட்டனர். தமக்கேற்பட்ட கொடிய துன்பத்தால் அல்லற்பட்டுத் தம் சிவந்த கண்களில் இருந்து முத்தாகிய கண்ணீரைச் சிந்தினர். தமக்குக் காப்பாக அமைந்த கங்கணத்தை இழந்ததனால் துன்புற்றுச் செய்வதறியாது திகைத்து நின்றனர்.

* ''வேந்து இழந்த வியன்நாடு'' இது இரு பொருள்பட வந்தது. அவ்வண்ணமே பொருள் காணப்பட்டது.

10. விண்ணுடையவிமையவருமுனிவரருமவுணருக்குவிறலையீந்தா
ரெண்ணுடையதுயரைநமக்காக்கினான்சிவனென்றா
லெவரைநோவேங்
கண்ணுடையதிருமேனிக்கோமானோ[12]டெழுந்து
தென்கயிலைக்[13]கண்ணோர்
பெண்ணுடையபாகனைப்போய்த்தொழவிசும்புவழி
[14]யாகப்பெயர்வதானார்.

விண்ணுடைய இமையவரும் முனிவரரும்,
அவுணருக்கு விறலை ஈந்தார்,
எண்ணுடைய துயரை நமக்கு ஆக்கினான்
சிவன் என்றால் எவரை நோவேம்,
கண்ணுடைய திருமேனிக் கோமானோடு
எழுந்து, தென்கயிலைக் கண்ணோர்
பெண்ணுடைய பாகனைப் போய்த்
தொழ, விசும்புவழியாகப் பெயர்வதானார்

பொருள்: மேன்மை பெறு உலகில்-தெய்வத்தன்மை வாய்ந்த-வானகத்தில் வாழும் பெருமை மிகுந்த கடவுளரும்-தவத்தின் மிக்க முனிவர்களும், அசுரருக்கு அனைத்து வலிமைகளையுங் கொடுத்துள்ளனர். அதனால் எமக்கு அளவிட்டுக் கூறுதற்கரிய துன்பத்தினை ஆக்கிவிட்டான் சிவன். ஏனெனில் இக்கடவுளரும்-முனிவர்களும் அவன் அருளாணையின்படியே நடந்துள்ளனர். எனவே நாம் யாரை நொந்து என்னபயன்? என்று எண்ணிய தேவர்கள்; உடலனைத்தும் கண்களைக் கொண்ட இந்திரன் தலைமையில், திருமலையில் எழுந்தருளியிருக்கும் உமையொருபாகனைத் தொழுது தம்குறை யுரைக்க, வான்வழியாக விரைந்து சென்றனர்.

பா.வே.12 எழுந்தே; 13 நாடிப், 14 தேவர்.

11. ஆனாததருநீழலினிதிருக்குமமரர்களுமமரர்கோவு
மேனாளில்விடங்கொதிப்பவடகயிலைதனிலடைந்த
வெருவல்போலச்
சேனாபதிபவுணர்தனக்கொதுங்கித்தென்கயிலைச்சிகரத்தூடே
நூனாடுஞ்சதுர்மறையின்றலைநின்றானிருந்ததிசை
நோக்கிவந்தார்.

ஆனாத தருநீழல் இனிதிருகும்
அமரர்களும் அமரர் கோவும்,
மேல்நாளில் விடம் கொதிப்ப, வடகயிலை
தனில் அடைந்த வெருவல்போலச்,
சேனாபதி அவுணர் தனக்கொதுங்கித்
தென்கயிலைச் சிகரத்தூடே,
நூல் நாடும் சதுர்மறையின் தலைநின்றான்
இருந்ததிசை, நோக்கி வந்தார்.

பொருள்: ஆக்கம் நிறைந்த கற்பக மரத்தின் நிழலில் இன்ப வாழ்வு வாழ்ந்த தேவர்களும், அவர்கள் தலைவனான இந்திரனும்; முற்காலத்தில் பாற்கடல் கடைந்தவேளை ஆலகால நஞ்சு கொதித்தெழுந்து துன்பம் விளைவிக்க அதற்கு அச்சமுற்று வடகயிலை அடைந்ததுபோன்று, அவுணர் தலைவனான இரணியனுக்கும் அவன் கூட்டத்தினருக்கும் அஞ்சித், திருமலையின் உச்சியில், வேதங்களாலும் ஆகமங்களாலும் தேடற்கரிய மறைமுடிவான தலைவன் இருந்த திக்கு நோக்கி வந்தனர்.

12. நோக்கமொருமூன்றுடையதென்கயிலைப்பெருமானை
நோக்கியோக
பாக்கியத்துளினிதிருப்பார்முக்கோணப்பேரவைக்குட்
பணிந்துவானோர்
காக்குமுதலுருத்திரர்காள்விரிஞ்சர்காள்முகுந்தர்காள்
கனகன்சேனை
யாக்குதுயராற்றாது[15]தவமிழந்தேந்திருவிழந்தே
மந்தோவென்றார்.

நோக்கம் ஒரு மூன்றுடைய தென்கயிலைப்
பெருமானை நோக்கி, யோக
பாக்கியத்துள் இனிது இருப்பார் முக்கோணப்
பேரவைக்கு உட்பணிந்து, வானோர்
காக்கும் முதல்உருத்திரர்காள் விரிஞ்சர்காள்
முகுந்தர்காள், கனகன் சேனை
ஆக்குதுயர் ஆற்றாது தவம்இழந்தேம்
திருவிழந்தேம் அந்தோ என்றார்.

பா.வே. 15 தவமிழந்தோம் திருவிழந்தோம்

பொருள்: திருமலைக்கு வந்த தேவர்கள்; திருநோக்கங் கொண்ட முக்கண்ணனான சிவனை நோக்கி வணங்கினர். அம்மலையிடத்தில் யோக நெறிக்கண்வழுவாது நின்று தவமியற்றும் பெருமன்றில் உள்ளோர்க்குத்தலை வணங்கினர். திக்குப்பாலகரில் முதன்மை பெற்ற உருத்திரர்களையும் - பிரமாக்களையும் - முகுந்தர்களையும் நோக்கி: இரணியன் படைகள் செய்யுங் கொடுமைக்கு ஆற்றாது துன்புறுகின்றோம். அக்கொடுமையின் விளைவால், எமது தவத்தினை இழந்தோம் - பெரும் பேற்றினை இழந்தோம். இனி என் செய்வோம் ஐயகோ! என்று அழுது புலம்பினர்.

13. என்றமொழிபினைவினவியீரைந்து[16]முகுந்தருக்குளிரங்கிக்கூர்வாள்
மன்றலர்ந்தார்க்கேசவனும்வாசவனையமைத்தமலர்க்கரத்தனாகித்
துன்றியநுந்திருநாடுந்தருவுமயிராவதமுந்தோற்றவாறும்
வென்றியவுணருக்கிடைந்திவ்வெற்படைந்த[17]வாறென்கொல்விளம்புகென்றான்

என்ற மொழியினை வினவி, ஈர் ஐந்து
முகுந்தருக்குள் இரங்கிக் கூர்வான்
மன்றலந்தார்க் கேசவனும் வாசவனை
அமைத்த மலர்க்கரத்தன் ஆகித்,
துன்றிய நுந்திருநாடும் தருவும்
அயிராவதமும் தோற்றவாறும்,
வென்றி அவுணருக்கு இடைந்து, இவ்
வெற்பு அடைந்தவாறென் கொல் விளம்பு கென்றான்.

பொருள் : அந்தோ என்று அரற்றிய தேவர்களின் குறைகளைக் கேட்ட முகுந்தருக்குள்; நிலை பேறுடையவனும் - அன்றலர்ந்த மாலைகளை அணிந்தவனுமான கேசவன்; இரக்கம் மேலிட்டு இந்திரனைத்தன் மலர்க்கையால் அணைத்து அமைதிப்படுத்தினன். பின் அவனை நோக்கி - உமது வான்நாடும் - கற்பக மரமும் - வெள்ளை யானையும் இழந்து அவுணரால் துன்புற்ற தன்மையினைக் கூறுக என்றனன்.

14. விளம்புமெனப்புரந்தரனுந்திகந்தரங்கள்பெரிதளந்துவிரிந்தசெவ்வித்
தளம்பயிலுங்கமலமலர்ச்சரண்மிசைவிழுந்திறைஞ்சித்தருணநீல
வளங்கவினுமுடன்முழுதுமுத்தரும்பிற்றென்னவிழிவழிநீர்மல்கத்
துளங்குமிமையவருழக்குந்துயர்சிறிதுகேசவன்முன்சொல்வதானான்.

பா.வே. 16 முகுந்தருக்குளிரக்கங்கூர்வான் 17 வாறுமென்

விளம்பும் எனப், புரந்தரனும்; திகந்தரங்கள்
பெரிதளந்து விரிந்த செவ்வித்
தளம்பயினும் கமலமலர்ச் சரணமிசை
விழுந்து இறைஞ்சித், தருணநீல
வளம் கவினும் உடல் முழுதும்
முத்து அரும்பிற்று என விழிவழி நீர்மல்கத்,
துளங்கும் இமையவர் உழக்குந்துயர் சிறிது
கேசவன் முன் சொல்வதானான்.

பொருள் : கூறுக என்றலும் – இந்திரன்; பரந்த அண்டமனைத்தையும் வாமனனாக வந்து பேருருக்கொண்டு அளந்ததிருமாலின் திருவடி மலர்களில் வீழ்ந்து வணங்கினான். சூல்கொண்ட முகில் நீர் சொரிவதுபோல் விழிகளில் இருந்து வழிந்தோடும் கண்ணீர் உடல் அனைத்தும் முத்துப்போல் துளிர்த்துச் சொரிய, நிலை கலங்கிய தேவர்கள் அனுபவிக்கும் தாங்கரிய துன்பத்தினைச் சொல்வதானான்.

15. ஆனாதபெருந்தருவுஞ்சுரபியுஞ்சிந்தாமணியுமரம்பைமாரும்
வானாடுமிரணியற்குவாழ்வாகமனத்துயரம்வானோர்க்காக
மேனாளில்விதித்தபடியித்தனைநாளனுபவித்தேம்விடியுங்காலந்
தானாவதிலையிதற்கென்செய்வேமெனப்பார்த்தேஞ்சதுர்வே
தங்கள்

ஆனாத பெருந்தருவும் சுரபியும்
சிந்தாமணியும் அரம்பைமாரும்
வான் நாடும் இரணியற்கு வாழ்வாக,
மனத் துயரம் வானோர்க்காக,
மேல் நாளில் விதித்தபடி இத்தனைநாள்
அனுபவித்தேம், விடியுங்காலம்
தானாவதில்லை, இதற்கு என்செய்வேம்
எனப்பார்த்தேம், சதுர் வேதங்கள்.

பொருள் : எக்காலத்திலும் தன்நிலை மாறாப் பெருமைமிகு கற்பக மரமும் - அமுதசுரபியும், பெருவளம் கொண்ட சிந்தாமணியும், தேவர்களின் அடியவர்களான ஆடல் நங்கையர் - அரம்பையரும், வானுலகும், இரணியனுக்கு உரித்தாயது. அதனால் தேவர்களுக்கு மனத்துன்பம் உரித்தாயது. இது எமது முன்வினைப் பயனால் நிகழ்ந்துவிட்டது. அதனை இற்றைவரை அனுபவித்து விட்டோம் இத்துன்பத்திற்கு இன்னுந்தான் விடிவுகாலம் வரவில்லை. இதற்கு என் செய்வோம். தாங்கற்கரிய துன்பத்தினைப் போக்குதற்கும் வழியறியோம். அதனால் இதற்கு மீட்சி தேடி நான்கு வேதங்களையும் ஆராய்ந்தோம். அதில் குறித்தபடி சில செய்தோம் என்றனன் இந்திரன்.

16. வேதமதிற்[18]சமரத்திமந்திரமென்றோருதவிவிளம்பிற்றந்தப்
போதனையைவசீகரமாய்த்தகட்டெழுதிக்கங்கணமாய்ப்
புயத்திற்பூண்டோந்
தீதவுணர்கண்டுமக்குச்சிறுசிகையும்புரிநூலுமல்லாற்செங்கைக்
கீதணியும்வஞ்சனை[19]யெனவெனப்பறித்துமறிகடற்கணெறிந்தா
ரென்றான்.

வேதமதில் சமரத்தி மந்தரம் என்று
ஓர் உதவி விளம்பிற்று, அந்தப்
போதனையை வசீகரமாய்த் தகட்டெழுதிக்
கங்கணமாய்ப் புயத்தில் பூண்டோம்,
தீதவுணர் கண்டு உமக்குச் சிறுசிகையும்
புரிநூலும் அல்லால், செஙகைக்கு
ஈது அணியும் வஞ்சனையென் எனப்
பறித்து மறிகடற்கண் எறிந்தார் என்றான்.

பொருள்: அருமறையிடத்தில் பகைவெல்லும் மந்தரம் ஒன்று இருந்தது. அந்த நிறைமொழி, நலம் பெறும் வழியினைக் கூறியது. அதனை விரும்பித் தகட்டில் எழுதிக் காப்பாசச் செய்து தோள் வளையமாக அணிந்தோம். அதனைத் தீமையே வடிவுகொண்ட அசுரர்கள் கண்டனர். அவர்கள் எம்மை நோக்கி உமக்குச் சிறிய தலைமுடியும் முப்புரிநூலுமேயுரியது. இவையன்றி உமது சிவந்த கைக்கு இதனை அணிந்த வஞ்சனைச் செயல்யாது என வினவினர். பின் சங்கணத்தைப்பறித்து அலை கொண்ட கடலின்கண் எறிந்தனர் எனக் கூறினன் இந்திரன்.

17. என்றுதனைப்பனிமதியைக்கனலிதன்னையிபந்தன்னையிஞ்சி
மூன்றைக்
குன்றுதனைமுயலகனைநெரித்துவளைத்தெரித்துரித்துக்
குறைத்துத்தேய்த்துத்
துன்றியபல்லொடித்திகழ்ந்ததக்கனையுந்தலைதுணித்த
தொல்லோன்பாத
மன்றியொருதுணையில்லையென்றடைக்கலம்புக்கே[20]மாழித்
தேவே.

என்று; உதனைப், பனிமதியைக், கனலிதன்னை,
இபந்தன்னை, இஞ்சி மூன்றைக்,
குன்று தனை, முயலகனை, நெரித்து வளைத்து,
எரித்துத் உரித்துக் குறைத்துத் தேய்த்துத்,
துன்றிய பல் ஒடித்துத் திகழ்ந்த தக்கனையும்
தலை துணித்த தொல்லோன் பாதம்,
அன்றி ஒரு துணை இல்லை என்று
அடைக்கலம் புக்கேம் ஆழித்தேவே.

பா. வே, 18 சமராதி, 19 ஏதெனப், 20 வாழியாழித்தேவே.

பொருள்: அவ்வண்ணம் கூறிய இந்திரன், சக்கரப்படையினை ஏந்திப் பாற்கடலில் அறிதுயில் கொள்ளும் திருமாலே! காலனைக் காலால் உதைத்து, குளிர்ந்த பிறைச்சந்திரனுக்குக் காப்பளித்து - அழிவு செய்யும் தீயினைக் கையில் ஏந்தி - தாருகாவனத்து முனிவர்களால் ஏவப்பட்ட கொலை வெறி கொண்ட யானையின் தோலினை உரித்துப் போர்த்து, அசுரர்களின் முப்புரங்கள் அமைந்த கோட்டைகளையும் அழித்து - மேருமலையை விலலாக வளைத்து ஒடித்து, ஆணவம் கொண்ட முயலகனை தன் காலின் கீழ்த் தேய்த்து, அவன் பல்லினை ஒடித்து, நீண்டபற்களுடன் ஆணவம் கொண்டு நின்ற தக்கனையும் தலை கொய்து அறம் காத்த - தோற்றமும் முடிவும் இல்லாத சிவபெருமான் அன்றி எமக்கு வேறு துணை இல்லையென்றான்.

18. தேவருலகிருந்தாலுமிறந்தாலுமிரணியனாந்தீயோன்சேனை
யேவுமுரணிருந்தாலுமிறந்தாலுஞ்சிவனருளென்றிரங்கி
மாயோன்
பூவடியில்விழுந்தெழுந்தவாசவனைக்கேசவனும்புல்லியுங்கள்
மேவுதுயர்தவிரும்வகையெம்பெருமாற்குரைப்பனெனவிரைந்து
போந்தான்.

தேவர் உலகு இருந்தாலும் இறந்தாலும்,
இரணியனாம் தீயோன் சேனை
ஏவும் முரண் இருந்தாலும் இறந்தாலும்,
சிவன் அருள் என்று இரங்கி, மாயோன்
பூ அடியில் விழுந்து எழுந்த வாசவனைக்.
கேசவனும் புல்லி, உங்கள்
மேவு துயர் தவிரும் வகை, எம்பெருமாற்கு
உரைப்பன் என விரைந்து போந்தான்.

பொருள்: தேவர் உலகம் இருந்தால் என்ன அழிந்தாலென்ன - கொடியவனாகிய இரணியன் ஏவிய அரக்கர் படை செய்யும் கொடுமைகள் - இருந்தாலென்ன ஒழிந்தாலென்ன, அது சிவபெருமானின் திருவருட் குறிப்பின்படியே தான் நிகழும். அதற்கு நாம் என் செய்வோம் என மனம் நொந்து துன்புற்றுத் திருமாலின் மலரடிகளில் இந்திரன் வீழ்ந்து வணங்கினான். அவ்வண்ணம் வணங்கி எழுந்த இந்திரனைத் திருமால் ஆரத்தழுவி உங்கட்கு ஏற்பட்ட துன்பம் நீங்கும் வண்ணம், எமது தலைவனான சிவபெருமானுக்குக் கூறுவேன் எனப் பகர்ந்து விரைந்து சென்றான்.

19. போந்தரனைத்தொழுதிறைஞ்சியவுணரெலாம்புலவரைமுன்
பொருதவாறுங்
[21]காந்துசுரர்வலிக்கொதுங்கிச்சுரர்சுருதிக்கங்கணங்கைதரித்த
வாறு
மேந்துமவர்கங்கணத்தைத்தானவர்போய்ப்பறித்துததி
யெறிந்தவாறு
மோய்ந்துதுயருழந்தமரரீங்குவந்தவாறும்விரித்துரைத்தான்
மாயோன்

போந்து அரனைத் தொழுது இறைஞ்சி,
அவுணர் எலாம் புலவரை முன்பொருதவாறும்,
காந்துசுரர் வலிக்கு ஒதுங்கிச் சுரர்
சுருதிக் கங்கணம் கை தரித்தவாறும்,
ஏந்தும அவர் கங்கணத்தைத் தானவர்
போய்ப் பறித்துத் துததி எறிந்தவாறும்,
ஓய்ந்து துயர் உழந்த அமரர் ஈங்கு
வந்தவாறும், விரித்துரைத்தான் மாயோன்.

பொருள் : தேவர்கள் துன்பத்தினைக் கூறச் சென்ற திருமால் சிவபெருமானைத் தொழுது; அசுரர்கள் அனைவரும் ஒன்றுசேர்ந்து, தேவர்களோடு போர் செய்ததனையும், அசுரர் வலிமைக்கு ஈடு கொடுக்க இயலாத தேவர்கள், தம் வாழ்விடத்தினையும் - அசுரர் களையும் விட்டு நீங்கி, மறையிடத்துக் கூறப்பட்ட நிறைமொழி யினைச் சங்கணத்தமைத்துக் காப்பாக அணிந்ததனையும், அவ் வண்ணம் காப்பாக அணிந்த கங்கணத்தை அசுரர்கள் பறித்துக் கடலிடத்து எறிந்ததனையும், அதனால் ஆற்ற இயலாத் துன்பத்துட் பட்டு வந்தணைந்த தேவர்களின் நிலைப்பாட்டினையும், விளக்கி உரைத்தனன்.

20. மாயவனைநோக்கிப்புன்முறுவலொடுந்தென்கயிலைமலையெங்
கோமான்
தீயவவுணருக்கின்னஞ்சிலநாட்பின்[22]பொறுதியின்றுதேவர்க்
கெல்லா
மேயமணிக்கங்கணத்தைமீனுருவாய்ப்பிறந்துகடல்விரைவிற்றேடி
நீயுதவுகெனவவனுந்திருவுள்ளத்தின்படிபுரிவனிமலவென்றான்

மாயவனை நோக்கிப் புன்முறுவலொடும்
தென்கயிலை மலை எங்கோமான்,
தீய அவுணருக்கு இன்னம் சில நாட்பின்
பொறுதி, இன்று தேவர்க்கு எல்லாம்
ஏய மணிக் கங்கணத்தை மீன் உருவாய்ப்
பிறந்து, கடல் விரைவில் தேடி,
நீ உதவுகென, அவனும் - திருவுள்ளத்தின்படி
புரிவ நிமல என்றான்.

பா.வே. 21 காந்தசுரர், 22 பிறுதி

பொருள் : திருமால் கூறிய செய்தியினைக் கேட்ட தென்கயிலையில் எழுந்தருளியிருக்கும் எங்கள் தலைவனாகிய சிவபெருமான்; திருமாலைப் பார்த்து அருள்கனிந்த புன்முறுவலைச் செய்தனன். பின் அவனை நோக்கி, தீமையே வடிவான அசுரர்க்கு இன்னுஞ் சில நாள் வாழ்வேயுண்டு. சிறிது காலம் பொறுப்பீராக. இன்று நீ தேவர்கட்குச் செய்யவேண்டியதெல்லாம், அவர்களின் காப்புக்குத் துணைசெய்யும் கங்கணத்தை மீட்டுக் கொடுப்பதே. நீ அதற்காக மீன் வடிவு தாங்கிக் கடல் அடியில் மூழ்கி விரைவில் அவற்றினைத் தேடியெடுத்து உதவுக எனக் கூறினன். அதனைக் கேட்ட திருமால் இறைவனை நோக்கி நிமல! உன் திருவுள்ளப்படி பணி புரிவேன் எனப் பகர்ந்தனன்.

21. என்றதிருமான்மொழியுமெம்பெருமான்றிருவாக்குமிமையோர் [23]கேட்டார்
[24]பொன்றியதுதானவர்தம்பூசலுமெம்புலம்புதலும்போயிற் [25]றென்றா
[26]ரன்றரனைத்திருமுன்னந்தொழுதுவிழுந்தெழுந்துநட மாடிப்பாடி
மன்றலம்பூமாரிசொரிந்தரகரசங்கரவெனுஞ்சொல்வாயரானார்

என்ற் திருமால் மொழியும் எம்பெருமான்
திருவாக்கும் இமையோர் கேட்டார்,
பொன்றியது தானவர்தம் பூசலும்
எம்புலம்புதலும் போயிற்று என்றார்,
அன்று அரனைத் திருமுன்னம் தொழுது
விழுந்து எழுந்து நடமாடிப் பாடி,
மன்றலம் பூமாரி சொரிந்து,
அரகர சங்கர என்னுஞ்சொல் வாயரானார்.

பொருள் : திருமால் சிவனைத் தொழுது அவன் முன் கூறிய செய்தியையும், அதற்கு எம் தலைவனான சிவபெருமான் அருளிய நன்மொழிகளையும் தேவர்கள் கேட்டனர். அதனால் உளம் மகிழ்ந்து துன்பம் நீங்கினர். அசுரரின் போர்ப்பகையழிந்தது. எமது துன்ப ஓலமும் நீங்கியதென்று கூறிச் சிவபெருமானின் திருமுன்பு தொழுதனர். விழுந்து - எழுந்து வணங்கினர். நடமாடிப் பாடினர். சிவன் எழுந்தருளியிருந்த மன்றில் மணம்மிக்க அழகிய பூக்களைச் சொரிந்தனர். அரகர - சங்கர என்னும் மந்திர மொழிகளை இடைவிடாது தோத்திரஞ் செய்யும் வாயினரானார்.

பா.வே. 23 கேட்டு, 24 பொன்றுவர்பின், 25 என்றே, 26 என்று

22. நாரணனக்காலத்துன்பணிவிடையென்றலைமீதுநாதவென்று
பூரணனைவிடைகொண்டுவானவரையஞ்செலெனப்புகன்று புல்லிப்
பேரணங்கைப்பிரியாதபெருமான்றென்கயிலையினைப்பிரிந்து தெய்வக்
காரிணங்கு[27]வடிவமொழித்தொருமீனாம்வடிவெடுத்துக் கடலுட்[28]புக்கா.

நாரணன், அக்காலத்து உன் பணிவிடை
என்தலைமீது நாத என்று,
பூரணனை விடை கொண்டு, வானவரை
அஞ்சல் எனப்புகன்று புல்லி,
பேரணங்கைப் பிரியாத பெருமான்
தென்கயிலையினைப் பிரிந்து, தெய்வக்
கார் இணங்கு வடிவம் ஒழித்து,
ஒருமீனாம் வடிவெடுத்துக் கடலுட்புக்கா.

பொருள்: நாராயணன் அவ்வேளையில் சிவனை நோக்கித் தலைவா! உன்பணிவிடையை என் தலைமீது தாங்கினேன் என்றனன். பின் நிறைகுணத்தவனான சிவபெருமானிடம் விடை பெற்றுத் தேவர்களை நோக்கி அஞ்சுதல் வேண்டாம் எனத் தேற்றி அவர்களைக் கட்டித்தழுவினன். அவ்வணஞ் செய்த திருமால்; ஒப்பும் மிக்கும் இல்லா உமையைப் பிரியாது தன்பங்காகக் கொண்டு, சிவன் எழுந்தருளியிருக்கும் திருமலையினை விட்டகன்றனன். அதன்பின் தெய்வத்தன்மை பொருந்திய - கருமுகில் வண்ணம் கொண்ட வடிவினை நீக்கி, ஒரு மீன் வடிவம் தாங்கிக் கடலுட் புகுந்தான்.

வேறு

23. புக்கமீனமைக்கடலிடைச்செல்வதுபுவனத்
திக்குநான்கினுமூழிநாட்டிரைத்தபேராழி
மிக்கமுதண்டமிதப்பதேயொப்பலால்வேறு
தக்கதோரிணைபிறிதென்னகூறுகேன்றமியேன்.

புக்க மீனம் மைக் கடலிடைச் செல்வது, புவனத்
திக்கு நான்கினும் ஊழிநாள் இரைத்த பேராழி.
மிக்க முதண்டம் மிதப்பதே ஒப்பலால், வேறு
தக்க ஓர்இணை பிறிதென் கூறுகேன் தமியேன்.

பொருள்: திருமால் மீன் வடிவு கொண்டு கருமை கொண்ட கடலிடத்துச் செல்வது, இப்புவியின் நான்கு திக்குகளையும் நிலை

பா. வே. 27 படிவம் 28 புக்கான்

கெடச் செய்து, பேரழிவினைச் செய்த ஊழிப் பெருக்கில், இந்த அண்டம் மிதந்து செல்வது போன்றிருந்தது. இதனைவிட ஏற்ற உவமையினை எப்படிக் கூறுதல் இயலும். என்னால் இயலாதே.

24. ஏனமீன்சிலவிருஞ்செலவடங்கின சிலமீன்
போனசெல்கதித்திவலையிற்பொடிப்பன சிலமீன்
மானமொக்குளோடோடிவான்மறிவனசிலமீ
னானநீரெறிதிரையினாலழியுமீன்பலவால்

ஏன மீன் சில இருஞ் செலவு அடங்கின, சிலமீன்
போன செல்கதித் திவலையில் பொடிப்பன, சில மீன்
மானம் ஒக்குள் ஓடுஓடி வான்மறிவன, சில மீன்
ஆன நீர் எறி திரையினால் அழியும் மீன் பலவால்.

பொருள்: திருமால் மீன்வடிவெடுத்துக் கடலிற் புகுந்ததால் - அங்கிருந்த ஏனைய மீன்களில் சில தமது பெரிய போக்குவரத்து நடமாட்டத்தினை விட்டொழித்தன. சில மீன்கள்; கடலில் எழுந்த பேரலையின் வாய்ப்பட்டுச்சிக்குண்டு சிதறின. சில மீன்கள் வானத்தில் தாவி ஓடி வான் வெளியினை அடைபடச் செய்தன. பேரலை எழுவதனால் அதன் கடுவேக வீச்சில் சிக்கி அழியும் மீன்கள் பலவாகும்.

25. வாலுகக்கரைத[29]தும்பியதிரைப்புறம்வழிய
வோலமிட்டலைந்துந்துறைசிதறினவுததி
சாலுமத்திருமால்கடைமந்திடைத்தலைநாட்
பாலலைக்கடல்கலங்கியதென்னலாம்பகரின்

வால் உகக், கரை ததும்பிய திரைப்புறம் வழிய,
ஓலம் இட்டு அலைந்தும் துறை சிதறின °உததி,
சாலும் அத்திருமால் கடை மத்திடைத், தலை நாள்;
பாலலைக் கடல் கலங்கியது என்னலாம் பகரின்.

பொருள்; திருமால்; மீன் வடிவு கொண்டு கடல் புகுந்ததனால் அம்மீனின் வால் அசைவினால் அலைகள் கரையில் மோதின. அவ்வண்ணம் மோதியதனால் புறத்தே வழிந்து ஒலி எழுப்பின. அதனால் கடற்கரையில் அமைந்த துறைகள் நிலை குலைந்தன. இதனை மீன்வடிவு கொண்டு திருமால்; முன்காலத்தில் மந்தர மலையினை மத்தாகக் கொண்டு பாற்கடலினைக் கடைந்தது போன்றிருந்ததெனக் கூறலாம். ° உததி = கடல்.

பா. வே. 29 ததும்பியே

26\. இன்னமீனொன்றுதிரிதரமகரமீனினங்கள்
சின்னமாயினதிமிங்கிலஞ்சிதறினதிசைபோய்
முன்னையூழியிற்கடையுகத்தெம்பிரான்முனிய
வன்னநாளண்டம்பட்டதுபட்டதவ்வளக்கர்.

இன்ன மீன் ஒன்று திரிதர, மகர மீன் இனங்கள்
சின்னம் ஆயின, திமிங்கிலம் சிதறின, திசை போய்,
முன்னை ஊழியில் கடையுகத்து எம்பிரான் முனிய,
அன்ன நாள் அண்டம் பட்டது பட்டது அவ்*வளக்கர்.

பொருள்: திருமாலாகிய மீன் கடலிடத்துத் திரிந்ததனால், மகர மீன் இனங்கள் சிதறின. திமிங்கிலங்கள் திக்குத் தெரியாதுநிலை கெட்டுச் சிதறின. முன் நிகழ்ந்த கடையுகத்தூழியில், இறைவனின் சினத்தால், திக்கெல்லாம் பரந்த பெருங்கடற் பெருக்கு, அண்டத்தைத் தன்னுள் கொண்டிருந்ததுபோல் இருந்தது. திருமால் மீன் வடிவு கொண்டு கடலிடைத்திரிந்த காட்சி. *அளக்கர் = கடல்

27\. அளவிறந்தநீர்த்திவலைகளெழுந்தெழுந்தகிலம்
வளருமூதண்டமனைத்தையுநனைத்தனவானோ
ருளமகிழ்ந்தனருய்ந்தனமென்றனருலகந்
தளருமோவிதனாலெனச்சலிப்புமாயினரால்.

அளவிறந்த நீர்த்திவலைகள் எழுந்து எழுந்து, அகிலம்
வளரும் மூதண்டம் அனைத்தையும் நனைத்தன, வானோர்
உளம் மகிழ்ந்தனர், உய்ந்தனம் என்றனர், உலகம்
தளருமோ இதனால் எனச் சலிப்பும் ஆயினரால்.

பொருள்: கணக்கிட்டுக்கூற இயலாதபடி கடலிடத்து எழுந்த அலைகளும் அவற்றால் சிந்தப்பட்ட நீர்த்துளிகளும் உலகெலாம் எழுந்து அண்டங்கள் அனைத்தையும் நனைத்தன. வானோர் அதனால் உளம் மகிழ்ந்தனர். நாம் உய்தி பெற்றோம் என்றனர். அதே வேளையில் இச் செயலால் உலகம் தளர்ச்சியடையுமோவென மனம் மலினப்பட்டனர். ஆல் ஈற்றசை.

28\. ஆயவப்புனவொழிவறச்சுழித்தலையெறிந்து
தூயவிண்ணளவும்பரந்தார்த்ததுதொல்லை
மாயன்றன்னிடைநடந்தனனென்பதோர்மகிழ்வா
லேய்வக்கடலிட்ந்த்தாங்கெழுந்த்தேயெனலாம்

ஆய அப்புனல் ஒழிவறச் சுழித்து அலை எறிந்து
தூய விண் அளவும் பரந்து ஆர்த்தது, தொல்லை
மாயன் தன்னிடை நடந்தனன் என்பதோர் மகிழ்வால்,
ஏய அக்கடல் கிடந்தது ஆங்கு எழுந்ததே எனலாம்.

பொருள்: அக்கடலானது எங்கும் பரந்து சுழித்து அலை வீசி மென்மைமிகு வானுலகெங்கும் பரந்துபேரொலி செய்தது. அதனைப் பழைமைமிக்க திருமால், தன்னிடம் நடந்து வந்தான் என்ற மகிழ்ச்சியால்—அமைதியாக இருந்த அக்கடல்; எழுச்சி பெற்ற தென்றே கூறலாம்.

29. எழுந்தமீனதுமேலதோவதனுடனெழுந்த
செழுந்திரைத்திரண்மேலதோவெனத்திரிதரலா
லழுந்துமக்கடல்சிதறியநுரைவிரைந்தணுகக்
கொழுந்திசைப்பெருவரையெலாங்கயிலையாங்கூறின்

எழுந்த மீனது மேலதோ, அதனுடன் எழுந்த
செழுந்திரைத் திரள் மேலதோ எனத் திரிதரலால்,
அழுந்தும் அக்கடல் சிதறியநுரை விரைந்து அணுகக்,
கொழுந்திசைப் பெருவரை எலாம் கயிலையாம் கூறின்.

பொருள்: திருமாலாகிய மீனின் நடமாட்டத்தால்—கடல் மிகவும் கொந்தளித்தது. அதனால் அவற்றிடம் இருந்த மீன்கள், அலைகளின் மேலதோ—அன்றி அலைகள் மேலதோ எனக் கூறுவதற்கு இயலாது எங்கும் பரந்தன. இத்தகைய நிகழ்வுகளால் சுமைதாங்காது நலியும் அக்கடலலையின் சிதறிய நுரைகள் பரந்து அணுகியபொழுது, திக்குகளில் காவல் அரண்களாக அமைந்த மலைகள் அனைத்தும் கடல் நடுவில் அமைந்த தென்கயிலைபோல இருந்ததெனலாம்.

30. இனவளைச்சங்கம்பற்பலகோடிநொந்திரங்கிச்
சினைவயிற்றிடையுடைந்தறக்கதறியசெய்கை
யனையவக்கண்ணன்றனதுசங்கிருப்பமீனாகிக்
கனைகடற்சங்கமுழுவதுமூதுதல்கடுக்கும்.

இனவளைச் சங்கம் பற்பல கோடி, நொந்து இரங்கிச்
சினை வயிற்றிடை உடைந்து அறக் கதறிய செய்கை
அனைய அக்கண்ணன்; தனது சங்கு இருப்ப மீனாகிக்
கனை கடற் சங்கம் முழுவதும் ஊதுதல் கடுக்கும்,

பொருள் : பற்பல கோடி நல்லினச் சங்கினங்கள் மீனான திருமாலின் நடமாட்டத்தால் துன்புற்றன. அதனால் தம் சூல்கள் உடைந்து சிதைய அத்துன்பந்தாங்காது கதறி ஒலி எழுப்பின. இதனை நோக்கும்பொழுது. அக்கண்ணன் தனது பாஞ்ச சன்னிய மாகிய சங்கு இருக்க மீன் வடிவு கொண்டு, அலை எழுப்பி ஒலி செய்யும் கடலகத்துள்ள சங்கினங்கள் அனைத்தையும் ஊதி ஒலிப்பது போலிருந்தது.

31. கடுங்கதிக்கொடுவால்விசைத்தோடலுங்கலங்கிக்
கெடுங்கடற்பதினாயிரம்யோசனைகிழியுந்
துடங்குமத்தனிமீனதுகுதித்தலுந்[30] துளங்கி
யடுங்கனற்சுடர்வடவையுமவிபடுமதனால்

கடுங்கதிக் கொடுவால் விசைத்து ஓடலும் கலங்கிக்
கெடுங்கடல் பதினாயிரம் யோசனை கிழியும்,
நுடங்கும் அத்தனி மீனது குதித்தலும் துளங்கி
அடுங்கனல் சுடர் வடவையும் அவிபடும் அதனால்.

பொருள் : திருமாலாகிய மீன்; தனது வேகம் மிக்க ஓட்டத்தினால் தன்னிடத்தமைந்த வாலினை விசையுடன் அசைத்ததனால், அலைகள் கொண்ட பெருங்கடல் நிலைகெட்டது. பதினாயிரம் யோசனை தூரம் பிளவுபட்டது. அவ்வண்ணம் திரியும் மீன், துள்ளிக் குதித்ததனால் எழுந்த நீர்ப்பெருக்குத் துன்பஞ் செய்யும் வடவைத்தீயினையும் அவித்துவிடும் தன்மை கொண்டதாக இருந்தது.

32. நாலுதிக்கினுமியக்கருநயந்தகின்னரரு
மேலுதிக்குமச்சோமசூரியரும்விண்ணுடுவுஞ்
சாலுமத்தனிமீன்விளையாடலுந்ததும்பி
யாலுமப்புனற்கஞ்சிப்போய்மேருமீதடைவார்

நாலு திக்கினும் இயக்கரும் நயந்தரு கின்னரரும்,
மேல் உதிக்கும் அச்சோம சூரியரும், விண் உடுவும்,
சாலும் அத்தனி மீன் விளையாடலும் ததும்பி
ஆலும் அப்புனற்கு அஞ்சிப்போய் மேருமீது அடைவார்.

பொருள் : நான்கு திசையிடத்தும் பரந்து வாழும் இயக்கர்களும், நல்லியல்பு கொண்ட கின்னரர்களும், வானத்தில் தோன்றும் சந்திர - சூரியரும், நட்சத்திரங்களும், பெருமைமிகு திருமாலாகிய அந்த மீனின் விளையாட்டால் எழுந்து பரவும் கடல் அலைக்கு அச்சமுற்று - நிலைகெட்டு, மேருமலையினைப் புகலிடமாசக் கொண்டனர்.

பா.வே. 30 துளும்பி

33. அடையவாரிதியளறுபட்டதுபகிரண்ட
முடையவப்பெருமுழக்கினால்வெடிபட்டதுலகத்
திடையுளோர்செவிசெவிடுபட்டதுதொழுதெவரும்
விடையுளானருட்கன்னதோவிதுவெனவியந்தார்

அடைய வாரிதி அளறுபட்டது, பகிரண்டம்
உடைய அப்பெரு முழக்கினால் வெடிபட்டது, உலகத்து
இடையுளோர் செவி செவிடுபட்டது, தொழுது எவரும்
விடையுளான் அருட்கு அன்னதோ, இதுவென வியந்தார்.

பொருள்: கடலிடத்து உலவும் திருமாலாகிய மீனின் செயலால் அக்கடல் பேரொலி எழுப்பியது. அப்பேரொலியினைத் தாங்காது பேரண்டமும் உடைந்தது. அதனால் ஏற்பட்ட பேரோசையினால் உலகனைத்தும் உள்ள அனைவரது காதுகளும் செவிடுபட்டன. இச்செயல் கண்டு அனைவரும் இறைவனைத் தொழுதனர். மறையை ஊர்தியாகக் கொண்ட எம் தலைவனது அருட் செயலுக்கு, இது உகந்ததோ என வியப்புற்றார்.

34. தாரணித்தலைமகள்த[31]லையாதலாற்சலதி
[32]பேரணித்தனகாதலனாதலாற்பெருமீ
னேரணித்தவளுடைகுலைத்திடுவதேயென்னச்
சீரணித்தபேரலைகுலைபடப்புடைதிரியும்

தாரணித் தலைமகள் தலை ஆதலால் சலதி
பேரணித் தனகாதலன் ஆதலால் பெருமீன்
ஏரணித்த அவளுடை குலைத்திடுவதே என்னச்
சீரணித்த பேரலை குலைபடப் புடைதிரியும்.

பொருள்: தலைமை சான்ற புவி மங்கைக்கு உயர்வினைத் தரும் வண்ணம் அமைந்திருப்பது கடல். இக்கடல் நிலமங்கையின் ஆடையாக அமைந்து செழுமையும் அழகும் ஊட்டுவது. புவி மங்கையின் காதலன் திருமால். அவன் மீன் வடிவுகொண்டு கடலிடைப் புகுந்து கலக்கிய செயல், அழகுமிக்க மண்மகளின் உடையினைக் குலைத்திடுவது போன்றிருந்தது.

பா.வே. 31 கலை, 32 பேரணித்ததன்

35. திரியவாட்சுறவினம்பலசிதறினவொருபா
லரியகூர்மம்பலதொலைந்தலமருமொருபாற்
பரியமால்வரைக்குழாங்கள்வேர்பறித்திடுமொருபா
லிரியல்போய்க்கடன்முதலைகளெறிபடுமொருபால்

திரிய வாள் சுறவினம் பல சிதறின ஒருபால்,
அரிய கூர்மம் பல தொலைந்து அலமரும் ஒருபால்,
பரிய மால்வரைக் குழாங்கள் வேர்பறித்திடும் ஒருபால்,
இரியல் போய்க் கடல் முதலைகள் எறிபடும் ஒருபால்.

பொருள்: திருமாலாகிய மீன் திரிதலினால், கூரிய ஒளிமிக்க வாள் போன்ற வாலும் கொம்பும் உடைய சுறா இனங்கள் சிதறி ஒருபால் ஒதுங்கின. வலிய ஆமைகள் நிலைகெட்டுத் தடுமாறி இன்னொரு பக்கம் ஒதுங்கின. பலம்மிகுந்த பெரிய மலைக்கூட்டங்கள், அடிபெயர ஒருபால் தூக்கி வீசப்பட்டன. பெருமுதலைகள் அச்சங்கொண்டு ஓடும்படி தூக்கி வீசப்பட்டன.

36. பாலலைப்பள்ளியானொருமீனெனப்பாய்ந்தாற்
சாலவக்கடல்படும்பதைப்பார்சொலத்தகையார்
வேலையிற்பண்டுவிழுங்கியகங்கணமீண்டக்
காலையிற்பலமீன்களுமுமிழ்ந்தனசடிதே.

பாலலைப் பள்ளியான் ஒரு மீனெனப் பாய்ந்தால்,
சால அக்கடல் படும் பதைப்பு ஆர்சொலத் தகையார்,
வேலையில் பண்டு விழுங்கிய கங்கணம் மீண்டு, அக்
காலையில் மீன்களும் உமிழ்ந்தன சடிதே.

பொருள்: திருப்பாற் கடலில் அறிதுயில்கொள்ளும் திருமால் மீன் வடிவுகொண்டு அக்கடலிடத்துப் பாய்ந்த வேளையில், அக்கடல் அடைந்த பெருந்துன்பத்தினை யாரால் சொல்லுதற்கியலும். அன்று அக்கடலிடத்து அசுரர்கள் வீசி எறிந்த கங்கணங்களை விழுங்கிய மீன்களும், திருமாலாகிய மீன் கடலைக் கலக்கியபொழுது அச்சங் கொண்டு, வெளியே - மிக்க விரைவுடன் உமிழ்ந்தன.

37. கடிதுமாயவற்கடியுறைபோலவக்கடன்மீ
னெடி[33]துமிழ்ந்ததுநிலத்திடைக்கிடந்ததுநிலையா
மடு[34]மிதந்ததுமணற்சுரி[35]மறைத்ததுமாக
முடிவில்கங்கணம்யாவையுமெடுத்ததுமுகத்தால்

பா.வே. 37 உமிழ்ந்தவு, 34 மிதந்தவு, 35 மறைந்தவு,

க்டிதுமாய் அவர்க்கு அடியுறைபோல, அக்கடல்மீன்
நெடிது உமிழ்ந்தது, நிலைத்திடைக் கிடந்தது, நிலையாம்
மடு மிதந்ததும் மணற்சுரி மறைத்ததும், ஆக
முடிவில் கங்கணம் யாவையும் எடுத்தது முகத்தால்.

பொருள்: கடலிடைப் புகுந்த திருமாலாகிய மீன், கடலின் அடியில் மணல் வாய்ப்பட்டு மறைந்திருந்த கங்கணங்கள் அனைத்தை யும், தன்முகத்தால் விரைந்தெடுத்துத் தேவர்களுக்குக் கையுறை கொடுப்பதுபோல் அவற்றை உமிழ்ந்து நிலத்திடை கிடந்தது.

38. எடுத்தகங்கணநோக்கினரிமையவரெவரும்
பொடித்ததங்கவருரோமங்கள்புளகித்ததங்கந்
துடித்ததோள்வலஞ்சொரிந்தனகைமலர்[36]தோண்மீ
னடுத்துமீண்டதுகண்டதுதென்கயிலாயம்.

எடுத்த கங்கணம் நோக்கினர் இமையவர் எவரும்,
பொடித்தது அங்கவர் உரோமங்கள், புளகித்தது அங்கம்,
துடித்த தோள் வலம், சொரிந்தன கைமலர் தோள்மீன்
அடுத்து மீண்டது கண்டது தென்கயிலாயம்.

பொருள்: தேவர்கள் அனைவரும் தங்கள் காப்பாகிய கங்கணங் களை- திருமாலாகிய மீன் கடலிடையிருந்து மீட்டு எடுத்ததனைக் கண்டனர். அதனால் அவர்களின் உடல்களில் உள்ள மயிர்க்கால்கள் உணர்ச்சி மேலீட்டால் துடித்தன. உடல்கள் புல்லரித்தன. வலத் தோள்கள் எதிர்வரும் நலன்குறித்துத் துடித்தன. கைமலர்கள் தோள் மேல் உயர்ந்தன அவை மகிழ்ச்சிப் பெருக்கால் அசைந்தன. தென் கயிலையெங்கும் இத்தகைய காட்சிகள் நிகழ்வதாயிற்று.

39. ஆயதென்கயிலாயத்தின்றென்புறமணுகி
மாயமச்சமாமுடலையக்கடல்வழிவைத்துத்
தூயதன்னுருக்கொண்டரன்சந்நிதிதுன்னிச்
சேயகங்கணம்முன்வைத்துவணங்கினன்திருமால்.

ஆய தென்கயிலாயத்தின் தென்புறம் அணுகி,
மாய மச்சமாம் உடலை அக்கடல்வழி வைத்துத்,
தூய தன் உருக் கொண்டு அரன் சந்நிதி துன்னிச்,
சேய கங்கணம் முன்வைத்து வணங்கினன் திருமால்.

பா.வே.36 தொன்மீன்

பொருள்: உலகுக்கு அருளாக்கம் தரும் தென்கயிலையாகிய திருமலையின் தென்புறம் சென்று மாயம் நிறைந்த மீன்வடிவான உடலினை அக்கடலிடை திருமால் வைத்தனன். அதன்பின் தூயதான தன்தெய்வீக வடிவினையெடுத்துக் கொண்டு சிவன் எழுந்தருளியிருக்கும் திருமலைக் கோயிலை அடைந்து செம்மை பொருந்திய கங்கணங்களை இறைவன் முன்வைத்தனன்.

40. திருவருட்கணாநோக்கிநீஇவ்வுழிசெனித்த
மருவுமீனுடலிம்மலைக்கேறவோர்மலையா
யருகுவேலையிற்கிடத்தலாற்புவிக்குநன்றளித்தாய்
பொருவிலாச்சுரருலகமுங்காத்தனைபுகழோய்

திருவருட் கணால் நோக்கி, நீ இவ்வுழி செனித்த
மருவு மீனுடல் இம்மலைக்கு ஏற ஓர் மலையாய்
அருகு வேலையில் கிடத்தலால், புவிக்கு நன்று அளித்தாய்
பொருவிலாச் சுரர் உலகமும் காத்தனை புகழோய்.

பொருள்: இறைவன் தன் அருள் நிறைந்த திருக்கண்ணால் திருமாலை நோக்கி; இவ்வேளையில் மீன் உடல் எடுத்து நற்பணி செய்தனை. அம்மீனுடல் இம்மலைக்கு ஏறுவதற்குப் பயன்படும் வண்ணம் கடலின் அருகில் அமைவுற்றுள்ளது. அதனால் இப் பூமிக்கு நலஞ்செய்தாய். பகையறத் தேவர் உலகினையுங் காத்தனை. இப்பணிகளால் நீ பெரும் புகழ் கொண்டனை என்றான்.

41. புகழுழுந்தேவர்தங்கங்கணங்கொடுத்திபோயென்னத்
திகழுமெம்பிரான்முகுந்தனையேவினன்றிரண்டு
நிகழும்வானவர்க்கீந்தனன்முறைமுறைநெஞ்ச
மகிழுந்தன்மையர்வாழ்த்தினர்[37]சதுமறைவழாமல்

புகழுழும் தேவர் தம் கங்கணம் கொடுத்திபோயெனத்,
திகழும் எம்பிரான் முகுந்தனை ஏவினன, திரண்டு
நிகழும் வானவர்க்கு ஈந்தனன் முறைமுறை, நெஞ்சம்
மகிழ்ந்த தன்மையர் வாழ்த்தினர், சதுமறை வழாமல்.

பொருள்: எம் தலைவனாகிய சிவபெருமான்; போற்றிப் புகழ்ந்து நிற்கும் தேவர்களின் கங்கணங்களைக் கொடுக்கும்படி திருமாலுக்குப் பணித்தனன். திருமாலும் கூடிநின்ற தேவர்களுக்கு, முறைமை வழுவாது கங்கணங்களை வழங்கினான். அதனால் தேவர்கள் அனைவரும் மனம் மகிழ்வுகொண்டு வாழ்த்தினர். வேதங்களை முறை வழுவாது ஓதிப் போற்றினர்.

பா.வே. 37 சதுர்மறை

42. மல்குமச்சமாங்கேசவன்[38]பெயரினம்மலைக்குப்
புல்கு[39]மற்சேச்சுரமெனத்திருப்பெயர்புகன்றா
ரல்குந்தானவராண்மையினினியுங்களாண்மை
பல்கும்போதிரென்றரன்சொலவிடைகொண்டுபணிந்தார்

மல்கும் மச்சமாம் கேசவன் பெயரினம் மலைக்குப்
புல்கும் மற்சேச்சுரம் எனத் திருப்பெயர் புகன்றார்,
அல்கும் தானவர் ஆண்மையின், இனி உங்கள் ஆண்மை
பல்கும், போதிர் என்றரன் சொல விடைகொண்டு பணிந்தார்.

பொருள் : சிவபெருமான் தேவர்களை நோக்கி; இன்றிலிருந்து திருமால் கொண்ட மீன் வடிவின் பெயரால் அவ்வுடல் இருக்குமிடம் மச்சேச்சுரம் என்ற திருப்பெயரால் அழைக்கப்படும். துன்புறுத்தும் அசுரரின் வலிமையிலும் பார்க்க இனியுங்கள் வலிமை மேலோங்கும். நீங்கள் உங்கள் இடங்களுக்குச் செல்வீர்களாக எனப் பணித்தனன். தேவர்களும் சிவபெருமானை வணங்கி விடை பெற்றுச் சென்றனர்.

43 பணிந்துகேசவற்புகழ்ந்தனர்பராசக்திவடிவாய்த்
தணிந்தவாழ்வினாற்பவானியாய்மோகத்தாற்[40]பணியாற்
[41]கனிந்ததுர்க்கையாய்க்குரோதத்தாற்காளியாயடலாற்
றுணிந்தவிண்டுவாய்நின்ற[42]வுன்பெருமையார்துதிப்பார்

பணிந்து கேசவற் புகழ்ந்தனர், பராசத்தி வடிவாய்த்,
தணிந்த வாழ்வினால் பவானியாய், மோகத்தால் பணியால்
கனிந்த துர்க்கையாய்க், குரோதத்தால்காளியாய், அடலால்
துணிந்த விண்டுவாய், நின்ற உன் பெருமையார் துதிப்பார்.

பொருள் : தேவர்கள்; கேசவனான திருமாலைப் பணிந்து, திருமாலே! நீ பராசக்தி வடிவு கொண்டாய். அமைதி பொலியும் வாழ்வு கொண்டு, பவானியானாய் - பெருவிருப்பால் செயல்திறத்தால் இன்பந்தரும் துர்க்கை வடிவானாய். பகை வெல்வதற்குக் காளி வடிவுகொண்டு போர் புரிந்தனை. வீரம் மிக்க ஆற்றலாய்ப் பொலிந்தனை. அவ்வாற்றல் நிறைந்த வானமாய்த் திகழ்ந்தனை. அத்தகைய உன் மேதகைமை பொருந்திய சிறப்பினை, அளவிட்டுக் கூறுதற்கு யாரால் இயலும் எனப் பகர்ந்து போற்றினர்.

பா.வே. 38 பெயரினை, 39 மச்சகேசுரம், 40 தணியா,
41 தணிந்த, 42 நின்பெருமை.

44. பாருவ்வானமுங்காப்பதுன்பாரமாகையினாற்
சேருமெம்மையுங்காத்தலுன்கடன்கொலாந்திறலோய்
வார[43]மெம்முனீமாறாதருளென நனிவழுத்தி
வீரவாசவன்முதலினோர்விடைகொண்டுமீண்டார்.

பாரும் வானமும் காப்பது உன்பாரம், ஆகையினால்
சேரும் எம்மையும் காத்தல் உன்கடன் கொலாம்திறலோய்,
வாரம் எம்முன் நீமறாது அருளென நனி வழுத்தி,
வீர வாசவன் முதலினோர் விடைகொண்டு மீண்டார்.

பொருள்: திருமாலே! இவ்வுலகினையும் தேவர் உலகினையும் பேணிப் பாதுகாப்பது உமது பொறுப்பாகும். எனவே உம்மை வந்தடைந்த எம்மையும் காப்பது உனது கடமையே. இதுவே நீர் எமக்குத் தருங் கொடையாகும். எமது முன்னே நீர் எப்பொழுதும் நின்று அருளுதல் வேண்டும் 'எனத் தேவர்கள் போற்றி வழிபட்டனர். அதன்பின் வீரம்மிக்க இந்திரன் உட்பட்ட தேவர்கள் அனைவரும் திருமாலிடம் விடை பெற்றுத் தத்தம் இடங்களுக்குச் சென்றனர்.

45. மீண்டகாலையிலவுணர்மேல்விண்ணவர்வெருண்டார்
பூண்டபூசலுக்கவுணருமெதிர்த்தனர்பொருதா
நீண்டுவானவர்துரந்தனர்தானவரிரிந்தார்
காண்டகுஞ்சுரர்தம்பதிபுகுந்தனர்களிப்பால்

மீண்ட காலையில் அவுணர்மேல் விண்ணவர் வெகுண்டார்,
பூண்ட பூசலுக்கு அவுணரும் எதிர்த்தனர் பொருதார்
ஈண்டு வானவர் துரந்தனர், தானவர் இரிந்தார்,
காண்டகும் சுரர் தம்பதி புகுந்தனர் களிப்பால்.

பொருள்: தென்கயிலையில் சிவபெருமானிடமும் திருமாலிடமும் விடைபெற்றுச் சென்ற தேவர்கள்; அவுணர்மேல் சினந்து போர் தொடுத்தனர். அப்போரினை அசுரர்களும் எதிர்கொண்டு, தேவர்களுடன் போர் புரிந்தனர். இப்போரில் தேவர்கள் வெற்றி பெற்றனர். அசுரர்கள் தோல்வி கண்டு அழிந்தனர்— காட்சிக்கரியரான தேவர்கள் மகிழ்ச்சிப் பெருக்குடன் தமது வானுலகத்திற்குச் சென்றனர்.

பா. வே. 43 எம்முழிவைத்தருளென

46. களித்தரம்பையர்திருநடம்புரிந்தனர்கடல்வாய்க்
குளித்தகங்கணமணிந்தனரவுணர்தங்குலத்தா
லொளித்தவின்பமும்வெளிப்படத்துன்பமுமொழிந்தா
ரளித்தகற்பகநிழலினுமமர்ந்தனரமரர்

களித்த அரம்பையர் திருநடம் புரிந்தனர் கடல்வாய்க்
குளித்த கங்கணம் அணிந்தனர். அவுணர்தம் குலத்தால்
ஒளித்த இன்பமும் வெளிப்படத் துன்பமும் ஒழிந்தார்,
அளித்த கற்பக நிழலினும் அமர்ந்தனர் அமரர்.

பொருள்: தேவ அடியரான அரம்பை மாதர் மகிழ்ச்சிப்பெருக்கால் அழகிய நடனத்தை யாடினர். கடலிடத்து வீசப்பட்ட காப்பாகிய கங்கணங்களை அணிந்து மகிழ்ந்தனர். அசுரர்களின் கொடுமையால் மறைந்த இன்பவுணர்வு மீண்டும் வெளிப்படத்துன்பம் நீங்கி மகிழ்ந்தனர். அனைத்து நலனையும் கொடுக்கும் கற்பகத்தின் நிழலிருந்து தேவர்களும் மகிழ்ந்தனர்.

47. அமரரித்திறமிங்கினிதிருந்தன[44]ரங்கட்
குமரிபாகனைத்தொழுதுமுக்கோணமாமலையி
னிமிருமுத்தரகுகையினில்யோகத்தினின்றான்
றமரவாரிதிமீனெனத்திரிந்தவத்தலைவன்

அமரர் இத்திறம் இங்கு இனிது இருந்தனர், அங்கண்
குமரி பாகனைத் தொழுது முக்கோண மாமலையின்
நிமிரும் உத்தர குகையினில் யோகத்தின் நின்றான்,
அமர வாரிதி மீனெனத் திரிந்த அத் தலைவன்.

பொருள்: தேவர்கள் இவ்வண்ணம் வானுலகில் இன்பத்தில் மகிழ்ந்திருந்த வேளையில்; செழுமையும் பெருமையுங் கொண்ட கடலிடத்து மீன்வடிவு தாங்கித்திரிந்த திருமால்; கன்னித்தன்மை மாறாத உமையைத் தன் பங்காகக் கொண்டு எழுந்தருளியிருக்கும் சிவபெருமானைத் தொழுது முக்கோணமாய் அமைந்து வானளாவி நிமிர்ந்து உலகுக்கு அருள்புரியும் திருமலையிட்டத்தில் வடபக்கலில்-விளக்க முற்றிருக்கும் குகையிடத்து, யோகநிலையில் இருந்தனன்,

---

பா.வே. 44 ஆங்கட்

48\. தலத்தினித்திறந்[45]திரேதமுந்தணந்ததுதிரேத
நலத்தின்மேவினதிங்கினியிராவணநடப்புஞ்
செலுத்தும்பூசலும்பூசையும்தெரிசனாமுத்திப்
பலத்தினாலவன்றாய்பெறும்பதவியுமுரைப்பாம்

தவத்தினித் திறம் திரேதமும் தணந்தது திரோத
நலத்தின் மேவினது, இங்கினி இராவண நடப்பும்,
செலுத்தும் பூசலும், பூசையும், தெரிசனா முத்திப்
பலத்தினால், அவன் தாய் பெறும் பதவியும் உரைப்பாம்.

பொருள்: காலத்தால் சிறந்த திரேதாயுகம் கழிந்தது. அக் காலத்தில் பெருநலமே யெங்கும் பொழிந்தது. அதன்பின் இங்கு நிகழ்ந்த இராவணனின் செயற்பாட்டினையும் அவன் செய்த தொல்லையினையும் – அவனாற் செய்யப்பட்ட சிவ வழிபாட்டினையும் - சிவபெருமானின் திருக்காட்சியின் பலத்தினால் அவனது அன்னை பெற்ற, பெரும் பேற்றினையும் இனிக் கூறுவோம்.

மச்சாவதாரச் சருக்கம் முற்றிற்று

திருவிருத்தம் 48

பா.வே. 44 கிரேதம்

அனுபந்தம்

(யாழ்ப்பாணம் காரைநகர் இயற்றமிழ்ப் போதகாசிரியர் மு. கார்த்திகேயையரவர்களால் பல பிரதிகளைக் கொண்டு பரிசோதிக்கப்பட்டு அவருடைய புத்திரராகிய சிவசிதம்பரஐயரால் சென்னை கலாரத்நாகர அச்சுக் கூடத்தில் 1887ஆம் ஆண்டு அச்சிட்டு வெளியிட்ட தக்ஷிணகைலாச புராணப் பதிப்பில் கா. சிவசிதம்பரஐயரால் எழுதப்பட்ட விக்கியாபனம்.)

விக்கியாபனம்

தக்ஷிணகைலாசம் என்பது ஈழநாட்டிலே தேவாரம் பெற்ற சிவஸ்தலங்களுள் ஒன்று. இது முன்னே வாயுவினால் பிடுங்கியெறியப்பட்ட கைலையங்கிரியின் சிகரங்கள் மூன்றனுள் ஒன்று. திரிகூடம், மச்சேசுரம் என்றும் இதற்குப்பெயர் இதனைத் தற்காலத்திலே திருகோணமலையெனப் பெயரிட்டு வழங்குகிறார்கள்.

இத் தக்ஷிணகைலாசபுராணம் ஏறக்குறைய தொளாயிரம் வருடங்களுக்கு முன்னே மதுரையினின்றும் வந்து யாழ்ப்பாணத்தை அரசுபுரிந்து கல்லூரிலேயிருந்த சிங்கையாரியச்சக்கிரவர்த்திக்குப் பன்னிரண்டாம் வழித்தோன்றலாகிய செகராசசேகரன் என்னும் அரசனாலே சைவராச பண்டிதன் என்னும் குருவின் ஆஞ்ஞைப்படி, வடமொழியிலுள்ள மச்சேந்திய புராணத்தினின்று மொழிபெயர்த்து; ஏழு சருக்கங்களையுடையதாகச் செய்யுள் நடையாயியற்றப்பட்டது.

இப்புராணத்திலே திருநகரச்சருக்கம் ஈற்றிலுள்ளதன்றோ? அதிலுள்ள சரித்திரங்களெல்லாம் முதனூலாகிய மச்சேந்திய புராணத்திலே கூறப்படாதிருப்ப, அதனையுஞ் சேர்த்து அச்சிட்டதென்னை யென்பாராயின், ஆசிரியர் வடநூலிலே கூறிய சரிதமன்றி பின்னர் நடந்த சரிதத்தை தாஞ் சேர்த்த தென்றமையானும், நூன் முழுதும் அந்தாதித் தொடையா யிருப்பதாலும், அறுநூற்று முப்பத்திரண்டென விருத்தத்தொகை கூறப்பட்டமையானும், மேற்கூறிய சருக்கத்தை விலக்கின் ஆசிரியர் கூற்று மாறுபடுமென்பது கருதியென்க. ஆதல்பற்றி நம் மேற் குறை கூறாதிருப்பான் புலவர்களை வேண்டுகின்றேன்.

இப்புராணத்தைப் பலர்க்கும் உபயோகமாம் பொருட்டு அடியேன் பிதாவாகிய, ஸ்ரீலஸ்ரீ மு. கார்த்திகேயையரவர்களைக் கொண்டு பெரும்பான்மையும் கண்ட பிரதிகளின் வண்ணமே பரிசோதிப்பித்து அச்சிடுவித்தேன். ஆனால், அர்த்தம் புலப்படாத விடங்களிற் பிரதிகளிற் கண்டவண்ணமே பிரசுரிக்கப்பட்டது. என்னை? ஆசிரியர் கருத்தை யறியாது ஒன்றை விலக்கலும், நூதனமாக வொன்றைச் சேர்த்தலும், ஒன்றை யொன்றாக மாற்றுதலும் அறிவுடையோர்க் கழகன்று ஆதலின்.

இந்நூலை அச்சிடும்படி பற்பல பிரதிகளை வருந்தித் தேடி யெடுத்தனுப்பியவரும், திரிகோணமலைவாசரும் சிவபத்தி அடியார் பத்திகளிற் சிறந்தவருமாகிய ம-ா-பஸ்ரீ சி. சுப்பிரமணியபிள்ளை உபாத்தியாயரவர்கட்கு என்றும் நன்றியறிதலுள்ளவனாக விருக்கின்றேன்.

கொழும்பு
சர்வசித்துஸு
புரட்டாசிமீ உ0வ

இங்ஙனம்,

கா. சி.

பிழை திருத்தம்

பக்கம்	பாட்டு	பிழை	திருத்தம்
27	13 ,,	நாந்து	நொந்து
32	32 ,,	பேறே	பேரே
33	உரை பகுதி	உக் பொருள்	உள் பொருள்
46	5 பாட்டு	ஆங்நெறி	ஆங் கெறி
47	6 ,,	லிடம்	விடம்
48	8 ,,	பெருகை	பெருமை
53	17 ,,	மூலைத்த மாதர்	முலைத்த மாதர்
54	3ம் அடி	பிடிபொடும்	பிடியோடும்
55	19 பாட்டு	தன்மை	தண்மை
56	21 ,,	இளம்	இனம்
58	24 ,,	சுருதியுத்தமையோர்	சுருதியும் தகையோர்
59	02 ,,	திருவுரும்	திருவுருப்
60	உரை பகுதி	தம் பனி	தம் பணி
61	28ம் பாட்டு	மேனியன்	மேனியின்
62	3ம் ,,	தினைக்கோ	நினைக்கோ
63	31 ,,	மனுகு	மணுகு
63	32 ,,	வெற்யென	வெற்பென
64	உரைப் பகுதி	தன்மை	தண்மை
66	37 பாட்டு	அணடமும்	அண்டமும்
67	33 ,,	கின்ற	குன்ற
67	உரை பகுதி	ஆகியவைகளும்	ஆகியவர்களும்
69	42ம் பாட்டு	பாயனவம்	பாயவைம்
75	52 ,,	ஆள மொான்	வூ ன மொன்
78	56 ,,	பெருகிலேன்	பெருகிலென்
82	64 ,,	அக்கா	அடங்கா
86	70 ,,	வேற்பில்	வெற்பில்
86	70 ,,	நெடுண்	நெடும்
86	71 ,,	னுவகாதியான்	லுலகாதியான்
89	உரைப் பகுதி	நன்கினையும்	நான்கினையும்
99	93 பாட்டு	என்பார்கர்	என்பார்கள்
106	பொருள் பகுதி	அககரம்	அக்கரம்
107	9 பாட்டு	அனைந்திட	அனைந்திட
111	16 ,,	கசன	ககன
111	21 ,,	கலுழன்	கழுழன்

பக்கம்	பாட்டு	பிழை	திருத்தம்
	12 ,,	வடியுந்	வடிவுந்
115	01 ,,	ணி காட்டுவ	தணி காட்டுவ
26	04 ,,	பெரன்	பொன்
134	22 பாட்டு	எடுத்தமைந்த	அடுத்தமைந்த
136	25 ,,	சுணங்கு	அணங்கு
138	27 ,,	தேய்தலால்	தோய்தலால்
140	உரைப் பகுதி	விசுத்திர	விசுத்தி
140	,, ,,	யேகநூலார்	யோக நூலார்
141	,, ,,	மெலலிதழகனால	மெல்லிதழ்களால்
141	,, ,,	புலவரால	புலவரால்
141	,, ,,	நானமுகன	நான்முகன்
146	40 பாட்டு	வாளிகை	வவளிகை
146	உரைப் பகுதி	சுவாடு	சுவாகு
151	52 பாட்டு	ஆசமனீயம்	ஆசமநியம்
157	63 ,,	சேயவனாச்	சேயவனான அச்
197	84 ,,	வாயு தேவ மாலும்	வாசு தேவ மாலும்
171	03 ,,	இரண்டுல்	இரண்டும்
178	13 ,,	கூர்வாள்	கூர்வான்
180	16 ,,	மந்தரம்	மந்திரம்
180	உரைப் பகுதி	மந்தரம்	மந்திரம்
180	17 பாட்டு	எரித்துத்	எரித்து
181	18 ,,	உரைப்பளென	உரைப்பனென
194	44 ,,	நிமறாது	நீமாறாது

அச்சு: குமரன் அச்சகம், 201, டாம் வீதி, கொழும்பு - 12.